பல்லிக்கண்ணன் கதைகள்

மணியம் வெளியீடு

வல்லிக்கண்ணன் கதைகள்

வல்லிக்கண்ணன்

மணியம் பதிப்பகம்
39, இரத்தின முதலித் தெரு
குறிஞ்சிப்பாடி—607 302

வல்லிக்கண்ணன் கதைகள் (சிறு கதைகள்)

☐ பதிப்பாளர் : சு. சம்பந்தன், மணியம் பதிப்பகம்

☐ © வல்லிக்கண்ணன் ☐ முதற்பதிப்பு டிசம்பர் 1991.

☐ அச்சிட்டோர் : ஜென்னிராம் அச்சகம், 28, தெற்கு சிவன் கோயில் தெரு, சென்னை-600 024

☐ பக்கங்கள்: 240

☐ முகப்பு அட்டை அச்சு : ஏஸி கிராஃபிக்ஸ், சென்னை-94

விலை ரூ. 30-00

பதிப்பாளன் பேசுகின்றேன்...

சிறந்த அறிஞரும் எழுத்தாளருமான திரு. வல்லிக் கண்ணன் அவர்களுடன் 'ஒரு நூலாசிரியனாக' நான் அறிமுகம் பெற்றது 1985ல். நண்பர், புதுவைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. பசுபதி அவர்கள் மூலம் அன்னாரின் நட்பு எனக்குக் கிடைத்தது. அத்தருணத்தில் 'எழுத்துக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும் ஒரு தெளிந்த பார்வையை' அவர் வழங்கிய அன்பிற்காக இன்றைக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தற்போது நண்பர் திரு குறிஞ்சிவேலன் மூலம் திரு வல்லிக்கண்ணன் அவர்களின் கதைகளை நூலாக வெளியிடும் வாய்ப்பு எங்கட்குக் கிடைத்துள்ளது. இவ்வாய்ப்பினை எமது பதிப்பகத்தின் நற்பேறாகப் போற்றி மனம் பூரிக்கின்றோம்.

திரு. வல்லிக்கண்ணன் அவர்கள்—

எழுத்துலகில் ஐம்பதாண்டுகள் ஆட்சி கண்டவர்;

பல்வேறு ரகங்களில் — கதை, கவிதை, கட்டுரைகளைப் படைத்தவர் மட்டுமல்ல, இந்த இலக்கியப் பரப்புகளைத் திறம்பட ஆய்ந்தவரும் கூட;

அம்முறையில் சாகித்ய அகாதமிப் பரிசு பெற்றவர்.

மகாகவி பாரதி போன்றோரை நம் தமிழ்ச் சமுதாயம், மிகக் காலம் கடந்தே அடையாளம் கண்டு மதிக்கக் கற்றுள்ளது. அப்போக்கிலேயே ஊறிப் போகாமல், 'மணிக்கொடி,

மரபு வழியில் பூத்து மணக்கின்ற மூத்த எழுத்தாளர் திரு வல்லிக்கண்ணனை, அவர் வாழும் காலத்திலே, கௌரவிப்பது அவசியம் என்பதை உணர்ந்து அவர்க்கு விழாவெடுக்கின்ற நம் இலக்கிய வட்டத்தாரின் அக்கறை, தமிழ் நெஞ்சங்கட்கு இதம் சேர்ப்பதாகும்.

இந்நூலில் திரு. வல்லிக்கண்ணன் அவர்கள் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளவாறு — பல்வேறு சுவைகள் பரிமளிக்கின்ற பாங்கில், பல்வேறு இதழ்களில் வெளிவந்து இனிமை தந்த அவர்தம் சிறந்த சிறுகதைகளின் இனிய தொகுப்பைத் தமிழ் வாசக உலகிற்கு வழங்குகின்றோம். இக்கதைச் சித்திரங்களின் அழகைப் பருகிடத் தமிழ் உள்ளங்களை அழைத்து மகிழ்கின்றோம்.

இந்நூலை வெளியிட இசைவு தந்த ஆசிரியர் திரு வல்லிக்கண்ணன் அவர்கட்கும், நூல் உருவாகிடக் காரணமான நண்பர்கள் நெய்வேலி திரு மு. இராமலிங்கம், திரு குறிஞ்சி வேலன் அவர்கட்கும், இதனைத் தனி அக்கறையோடும் மதிப்போடும் சீரிய முறையில் அச்சேற்றித் தந்த நண்பர் திரு பொன்விஜயன் அவர்கட்கும், அழகிய முகப்போவியம் வழங்கிய கலைஞர் திரு மருது அவர்கட்கும், நூலமைப்பிற்கு உதவிய நண்பர் கலைஞன் திரு மாசிலாமணி அவர்கட்கும் எங்கள் நன்றி உரியன.

குறிஞ்சிபாடி
20-12-1991

சு. சம்பந்தன்
(அருட்செல்வன்),
மணியம் பதிப்பகம்.

எனது கதைகள்

தமிழில் சிறுகதை வளமும் வனப்பும் பெற்று விளங்கும் தனித்துறை ஆகும்.

தமிழ்ச் சிறுகதை 1920களிலிருந்து புது உயிர்ப்பும் புதிய வனப்பும் பெற்று வந்திருக்கிறது. கவி சுப்பிரமணிய பாரதியும், வ.வெ. சுப்பிரமணிய ஐயரும் சிறு கதையில் மறு மலர்ச்சியும் இலக்கிய மணமும் புகுத்தினார்கள்.

1930களில் 'மணிக்கொடி' எழுத்தாளர்கள்—புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, மௌனி, ந. சிதம்பர சுப்ரமண்யன், சி.சு. செல்லப்பா, பெ. கோ. சுந்தரராஜன், பி. எஸ். ராமையா—சிறுகதைக்கு ஆழமும் கனமும் புது வனப்பும் புதிய வேகமும் சேர்த்தார்கள்.

அவர்களுக்குப் பின்னர் கதை எழுத ஆரம்பித்தவர்கள் 'மணிக்கொடி' எழுத்தாளர்களின் பாதிப்பைப் பெறுவது தவிர்க்க இயலாதது ஆயிற்று. 'மணிக்கொடி' எழுத்தாளர்களின் பாதிப்பால்—முக்கியமாகப் புதுமைப்பித்தன் எழுத்துக்களால் பாதிக்கப்பட்டு—கதை எழுதத் தொடங்கியவர்கள் கு. அழகிரிசாமி, தொ.மு.சி. ரகுநாதன், வல்லிக் கண்ணன் ஆகியோராவர்.

எங்கள் முன்னோடிகளின் தாக்கம் எங்களுக்கு இருந்தபோதிலும், கால ஓட்டத்தில் நாங்கள் அவரவருக்கெனத் தனி நோக்கும் தனிப்போக்கும் பெற்று, வெவ்வேறு வழிகளை அமைத்துக் கொண்டோம் என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். உலகத்துச் சிறுகதைகளில் எங்களுக்கு இருந்த ஈடுபாடும் இதற்குத் துணை புரிந்தது.

1940களிலும் அதற்குப் பின்னரும் நான் எழுதிய கதைகள் எண்ணற்றவை. 1980களில் என்னைப்பற்றி எழுத நேர்ந்தபோது, நண்பர் ஜெய காந்தன் 'வல்லிக்கண்ணன் அந்தக் காலத்திலேயே ஆயிரம் கதைகளுக்கு அதிகம் எழுதியிருக்கிறார்' என்று குறிப்பிட்டார். அது உயர்வுநவிற்சிதான். இன்றுவரைகூட நான் ஆயிரம் கதைகள் எழுதிவிட்ட தாகச் சொல்ல முடியாது. ஆனாலும், நிறைய நிறை யக் கதைகள் எழுதியுள்ளேன் என்று சொல்லலாம்.

விதம் விதமான கதைகள், உருவத்திலும், உள் ளடக்கத்திலும், நடையிலும் ரகம் ரகமான கதைகள்; உணர்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் தரும் கதை கள்; உள இயல் ரீதியான கதைகள்; மனிதர்களின் விந்தைப் போக்குகளையும், விசித்திரச் செயல்பாடு களையும், விபரீதக் கற்பனைகளையும், விரோத மான நம்பிக்கைகளையும், விதம் விதமான அனு பவங்களையும் வெளிப்படுத்துகிற கதைகள். இப்படி எத்தனையோ ரகங்கள்.

நான் எழுதிய கதைகளில் பெரும்பகுதி பத்திரி கைகளில் பிரசுரம் பெற்றுள்ளன — அவை எழு தப்பட்ட காலத்திலேயே.

அப்படிப் பிரசுரம் பெற்ற கதைகளில் மிகச் சிலவேதான் புத்தக வடிவம் பெறும் வாய்ப்பை அடைந்தன. இதுவரை ஆறு தொகுதிகள் வந்துள் ளன. இப்போது குறிஞ்சிப்பாடி மணியம் பதிப்பகம் வெளியிடும் இத்தொகுப்பு எனது கதைகளின் ஏழா வது தொகுப்பு ஆகும்.

1960 முதல் 1991 முடிய, வெவ்வேறு காலகட் டங்களில் எழுதப்பட்டு, வெவ்வேறு பத்திரிகைகளில் பிரசுரம் பெற்ற கதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

1991ல், 'இந்தியா டுடே' (பேரிழப்பு), 'சோவியத் நாடு' (உதவாக்கரை), 'சுபமங்களா' (சந்தோஷங்கள்) இதழ்களில் பிரசுரம் பெற்ற கதைகள் மிக அதிகமான கவனிப்பையும் பாராட்டுக்களையும் பெற்றன. அதே போல, ஒவ்வொரு கதையும், அதது வெளிவந்த காலத்தில், விசேஷமான கவனிப்பையும் பெற்றுள்ளன.

இக் கதைகளை வெளியிட்டு, என்னைக்கவுரவித்த அனைத்துப் பத்திரிகைகளுக்கும் அவற்றின் ஆசிரியர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வல்லிக்கண்ணன் கதைகளில் தேர்ந்தெடுத்து ஒரு சில கதைகளாவது புத்தகமாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டு, உற்சாகத்துடன் முயற்சிகள் மேற்கொண்ட என் இனிய நண்பர்கள் நெய்வேலி மு. இராமலிங்கம் மீனாட்சிபேட்டை குறிஞ்சி வேலன் ஆகியோருக்கு என் நன்றி உரியது.

இக்கதைகளைத் தொகுத்து நல்ல முறையில் புத்தகமாக வெளியிடும் குறிஞ்சிப்பாடி மணியம் பதிப்பகத்திற்கும், நண்பர் சு. சம்பந்தன் அவர்களுக்கும் நன்றி.

இத்தொகுப்பு அச்சாகி வருவதில் அதிக ஆர்வமும் அக்கறையும் காட்டிய ஜென்னிராம் பிரஸ் நண்பர், 'புதிய நம்பிக்கை' ஆசிரியர் பொன்விஜயனுக்கும் என் அன்பும் நன்றியும் உண்டு.

10, வள்ளலார் பிளாட்ஸ்,
புதுத்தெரு, லாயிட்ஸ் ரோடு, **வல்லிக்கண்ணன்.**
சென்னை — 600 005.

பொருளடக்கம்

பதிப்பாளன் பேசுகிறேன்	iii
என்னுரை (வல்லிக்கண்ணன்)	v
பொருளடக்கம்	viii
காத்தலிங்கம்	1
வேங்கைப்புலி	17
விழிப்பு	36
சின்னவளும் பெரியவளும்	50
மனப்பித்து	62
உணர்வின் துடிப்பு	75
புதிதாய்ப் பிறந்தவர்	89
அந்தரங்கமான ஒரு போட்டி	102
அன்பு வறுமை	117
இயற்கையின் சிரிப்பு	128
மதிப்பு மிகுந்த மலர்	137
பெரிய பிள்ளை	148
கொலைகாரன்	157
எதிர்பாராத அனுபவம்	166
உதவாக்கரை	177
பேரிழப்பு	191
சந்தோஷங்கள் சந்தோஷங்கள்	205
பெண்	211
ஊரும் ஒருத்தியும்	219
சொல்ல முடியாத அனுபவம்	226

காத்தலிங்கம்

'ஹ்றவிட்... ஹ்றவிட்டோ ஹறூவிட்!'

இருளைக் கிழித்துக் கொண்டு கிளம்பியது அந்த ஒலி. கனத்த இருளின் கூரிய கதறல் போலும் ஒலித்தது அது. இரவின் அமைதியைக் குத்திக் குதற முயல்வது போல் எழுந்த கிறீச்சொலி அமானுஷ்யமானது அல்ல; மனித உதடுகள் எழுப்பிய சீழ்க்கைதான்.

குறுங்குடி ஊர்க்காரர்களுக்குப் பழக்கமான ஒலியே அது. இரவுப் பொழுதில்— 'வேளை கெட்ட வேளைகளில்' எல்லாம்— அடைபட்டுக் கிடக்கும் வீட்டுக் கதவுகளையும், சாளரங்களையும் குடைந்து உட்புகுந்து, தூங்கியும் தூங்காமலும் இருக்கின்ற மனிதர்களின் காதுகளை அறுக்கும் அந்தச் சீட்டி.

'அவன்தான்— அந்த ராக்காடு வெட்டி— ஊர் சுற்றக் கிளம்பிவிட்டான்!'

'காத்தலிங்கம் பயல்தான். வேறே யாரு இப்படி ராத்திரி வேளையிலே திரிவாங்க?'

'பேய் பிசாசு என்கிறாங்க. அவனைப் புடிச்சுது, இவனை அடிச்சுது என்கிறாங்க. இந்தக் காத்தலிங்கத்தை அதெல்லாம் ஒண்ணும் பண்ணாது போலிருக்கு!'

'அவனை எதுதான் என்ன செய்ய முடியும்? அவனே ஒரு பேய்தானே!'

இவ்வாறு பலரது பேச்சுக்கும் பொருளாகித் திரிந்த காத்தலிங்கம் 'நல்லவனுக்கு நல்லவன்; பொல்லாதவனுக்குப் பொல்லாதவன்' என்று பெயர் எடுத்திருந்தான்.

அவன் நல்லவனாக இருப்பதும், அல்லாதவனாக மாறுவதும் அவனுக்குள்ளே போகிற சரக்கின் தன்மையைப் பொறுத்தது என்று ஊர்க்காரர்கள் சொல்வார்கள். அதில் உண்மை இல்லை என்று தள்ளிவிட முடியாது. ஆனால், அவனுக்குள்ளே 'காட்டமான சரக்கு' எப்போது புகுந்திருக்கிறது, அல்லது எப்பொழுது அவன் சுய அறிவுடன் இருக்கிறான் என்று சொல்வது சிரமமான காரியமாகும்.

அவன் முகத்தில் இயல்பாகவே ஒரு கடூரம் குடியிருந்தது. அவன் கண்கள் வெறித்த பார்வை உடையன; அடர்த்தியாக வளர்ந்து முறுக்கேறி நிற்கும் மீசை அவன் முகத் தோற்றத்தைப் பயங்கரமாகச் சித்திரிக்கப் பெரிதும் துணை புரிந்தது. காத்தலிங்கம் நன்கு வளர்ந்து வாட்ட சாட்டமாக இருந்தான். அவனைக் காண்கிற சிறுபிள்ளைகள் உள்ளத்தில் பயம் எழும். பெரியவர்கள் மனசில் ஒருவித மரியாதை தோன்றும். அவன் குடித்துவிட்டுக் கையிலே தடியும் இடுப்பில் கத்தியுமாகக் கிளம்பிவிட்டாலோ, பெரியவர்கள் உள்ளத்திலேகூடப் பயம்தான் தலையெடுத்து நிற்கும்.

'இந்தக் காத்தலிங்கம் வம்புச் சண்டைக்குப் போக மாட்டான். ஆனால், வந்த சண்டையை விடவும் மாட்டான். ஆமா. காத்தலிங்கம் எப்பவும் நியாயத்தின் கட்சி. அநியாயமானது எதையும் அவன் செய்யவே மாட்டான்!'— இவ்வாறு காத்தலிங்கமே அடிக்கடி ஒலிபரப்புவது வழக்கம்.

காத்தலிங்கத்தின் துணையாய்— தோழனாய்— முன் னோடியாய், சதா அவனை விட்டுப் பிரியாமல் இருந்தது கறுப்பன் எனும் நாய். அதை அவன் மிகுந்த அன்போடு சீராட்டிப் போற்றி வளர்த்து வந்தான். ஒரு சமயம் தோட்டக்காரன் ஒருவனின் நாய்க்கும் கறுப்பனுக்கும் சண்டை ஏற்பட்டது. தனது நாயைத் தாக்கியதால் ஆத் திரம் கொண்ட தோட்டக்காரன் கறுப்பன் மீது கற்களை வீசினான். ஒரு கல் நாயின் காலைக் காயப்படுத்தியது. அதை அறிந்த காத்தலிங்கம் தோட்டக்காரனுக்குப் பாடம் கற்பிக்க விரும்பினான். அதற்காக அவனோடு சண்டை பிடிக்கவில்லை. அவன் நாயைப் பிடித்து அதன் இரண்டு கால்களையும் முறித்து அனுப்பினான். 'இதுதான் நியாயம்!' என்று பெருமையாகப் பேசவும் பின்வாங்கவில்லை.

காத்தலிங்கத்தின் நியாய உணர்ச்சிக்கு இது ஒரு 'சாம்பிள்' ஆகும்.

முன்பெல்லாம் அவன் தினசரி இரவு நேரங்களில் பாட்டு எனும் பெயரால் ஊளையிட்டுத் திரிவது வழக்கம். 'ரோட்டடி வீட்டுக்காரி, ரோசாப்பூச் சீலைக்காரி' என்பதும், 'சாலையிலே ரெண்டு மரம், சர்க்காரு வச்சமரம்; உனக் கேத்த தூக்குமரம், தங்கமத் தில்லாலே' என்ற பாட்டும் அவனுக்கு அதிகம் பிடித்தவை. காட்டுக் கூப்பாடு போடு கிற 'ஒலி பெருக்கி' மாதிரி அவன் அவற்றைக் கதறிக் கொண்டு தெருவில் நடக்கிறபோது, வீடுகளுக்குள்ளே தூங்குகிறவர்கள் விழிப்புறாமல் இருக்க முடியாது.

'காத்தலிங்கம், நீருபாடுறது ஜோராகத்தானிருக்கு. பாட்டும் அருமையான பாட்டுதான். இருந்தாலும் கொஞ்சம் மெதுவாகப் பாடக்கூடாதா வேய்? நடு ராத்திரி யிலே தூக்கத்தைக் கெடுக்கும்படியாக...' என்று பெரிய

வீட்டு ராமையாப் பிள்ளை இவனிடம் தயங்கித் தயங்கிப் பேசலானார் ஒரு தடவை.

காத்தலிங்கம் கைகளைத் தலைக்கு மேல் தூக்கி, பெரிதாக ஒரு கும்பிடு போட்டான். 'சரிதான் ஐயா. அப்படியே செய்றேன்' என்றான்.

அவனுக்கு என்ன தோன்றியதோ, மறுநாள் முதல் அவன் வாய்விட்டுப் பாடவேயில்லை. ஆயினும், 'அப்பாடா, இனி நிம்மதியாய்த் தூங்கலாம்' என்று எண்ணியவர்கள் ஏமாந்தார்கள். அதற்கு அடுத்த நாளிலிருந்து தெருக்களில் பலமான சீட்டி ஒலித்தது. பாட்டுகளைச் சீட்டியடித்து ஒலிபரப்பும் காத்தலிங்கம் இடைக்கிடை 'ஹ்விட்—ஹ்வீட்டோ ஹ்விட்' என்று சீழ்க்கை ஒலி செய்வதையும் வழக்கமாக்கிக் கொண்டான்.

'சத்தம் போட்டுப் பாடாதேயின்னு பெரிய வீட்டு ஐயா சொன்னாக. காத்தலிங்கம் நியாயத்துக்கு கட்டுப்படுகிற வன். அதனாலேதான் நான் பாடுறதையே நிறுத்திப் புட் டேன். 'டேய் சீட்டி அடிக்காதேடா காத்து' யின்னு யாரா வது என்னிடம் சொல்ல முடியுமா? மரம் மட்டைகளுக்கு ஊடே திரிகிற காத்து கூடத்தான் சீட்டியடிக்குது. அப்புறம்?' என்று அவன் நடுத்தெருவில் நின்று நியாயம் பேசினான்.

பெரிய வீட்டுப் பிள்ளை என்ன, எவருக்குமே அவனிடம் பேசி வாதாட வேண்டும் என்ற எழுச்சி ஏற்படவில்லை. 'போக்கிரிப் பயல் எப்படியும் போறான்னு விட வேண்டியது தான்!' என்று பெரியவரும் பிறரும் கருதிச் சும்மா இருந்து விட்டார்கள்.

இப்படிப் பல வாரங்கள் ஓடிவிட்டன.

அன்று காத்தலிங்கத்துக்கு வழக்கமான உற்சாகத்தை விட அதிக அளவு குஷி இருந்திருக்க வேண்டும். இல்லையெனில், வெறும் சீட்டியடிப்போடு ஊர் சுற்றுகிறவன் வாய் திறந்து பாடத் துணிந்திருப்பானா? பாட்டும் வழக்கமாக அவன் பாடுவது அல்ல.

'தண்ணிக்குப் போ மகளே,
தலை குனிந்து வா மகளே!
மோட்டாரு டைவரைக் கண்டால்
மொகம் கொடுத்துப் பேசாதேடி!'

என்று கத்தினான். திரும்பத் திரும்ப ஊளையிட்டான். அந்தப் பாட்டிலே அவனுக்கு அத்தனை லயிப்பு!

'ஏது காத்தலிங்கம், இன்னிக்குப் பாட்டு பிரமாதமாக இருக்குதே?' என்ற குரல் அவனை உலுக்கியது. பெரிய வீட்டு ராமையாப் பிள்ளைதான் பேசினார்.

காத்தலிங்கம் கூழைக் கும்பிடு போட்டான். 'என்ன ஐயா, இந்த நேரத்திலே எங்கே போயிட்டு வாரீக?' என்றான்.

அவர் லேசாகச் சிரித்தார். 'என்னடே காத்து, தினசரி ராத்திரி இப்படித் திரிகிறியே? நீ தூங்குவதுதான் எப்போ? உனக்குத் தூக்கமே வர்றதில்லையா?' என்று கேட்டார்.

'தூக்கமாவது ஒண்ணாவது!... தூங்கையிலே போகிற மூச்சு சற்றே சுழிமாறிப் போனாலும் போச்சு...' இதை நீட்டி இழுத்துப் பாடிவிட்டு, 'அதனாலே நான் ராத்திரி வேளைகளில் தூங்குவது கிடையாது' என்று காத்து சொன்னான்.

'அப்ப பகல் வேளையிலே நன்றாய்த் தூங்குவீர் போலிருக்கு!' என்றார் ராமையாப் பிள்ளை.

'கெக் கெக்' என்று விசித்திரமான சிரிப்பொலி எழுப்பினான் அவன். 'ஐயா, ஒரு விஷயம். இந்தக் காத்தலிங்கமும் ஒரு யோகின்னுதான் சொல்லணும். ஏன்னு கேட்டியளா? ஒரு பிரசங்கியா பிள்ளை ஒருநாள் சொல்லிக்கிட்டிருந்தாரு : 'ஊர்க்காரர்கள் தூங்குகிறபோது யோகி விழித்திருக்கிறான். மற்றவர்கள் விழித்திருக்கும் வேளையில், யோகி தூங்குகிறான்' அப்படீன்னாரு. காத்தலிங்கமும் அதையேதான் செய்கிறான். என்ன ஐயா நான் சொல்றது?' என்றான்.

'ஆகா!' என வியந்து பாராட்டினார் பிள்ளை திடீரென்று நினைத்துக் கொண்டவர் போல் சொன்னார்: 'காத்தலிங்கம் நான் ஒண்ணு சொல்றேன் கேளு. நீயோ ராத்திரி நேரங்களிலே தூங்கப் போறதில்லே. ஒரு இடத்தில் உட்காந்திருப்பதும் உனக்குப் பிடிக்காது. இப்படி வெட்டியாகத் திரிந்து வீண் பொழுது போக்குவதையே வேலையாக மாற்றி, சம்பளமும் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கு. நீ வேலை பார்க்கத் தயாரா?'

'என்னய்யா கேலி பண்றீங்களா?' என்று கடுப்பாகக் கேட்டான் அவன்.

'கேலி இல்லை காத்து. நிசமாத்தான் சொல்றேன். பண்ணையார் ராசாப்பிள்ளைவாள் இருக்காகளே, அவுக எஸ்டேட்டுலே மரம் மட்டையின்னு திருடு போகுதாம். சரியான காவல்காரன் ஒருவனை நியமிக்கணுமுன்னு பார்க்கிறாங்க. காவல் வேலைக்கு ஏற்ற ஆளு இருந்தால் சொல்லுங்கன்னு எஸ்டேட் கணக்குப்பிள்ளை என்னிடம் சொன்னாரு. அவருகூடப் பேசிக்கிட்டு இருந்துவிட்டுத்தான் வாரேன்' என்று பிள்ளை கூறினார்.

'வேலையா! எனக்கா? ஹெஹஹே' என்று கனைத்தான் காத்தலிங்கம்.

'நல்ல இடம் வே. நல்ல சம்பளம் கிடைக்கும். விசேஷ நாட்களில் வேட்டி சட்டை இனாம் எல்லாம் தருவாரு. யோசிச்சுச் சொல்லும், என்று சொல்லிவிட்டு அகன்றார் பிள்ளை.

'ஹ்விட்டோ ஹ்வீட்!' என்று சீட்டியடித்தான் காத்த லிங்கம். உயர்ந்த குரல் எடுத்துப் பாடலானான் :

'நல்வாக்கு, நல்வாக்கு
நல்வாக்கு நீ கொடடி!
பத்தினிக் கண்ணகியே,
பாங்கான பெண்மயிலே!'

துரத்தி வந்த பாட்டைக் கேட்டு ராமையாப்பிள்ளை வேகமாக நடந்தார். 'பயலுக்கு இன்னிக்கு நல்ல வேட்டை போலிருக்கு. ஏக ஜாலிதான்!' என்று அவர் மனம் முனங்கியது. 'இவன் இங்கிருந்து ஒழிஞ்சால்தான் இந்த ஊருக்குச் சேமம். நான் சொன்ன வேலையிலே சேர்ந்து விட்டான் என்றால், எல்லாருக்குமே நல்லது என்றும் அவர் நினைத்துக் கொண்டார்.

○ ○

காத்தலிங்கம் சுற்றி அலைந்து எப்படி எப்படியோ பொழுது போக்கிய பிறகு ஒரு டீக்கடையில் சாயா 'அடித்து விட்டு' வீடு திரும்பும் பொழுது நன்றாக விடிந்து விட்டது. காலை வெயிலின் புத்தொளி எங்கும் புது வனப்பையும் புதிய உற்சாகத்தையும் பூசிக் கொண்டிருந்தது.

அவனுக்கு எதிரே சில பெண்கள் வந்து கொண்டிருந்தார்கள். வயல் வேலைக்குச் செல்கிறவர்கள். பொதுவாக, பெண்களுக்குக் காத்தலிங்கத்திடம் ஒரு பயம் உண்டு. ஆனால், விதிவிலக்காக விளங்கினாள் மீனாட்சி.

அவள் அவனுக்குச் சொந்தக்காரியும் கூட. சரியான வாயாடி. குறும்புத்தனம் மிகுந்தவள். நாகரிக மோகம் அவளைப் பிடித்திருந்தது. அவளும் அந்த கும்பலோடு சேர்ந்து வந்தாள்.

அவளைக் கண்டதும் காத்தலிங்கம், 'என்ன, அக்கா மகளே; சொக்காய்க்காரி! வெத்திலை வைச்சிருக்கியா?' என்று கேட்டான்.

'இல்லையே!' என்று கையை அசைத்தாள் அவள். தன் தோழிகளைப் பார்த்து, 'நீங்க எல்லாம் கூகை பார்த்திருக்கிறீங்களா?' என்றாள்.

'கூகையா?' என்று ஒன்றிருவர் கேட்டு வைத்தார்கள்.

'பாராதவங்க இங்கேயே பார்த்துக் கொள்ளலாம்' என்று மீனாட்சி காத்தலிங்கத்தைச் சுட்டிக் காட்டியபடி கலகல வெனச் சிரித்தாள்.

'என்னா புள்ளே என்னா? உனக்கு எப்படி வருது?' என்று அவன் முறைத்தான்.

அவள் சிரித்தபடி சொன்னாள் : 'கூகை என்ன செய்யுது ? பகல் நேரத்திலே பொந்துக்குள்ளே பம்மியிருக்கும். ராத்திரி ஆனதும் வெளியே புறப்படும். ஊர் நெடுகச் சுற்றி வரும். அது மட்டுமா ? எல்லாருக்கும் பயம் கொடுக்கிற குரலிலே ஹூவோ —ஹூவோன்னும் கத்தும். நீயும் அதையே தான் செய்றே. சரியான மனிசக் கூகை நீ!'

அவளோடு சேர்ந்து சிரித்தார்கள் மற்றப் பெண்கள். என்ன செய்வது ? அவனும் சிரித்தான்.

'ஒக்கச் சிரித்தால் வெக்கமில்லே. அப்படித்தானே மாமா?' என்று கேட்டாள் அவள்.

'ஒரு நாள் பாரு உன் காதைப் பிடிச்சி ஒரே திருகாகத் திருகிவிடுவேன். அப்புறம் நீ கம்மல் போடுறது எங்கே? குலுக்கி மினுக்குவது எப்படீன்னு பார்க்கலாமே!' என்று முனகினான் அவன்.

'பின்னே என்ன? ஏதாவது வேலை பார்ப்போம், நாலு பேரைப் போல மதிப்பாக இருப்போம்கிற எண்ணம் இல்லியே உனக்கு. சோம்பேறியாக் கிடந்த சிங்காரம் கூட வேலை பார்க்கப் போறான். பண்ணையார் எஸ்டேட்டிலே காவல் வேலை அவனுக்குக் கிடைக்குமாம். அப்புறமென்ன! பண்ணை பங்களாவிலே இருக்கலாம். அப்புறம் டவுனி லேயே ஒரு வீடு பார்த்து......'

'ஓகோ!' என்றான் காத்தலிங்கம். மீனாட்சி மேலும் சொல்ல விரும்பியதைக் கேட்கும் ஆசை இல்லாமலே நடந் தான். அவன் மனம் கொதித்தது. 'சிங்காரம் பயல் எதிலும் எனக்குப் போட்டியாக முளைப்பான் போலிருக்கு. இந்தக் குட்டி மீனாட்சியிடம் நெருங்காதேடான்னு அவ னுக்குப் பாடம் போதிக்க நினைச்சிருந்தேன். அதுங்காட்டி யும், எஸ்டேட் வேலையிலும் தலையைக் காட்டுறானா பய? இந்தக் குட்டி டவுனுக்குப் போகலாம், சினிமாப் பாக்கலாம்னு கனவு காண ஆரம்பிச்சுடுமே. ஓ, இவ்வளவுக்கு ஆயிட்டுதா?' என்று உறுமியது அவன் மனக் குறளி.

அதன்பிறகு அவன் வீண் பொழுது போக்கவில்லை. ராமையாப் பிள்ளையைத் தேடிச் சென்றான். அவர் பண் ணையார் வீட்டுக் கணக்குப் பிள்ளையைப் பார்க்கப் போயிருக் கிறார் என்று தெரிந்ததும், அவனும் நேரே அங்குப் போனான்.

அங்கே பலர் இருந்தார்கள். சிங்காரமும் காணப்பட் டான். கணக்குப்பிள்ளை சிங்காரத்திடம் ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார்.

'ஐயா சேவிக்கிறேன்' என்று பெரும் கும்பிடு ஒன்று போட்டான் காத்தலிங்கம். அவனைக் கண்டதுமே விஷயத்தைப் புரிந்து கொண்டார் ராமையாப்பிள்ளை. 'என்ன காத்து, என்ன விஷயம்?' என்று கேட்டார்.

'ராத்திரி நீங்க சொன்ன விஷயமாத்தான் வந்தேன். எசமான் பண்ணையிலே காவல் வேலை ......' என்று அவன் இழுத்தான்.

'அதுக்குச் சிங்காரத்தை ஏற்பாடு பண்ணலாமுன்னு கணக்குப்பிள்ளை ஐயா......' என்று ஆரம்பித்தார் பிள்ளை.

'ஹஹம்' என்று தொண்டையைச் செருமியபடி மீசையை முறுக்கிவிட்டான் காத்தலிங்கம்.

சிங்காரம் அவசரமாகக் குறுக்கிட்டான்: 'எசமான், காவல் வேலைக்குக் காத்தலிங்கம் அண்ணன்தான் லாயக்கு. அண்ணன் மாதிரி சரியான ஆளு யாரும் கிடைக்க மாட்டாங்க......'

'ஆமாமா' என ஒத்து ஊதினார்கள் அவனைச் சேர்ந்தவர்கள்.

காத்தலிங்கத்தின் உதடுகளில் விளையாடப் பிறந்த நமட்டுச் சிரிப்பு அவனது அடர்ந்த மீசைக்குள் மறைந்து கொண்டது.

'அவன் பேரே காத்தலிங்கமாச்சே, அவன் வேறு எப்படி இருக்க முடியும்?' என்று ஹாஸ்யம் பண்ண முயன்றார் ராமையாப் பிள்ளை.

எல்லாம் திருப்தியாக முடிந்த நிறைவோடு எல்லாரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

காத்தலிங்கம் எஸ்டேட் காவல்காரனாகச் செல்வதில் மீனாட்சியும் மகிழ்வடைந்தாள். 'நான் குத்தலாகப் பேசி னதுக்காகப் பிறகு வருத்தப்பட்டேன். என்னை மன்னிச்சிரு மாமா' என்று கெஞ்சலும் கொஞ்சலுமாகப் பேசி, காந்தச் சிரிப்பை வீசினாள். முரடனான காத்தலிங்கத்திடம் கூட அந்தக் கண்களை எதிர்த்து நிற்கும் சக்தி இல்லை. அவன் தேன் குடித்த குரங்கு மாதிரி, அவள் முகத்தைப் பார்த்து இளித்தபடி நின்றான்.

○

குறுங்குடிக்கும் டவுனுக்கும் நடுவிலிருந்தது பண்ணை யாரின் எஸ்டேட். பலவித மரங்களும் நின்றன அங்கு. மா, பலா, முதலிய பழ மரங்களும், பனை, வேலமரம், கருவை போன்றவைகளும் நிறையவே இருந்தன. மாந்தோப்பு மத்தி யில் 'பங்களா' என்று பெயர் பெற்ற சிறு வீடு ஒன்றும் இருந் தது.

அங்கேயே தங்கியிருந்து வெகு காலமாகக் காவல் புரிந்து வந்த கிழவன் இறந்து விட்டான். அதன் பிறகு யார் யாரோ வந்தார்கள், போனார்கள். சரியான ஆள் கிடைக்கவில்லை. விறகு விற்றுப் பிழைப்பவர்கள் மரக் கிளைகளை வெட்டிச் சென்றார்கள். சிறு சிறு மரங்களை வெட்டிச் சாய்த்துப் பாழ் படுத்தினார்கள். மரங்களைத் திருடிச் சென்றார்கள். இவற் றைத் தடுத்தாக வேண்டும். எனவே, கடுமையாகவும் கண்டிப் பாகவும் காவல்காரன் நடந்துகொண்டால்கூட பண்ணையார் குறை கூறமாட்டார்; மகிழ்ச்சியே கொள்வார் என்று கணக்கு பிள்ளை காத்தலிங்கத்திடம் அறிவித்தார். நியாயமாக நடந்து, தனது கடமையை நிறைவேற்றுவதாக அவனும் வாக்களித்தான்.

அதன்படி செயல் புரியவும் அவன் தவறவில்லை. காத்த லிங்கம் காவலுக்கு வந்து விட்டான் என்று கேள்விப்பட்டதுமே

பயந்து ஒதுங்கியவர்கள் பலர். அவனைக் கண்டு அஞ்சி ஒதுங்கியவர்கள் சிலர். அவன் கையில் அகப்பட்டு, அடிப்பட்டு, தப்பு சாமி. இந்த ஒரு தடவை மாப்பு விடுங்க சாமி. இனி இப்படி செய்ய மாட்டேன்' என்று அலறிப் புடைத்துக் கொண்டு ஓடியவர்கள் அநேகர்.

காத்தலிங்கம் தன் கையில் அகப்பட்டவர்களுக்கு இஷ்டம் போல் தண்டனை கொடுத்தான். மனம் போன போக்கில் பாட்டுப் பாடியும் சீட்டியடித்தும் திரிந்தான். இருந்தாலும் ஊருக்குள் உலவியது போல் இல்லை இது என்ற மனக்குறை அவனுக்கு உண்டு.

○

ஒரு நாள் பிற்பகல், வெயில் நேரம். வழக்கமாகக் காத்தலிங்கம் காட்டின் பக்கம் வருகிற வேளை அல்ல அது. அன்று, 'இந்த வெயிலுக்கு மரத்தடியில் விழுந்து கிடந்தால் சுகமாக இருக்கும். நிழலும் காற்றும் ஜிலுஜிலு வென்றிருக்கும்' என்று அவன் மனம் ஆசைகாட்டியது. கால்கள் அங்கு போக வேண்டியதுதானே!

அவன் அந்த நேரத்தில் அவ்விடம் வந்ததும் நல்லதாயிற்று என்ற குதூகலம் உண்டாயிற்று அவனுக்கு. தூரத்தில் வரும் பொழுதே அவனது கழுகுக் கண்கள் 'ஏதோ திருட்டு வேலை நடக்கிறது' என்று உணர்ந்து விட்டன. எச்சரிக்கையோடு நடந்தான் அவன். இரண்டு பெண்கள் விறகு சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

அவனது பண்பின்படி அவன் வாய் வசவுகளை அள்ளி வீசியது. அவன் ஏசிக்கொண்டே வருவதை உணர்ந்த பெண்கள் திடுக்கிட்டு, செய்யும் வகை அறியாமல் திகைத்து நின்று விட்டார்கள். அவன் பக்கம் முகம் திருப்பவேயில்லை.

'முகத்தைக் காட்ட வெட்கமாக இருக்குதோ?' என்று கேட்டு, இரண்டு ஏச்சுக்களையும் சேர்த்துச் சொன்ன காத்த

லிங்கம் அவர்களை நெருங்கி நோக்கியதும் திடுக்கிட நேர்ந்தது. அவன் எதிர்பார்க்கவேயில்லை இப்படியும் நிகழும் என்று அவன் எண்ணவும் முடியாதே! மீனாட்சி தனது காவலை அலட்சியமாக மதித்துத் திருடவும் துணிவாள் என்று அவன் ஏன் நினைக்கப் போகிறான்?

ஆனால் அவள்தான் நின்றாள். இரண்டு பேரில் ஒருத்தி மீனாட்சி.

அவள் தலை மண்ணை நோக்கித் தாழ்ந்தது.

காத்தலிங்கத்தின் நெஞ்சு விம்மி, நெடிய மூச்சு ஒன்றை வெளியே தள்ளிவிட்டுத் தணிந்தது. வேதனைக் குளவி அவன் உள்ளத்தைக் குடையலாயிற்று. அவன் பேசுவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. பெண்கள் இருவரும் சிலைகளாக நின்றார்கள்.

'மீனாட்சி, நீ கூடவா இப்படி?' என்றான் அவன்.

மீனாட்சி குத்துக் கல்லாக நின்றாள். மற்றவள் ரோஷம் கொண்டவள் போல் பேசத் தொடங்கினாள் :

'அவ மட்டும் என்ன உசத்தி? அவளும் எங்களை போல் தானே? அவளுக்கும் தாராளச் செலவுக்கு நிறையப் பணம் வேண்டித்தானே இருக்கு?'

'சீ கழுதை, வாயை மூடு!' என அதட்டி ஒரு முறைப்பு முறைத்தான் காத்து.

உருட்டி விழிக்கும் கண்களையும் துடிக்கும் மீசையையும் பார்த்து அவள் பயந்து விட்டாள். அவன் அடித்து விடுவானோ என்று நடுங்கினாள்.

'வேறே யாராகவாவது இருந்தால் இதுக்குள்ளே ஓங்கி அறைஞ்சிருப்பேன். பொட்டைச்சிகளை அடிப்பது காத்தலிங்

கத்துக்குத்தான் அவமானம். உங்களைக் கொண்டு போய்ப் பண்ணையார் முன்னேதான் நிறுத்தணும்' என்று அவன் சொன்னான்.

அவன் இதை கூறிய தோரணையும், தொனியின் வறட்சியும் அவர்களுடைய உள்ளத்தைச் சுட்டன. அவ்விதம் அவன் செய்தே தீர்ப்பான் என்று உணர்ந்த மீனாட்சி, 'இனியும் சும்மா இருத்தல் கூடாது' என்று கருதியவளாய் தன் வேலைத்தனங்களை காட்டத் துணிந்தாள். தலையை ஒயிலாக சாய்த்து, கோணவிழிப் பார்வை காட்டி, குறுஞ்சிரிப்பு தீட்டினாள். 'என்ன மாமா, ஒரேயடியாகக் கோபிச்சுக்கிறயே!' என்று குழைந்தாள்.

'சீ நிறுத்து! இந்த வேலை எல்லாம் இங்கே வேண்டாம்' என்று சீறி விழுந்தான் காத்தலிங்கம். 'திருட்டுக் கழுதைங்க' —என்று வெறுப்போடு முணுமுணுத்தான்.

'சிங்காரம் வேலைக்கு வந்திருந்தால், இப்படியா நடந்து கொள்வாரு? அவரு கண் முன்னாலேயே...' என்று நீட்டி நீட்டிப் பேசலானாள் மீனாட்சி.

'தூ!' என்று காரித் துப்பினான் அவன். அவள் இதயத்தில் தைக்கும் சூடான வசவு ஒன்றைப் பிரயோகித்தான். 'காத்தலிங்கம் காத்தலிங்கமாகத்தான் இருப்பான். இருக்க முடியும். யாருக்காகவும் அவன் இன்னொருவனாக மாற முடியாது. வேறு எந்த நாய் எக்கேடு கெட்டால் எனக்கு என்ன?' என்றான், கடுகடுப்பாக. பிறகு, 'பிழைச்சு போங்க. கொம்புகள் குச்சிகளை எல்லாம் இங்கேயே போட்டு விட்டுத் திரும்பி பாராமல் ஓடிப் போங்க. ஜாக்கிரதை!' என்று பயங்கரமாகக் கூச்சலிட்டான்.

'இவ்வளவோடு விட்டானே மகாராசன். நம்ம புண்ணியமும் பூசாபலனும் தான்' என்று நினைத்தபடி அவ்விருவரும் தப்பிச் சென்றார்கள்.

மிகவும் நேர்மையாகவும், ஒழுங்காகவும் குற்றங்குறைகள் இன்றியும் வேலை பார்த்து வந்த காத்தலிங்கத்துக்குத் திடீரென்று என்ன மனக் கோளாறு வந்து விட்டது என்று பண்ணையார் ஆச்சரியப்பட்டார்.

'குடிகாரப் பயல். நிலையான மனசு கிடையாது அவனுக்கு' என்று கணக்குப்பிள்ளை எண்ணினார்.

இதற்கெல்லாம் காரணம்—

'நான் இனி காவல் வேலை பார்க்க முடியாது. என் போக்கிற்கு அது ஒத்துவரலே' என்று சொல்லிவிட்டு, காத்தலிங்கம் விலகிச் சென்றதேயாகும்.

'அப்பாடா, காத்தலிங்கம் ஒரு மாதிரியாத் தொலைஞ்சான். நிம்மதியாய்த் தூங்க முடிகிறது' என்று இடைக் காலத்தில் மகிழ்ந்து போன குறுங்குடியினர் மறுபடியும் ஒரு நாள் இரவிலே துர்க்கனவு கண்டதுபோல் பதற நேர்ந்தது.

'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசம்......' என்று கோரக் குரலில் பாட்டை ஒலி பெருக்கிக்கொண்டு, இரவின் அமைதியைக் குலைத்தவாறு அலைபவன் காத்தலிங்கம் என்பதை உணர ஊராருக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?

அன்றே ராமையாப்பிள்ளை தற்செயலாக அவனைச் சந்திக்க நேர்ந்தது. 'என்ன காத்தலிங்கம், ஏது மறுபடியும் இப்படி?' என்று கேட்டார் அவர்.

'காத்தின் குணம் என்ன? இஷ்டம் போலத் திரிவது. காத்தைப் புடிச்சு நீ இந்த இடத்திலேதான் இருக்கணுமின்னு யாராலேயும் கட்டிப்போட முடியுமா? காத்தலிங்கமும் அப்படித்தான் இஷ்டம்போல் சுற்றித் திரியாமல் ஒரு இடத்திலே நிலையாக இருப்பதுன்னு சொன்னால் அவனுக்குக் கட்டி வராது!' என்றான் அவன்.

'சரிதான்' என்று இழுத்தார் பிள்ளை.

'ஐயா எந்தப் புஸ்தகத்திலேயாவது இருக்குதா? காத்தும் ஒரு தேவனாமே. அவன் ஆசை வச்சிருந்த பொண்ணு எவளாவது இருந்து, அவனை ஏமாற்றியிருப்பாளோ? அதனாலே விரக்தி அடைஞ்சு அவன் வேதனையோடு சுற்றிச் சுழல்கிறானோ?......

'ஏன் என்னப்பா விஷயம்?' என்று ஆவலோடு விசாரித்தார் ராமையாப் பிள்ளை.

'சும்மா தெரிஞ்சுக்கிடலாமின்னு கேட்டேன்' என்ற காத்தலிங்கம் நீண்ட குரலெடுத்து ஓலமிட்டபடி நடக்கலானான்—

'காத்து உருண்டு வருது!
மேகம் திரண்டு வருது!
வெள்ளம் புரண்டு வருது!'

அதைத் தொடர்ந்து, இருளின் இதயத்தைக் குத்திக் கிழிக்கும் கூரிய ஒலியாக எழுந்து மூலைக்கு மூலை பரவியது "ஹ்விட் ஹ்விட்டோ ஹ்வீட்!' எனும் விசிலடிப்பு.

□

அமுதசுரபி தீபாவளி மலர்—1960

வேங்கைப் புலி

சொக்கலிங்கம் அப்போதுதான் எழுத உட்கார்ந் திருந்தார். எழுதக்கூடிய 'மூட்' வருவதற்கு எவ்வளவோ நேரம் தேவைப்பட்டது. சும்மா இருந்தும், அதை இதைப் புரட்டியும், கோணல் மாணல் கிறுக்கல்கள் தீட்டியும் காலக் கொலை செய்த பிறகு, ஒரு எழுச்சி ஏற்பட்டிருந்தது. எழுதலானார். பேனா வேகமாக இயங்கத் தொடங்கியது.

'தட்தட்' என்று கதவு தட்டப்படும் ஓசை அவர் அமைதியைக் குலைத்தது. எரிச்சல் வந்தது. யாரது என்று சீறிவிழ எண்ணினார்.

'சங்கிலி புங்கிலி கதவைத் திற?'

சிறு பிள்ளைக் குரல் ராகம் போட்டு இழுத்தது.

இங்கே தட்டவில்லையா? சரிதான் என்று அவர் மனம் முணுமுணுத்தது. இருந்தாலும் எரிச்சல் தணியவில்லை.

'நான் மாட்டேன் வேங்கைப் புலி! பதில் நீட்டல் எதிர் வீட்டுக் குள்ளிருந்து வந்தது.

'ஆட்டுக் குட்டியைக் கண்டளோ?' முதல் குரல் ராகம் இழுத்தது.

'கண்டோம்' — பல குரல் இசை.

'எங்கே?'

'வீட்டுக்குள்ளே!'

'வரலாமா?' — ஒரு நீட்டல்.

'வரக்கூடாது!' பதில் இழுப்பு.

'வருவேன்... இதோ வந்துவிட்டேன்.'

கதவு தட்டும் சத்தமும், பல சிறுமிகள் கத்தியும், சிரித்தும், 'வேங்கைப்புலி... ஐயோ... வேங்கைப்புலி' என்று கூச்சலிட்டபடி, கிடுகிடுவென ஓடும் ஓசையும் கேட்டன.

முதலிலேயே கவனம் கலையப்பெற்று விட்ட சொக்க லிங்கம், 'சனியன்கள்!' என்று மனத்தில் ஏசிக்கொண்டார். 'இனிமேல் எழுதின மாதிரித்தான்...'

அவர் மனம் புலம்பிக் கொண்டிருந்தபோதே, வெறு மனே சாத்தப்பட்டிருந்த அவருடைய அறைக்கதவு குபீர் எனத் திறந்து கொண்டு, தடால் என்று சுவரோடு மோதியது.

அதை அப்படித் திறந்தது யார் என்று கோபத்தோடு அவர் பார்க்கையில், இரண்டு பிள்ளைகள் பதுங்கி ஒளியும் நோக்கத்தோடு உள்ளே புகுந்தனர்.

'ஏ ஏய், இங்கே வரப்படாது. வெளியே போங்க' என்று கூச்சல் போட்டார் அவர்.

அக்குழந்தைகள் உள்ளே இருந்த அவரைப் பார்த்துப் பயத்துடன் விழித்தன. வெளியேயிருந்து 'வேங்கைப் புலி' வந்து பிடித்துக் கொள்ளுமே என்ற கலக்கம் வேறு. குழப்பத் துடன் அறை நடுவிலேயே நின்றுகொண்டிருந்தன.

'உம் ... வெளியே போங்க. வீட்டுக்குள்ளே வந்தா விளையாடுவது?' என்று அவர் அதட்டினார்.

வெளியேபோக அடி எடுத்தவைத்த சிறுமியர், 'ஐயோ, வேங்கைப் புலி?' என்று கத்திக் கொண்டு ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடி நின்றுவிட்டனர்.

'ஓகோய், அம்புட்டேளா? வசமா மாட்டிக்கிட்டேளா?' என்று உற்சாகமாகக் கூவிக் கொண்டு உள்ளே பாய்ந்தாள் இன்னொருத்தி. அவள்தான் 'ஆட்டுக் குட்டி'களைத் தேடி அலைந்த 'வேங்கைப் புலி' என்பது அறிமுகப்படுத்தப் படாமலே அம்பலமாயிற்று.

சொக்கலிங்கம் உறுமினார்; 'என்ன கலாட்டா இது? வீட்டுக்குள்ளேயா விளையாட்டு?'

இரண்டு சிறுபிள்ளைகளையும் இரண்டு கைகளில் பிடித்துக்கொண்டு, வெற்றி மிடுக்கும் சிரித்த முகமுமாய் நின்றவள், அச்சமோ கூச்சமோ இல்லாமல், அவரை நோக்கினாள். 'சரிதாம் மாமா. இப்போ என்ன தேஞ்சு போச்சு இங்கே?' என்றாள்.

'போக்கிரிக் கழுதை, போ வெளியே!' கோபம் அவர் குரலில் பொறி தெறித்தது.

அவள் சிரித்த முகத்தோடு அங்குமிங்கும் பார்த்தாள். சுவர்களில் அழகுசெய்த வண்ணப்படங்கள் அவளைக் கவர்ச்சித்தன. வியப்போடும் ரசனையோடும் அவற்றை ஆராய்ந்தாள் அவள்.

'இந்தா வாறேன். போகாமல் இங்கேயே நின்னுக் கிட்டு, இது என்ன சண்டித்தனம்?'

சொக்கலிங்கம் சீறிக்கொண்டு, நாற்காலியைப் பேரோசையோடு விலக்கிவிட்டு, முன்னேற முனைந்தார்.

'ஐயோ வேங்கைப் புலி! வா அக்கா, வந்து விடு. சீக்கிரமா வா!' என்று இரு சிறுமிகளும் பெரியவளைப் பிடித்து இழுத்தனர்.

அவளுக்கு ஏழு அல்லது எட்டு வயசு இருக்கலாம். குறு குறு விழிகளும் குறும்புச் சிரிப்பும் அவள் முகத்தில் சிறப்பான வசீகரம் சேர்த்துக் கொண்டிருந்தன. 'சரிதாம் மாமா, ரொம்ப அலட்டிக்காதீங்க!' என்று அமைதியாகச் சொன்னாள். அவசரம் இல்லாமலே வெளியேறினாள்.

'என்ன திமிர் பாரேன் இந்தப் புள்ளைக்கு!' என்று பொறுமினார் அவர்.

சொக்கலிங்கம் அந்த இடத்துக்குக் குடிவந்து பத்து தினங்கள் ஆகியிருக்கலாம். அது தனியாக அமைந்த ஓர் அறை. சிறு கூடம் மாதிரியோ, பொழுது போக்குவதற்கு உரிய மடம் போலவோ கட்டப்பட்டு, பின்னர் ஒருவர் இருப்பதற்கு வசதியான அறையாக மாற்றப்பட்டிருந்தது. அதுவும், சூழ்நிலையும், அங்கு நிலவிய அமைதியும் அவருக்குப் பிடித்திருந்தன. தொல்லைகளாக விளங்கக் கூடிய எதுவும் அங்கே இல்லை என்ற திருப்தி அவருக்கு ஏற்பட்டிருந்தது. இன்றைக்குத்தான் அவரது திருப்தியையும் அமைதியையும் கெடுப்பதற்கென்றே கூச்சலும் குதியாட்டமுமாக வந்து சேர்ந்திருந்தன குழந்தைகள்.

'குரங்குகள்! எந்த வீட்டைச் சேர்ந்த மூதேவிகளோ தெரியவில்லை. இங்கே வந்து தொல்லை கொடுக்கின்றன. வீட்டுக்காரரிடம் சொல்லி வைக்கவேண்டும்' என்று அவர் மனம் முணுமுணுத்தது.

அவருக்குப் பிடிக்காத விஷயங்கள் பல. அவற்றிலே குழந்தைகளும் முக்கிய இடம்பெறும். அவர் தனியாக வாழ்க்கை நடத்தினார். படிப்பதிலும் எழுதுவதிலும் ஊர்

சுற்றுவதிலுமே வாழ்க்கையைக் கவலை இல்லாமல் கழித்து வந்தார். ஒரே இடத்தில் தங்கியிருப்பதில் அவருக்கு ஆர்வம் அதிகம் கிடையாது. ஓர் இடம் அலுத்துப்போனால், ‘குடிசையைக் கிளப்பிக் கொண்டு’ வேறு இடத்துக்குக் குடி புகுவார்.

அப்படித்தான் இங்கும் வந்திருந்தார். இந்த இடம் அவர் மனசுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. நகரத்தின் பரபரப்புகளை விட்டு விலகி, பசுமையான தனியிடமாக இருந்தது. மரங்களும் பூஞ்செடிகளும் கிணறுமாய் சூழ்நிலை குளு குளு என்றிருந்தது. அருகிலும் பெரிய வீடுகளோ சிறு குடிசைகளோ இல்லை. வலப்புறம் ஒரு வீடு இருந்தது. வீட்டுக்காரர்கள் வசித்த வீடு இடப்புறம் சிறிது தள்ளி இருந்தது. புதிதாக வந்திருக்கும் நபர் ‘ஒதுங்கி வாழும் பிராணி’ என்று புரிந்து கொண்டு, அவ்வீடுகளில் உள்ளவர்களும் இவரை விட்டு ஒதுங்கியே போனார்கள். இன்று வரை குழந்தைத் தொல்லையும் இல்லாமல் இருந்தது.

‘இதை ஆரம்பத்திலேயே அடக்கி ஒடுக்கி விட வேண்டும். மிஞ்ச விடப்படாது’ என்று சிடு சிடுத்தது அவர் உள்ளம்.

வெகுநேரம் அவதிப்பட்டு, எழுதலாம் என்று உற்சாகத்தோடு ஆரம்பித்த வேலை எடுத்த எடுப்பிலேயே தடைப் பட்டுப்போனதால், சொக்கலிங்கத்தின் உளக்கிளர்ச்சி படுத்துவிட்டது. அழுமூஞ்சி மனசோடு அங்கே முடங்கியிருப்பதை விட, வெளியே போய் சுற்றிவிட்டு வரலாம்; அதுதான் மகிழ்ச்சிகரமான அலுவல் என்று என்று எண்ணி அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்பினார் அவர்.

அவர் திரும்பி வரும்போது இருட்டிவிட்டது. குழந்தை தென்படவே இல்லை. ‘பக்கத்திலே எங்கேயாவதிருந்து

வந்திருக்கும் இங்கே விளையாட!' என்று எண்ணிக் கொண்டார். 'வீட்டுக்குப் போயிருக்கும். அநேகமாக இனி மேல் வராது.'

அந்த எண்ணம் தவறானது என்பது மறுநாளே அவருக்கு விளங்கிவிட்டது. குழந்தைகள் பட்டாளம் அங்கும் இங்கும் ஓடியாடிக் கூச்சலிடத் தொடங்கின. அவருக்கு எரிச்சல்தான். என்ன செய்வது?

நல்ல வேளையாக, வீட்டுக்காரர் அந்தப் பக்கமாக வந்தார். அவரே பிள்ளைகளை விரட்டினார். 'ஏ இங்கே என்ன கூச்சல்? இந்தப் பக்கம் வந்து இப்படி சத்தம் போடக்கூடாது. அப்படி தோட்டத்திலே போய் விளையாடுங்க. ஓடி ஆடிக் கூச்சல் போடாமல் ஓர் இடத்திலே உட்கார்ந்து விளையாடுங்க' என்று எச்சரித்து அனுப்பினார்.

'அவர்தான் துரத்திவிட்டாரே. அந்தப் பிள்ளைகளைப் பற்றி அவரிடம் நாம் குறைகூற வேண்டியதில்லை. எங்கே உள்ள பிள்ளைகள் என்று வீணாக விசாரிப்பானேன்?' என்று சொக்கலிங்கம் சும்மா இருந்து விட்டார். பிறரிடம் அநாவசியமாகப் பேச்சுக்கொடுப்பதும் அவருக்குப் பிடிக்காது தான்.

அன்று பிற்பகல் சொக்கலிங்கம் எழுதுவதிலோ படிப்பதிலோ உற்சாகம் இல்லாதவராக சும்மா நாற்காலியில் சாய்ந்திருந்தார். வாசலுக்கு வெளியே ஒரு சிறுமுகம் எட்டிப் பார்த்தது. வண்டு விழிகளும், சிரிப்பு ஊறும் உதடுகளும், களையான முகமும் 'வாயாடிச் சிறுமி' என்று காட்டிக் கொடுத்தன. அவர் பாராததுபோல் இருந்தார்.

'உள்ளே வரலாமா?' என்று கேட்டாள் அவள்.

'வரக் கூடாது' என்றார் அவர்.

'நீங்க என்ன ஆட்டுக் குட்டியா?' என்று கேட்டுக் கொண்டே சிறு பெண் உள்ளே வந்தாள்.

அவருக்குப் புரியவில்லை. 'என்ன உளறுதே?' என்று கேட்டார்.

'வெளியே நின்று வேங்கைப் புலி வரலாமான்னு கேட்கும். உள்ளே இருந்து ஆட்டுக்குட்டி வரக்கூடாதுன்னு சொல்லும். விளையாட்டிலே அப்படி. நீங்க ஏன் இப்ப வரக் கூடாதுங்கிறீங்க?'

இதைக் கேட்டுவிட்டு அவள், மணிகளை உலுக்கியது போல், கலகலவெனச் சிரித்தாள்.

பயம் கொள்ளாமலும், சாமர்த்தியமாகவும் பேசி, கவலை இல்லாமல் சிரிக்கிற அந்தப் பெண்ணைக் கோபித்து வெளியே விரட்டுவதற்கு அவருக்கு மனம் வரவில்லை. இருந்தாலும் மிடுக்கை விட்டுக் கொடுக்காமல், 'ஏய் வேங்கைப் புலி, நீ வீட்டுக்குள்ளே எல்லாம் வரலாமா?' என்று வறண்ட குரலில் பேசினார்.

'ஏன் வரப்படாது?'

'நான் எழுதுறதுக்கும் படிக்கிறதுக்கும் இடைஞ்சலா இருக்கும்...'

'இப்போ நீங்க எழுதவும் இல்லே. படிக்கவும் இல்லையே? பொழுது போகாம முழிச்சிக்கிட்டு இருக்கிற உங்களுக்கு பொழுதும் போகும், நான் படங்களைப் பார்த்த மாதிரியும் இருக்குமேயின்னுட்டுத் தான் வந்தேன். நீங்க ரொம்பக் கோபிக்கிறேளே!'

அவருக்குச் சட்டென்று பதில் சொல்லத் தோன்றவில்லை. 'அதெல்லாம் வரப்படாது. சின்னப் புள்ளைக்கு இங்கே என்ன வேலை?' என்று தான் சிடுசிடுத்தார்.

'சரோஜா சொன்னது சரிதான். நீங்க வேங்கைப் புலியேதான். உர் உர்ருனு பாயிறேளே!' மறுபடியும் சிரிப்பு அருவி சிதறித் தெறித்தது அவளிடமிருந்து.

இந்த வாயாடிப் பெண்ணை என்ன பண்ணலாம் என்று யோசிக்கும் போது, அவள் சுவரில் தொங்கிய படங்களைப் பார்த்து ரசிப்பதில் தீவிரமாக ஈடுபட்டாள்.

'ஏ வேங்கைப் புலி, வெளியே போ!' என்று கூறி அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அவள் சட்டை செய்யாமல். 'ஐய்சக்கா, இது எவ்வளவு ஜோராயிருக்கு பாரேன்!' என்று ஆனந்தக் கூச்சல் உதிர்த்தாள்.

'இந்தா, நான் சொல்றது காதிலே விழலே?'

'என்ன சொன்னீங்க?' என்று, கபடமற்று, அகன்ற விழிகளை அவர் பக்கம் ஏவினாள் சிறுமி.

'வேங்கைப் புலியே வெளியே போன்னேன்!'

'இங்கே புலி ஒண்ணையும் காணோமே?'

'நீ தானே அப்படிச் சொல்லிக் கிட்டே...'

'அது விளையாடுறபோது. இப்போ யாரு விளையாடுறாங்க? பேசாமே நிற்கையிலே, நீங்கதான் கூச்சல் போடுறீங்க...'

இது ஏதடா பெரிய எழவாப் போச்சு; வழியோடு போற சனியன் வம்புச் சண்டைக்கு வலியவந்த மாதிரி இருக்குதே என்று புலம்பியது அவர் மனம். 'சரி, உன் பேரு என்ன?' என்று கேட்டார்.

அவள் பதில் சொல்லவில்லை.

'ஏய் உன்னைத் தானே...'

அவள் கோபம் கொண்டவள்போல் முறைத்துப் பார்த்தாள். 'கூப்பிடுறதைப் பாரேன்! இப்படி எல்லாம் என்னைக் கூப்பிடப்படாது' என்று கண்டிப்புக் குரலில் அறிவித்தாள்.

அவளது பெரிய மனுஷித் தோரணை அவருக்குச் சிரிப்பு உண்டாக்கியது.

'இப்ப என்ன இளிப்பு வாழுது? இ ஹி ஹியின்னுட்டு...'

அவள் மேலும் பேசியிருப்பாள். வெளியேயிருந்து வெடித்தது அழைப்பு: 'பத்மா... ஏ பத்மா...'

'இதோ வாறேன்மா' என்று கூவியபடி, விழுந்தடித்து ஓடினாள் அவள்.

'சரியான குரங்கு... வந்தது ஒரு மாதிரி தொலைஞ்சுது சனி!' என்று அவர் மனம் ஆறுதல் அடைந்தது.

ஆனால், சிறிது நேரத்திலேயே பத்மா திரும்பி வந்துவிட்டாள். அவள் கையில் ஒரு தட்டு இருந்தது. அதில் எதையோ வைத்து மூடி எடுத்து வந்தாள். 'இதில் என்ன இருக்குதாம், சொல்லிடுங்க பார்க்கலாம்!' என்று சவால் விடுத்தாள்.

'என்ன இருக்கோ, எனக்கு எப்படித் தெரியும்?'

'எனக்குத் தெரியுமே—உங்களுக்கு எதுவுமே தெரியாது. ஆமா!' என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு, 'இந்தாங்க, சாப்பிடுங்க. அது தெரியுமில்லே!' என்று கேட்டாள்.

அவள் தலை அசைப்பும் பேசும் பாணியும், நடந்து கொள்ளும் சுபாவமும், இயல்பான துணிச்சலும் அவருக்கு

வேடிக்கையாக இருந்தன. அவளை அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'என் முகத்திலே என்ன இருக்கு? தட்டிலே தேன்குழல் இருக்கு. அதைத் துன்னுங்க...'

'இது ஏது?'

'எங்க அம்மா கொடுத்தாங்க. உங்களுக்குத்தான். இதை கொடுக்கத்தான் என்னைக் கூப்பிட்டாங்க. எங்க ஆச்சி வீட்டிலே இருந்து கொண்டு வந்தது. நேற்று நான், எங்க ஆச்சி, சின்னம்மா குழந்தைகள் எல்லாம் வந்தோம். சரோஜா, தேவகி, உஷா, ஆனந்தி எல்லாரும் ஊருக்குப் போயிட்டாங்க. ஆச்சியும் போயாச்சு...'

'நீ போகலியா?'

'நான் இங்கேயேதான் இருப்பேன்,'

ஓயாத தொல்லைதான் என்றது அவர் மனம்.

'அதைச் சாப்பிடுங்க மாமா. நான் போய் காப்பி எடுத்தாரேன்...'

'காப்பி வேண்டாம். அப்புறம் ஓட்டலில் சாப்பிட்டா போச்சு. மற்றவர்களுக்குச் சிரமம் தரப்படாது.

'எங்க வீட்டிலேதான் காப்பி போட்டாச்சே. இன்னமேயா போடப்போகுது ?' என்று சொல்லி விட்டு, குதித் தோடிப் போனாள் பத்மா.

காப்பி டம்ளரோடு விரைவிலேயே வந்து சேர்ந்தாள். அவர் சாப்பிட்டு முடிக்கும் வரை அங்கேயே நின்றாள். ஓயாது பேசிக்கொண்டேயிருந்தாள்.

ரோஜா மொக்குபோலிருந்த உதடுகள். சுவையாகப் பேச்சுக்களை உதிர்ப்பதில் அலுப்பே அடையா என்று அவருக்குத் தோன்றியது. அவளுடைய சின்னஞ் சிறு வாய் ஓயாது சொல்திவலைகளை அள்ளிச் சிதறும் இனிய ஊற்று மாதிரியே பட்டது அவருக்கு. அந்தச் சிறுமியின் துடிப்பான குணமும், வெடுக்கென்ற பேச்சும் ரசிக்கக் கூடியனவாக இருந்தன. அநேக குழந்தைகளைப் போல் கூச்சமும் வெட்கமும் கொள்ளாமல், பயந்துகொண்டு பதுங்கி மறைந்து ஒளியாமல், புது மனிதர்களிடம் பேசிப் பழக மனமின்றி விலகிப்போகாமல், பத்மா துணிச்சலோடு முன்வந்து சகஜமாகப் பேசிப் பழகியது அவரை வசீகரித்தது. அவர் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரர் மகளாகவும் இருந்துவிட்டாள் அவள். ஆகவே, எரிந்து விழுந்து, அதட்டி அடித்து, அவளை அங்கே எட்டிப்பாராது பண்ணுவது சாத்தியமே அல்ல. சகித்துக் கொள்ள வேண்டிய தொல்லையாக ஏற்றுக் கொள்ளத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டது அவர் மனம்.

சிறுமி பத்மா அவள் இஷ்டப்பட்ட நேரங்களில் எல்லாம் அந்த அறைக்குள் வந்தாள். பார்த்த படங்களையே திருப்பித் திருப்பிப் பார்த்து ஏதாவது கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அடுக்கி வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை எடுத்துப் பிரித்துப் புரட்டி, தாறுமாறாகப் போட்டுவிட்டுப் போவதில் ஆர்வம் காட்டினாள். அவர் எரிந்துவிழுந்தால், "ரொம்ப அலட்டிக்காதீங்க. இப்ப உங்க புஸ்தகங்களை யாரு என்ன பண்ணிட்டாங்க?' என்று கேட்பாள். அல்லது, "எடுத்துப் படிக்கத் தானே புஸ்தகம் இருக்கு? சும்மா அடுக்கி வச்சுப் பூசை பண்ணருதுக்கா வாங்கி இருக்கிறீங்க?' என்பாள். சிலசமயம் சிரித்து விட்டு ஒன்றும் பேசாமலே போய் விடுவாள்.

'நீ இங்கே வந்து இப்படி எல்லாம் தொந்தரவு பண்ணப் படாது!' என்று அவர் ஒவ்வொரு நாளும் எத்தனையோ தடவைச் சொல்ல நேர்ந்தது. பத்மாவின் அப்பாவும் அடிக்கடி எச்சரித்துக் கொண்டுதான் இருந்தார். 'நீ சும்மா சும்மா அங்கே போகக் கூடாது. விஷமம் பண்ணக்கூடாது. அவர் வேலை கெட்டுப்போகும்' என்பார்.

'அந்த மாமா வேலை ஒண்ணும் பார்க்கலே அப்பா. சும்மா சோம்பேறித்தனமா உட்கார்ந்து, புஸ்தகத்தைப் பார்த்துக் கிட்டே இருக்காங்க!' என்று அவள் சொன்னாள்.

'அதுதான் அவர் வேலை' என்றார் அவர்.

'இதுவும் ஒரு வேலையா! ஏஹே!' என்று கெக்கலித்தாள் சிறுமி.

அவள் தாயும், அந்த அறைக்குள் போய் அவள் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்று நயமாகவும் பயமாகவும் எடுத்துச் சொல்லி வந்தாள். பத்மா கேட்டால்தானே!

அவள் சிறு குருவி மாதிரி அங்கும் இங்கும் திரிந்தாள். தோட்டத்தில் ஓடி ஆடி மகிழ்ந்தாள். செடிகளிடையே விளையாடிக் களித்தாள். அவ்வப்போது அந்த அறைக்குள்ளும் நுழைந்து பொழுது போக்குவது அவளுக்குப் பிடித்திருந்தது.

பத்மாவின் வருகை இளம்கதிரின் பொன்னொளி போல் பரவும். புதுமலரின் நறுமணம் போல் நிலவும். மென்காற்றின் குளுமையான தீண்டுதல் போல இனிமைதரும். ஒவ்வொரு முறையும் அது புதுமை நிறைந்ததாய் விளங்கியது. அவள் வருவதும் போவதும் தொல்லையாக இருந்தாலும் அதுவே தனி இன்பமாகவும் அமைந்தது, வறண்ட கோடை பயணம் போன்ற அன்றாட வாழ்வில் குளிர்தரு

இனிமைகளாகத் தோன்றிய அத்தொல்லைகளும் தேவை தான் என்று கருதும் பக்குவ நிலையை அவர் மனம் எய்தியது.

பத்மா, பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று முரண்டு பண்ணி வந்தவள், ஒழுங்காகப் படிக்கப் போக ஆரம்பித்தாள். அதனால் சொக்கலிங்கத்துக்குப் பகல் வேலைகளில் நிம்மதி கிட்டியது. என்றாலும், பள்ளிக்கூடம் போவதற்கு முன்பும், இடைவேளை நேரத்திலும், மாலையில் திரும்பி வந்த பிறகும் அவருடைய அறையிலேயே பழியாய் கிடக்கலானாள். 'நானும் ரொம்ப நிறையப் படிக்கப்போறென். நீங்க வச்சிருக்கிற பெரிய பெரிய புஸ்தகங்களை எல்லாம் நானும் படிப்பேன். அதை எல்லாம் எனக்குத் தருவீங்களா?' என்று அவரிடம் கேட்டாள்.

அச்சிறுமியின் பேராசை அவருக்குச் சிரிப்பு விளைவித்தது. ஆயினும், 'ஓ!' என்று சொல்லி வைத்தார்.

'அப்ப எனக்கு படிப்பு சொல்லிக் கொடுங்க!' என்று சிலேட்டையும், பாடப் புத்தகத்தையும் அவர் முன் நீட்டினாள்.

பத்மாவினால் தனது நேரங்களில் பெரும்பகுதி வீணாகி விடுகிறது என்று சொக்கலிங்கம் அநேக சமயங்களில் வருத்தப்பட்டாலும், அந்தப் புத்திசாலிக் குழந்தையின் நட்பு ஓர் இனிய அனுபமாகவும் அரிய வாய்ப்பாகவும் அமைந்துள்ளது என்றும் மகிழ்வுற்றார்.

பள்ளித் தோழிகளைப் பற்றியும், டீச்சரம்மாக்கள் பற்றியும், தனது சிறு உலகத்தில் நிகழும் விசேஷங்கள் பற்றியும் அவள் சுவாரஸ்யமாகப் பேசுவாள். அவர் படிப்பில் ஈடுபட்டிருந்தாலும், 'சும்மா என்ன படிப்பு? நான் இல்லாத போதுதான் உங்களுக்கு எவ்வளவோ நேரம் இருக்குதே

படிக்க!' என்று அவரை வம்புக்கிழுத்து, கதை அளப்பாள். தன்னோடு விளையாடும்படித் தூண்டுவாள்.

ஆரம்பத்தில் இவை எல்லாம் அவருக்குச் சங்கடங்கள் ஆகவும், மனப்புழுக்கம் ஏற்படுத்துவனவாகவும் இருந்த போதிலும், பழகிப்போனதும் இவையும் தேவைதான் என்ற எண்ணத்தை உண்டாக்கிவிட்டன. பிறருடன் தாராளமாகப் பழகி விளையாட விரும்பாத பத்மாவும் அவருடன் மிகவும் ஒட்டுதலாக உறவு கொண்டாடினாள். அவள் அவரைச் சிலசமயம் 'வேங்கைப் புலி' என்று குறிப்பிடுவதும், அவ ளையே அப்பெயரால் அவர் அழைப்பதும் இருவருக்கும் தமாஷாக இருந்தது. 'என் சின்னச் சினேகிதி' என்றும் அவர் பிரியமாகக் கூறுவது வழக்கம்.

எட்டு வயசுச் சிறுமியோடு பெரியவரான அவர் சினேகம் வளர்த்து, சகஜமாகப் பேசிச் சிரித்து விளையாடுவது பார்ப்ப வர்களுக்கு வேடிக்கையாகப்பட்டது. பிறர் கருத்தைப் பற்றி அவ்விருவரும் கவலைப்படவில்லை.

ஒரு சமயம் பத்மாவுக்குக் கடுமையான நோய் கண்டது. அப்பொழுது சொக்கலிங்கத்தின் உள்ளம் மிகுதியும் துயருற் றது. பலவீனமான உணர்ச்சிகளுக்கு அப்பால்பட்டவன் என்று தன்னைப் பற்றிப் பெருமையாகக் கருதிக் கொள்ளும் அவருக்கே அவருடைய வேதனையும் தவிப்பும் அதிசயமாகத் தோன்றின. அச்சிறுமி குணமடைந்து, இயல்பான போக்கில் கவலையற்று திரியவேண்டும் என்று அவர் பெரிதும் விரும் பினார். அதற்காகத் தன்னால் இயன்றதை எல்லாம் செய்தார். மீண்டும் அவள் சிட்டுக்குருவி போல் துள்ளித் திரியத் தொடங்கியதும் தான் அவர் மனம் மகிழ்ச்சி அடைந்தது.

அந்தப் பெண்ணும் தனது குறைகளை, தேவைகளை, விருப்பங்களை, எண்ணங்களை, கனவுகளை எல்லாம்

அவரிடம் சொல்வதிலேயே ஆர்வம் கொண்டாள். தன் பெற்றோர்களிடம் கூட அவள் அவ்வாறு மனம் திறந்து பேசுவதில்லை.

இவ்வாறு காலம் ஓடியது.

சொக்கலிங்கத்தை வழக்கமாகப் பற்றுகிற மனநோய் திரும்பவும் தலைகாட்டியது. 'இந்த இடத்துக்கு வந்து இரண்டு, வருஷங்களுக்கு மேலாகிவிட்டன. பார்க்கப் போனால், இந்த இரண்டு வருஷமும் வீணாப் போன மாதிரித்தான். நான் உருப்படியாக எதுவும் செய்யவே இல்லையே' என்று அவருக்கு உளப் புழுக்கமும் மன வேதனையும் தோன்றின. வேறு இடம், இன்னொரு ஊர் என்று மனம் ஆசைப்பட்டது.

அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் தீவிரமாகச் செய்து முடித்தார் அவர். வீட்டுக்காரர்களிடமும் அறிவித்தார். அவர்கள் வருத்தப்பட்டார்கள். 'பத்மாதான் ரொம்பவும் வருத்தப்படுவா. உம். என்ன செய்றது! கொஞ்சநாள் அழுதுகொண்டிருப்பாள். பிறகு சரியாகி விடும்' என்று சொன்னார்கள்.

அவர் தன் முடிவை பத்மாவிடம் தெரிவித்தபோது, 'என்ன, விளையாடுறீங்களா' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள். அவர் அழுத்தமாகக் கூறவும், 'பொய்... பொய் சொல்றீங்க!' என்றாள். அவர் உண்மைதான் என்று சொன்னதும். அவள் முகம் வாடியது. 'ஏன் போறீங்க? ஏன் இங்கிருந்து போகணும்?' என்று தீனமாக விசாரித்தாள்.

அவர் கூறிய சமாதானங்கள் அவளுக்குப் பிடிக்கவுமில்லை; புரியவும் இல்லை. 'நீங்க போகவேண்டாம், மாமா. இங்கேயே இருங்க, நான் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டேன்' என்றாள்.

அவர் தன் முடிவை மாற்றிக்கொள்ள மாட்டார் என்று உணர்ந்த பிறகு அவள் எதுவுமே பேசவில்லை. அவர் தன் மனசை மாற்றிவிட மாட்டாரா; பிரயாண ஆயத் தங்களை நிறுத்திவிடமாட்டாரா; இனி இங்கேயே இருந்து விடுவேன் என்று சொல்லமாட்டாரா என்று ஏக்கத்தோடு அவர் முகத்தைப் பார்த்தபடி அங்கேயே வளையவந்தாள். தனது உற்சாகம், கலகலப்பான சுபாவம் அனைத்தையும் இழந்தவளாய் காட்சி அளித்தாள்.

அவள் அந்த அறையிலேயே குப்புறடித்துக் கிடந்து அழுதுக்கொண்டே இருப்பாள் என்று அவர் பயந்தார். ஆனால் அவ்விதம் நடக்கவில்லை. அவள் முகம் களை இழந்து காணப்பட்டது; குறும்புப்பேச்சும் துள்ளலும் துடிப்பும் அவளிடம் காணப்படவில்லை. இவையே பத்மா விடம் வெளிப்படையாகத் தென்பட்ட மாறுதல்கள். அவளது சின்னஞ்சிறு உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சிக் குமை தல்கள் நிலவினவோ— யாருக்குத் தெரியும்!

அன்று இரவு, 'பத்மா, நான் இருட்டோடு கிளம்பிப் போய்விடுவேன் அப்போ நீ தூங்கிக் கொண்டிருப்பாய். அதனால் இப்பவே சொல்லிக் கொள்கிறேன். நான் போயிட்டு வாறேன். உன் நினைவு எனக்கு எப்பவும் இருக்கும்' என்று சொக்கலிங்கம் பிரிவுபசாரம் கூறினார்.

அவள் 'உம்'மென்று முகத்தைத் தூக்கிக் கொண்டு நின்றாள். பிறகு, திடுமென்று அங்கிருந்து ஓடி மறைந் தாள்.

அப்புறம் அவர் பார்வையில் அவள் தென்படவே யில்லை.

அதிகாலை வேளை, நாலரை மணி. இருட்டு. குளிர் காற்று, பனி கடுமையாகப் பெய்திருந்தது.

சொக்கலிங்கம் எழுந்து, அறைக் கதவைத் திறந்தார். விளக்கு வெளிச்சம் பிடித்துக் காட்டிய காட்சி அவரைத் திடுக்கிடச் செய்தது.

வாசலுக்கு நேரே பத்மா கிடந்தாள். குளிர் காரணமாக, 'கையது கொண்டு மெய்யது பொத்தி', கால்களை மடக்கிச் சுருட்டி, அநாதையான ஒரு நாய்க்குட்டி மாதிரிக் கிடந்தாள். அவள் அழுதிருந்தாள் என்பதன் அடையாளமாகக் கன்னத்தில் நீர்க் கோடும் சுவடிட்டிருந்தது.

'அட பாவமே, பனியிலும் குளிரிலும் இந்தப் பிள்ளை இப்படியா...' என்று அவர் பதறினார். 'பத்மா என்ன இது?' என்று அவசரமாக அவளை அள்ளி எடுத்தார்.

அவள் பக்கத்தில் ஒரு பை கிடந்ததை அவர் அப்போதுதான் கவனித்தார். அதில் அவளுடைய பாவாடை சட்டைகள் திணிக்கப் பட்டிருந்தன.

அவள் அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, 'என்னை விட்டுப் போகாதீங்க. நானும் உங்க கூட வருவேன். நீங்க எந்த ஊருக்குப் போனாலும், என்னையும் கூட்டிட்டுப் போங்க!' என்று சொல்லிக் கொண்டே அழுதாள்.

அவர் ஒன்றும் தோன்றாதவராய், 'என்ன பத்மா இது! ராத்திரி எல்லாம் இங்கேயா படுத்திருந்தே!' என்று கேட்டார்.

'உம்' என்று தலையை அசைத்தவள், 'நீங்க என்னை விட்டுப்போட்டு, இருட்டோடு போயிருவீங்கன்னு பயந்து, இங்கேயே வந்து படுத்துக்கிட்டேன். என்னை விட்டுட்டுப் போகப்படாது. நானும் உங்ககூட வருவேன்' என்று கேவுதலோடு தொடர்ந்து பேசினாள்.

அவர் உள்ளம் கனத்தது. கண்களில் நீர் பொங்கி வழிந்தது.

பத்மாவின் அப்பாவும் அம்மாவும் இதற்குள் அங்கு வந்து விட்டார்கள். 'என்னம்மா இது? மாமா போனால் என்ன? அடிக்கடி உன்னை பார்க்க வருவாங்க' என்று அப்பா சொன்னார். 'பத்மா, இங்கே வா. ஏன் இப்படி அழுறே?' என்று அம்மா பரிவுடன் அழைத்தாள்.

பத்மா அவர்கள் பக்கம் திரும்பவே இல்லை.

'என்னை விட்டுட்டுப் போகப்படாது. நானும் உங்க கூடவே வருவேன்' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவரைப் பிடித்திருந்த கைகளை அகற்)வே யில்லை. 'நீங்க போயிட்டா, எனக்கு மறுபடியும் 'க்கு வந்துவிடும். வந்தால், நான் பிழைக்கவே மாட்டேன்' 'ன்று விம்மினாள்.

சொக்கலிங்கத்தின் உள்ளத்தை அவள் பேச்சும் அன்புப் பிடிவாதமும் ஆழப் பற்றி உலுக்கின. அச்சிறுமியின் தாயும் தந்தையும் மௌனமாகக் கண்ணீர் வடித்தவாறு நின்றார் கள்.

இந்த அன்பு இதயங்களை நோகடித்து, ஒரு அன்பு மல ரைக் கசக்கி எறிந்துவிட்டு, நாம் பிரிந்து சென்று என்னதான் சாதிக்கப் போகிறோம்? இப்படித் தவிக்கும் தூய இதயத்தைச் சாம்பிக் குவியவைப்பதைவிட, நன்கு மலர்ந்து ஒளி வீசும்படி அதற்கு உதவி புரிவதே நல்ல காரியமாக அமையும். இப்படி அவர் உள்ளம் தீர்மானித்தது.

'அழாதே பத்மா. நான் போகலே. உன்னை விட்டுப் போட்டு நான் எங்கும் போகப் போவதில்லை!' என்று உறுதி யாக அறிவித்தார் அவர். 'சரியான வேங்கைப் புலிதான் ?!

என்னை ஆட்டுக்குட்டி ஆக்கி, தப்பி ஓடாமப் பிடித்துவிட்டாயே!' என்றும் சொன்னார்.

அவர் முகத்தை உவகையோடு ஏறெடுத்துப் பார்த்தாள் பத்மா. அச்சிறு முகத்தில் உதயத்தின் புதுப் பொலிவோடும் வசீகர ஒலியோடும் மகிழ்ச்சி பரவி நின்றது. கண்ணீர் துளிகளிடையே பாய்ந்து வந்த பார்வையிலும் ஆனந்தப் பெருக்கு ஒளி செய்தது. 'மாமா, நல்ல மாமா!' என்று அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு சிரித்தாள் அவள்.

□

'அமுதசுரபி'

விழிப்பு

ஆயிற்று. எல்லாம் முடிந்துவிடும். விரக்தி, வெறுமை வறட்சி, சூன்யம் எல்லாம் தான்...

எதிலும் அர்த்தமில்லை. பயனில்லை. பசுமையில்லை. பாழ்தான்...

இந்தப் பாலைச் சூழலில், வறண்ட காற்றுப்போல, அமைதியற்று, அலுவலற்று, வீணுக்குச் சுற்றிச்சுழன்று கொண்டிருப்பதில் அர்த்தமே கிடையாது...

வாழ்க்கையில் பிடிப்பு எதுவுமில்லை. பிடித்து வைத்துக் கொள்வதற்குப் பற்றுக்கோடும் ஒன்றுமில்லை...

'வாழ்விலேயே ஒன்றுமில்லை. ஆழமற்ற பரபரப்பு. அர்த்தமற்ற சுழற்சி. வீண் தொல்லைகள். நிறைவேறாத— நிறைவேற முடியாத — பாழுங்கனவுகள். ஏக்கப் புகையை நீளவிடும் அல்ப ஆசைகள். உளக்குமைதல், உணர்வுக் குழப்பம், உடல் வேதனைகள்...

அர்த்தமற்றவை. அவசியமில்லாதவை. பயனற்ற, பசுமையற்ற, வெறுமை.

வெற்றாய், சூன்யமாய், வறண்ட புழுதி மண்ணாய்ப் போய்விட்ட இந்த வாழ்க்கையில் நானும் உயிரோடு இருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, சாரமற்றுத் திரிந்து கொண்டிருப்பதைவிட, இதற்கு முடிவு கட்டுவதே புத்திசாலித்தனமான காரியம் ஆகும்.

இதோ முடிந்து விடும் எல்லாம்; ஒரு சில கணங்களில்.

''விநாயகமூர்த்தி என்கிற ஒருவன் இருந்தான்'' என்று பேசப்பட வேண்டிய நிலைமை தோன்றும்...

ஹூம்! யார் பேசப் போகிறார்கள்? நினைத்துப் பார்ப்பதற்கு எவர் இருக்கிறார்கள்?

அப்படிப் பேசுவதனாலோ, நினைப்பதனாலோ இந்த இவனுக்கு இனி என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகிறது?

அவசர உலகத்திலே, அர்த்தமற்ற வாழ்வில், முட்டி மோதித் திணறிக் கொண்டிருக்கும் யந்திர உலகப் பொம்மைகள் போன்ற இம் மனிதப் பூச்சிகள் மத்தியிலே, நடமாடும் ஏதோ ஒரு சாயை மாதிரி நான் சஞ்சரித்துக் கொண்டிருப்பதற்கு அவசியமும் இல்லை. அர்த்தமுமில்லை என்று தான் முடிவு கட்டியாயிற்றே! விடுதலைக்கு ஒரு குறுக்கு வழி — வெறுமைக்கு முடிவு கட்டும் பயணச்சீட்டு இதோ, இதோ...

விநாயகமூர்த்தி தனக்கு முன்னே உத்திரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த கயிற்றைப் பார்த்தான். அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

அவன் கண்கள் அந்த அறையின் வாசல் பக்க மிதந்தன. அறைக் கதவு நன்கு அடைக்கப்பட்டு, அழுந்தத் தாளிடப் பெற்றிருந்தது. திருப்திதான்.

அவன் பார்வை ஜன்னல்களுக்குத் தாவியது. எல்லா ஜன்னல்களும் நன்றாக அடைக்கப்பட்டிருந்தன. முழுத் திருப்தி.

அவன் கீழே கிடந்த சிறிய ஸ்டூலின் மீது ஏறி நின்றான். கயிற்றை இழுத்துப் பார்த்தான். ஏற்பாடுகள் எல்லாம் திருப்திகரமாக இருந்தன.

—நாற்பது வருட காலம் வாழ்ந்து பார்த்தாச்சு. வெறுமை, வறட்சி, சூன்யம் தான். இனியாவது பசுமை இருக்குமா என்று தேடிச் செல்கிறேன். இது தான் நான் எனக்கே அளித்துக் கொள்ளும் பிறந்த நாள் பரிசு!

விநாயகமூர்த்தி சிரித்துக் கொண்டான். ஒளியற்ற, மனநிறைவற்ற, வறண்ட சிரிப்பு!

கயிற்றின் சுருக்கை நிதானமாக எடுத்து, அமைதியோடு தன் கழுத்தில் மாட்டிக் கொண்டான். அவசரமின்றி, மெது மெதுவாக முடிச்சை இறுக்கினான். சரியான அளவுக்கு வந்து, கழுத்தை முடிச்சு அழுத்தி நெருக்கத் தொடங்கியதும், காலடியில் இருந்த ஸ்டூலை எட்டி உதைத்து விட்டுத் தொங்கினான்.

அவன் உள்ளத்தில் பதைபதைப்பு இல்லை. உடலில் படபடப்பு இல்லை. அவனுக்குப் பயமோ, குழப்பமோ எதுவுமில்லை. வெகு நாட்களாகச் சிந்தித்து, திட்டமிட்டு, ஒத்திகைகள் நடத்தி. இறுதியாக அவன் எடுத்துக் கொண்ட முடிவுதானே இது! பின்னே என்ன?

விநாயகமூர்த்தி தனி நபர். தனிரகமான நபரும் கூட. அவன் மற்றவர்களோடு ஒட்டிப் பழகவில்லை. அவனோடு உறவாடி, நட்புக் கொண்டாடி, சகஜமாகப் பேசிப் பழகுவது

சாத்தியமில்லை என்றே மற்றவர்கள் கருதினார்கள். அதனால் அவன் ஒதுங்கி வாழ்ந்தான். பிறரால் ஒதுக்கப்பட்டு, தனியாய் வாழ்க்கை நடத்தினான்.

ஓட்டலில் சாப்பாடு, பொழுது போக்குவதற்குப் புத்தகங்கள். வேலை என்ற பெயரில் என்னவோ எழுதுவது. படம் போடுவது, அலுப்பு ஏற்பட்டால் தெருக்களில் சுற்றுவது, தனி இடங்களில் உட்கார்ந்து விண்ணையும் மண்ணையும் மரத் தொகுதிகளையும் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருப்பது, இரவில் ஆழ்ந்து தூங்குவது — இவற்றை ஒழுங்காக, வேளை தவறாது, இயந்திர ரீதியில் செய்து கொண்டிருந்தான் அவன்.

தான் மற்றவர்களினின்றும் மாறுபட்டவன், விசேஷமானவன் என்று அவன் நம்பினான். அதனால் பிறரது வாழ்க்கைப் போக்கு, பிறர் பழக்க வழக்கங்கள் எல்லாவற்றின் மீதும் அவனுக்கு வெறுப்பும் மனக்கசப்பும் ஏற்பட்டிருந்தன. ''தேடிச் சோறு நிதம் தின்று, சின்னஞ் சிறு கதைகள் பேசி'' எப்படி எப்படியோ காலம் கழித்து, விதி முடிந்தால் சாகும் மனித பிராணிகள் மீது அவனுக்கு அனுதாபம் பிறந்ததுமில்லை. அவர்களது குறைபாடுகளையும் குணக்கேடுகளையும் கண்டு கோபமும் வெறுப்புமே கொண்டான்.

நாள் ஆக ஆகத் தனிமை அவனைச் சுற்றிலும் கண்ணுக்குப் புலனாகாத ஒரு கவசமாய்த் தொங்கலாயிற்று. தனிமையே சுமையாய், வேதனையாய் அவனை அழுத்தியது சினிமா, நாடகம், முதலியவற்றிலே அவன் உற்சாகம் காண முடிந்ததில்லை. சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள், பெரும் கூட்டங்களில் கலந்து கொண்டு அவன் உவகையோ, உத்வேகமோ பெற முடிந்ததில்லை. உயிரோடும் உணர்வோடும் இயங்கும் ஜனசமுத்திரத்தில் கலந்து

"மானிட சமுத்திரம் நான்" என்று கூவும் மன எழுச்சி அவனுக்கு ஒரு சமயம் கூட ஏற்பட்டதில்லை.

மாறாக, எங்கும் எப்போதும் அவன் தனிமையையே அனுபவித்தான். "நான் தனி" என்ற உணர்வு, முட்டைக்குள் ஒடுங்கிக் கிடக்கும் சிறு குஞ்சுக்குப் போர்வையாய், பாதுகாப்பாய், தனி வீடாய் அமைந்துவிடும் முட்டை ஓடு மாதிரி அவனைச் சுற்றி அருவமான ஒரு கோட்டை கட்டிக் கொண்டது. அதுவே அவனுக்கு வேலியாய் சிறையாய் அமைந்தது.

அதனால், ஜனநெரிசல் மிகுந்த ரயிலடியிலும், கும்பல் நிறைந்த தியேட்டர்களிலும், கூட்டம் அதிகமுள்ள ஓட்டல்களிலும், மக்கள் நடமாட்டம் மிகுதியாக உள்ள வீதிகளிலும் கூட தனிமையைத் தான் உணர்ந்தான் அவன். தனிமை அவனது மன நோய் ஆகிவிட்டது.

எனவே, அவன் எங்கும் எதிலும் எல்லோரிடமும் வெறுமையையே காண முடிந்தது. பிறரது சிரிப்பும், கூச்சலும், குழந்தை குட்டிகளோடு பெரியவர்கள் பேசி விளையாடிக் களிப்பதும், அர்த்தமற்றதாய், பைத்தியக்காரத் தனமாய், உளறலாய், கேலிக் கூத்தாய் அவனுக்குப் பட்டன.

அவன் உணர்ச்சிகளைப் புறக்கணித்து, அறிவை வழிபட அவாக் கொண்டவன். ஆகவே, பிறரது உணர்ச்சிகளை மதிக்கவோ, சரியாகப் புரிந்து கொள்ளவோ, அவன் அக்கறை காட்டவில்லை. அவனுள் வளர்ந்த விரக்தி எங்கும் வெறுமையைக் காணத்தான் உதவியது அவனுக்கு.

இப்படி வருஷம் வருஷமாகக் கடந்து விட்டான். சார மற்ற வாழ்க்கை, இதை சுமந்து கொண்டு, "நேற்றுப்போல்

இன்று; இன்றுபோல் நாளை'' என்று வறண்ட பாதையில் நீண்ட பயணம் போவது வீண் வேலை என்று பட்டதனால் அவனாகவே அதற்கு ஒரு முடிவு கட்டிக்கொள்ள முன் வந்தான். அம்முடிவுக்கு வந்ததில் அவனுக்கு வருத்தம் எதுவும் கிடையாது.

ஆகையினால், விநாயகமூர்த்தி கயிற்றில் தொங்கலானான்.

வாழ்க்கையைக் கண்டு நகையாடும் மனிதனைப் பார்த்து வாழ்க்கை சிரிப்பதும் உண்டு. காலத்தை வெல்ல முயலும் மனிதனுக்குத் தோல்வி தருவதில் காலம் வெற்றி பெறுவதும் உண்டு. தனக்குச் சரியெனத் தோன்றும் விளைவைப் பெறத் திட்டமிடும் மனிதனின் எண்ணத்தையும் செயலையும் தகர்த்து விட்டு. எதேச்சையாய் ''முடிவு'' கெக்கலிப்பதும் உண்டு.

விநாயகமூர்த்தி திட்டமிட்டுச் செயல் புரிந்த போதிலும், அவன் எதிர்பாராத விளைவு நிகழ்ந்தது,

அவன் கனத்தைத் தாங்கும் சக்தி பெற்றிராததனாலோ, உள்ளூற இற்றுப் போயிருந்ததாலோ— காரணம் எதுவாக இருந்தால் என்ன?—

கயிறு புரி தளர்ந்து, அறுந்தது.

அவன் தொபுக்கடீரென்று தரையில் விழுந்தான். அப்படியே கிடந்தான் ஒரு கணம். உடலில் அடிபட்ட இடம் வலித்தது. கழுத்தில் முடிச்சு அழுத்தியதால் வலி கண்டது. உணர்ச்சி வேலை செய்தது. அவன் கைகள் முடிச்சைத் தளர்த்தின. உடலின் பாகத்தை வருடிக் கொடுத்தன.

அவன் அந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தான். அறை முகட்டைப் பார்த்தபடி. அறுந்து விட்ட கயிற்றைப் பார்த்தபடி. அறைக்குள் இருட்டு சூழ்ந்திருந்தது. காற்றுப் புக வழி இல்லாததனால் புழுக்கம் நிலவியது.

இப்போதும் அவனுக்குச் சிரிப்புதான் வந்தது. தன் செய்கை கூட ஒரு பைத்தியக்காரத்தனம் என்றே இப் பொழுது அவனுக்குப்பட்டது;

மீண்டும் வலுத்த ஏற்பாடுகள் செய்து தனக்கும் தன் வாழ்வுக்கும் வலுக்கட்டாயமான ஒரு முடிவைத் தேடிக் கொள்ள வேண்டியது அவசியம் என்று இப்போது அவனுக் குத் தோன்றவில்லை. ''முயன்றோம். வெற்றிகரமாக முடிய வில்லை. போனால் போகிறது!'' என்றுதான் அவன் உள் ளம் பேசியது.

அந்த இடத்திலேயே அவன் முட்டைக் கட்டிக்கொண்டு சோம்பியிருந்தான். இருட்டுத்தான் அவனுக்குத் துணை இருந்தது. அப்போது நேரம் என்ன இருக்கும் என்று தெரிந்து கொள்ள வழியில்லை. அவன் சாவி கொடுக்காது போட்டு விட்டதனால், கடியாரம் மணி காட்டவில்லை.

எவ்வளவு நேரம் போயிருக்கும் என்று புரியாதவனாய், ஆயினும் நிறைய நேரம் ஆகியிருக்கும் என்றொரு உணர் வின் அரிப்புப் பெற்றவனாய், விநாயகமூர்த்தி எழுந்து நின்று சோம்பல் முறித்துக் கொண்டு, அறைக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

வெளியுலகில் வியாபித்துக் கிடந்த ஒளி வெள்ளம் அவன் கண்களைக் கூச வைத்தது ஒரு கணம். புதிய நாளின் பொன்னொளி தொட்ட இடத்தில் எல்லாம் அழகைத் தேக்கி, வர்ணங்களுக்கெல்லாம் தனி மினுமினுப்பு பூசி தானே ஒரு அழகாய் மிளிர்ந்து கொண்டிருந்தது

"வெயில் கூட அழகாகத்தான் இருக்கிறது!" என்று பட்டது அவனுக்கு.

வானம், கழுவிப் போட்டது போல், அழுத்தமான நீல நிறத்தோடு பளிச்சிட்டது. விண்ணிலும் மண்ணிலும், அவன் அதுவரை கண்டிராத அதிசயப் புதுமை இணைந்து கிடந்தது போல் தோன்றியது. இயற்கை புத்துயிரோடும் புது வனப் புடனும் காட்சி தந்து கொண்டிருப்பதாக அவன் கருதினான்.

அறைக் கதவை இழுத்துப் பூட்டிவிட்டுத் தெருவில் நடக்க ஆரம்பித்த விநாயகமூர்த்தியின் உள்ளத்தில் புதியதோர் குதூகல உணர்வு பொங்கியது. நிறைந்தது. துளும்பி வழியலாயிற்று. ''இந்த நேரத்தில் நான் உயிரோடு இருப்பதே ஒரு பெரும் பாக்கியம் என்று படுகிறது ... என்ன முட்டாள்தனம் செய்ய ஆசைப்பட்டேன் நான்!'' என்று எண்ணினான்.

தானாகச் சிரித்துக்கொண்டு துள்ளல் நடையில் சென்ற அவனை வேடிக்கையாகப் பார்த்து நின்ற சிறுவன் ஒருவன், ''குட்மார்னிங் சார்!'' என்று சலாமிட்டான்.

அப்பையனின் பரட்டைத் தலையும் அழுக்கேறிய உடலும், நேற்று என்றால், விநாயகமூர்த்திக்கு அருவருப்புத் தந்திருக்கும். ஏசல் வீசிவிட்டோ, அல்லது அலட்சியமாகவோ, தன் வழியே போயிருப்பான். இவ்வேளையில் அவ்வாறு செய்யவில்லை, அவன். ''குட்மார்னிங்!'' வெரி வெரி குட்மார்னிங்!" என்று உற்சாகமாகச் சொன்னான்.

சிறுவன் குதித்துக் கொண்டு ஓடலானான். "ஏய் சோமு! அவர் சலாம் போட்டார்டா. என்னிடம் சண்டைக்கு வரவில்லை!'' என்று அவன் மகிழ்ச்சியோடு கூச்சலிட்டது,

விநாயகமூர்த்தியின் காதிலும் விழுந்தது. அவன் சிரித்த வாறே நடந்தான்.

ஒரு வீட்டின் முன்னால் சில செடிகள் கரும் பச்சை இலைகள் ஏந்தி நின்றன. ஒரு செடியில் மூன்று பூக்கள் செக்கச் செவேல் என்று சிரிப்பைச் சிந்தின. செம்பருத்திப் பூக்கள், ஒளி வெள்ளத்தில், நீலவானின் கீழே, கரும் பச்சைச் சூழ லில், செக்கச் சிவந்த பெரிய மலர்கள் மிகவும் எடுப்பாக, எழில் மயமாகக் கொலுவிருந்தது, அவனைக் கவர்ந்தது. மகிழ்வு தந்தது.

மற்றும் பல நிற மலர்கள் ஆங்காங்கே பூத்துக் குலுங் கின. இனிய காட்சிகள்.

அவற்றை ரசித்த வண்ணம் நடந்த அவனுக்கு முன் னால் ஒரு பெண், மெதுவாகச் சென்று கொண்டிருந்தாள். அவள் தோளுக்கு மேலே சின்னஞ்சிறு தலை—குழந்தை முகம் —எட்டிப் பார்த்தது. பின்னால் வந்த பெரியவனைப் பார்த்து அது சிரித்தது. சுடரொளி மிதக்கும் அழகிய கண்களும், பிறை நெற்றியும், அதற்குமேல் சுருள் சுருளாகப் புரண்டு கிடந்த கருங்கூந்தலும் அருமையான பொம்மையின் நினைப் பைத் தந்தன.

குழந்தை அவனைப் பார்த்துச் சிரித்தது. ''மாமா, மாமா!'' என்றது.

அதன் சிரிப்பும் மழலையும் அவனைப் பரவசப்படுத்தின.

தாய் திரும்பிப் பார்த்தாள். அவளது அகன்ற விழிகளின் ஒரு ஓரத்தில் தேங்கிய பார்வையும், குழந்தையின் மகிழ்ச்சி அவளுக்கு உண்டாக்கிய ஆனந்தத்தினால் படர்ந்த முக மலர்ச்சியும் இனிய காட்சிகளாயின.

''ஆகா, உலகம் இனியது!'' என்று முத்து உதிர்த்தது விநாயகமூர்த்தியின் மனம். ''வாழ்வின் இனிமைகளைக் காண மறுத்து, விலகி விலகிப் போனதனால் நான்தான் பெருத்த நஷ்டம் அனுபவித்து வந்திருக்கிறேன்'' என்று அவன் எண்ணினான். அத் தாயைக் கடந்து மேலே சென்றான்.

இப்போது இனிமைகள், அழகுகள், நயங்கள் எதுவும் அவன் பார்வையில் பதுங்கி விடவில்லை. ''ஆ! எத்தனை இன்பங்கள்! எத்தனை கோடி இன்பங்கள்!'' என்று கும்மாளியிட்டது அவன் உள்ளம்.

அவனுக்கிருந்த புத்துணர்வில் எல்லாமே அற்புதங்களாக அவனுக்குப் பட்டன. கோயில் கோபுரத்தின் பொன் கலசங்களில் பட்டுத் தெறித்த சூரிய ஒளியும், பளபளவெனத் துலக்கித் திருநீறுபூசி, குங்குமப் பொட்டிட்டு அன்னக் காவடிப் பரதேசி தூக்கிவந்த பித்தளைப் பாத்திரங்களின் மினுமினுப்பும், விரையும் கார்களில் பட்டுப் பளீரிட்டுத் தெறிக்கும் கதிரொளியும், இன்ன பிறவும் அற்புதமான கவிதைத் துணுக்குகளாகத் தோன்றின அவனுக்கு. தெருமூலையில் இருந்த ''டீக்கடை''யில் பளிச்சிட்ட செம்புப் ''பாயிலரும்'' கனன்று கொண்டிருந்த நெருப்பும், தேநீர் மணமும் அற்புதங்களாயின.

அவன் கடையினுள் நுழைந்து, டீ வாங்கிக் குடித்தான். அங்கிருந்தோரின் தோற்றமும் பேச்சும் வெறுக்கப்பட வேண்டியதாகத் தோன்றவில்லை. சிலரது உரையாடல் ரசிக்கக் கூடியதாகவே பட்டது.

விநாயகமூர்த்தி மறுபடியும் வீதிகளில் நடக்க ஆரம்பித்த போது, அவனது சிந்தனையும் வேகமாக இயங்கியது.

வாழ்க்கையில் துயரங்கள் அதிகமிருந்த போதிலும், அவற்றைச் சகித்துக் கொண்டு வாழ்வதில் ஒரு இனிமை இருப்பதாகத் தான் தோன்றியது. பலருடைய வாழ்க்கையையும் கவனிக்கையில் இது நன்றாகத் தெரிகிறது...

குழந்தையைக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த பெற்றோர்களும், பள்ளிக் கூடம் சென்ற சிறுவர் சிறுமியரும், சந்தோஷமாகப் பேசிச் சிரிக்கும் தம்பதிகளும், எதையோ வம்பளந்து மகிழ்ந்து போன ஒரு கிழவனும் கிழவியும்—

அவன் பார்வையில் பட்ட எல்லாக் காட்சிகளும் அவனுக்கு உனக் கிளர்ச்சி ஏற்படுத்தின.

“இவர்கள் எல்லாம் வாழ்க்கையை வெறுக்கவில்லையே. சந்தோஷம் அனுபவிக்கத்தானே செய்கிறார்கள்? இவர்களைப் போல—இவர்களோடு சேர்ந்து—நானும் வாழ்வின் சிறு சிறு இனிமைகளைச் சுவைத்து ரசிக்கக் கற்றுக்கொள்ளாததுதான் நான் செய்த பெரிய தவறு” என்று அவன் கருதினான்.

ரோட்டின் ஒரு ஓரத்தில் நின்று, பெரிய ரஸ்தாவில் ஓடிக் கொண்டிருந்த நாகரிக நதியின் வேக இயக்கத்தைக் கவனிப்பதில் ஈடுபட்டான் அவன்.

அவனுக்கு அருகில் ஒரு கிழவி வந்து நின்றாள். “பிச்சை கேட்க வருகிறாளோ என்னவோ!” என்றது அவன் மனம்.

அவளோ அச்சம் கலந்த நோக்குடன் ரஸ்தாவையும் அவனையும் மாறி மாறிப் பார்த்து நின்றாள்.

“என்ன? என்ன வேணும்?” என்று கேட்டான்.

''அந்தப் பக்கம் போகணும் ரோட்டைக் கடந்து போகப் பயமாயிருக்கு'' என்று அவள் சொன்னாள்.

''எப்படியும் தொலை. ரோட்டில் இறங்கி, காரில் அடி பட்டுச் சாகு, நீயெல்லாம் ஏன் இப்படித் திரியவேணும்?'' என்று எரிந்து விழக்கூடியவன்தான் அவன். நேற்று இவ் விதம் ஒருத்தி பேசியிருந்தால், அவன் அவ்வாறுதான் முணு முணுத்திருப்பான். ஆனால், இன்று அவன் உள்ளத்தில் இரக்கம் சுரந்தது. ''நில்லு. நான் உன்னை இட்டுச் செல்கிறேன்'' என்று கூறினான், அப்படி உதவவும் செய் தான். சமயம் பார்த்து, அவளை மெதுவாக, கையைப் பிடித்து அழைத்துச் சென்று ரஸ்தாவுக்கு அந்தப் பக்கம் கொண்டு சேர்த்தான்.

அவள் கையெடுத்துக் கும்பிட்டாள். ''நீ நல்லாயிருக் கணும். நீ இல்லைன்னு சொன்னால், நான் இதை எப்படிக் கடந்துவர முடியும்?'' என்று சொல்லிவிட்டு நடந்தாள்.

அவளுடைய நன்றி உணர்வும் வாழ்த்துதலும் அவன் உள்ளத்தைத் தொட்டன. அங்கு ஒரு மகிழ்வும் நிறைவும் ஊற்றெடுத்தன.

''நான் இல்லாமல் போயிருக்க வேண்டியவன்தான். கயிறுமட்டும் அறுந்து போகாமல் இருந்திருப்பின் இந்த விநாயகமூர்த்தி மாஜி மனிதனாகத்தானே தொங்கிக்கொண் டிருப்பான்!'' என்ற எண்ணம் துள்ளியது அவனுள். இது ஒருவிதமான உதைப்பையும் ஏற்படுத்தியது.

''மடத்தனம். தன்னுயிரைத் தானே கொலை செய்து கொண்டு, விடிவு கண்டுவிடலாம் என முயற்சி செய்வது மடத் தனமேதான்'' என்று அவனது சிந்தனை உறுத்தியது. ''வாழ்க்கைப் போராட்டத்தில் சமாளித்துக்கொண்டு...''

அவன் பார்வையைக் கவர்ந்தது—

வேகமாக ஒரு கார் வருகிறது. எதிரேயிருந்தும் கார்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு சிறுவன் ரோட்டைக் கடந்துவிடலாம் என்று துணிந்து ஓடுகிறான்.

''சேச்சே, என்ன முட்டாள்தனம்!''

விநாயகமூர்த்தி வேகமாகத் தாவி, அப்பையனைப் பற்றி யிழுத்தான். சரியான சமயத்தில் கார் பிரேக் போட்டு நின்றது. பலரும் பதறினர். இஷ்டம்போல் சொல் எறிந் தனர்.

அவன், நிச்சயமான சாவை நோக்கி அவசரமாகச் சென்ற ஒரு உயிரைக் காப்பாற்றும் துடிப்புடன், அச் சிறு உடலைக் கைகளில் எடுத்து, தன்னோடு அணைத்துக் கொண்டு பத்திரமான இடத்துக்குத் திரும்பினான்.

நாகரிக நதி மீண்டும் வேகமாகச் சுழித்து ஓடியது.

''என்னடா இப்படிச் செய்தே? செத்துப் போகிறதுக்கு இருந்தியே!'' என்று அனுதாபத்தோடு பேசினான் விநாயக மூர்த்தி. தன்னைப் பார்த்தும் இதேவார்த்தைகளைச் சொல் வதற்கு யாருக்கும் உரிமை உண்டு என்றும், ஆனால் அப் படிச் சொல்வதற்குத்தான் யாரும் இல்லை என்றும் அவன் மனம் சிறு குரல் கொடுத்தது. இந்த முரணை எண்ணியதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி எழுவது போலும் பிறப்பு என்கிறார்கள். நான் தூக்கத்தைத் தழுவ முயன் றேன். ஆனால் தூங்காமலே விழித்துக் கொண்டேன். மற்ற வர்களிடம் அன்பு காட்டி, உதவிகள் செய்வதில் தனி இன்பம் பிறக்கத்தான் செய்கிறது'' என்று எண்ண ஓட்டம் நிகழ்ந்தது அவன் சித்த வெளியில்.

ரோட்டில் ஓடும் கார்களையும் பிறவற்றையும் பார்த்து, அவற்றிடையே சிக்கிச் சாகவிருந்ததை நினைத்து, உடல் பதறி நின்றான் சிறுவன். அவனை விநாயகமூர்த்தி குனிந்து பார்த்த சமயம், சிறுவன் தலை நிமிர்த்திப் பெரியவன் முகத்தைப் பார்த்தான். இருவர் கண்களும் சுடரிட்டன. முகம் முழு மலர்ச்சி காட்டியது.

''மனமாரச் சிரிக்கிறபோது மனித முகம் விசேஷமான ஒரு கவர்ச்சியைப் பெறுகிறது'' என்று எண்ணினான் விநாயகமூர்த்தி. ''இன்று நாம் புதிதாகப் பிறந்தோம். நம்ம இரண்டு பேருக்குமே இன்று பிறந்த நாள்தான்! அதைக் கொண்டாடுவோம், வாடா பயலே! ஓட்டலுக்குப் போய் ஸ்வீட், காரம், காப்பி எல்லாம் சாப்பிடலாம்'' என்று சிறுவனின் கையைப் பிடித்துக்கொண்டு பெரிய ஓட்டலை நோக்கி நடந்தான்.

சிறுவனுக்கு அவன் பேச்சு புரியவில்லைதான். ஆயினும், வயிற்றுக்கு நிறைய ஏதோ கிடைக்கப் போகிறது என்று புரிந்தது. அந்த உணர்வு அவனுக்கு ஆனந்தம் தந்தது. அவன் வாய்விட்டுச் சிரித்தான். அவனை வேடிக்கையாகப் பார்த்த விநாயகமூர்த்திக்கும் சிரிப்பு வந்தது.

□

சுதேசமித்திரன் தீபாவளி மலர்—196

சின்னவளும் பெரியவரும்

''அணைக்காதே! விளக்கை அணைக்காதே!''—அடித் தொண்டையில் அலறினாள் வள்ளி, அதில் மேலோங்கி ஒலித் தது அச்சம்.

''ஏன்? ஏன் அணைக்கப்படாது?'' என்று கத்தினார் பெரியவர்; ஐந்து வயது வள்ளியின் தாத்தா அவர்.

''பயமாயிருக்கு!''

''என்னட்டி பயம்?''

''இருட்டைக் கண்டாலே எனக்கு பயம்தான். நீ விளக்கை அணைக்காதேயின்னா அணையாமல் இரேன்! இப்ப எதுக்கு விளக்கை அணைக்கப் போறே?'' என்று வாதாடினாள் அவள்.

''விளக்கு எரிஞ்சா தூக்கம் வராது அதுக்குத்தான்.''

பெரிதாக எரிந்து கொண்டிருந்த அரிக்கன் விளக்கின் திரியை உள்ளுக்குள் இறக்கிச் சுருக்குவதற்காக அவர் கையை நீட்டினார்.

அவள் அலறினாள்: ''அணைக்காதே ஐயோ, அணைக் காதேயேன்!''

அவர் வறண்ட சிரிப்பு சிந்தினார்.

''நல்ல புள்ளெ தான் போ! அஞ்சு வயசுப் புள்ளெக்கி பயம் என்னட்டி பயம்? இருட்டு என்ன உன்னை முழுங்கியா போடும்?'' என்றார்.

வள்ளி ஒன்றும் பேசவில்லை வெறும் தரையில் படுத்துக் கிடந்தாள்.

அது சுமாரான வீடு. சத்திரம் மாதிரிப் பெரியதாகவும் இல்லை; போதுமான வசதிகள் இல்லாத சின்ன வீடும் இல்லை. பழங்காலத்து வீடு. எலெக்ட்ரிக் லைட் கிடையாது.

இப்போது வீட்டில் தாத்தாவும் பேத்தியும் தான். அப்பா, அம்மா எல்லோரும் வெளியூர் போயிருந்தார்கள். வள்ளி அவர்களோடு வரமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லி விட்டாள். அவள் நோக்கில் அது பெரிய வீடு தான். ஆகவே, பெரிய இடத்தில் தாத்தாவுக்குத் துணை பேத்தி; பேத்திக்குத் துணை தாத்தா என்ற நிலை.

அவள் தனியாத இருப்பது இதுதான் முதல் தடவை. இன்றுதான் முதல் நாள்.

பகலில் எப்படியோ பொழுது போய்விட்டது. இரவு தான் தொல்லையாகவும் வேதனையாகவும் தோன்றியது பெரியவருக்கு. அதாவது, இரவில் சிறுமி தொல்லையாக மாறி, தொணதொணக்க ஆரம்பித்திருந்தாள்.

விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ''ஏட்டி, விரிப்பிலே படேன். கீழே படுத்தப்டி தூங்கிப் போயிராதே!'' என்று எச்சரித்தார் பாட்டனார்.

''மாட்டேன், எனக்கு தூக்கம் வரலே'' என்று சொல்லி வள்ளி எழுந்து உட்கார்ந்தாள். ''உனக்கு தூக்கம் வருதா, தாத்தா?''

''இல்லே.''

''அப்பம் ஒரு கதை சொல்லேன்!''

அவர் ஆரம்பித்தார்—செட்டியார் கடையில் வடை திருடிய காக்கா கதைதான்.

''இந்தக் கதை வேண்டாம். இதுதான் எனக்குத் தெரியுமே. அம்மா சொல்லியிருக்கா. அப்பா சொல்லி யாச்சு. நீயும் எத்தனையோ தடவை சொல்லியிருக்கே...''

''சரி. வேறே கதை சொல்லுதேன்'' என்று தலையைச் சொறிந்தார் தாத்தா. ''நீ படுத்துக்கோ. நானும் பக்கத் திலே படுத்துக்கிடுதேன். விளக்கை அணைக்க வேண்டாம். கொஞ்சமா எரியும்படி சுருக்கி வைக்கலாம், என்ன?'' என்று குழைந்தார்.

வள்ளி மறுக்கவில்லை. அவரும் அப்படியே செய்தார். படுத்தார். கதை சொல்லலானார். — சித்திரக்குள்ளன் கதை; ஒரு அப்பா அம்மாவுக்கு ஏழு பிள்ளைகள். கடைசிப் பிள்ளை ரொம்பவும் குள்ளம். அதனாலே, சித்திரக் குள் ளன்னு பேரு. வீட்டிலே ரொம்பவும் கஷ்டம். சோத்துக்கு வழியில்லே. அரை வயிறு, கால் வயிறு சாப்பாடு கூடக் கிடைக்கல்லே. அப்பாவும் அம்மாவும் யோசிச்சாங்க. பிள்ளைகளைக் கூட்டிக்கிட்டுப் போயி. பக்கத்துக் காட்டிலே விட்டுப்போட்டு வந்திரணுன்னு முடிவு பண்ணினாங்க. அவங்க ராத்திரி வேளையிலே இப்படி ரகசியம் பேசியதை, குள்ளன் மட்டும் கவனிச்சுக் கேட்டுக்கிட்டிருந்தான். மத்தப் பிள்ளைகள்ளாம் தூங்கிட்டுது. குள்ளப்பயலுக்கு தூக்கமே

வரலே. விடியறதுக்கு முன்னாடி எழுந்திருச்சான். வெள்ளைக் கல்லுகளாப் பார்த்துப் பொறுக்கி, மடிநிறையக் கட்டிக்கிட்டான்...''

''எதுக்கு?''

''கதையிலே அது வரும். நீ பேசாம கேளு... எல்லாரும் எழுந்திருச்சதும், பிள்ளைகளையெல்லாம் அப்பா கூப்பிட்டாரு, உங்களுக்கு வேடிக்கை காட்டப் போறேன்னு சொல்லி, காட்டுக்குக் கூட்டிட்டுப் போனாரு. பிள்ளைகள் எல்லாரும் அங்கேயும் இங்கேயும் அலைஞ்சு விளையாடினாங்க. அவங்களுக்குத் தெரியாம, அவரு மறைஞ்சு மறைஞ்சு வீட்டுக்கு வந்துட்டாரு...''

''அம்மா...'' என்று தீனக்குரல் கொடுத்தாள் வள்ளி.

''அம்மா வீட்டிலே இருந்தாள்...''

''இல்லே. அம்மா, எங்கம்மா எப்பம் வருவா?''— அழுகையின் சாயல் தென்பட்டது இதில்.

''ஏன்ட்டி, இப்ப என்ன வந்துது?''

''அந்தப் புள்ளைக, பாவம், காட்டிலே என்ன செய்யும்? அப்பா அம்மா இல்லாமே?''

அவசரம் அவசரமாகத் தொடர்ந்தார் தாத்தா: ''அதுக்குத்தான் குள்ளப்பயல் ஒரு தந்திரம் பண்ணிப் போட்டானே? அவன் மடி நிறைய வெள்ளைக்கல்லு சேர்த்து வச்சிருந்தானில்லே? அதையெல்லாம் என்ன செய்தான்னு நெனச்சே? அப்பா எல்லாரையும் கூட்டிக்கிட்டு, காட்டை நோக்கிப் போகையிலே, அவன் பின்னாலே நடந்தான். வழிநெடுக, வீட்டிலேயிருந்து காடு வரை, அந்தக் கல்லுகளை ஒண்ணு ஒண்ணா தரையிலே வீசிக்கிட்டு

வந்தான்; அடையாளமா இருக்குமின்னு. சாயங்காலம், அண்ணன்மாரெல்லாம் அப்பாவைக் காணோமேன்னு அழு தாங்க. "வீட்டுக்கு வழி தெரியாதே,எப்படிப்போறது?"ன்னு அழுதாங்க. குள்ளன் மட்டும் அழாமே, "நான் கூட்டிக் கிட்டுப் போறேன், வாங்க"ன்னு தைரியமாப் பேசினான். சாலையிலே, வழிநெடுக வீசிவெச்ச வெள்ளைக் கல்லுகளை அடையாளம் பார்த்துக்கிட்டு அவன் முன்னாலே நடந்தான். எல்லாரும் அவன் பின்னாலேயே போனாங்க. வீடு வந்து சேர்ந்துட்டாங்க..."

"கதை போதும்" என்றாள் வள்ளி.

"கதை முடியல்லே. இன்னும் நிறைய இருக்கு."

"இது வேண்டாம். வேறே கதை சொல்லு. இல் லேன்னு, எனக்கு அழுகை வந்திரும்."

அவள் அழுவதை தாத்தா வரவேற்கத் தயாராக இல்லை. வேறு கதைகளைச் சொன்னார். வழக்கமான குழந்தைக் கதைகள்தான்... ஆனால் வள்ளியின் நினைப்பு குள்ளன் கதையிலேயே நிலைத்து நின்றது என்பது அவள் கேட்ட கேள்வியிலிருந்து புரிந்தது. "அம்மாவும் அப்பாவும் பொல்லாதவங்கதான். சின்னப் பையன்களை காட்டிலே விட்டுட்டா அவங்க என்ன செய்வாங்க? பயமா இருக்காது? பாம்பு கீம்பு கடிக்க வராது?"

அவள் பார்வை அங்கும் இங்கும் அலைபாய்ந்தது, திடீரென்று கத்தினாள்: "விளக்கைப் பெரிசாத் தூண்டு— அதோ பாம்பு மாதிரி என்னமோ தெரியுது..."

"சும்மா இருட்டீ. இங்கே பூச்சி கீச்சி எதுவும் வராது" ன்று அதட்டினார் பெரியவர்.

''அந்தா நீயே பாரு. சுவரு மூலையிலே. தூணுக்கு அந்தப் பக்கம்...''

அவர் எழுந்து விளக்கைத் தூண்டினார். சிறுமி காட்டிய மூலையில் பார்த்தார். பழங் கயிறு ஒன்று கிடந்தது. அவளுக்குத் தைரியம் கூறினார்.

''விளக்கு இப்படியே எரியட்டும். சுருக்கவேண்டாம்'' என்று அவள் கட்டளையிட்டாள்.

''சரிசரி. கண்ணை மூடிக்கிட்டு படுத்திரு. தூக்கம் தானா வந்திரும். பயம் ஓடிப்போயிரும்'' என்று உபதேசித்தார்.

விளக்கில் எண்ணெய் தான் இல்லையோ, அல்லது வேறு கோளாறுதானோ, டபுக், டபுக் என்று ஒளி இரண்டு மூன்று தரம் திரியில் குதித்தது.

''இது ஏன் இப்படி குதிக்குது?'' என்று ஆச்சர்யப்பட்டாள் வள்ளி. அவள் கேட்டு வாய் மூடுவதற்குள், விளக்கு அணைந்து விட்டது. மண்ணெண்ணெய் நாற்றம் எங்கும் நிறைந்து நின்றது. ''தாத்தா, விளக்கு அணஞ்சி போச்சே?'' என்றாள் அவள்.

''ஆமா ஆமா. எண்ணெய் இருந்திருக்காது. அதுனாலே என்ன? தூங்க வேண்டிய நேரம்தானே?''

வள்ளி சிறிது நேரம் பேசாமல் கிடந்தாள். பிறகு தொண தொணப்பைத் தொடர்ந்தாள்.

''அங்கே என்னமோ சத்தம் கேக்குதே, அது என்னவாயிருக்கும்? எலியா இருக்குமோ? அல்லது, பூனையா? நம்ம மேலே வந்து விழுமோ?'' என்றாள். ''தாத்தா, அப்பாவும்

அம்மையும் என்னை விட்டுட்டுப் போயிருவாங்களோ? அவங்க திரும்பி வரலேன்னு சொன்னா, நான் என்ன பண்ணுவேன்?''

பெரியவருக்கு எரிச்சல் வந்தது. ''ஏண்டி, வாயை மூடிக்கிட்டுக் கிடக்க மாட்டே? நீயும் உங்க அம்மைகூடப் போயிருக்க வேண்டியதுதானே? இங்கேயே தான் இருப்பேன்னு ஏன் அடம் புடிச்சே?'' என்று வெடுவெடுத்தார்.

வள்ளி வாய் திறக்கவில்லை. ஆனால், தூங்கவும் இல்லை. வெளியே, தொழுவத்தின் தகரக் கொட்டகை மீது டப்டுப் என்று ஓசை எழுந்தது. பருமனான மழைத் துளிகள் விழுந்தன. ''தாத்தா... தாத்தா'' என்று மெதுவாகக் குரல் கொடுத்தாள் வள்ளி!

''ஊம்ங்?''

''அது என்ன சத்தம்? திருட்டுப் பயல் போலிருக்கு!''

மழை சடசடவென்று பெய்யத் தொடங்கியது. "மழை தான் பெய்யுது, தகரத்து மேலே மழை விழுற சத்தம் தான்...''

சிறிது நேரத்தில் மழை நின்று விட்டது. நாய் குரைத்தது. இன்னொரு நாய் பதிலுக்குக் குரைத்தது.

''தாத்தா...''

அவர் பேசவில்லை. தூக்கக் கிறக்கம்.

''பயமாருக்கே... அம்மா!''

ஆந்தையின் அலறல் கோரமாகக் கேட்டது. இருட்டில், வீட்டினுள், எது எதுவோ நடமாடுவது போல் தோன்றியது அவளுக்கு. கள்ளப்பயல், பேய், பூனை, பாம்பு — அவள் மனம் தறிகெட்டு ஓடியது.

"தாத்தா... தாத்தா..."

எலி ஒன்று விழுந்தடித்து ஓடி வந்து அவள்மீது ஏறிக் குதித்துத் துள்ளிச் சென்றது. "தாத்தா!" என்று பயங்கர மாகக் கூச்சலிட்டாள் அவள். அவர் என்னவோ ஏதோ என்று திடுக்கிட்டுப் பதறி எழுந்தார்.

"மேலே என்னமோ விழுந்து ஓடிச்சு" என்று பயத்தோடு புலம்பினாள் பேத்தி.

"எலியாயிருக்கும்... இப்படி பக்கத்திலே வந்து படுத் துக்கோ" என்று அவர் அவளை அருகில் அழைத்து, தைரியம் ஊட்டினார். என்னும், அவள் நெஞ்சு திக் திக்கென்று அடித் துக் கொண்டுதான் இருந்தது.

"இருட்டைக் கண்டு சின்னப்புள்ளைக்கு ஏன் தான் இந்த பயமோ? குப்புறப்படுத்து, தலையணையிலே முகத்தை புதைச்சு, கண்ணை சிக்னு மூடிக்கோ; பயம் தெரியாது" என்று உபதேசித்தார் பெரியவர்.

அவள் அவ்வாறே கிடந்தாள். ஆயினும் அவளுக்குத் தூக்கம் வர வெகுநேரம் பிடித்தது...

விடிந்ததும், தாத்தா எழுந்து அவர் வேலைகளை கவனிக் கப் போனார்.

வள்ளி எழுந்தபோது, வெயில் வந்திருந்தது. குருவிகள் தத்தியும் பறந்தும் விளையாடிக் கொண்டிருந்தன. ஒரு கோழி வீட்டுக்குள் வந்தது. அதை வெளியே தூரத்திக் கொண்டு ஓடினாள்.

பூனை ஒன்று ஒரு சுவர்மீது சோம்பலாகப் படுத்திருந்தது. அதைப் பார்ப்பதற்கு இப்போது அவளுக்கு பயம் எதுவு மில்லை. "அடி, குத்து!" என்று கூட விரட்டினாள்.

தோட்டத்துப் பக்கம் போனாள். செம்பருத்திச் செடியில் பூக்கள் நிறைந்திருந்தன. அந்தச் செம்மை அவள் கவனத்தைக் கவர்ந்தது. சில பூக்களைப் பறிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. முயற்சி செய்தாள். எட்டவில்லை. பெருவிரல்களை ஊன்றி நின்று, எம்பிப் பார்த்தாள்; ஊகூங். அங்கே ஒரு கட்டை கிடந்தது அவள் பார்வையில் பட்டது. அதன் மீது ஏறி நின்று முன்னே வளைந்து, கையை நீட்டி, செடியைப் பிடித்து இழுத்தாள்.

''ஏட்டி, ஏட்டி, அங்கே என்ன செய்யுதே? கீழே விழுந்திரப் போறே'' என்று பதட்டத்துடன் எச்சரித்தவாறு தாத்தா அங்கே வந்து சேர்ந்தார்.

''பூப் பறிக்கேன்!'' — பெருமை குமிழியிட்டது அவள் பதிலில்.

''இப்படி முன்னாலே வளைஞ்சா, கீழேதான் விழுவே மூக்கிலே அடிபடும்'' என்றார் அவர். ''கட்டை சரியாக் இல்லே. இது மகுடிச்சு நீ கீழே விழுந்திருவே!''

அவள் வெற்றிகரமாக இரண்டு பூக்களைப் பறித்து விட்டாள். அந்தப் பெருமையிலும் மகிழ்விலும், மேலேயிருந்து ''தொபுக்கடீர்'' என்று கீழே குதித்தாள்; சிரித்தாள்.

அவர் பயந்து விட்டார். ''ஏட்டி, இப்படிக் குதிக்கலாமா? காலு கையி முறிஞ்சிதுன்னா?'' என்றார்.

''எனக்குதான் அடிபடலியே!'' என்று கூவியபடி, அவள் குதித்தாள்; ஓடினாள்.

''ஏ வள்ளி! ஏட்டி! மெதுவாப்போ. மழை பெஞ்ச தரை; வழுக்கி விட்டிரும். கீழே விழுந்து முழங்காலைப் பேர்த்துக்

கிட்டு அழப்போறே!'' என்று கலவரத்தோடு நல்ல வார்த்தைகள் சொன்னார்.

அவள் ஏன் கேட்கிறாள்! ஓடினாள். அங்கிருந்த கிணற்றை எட்டிப் பார்த்தாள். கிணற்றைச் சுற்றிக் கட்டியிருந்த துவளத்தின் மீது உன்னிச் சாய்ந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.

பெரியவருக்கு உண்மையாகவே பயம். ''சே, இந்தப் புள்ளெ எத்தினி தொல்லை தருது! சனியன்! கொஞ்ச நேரம் கூடச் சும்மா இருக்கமாட்டேன்குதே!'' — மனம் அலுத்துக் கொண்டது. அவர் வேகமாகக் கிணற்றருகே போனார். ''ஏட்டி, உனக்கு பயமாயில்லே?'' என்றார்.

''தண்ணி ஆழத்திலே கிடக்குது. தெரிய மாட்டேன்குது. அதுதான் எட்டிப் பார்த்தேன்'' என்று சகஜமாக பேசி, தரை மீது கால் பதித்து நின்றாள் வள்ளி.

''கிணத்தை எல்லாம் எட்டிப் பார்க்கப்படாது, ஆமா'' என்று சிரத்தையோடு உபதேசித்தார் அவர்,

அவள் கீழே விழுந்து, காயம்பட்டு, அழ போகிறாள் என்று தாத்தா பயந்துகொண்டு அவள் பின்னாலேயே போனார். அடிக்கொரு தரம் தன் பயத்தை ஒலிபரப்பிக் கொண்டிருந்தார். எச்சரித்தார்; மிரட்டினார்.

ஒரு நாய் ஓடி வந்தது. அவள் ஒரு கல்லை எடுத்து அதன் மேலே வீசி எறிந்தாள். கல் நாய் மீது படவில்லை.

''ஏட்டி, நாய் உன்னை கடிச்சுப் போடும்'' என்றார் பெரியவர்.

''அது ஒண்ணும் கடிக்காது. அதுதான் ஓடியே போயிட்டுதே. நாயைக் கண்டா எனக்கு பயமே கிடையாது. தெரியுமா?'' என்று ஜம்பம் அடித்தாள் சிறுமி.

''நாயிட்டே எல்லாம் சேட்டை பண்ணப்படாது. ஒரு சமயம் இல்லாட்டி ஒரு சமயம் லபக்குனு கடிச்சிரும்!''

வள்ளி எதிர்ப்புரை கூறவில்லை. சுவர் மீது சார்த்தப் பட்டிருந்த ஏணி அவள் கவனத்தைக் கவர்ந்தது. ஓடிப்போய் மூன்று படிகள் ஏறி விட்டாள்.

அதன் பிறகு தான் தாத்தா கவனித்தார். பதறினார். ''ஏட்டி ஏட்டி, கீழே இறங்கு, கால் தவறி விழப்போறே. ஏணியே சரிஞ்சிரும்... சே, இந்தப் புள்ளை என்ன பாடு படுத்துது!'' என்று எரிச்சலோடு குறிப்பிட்டார்.

"ஏன் தான் நீ இப்படி பயப்படுறியோ?'' என்று கேட்ட படி கீழே குதித்தாள் வள்ளி.

''இப்படி எல்லாம் குதிக்கப்படாதுன்னு எத்தனை தடவை சொல்றது? காலு கையி முறிஞ்சிரப் போகுதுட்டீ!'' என்று பெரியவர் கத்தினார்.

அவருக்கு வேறு அலுவல் எதுவோ வந்தது. ''வள்ளி, வீட்டுக்குள்ளே போ, நான் இதோ வாறேன்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

வள்ளி குதித்துக்கொண்டே உள்ளே போனாள். சிறிது நேரத்துக்குப் பிறகு அவள் தலை மொட்டை மாடியில் தென் பட்டது. அங்கே திடுதிடுவென ஓடினாள். குட்டையான கைப்பிடிச் சுவர் மீது படுத்தபடி தோட்டத்தை எட்டிப் பார்த்து, ''தாத்தா! ஏ தாத்தா!'' என்று கத்தினாள்.

தோட்டத்தில் நின்று நிமிர்ந்து பார்த்த பெரியவர் நிஜ மாகவே பயந்து போனார். ''இந்தப் புள்ளை தட்டட்டிக் கவுதத்தின் மேலே ஏறி எட்டிப் பார்க்குதே! கால் தவறிக் கீழே விழுந்தால் என்ன ஆகிறது?''—எனவே கோபமாகக்

கூப்பாடு போட்டார். ''அங்கே ஏன்ட்டீ போனே? அந்தச் சுவரு மேலே ஏன் ஏறி நிக்கிறே? கீழே விழுந்தா, செத்தே போவையேட்டி''

வள்ளி கலகலவெனச் சிரித்தாள். ''என்ன தாத்தா நீ! வெளிச்சமா இருக்கிற நேரத்திலே, கண்டதுக்கெல்லாம் இப்படிப் பயந்து சாகிறே'' என்று கேலி வேறு பேசினாள். ''நான் சின்னப்புள்ளெ. இருட்டைக் கண்டு பயப்படுவேன். அது சரி. நீ பெரிய ஆளு. வெளிச்சத்திலும், வெறும் வெளியிலும் பயப்படுறது நல்லாவே இல்லே!'' என்று பெரிய மனுஷி தோரணையில் பேசினாள்.

"இந்தச் சின்னச் சவத்தை என்ன பண்ணுதுன்னே புரியலியே!'' என்று மனம் குழம்பிய பெரியவர், செய்யும் வகை அறியாது, தலையைச் சொறிந்து கொண்டு நின்றார்.

''பேன் கடிக்குதா, தாத்தா? மொட்டைத் தலையிலே பேனு எப்படி வந்தது? இந்தா வாறேன். வந்து பேன் கிடக்கு தான்னு பாக்கிறேன்" என்று சொன்ன வள்ளியின் தலை மறைந்தது. அவள் ஓடிவரும் சத்தம் திம்திம் என்று கேட்டது.

□

அமுதசுரபி தீபாவளி மலர்—1969

மனப்பித்து

கைலாசத்தின் உடம்பில் ஒரு சிலிர்ப்பு. அவன் கண்கள் நெடுகிலும் புரண்டு, எதிர் மூலையில் பார்வை பதிந்து நின்றன.

அப்போது அவன் ரயிலில் போய்க் கொண்டிருந்தான். வண்டியின் ஒரு மூலையில், சன்னலோரத்தில் வசதியாக இடம் கிடைத்திருந்தது.

மழைக்கால மாலைப்பொழுது. இரவு இறங்கி வரும் சமயம். மழை இல்லை. கருங்கும் என இருள் பரவியிருக்க வில்லை. எனினும் ஒளி அதிகம் இல்லை.

அச்சம் எழுப்பக்கூடிய சூழ்நிலைதான். மலைகளும் காடு களும் மண்டிய இடம். பாம்பு மாதிரி, இருப்புப் பாதை நெளிந்து வளைந்து செல்கிறது. அங்கே ஒரு சிறு ஸ்டேஷன். அதிலும் ஆட்கள் காத்திருந்து ரயிலில் ஏறத்தான் செய்தார் கள். அந்த வட்டாரத்தில் பலரகமான உழைப்பிலும் ஈடுபடு கிறவர்கள்.

அந்த வண்டியிலும் சிலர் ஏறினார்கள். பெண்கள். உடலிலோ உடையிலோ நாகரிகத்தின் சின்னங்கள் படியாத வர்கள். உழைப்பாளிகள். இளம் வயசு.

அவர்கள் அவசரம் அவசரமாக ஏறினார்கள். உட்கார இடமில்லை. ஆகவே, அங்கேயே கதவருகில் நின்றார்கள்.

மூலையில் வசதியாக அமர்ந்திருந்த கைலாசத்தின் பார்வை அவர்களைத் தொட்டது. கதவோரத்தில் நின்ற ஒருத்தி மீது தேங்கியது.

தேக்கங்கட்டையில் செதுக்கி உருவாக்கி கடைசல் பிடித்து மினுமினுப்பு ஏற்றப்பட்ட சிலை மாதிரி இருந்தாள். சலவை கண்டிராத—அழுக்கு முட்டிப் போன—உளுத்தங்களி நிறச் சீலை. பச்சை ரவிக்கை. உருண்டு திரண்டிருந்த உடலின் எடுப்பைக் கவர்ச்சிகரமாக மூடிக் காட்டிய திரை அது. அலட்சியமாகத் தலைமுடி அள்ளிச் செருகப்பட்டிருந்தது.

அவள் நின்று அப்படியும் இப்படியும் பார்த்தாள். வண்டிக்குள்ளே. வெளியே. கதவின் சன்னலில் சாய்ந்து, உடம்பை வளைத்து, தலையை வெளியே நீட்டி நோக்கினாள். அப்போது அவள் உடல் பகுதிகள் அருமையான காட்சிகள் ஆயின. நிமிர்ந்து நின்று பார்க்கையில் அவள் முகமும் வசீகரமாகத்தான் இருந்தது.

அவள் கண்களில் ஒரு தனிக் கவர்ச்சி. அகன்ற, பெரிய மதமதர்த்த விழிகள். குறுகுறுக்கும் பார்வை, வலைவீசும் மாயா விழிகள். கவ்விப் பற்றும் உணர்ச்சிக் கண்கள். வெற்றிலை சுவைத்திருந்த உதடுகள் ரத்தச் செந்நிறம் காட்டின. களையான முகத்தில் இவை எடுப்பாக விளங்கின.

இருட்டு கவியாத, எனினும் ஒளி அதிகம் பெற்றிராத, அந்த அந்தி வேளையில், அந்தச் சூழலில், அம்முகம் மோகினித் தன்மை பெற்றதாய்—மனித வடிவுக்கு அப்பாற்பட்ட ஒரு வனப்பு ஏற்ற மாயத் தோற்றமாய்—இலங்கியது.

அவளையே பார்க்க வேண்டும் என்ற உள்ளத் துடிப்பு அவனுக்கு. அவன் அப்படிப் பார்த்ததைப் பார்த்த அவள் முறுவல் விளையாடும் முகத்தோடு, ஜீவதாபம் ஊறும் கண்களால் அவனை உற்று நோக்கினாள்.

அப்போதுதான் அவன் உடல் சிலிர்த்தது. உள்ளத்தில் ஒரு உதைப்பு. இவள் பெண் அல்ல; அமானுஷ்யக் கதைகளில் படித்திருப்பது போல்—பாட்டிமார்கள் சொன்ன நாட்டுப்புறக் கதைகளில் வருவது போல—ஒரு பேயாக, பெண் வடிவத்தில் நடமாடும் கொடிய சக்தியாக இருக்கும் என்றொரு நினைப்பு அவனுள் கிளர்ந்தது.

இருளும் ஒளியும் முயங்கும்போது, குறுகுறு பார்வையோடு உற்று நோக்கிய அவள் விழிகளில் ஒரு அமானுஷ்ய மினுமினுப்பு சுடரிடுவதாக அவனுக்குப்பட்டது. அந்த எண்ணம் மன அரிப்பு உண்டாக்கியது. அவன் உடலில் அச்சம் ஊர்ந்தது. அவன் உள்ளத்தில் இருண்ட நிழல்கள் ஆடின. நிச்சயமான எதிர்காலச் சாயைகள்.

ரயில் ஓடி ஓடி, பெரிய ஜங்ஷனை அடைகிறது. அவன் இறங்கி நடக்கிறான். அவன் பின்னால் அவளும் தொடர்கிறாள். அவ்வப்போது பொல்லாத பார்வை பார்த்துக் கொண்டு, கிளுக்குச் சிரிப்பு சிந்தியவாறு.

அந்த ரஸ்தாவில் இருள் மண்டிய பகுதிகள், கார்இருள் கப்பிய பெருமரத்து அடிகள், நிறைய உண்டு. அது போன்ற ஒரு இருட்டுப் பந்தலில், அவள் தன் சக்தியை காட்டுகிறாள். அவன் ரத்தம் கக்கிச் செத்து விழுகிறான்...

கைலாசம் இவற்றை எல்லாம் தெளிவாகக் காண்கிறான். மூக்கிலும் ரத்தம் வழிய, விழிகள் பயத்தினால் பிதுங்கி நிற்க, அவன் கோரப் பிணமாய் கோணிக் கிடப்பதை அவனே நன்றாகப் பார்க்கிறான். அவன் உடலில் ஒரு விதிர் விதிர்ப்பு. வேர்வை பொடித்து நிற்கிறது. பயம் அவனை ஆட்கொள்கிறது. தத்ரூபமான அந்த தரிசனத்தினால் உலுக்கப் பெற்று அலறிவிடக் கூடியவன்தான். நல்ல வேளை. அப்படி நடக்கவில்லை!

வண்டியில் விளக்குகள் மங்கல் ஒலி காட்டி சிரிக்கலாயின. வண்டித்தொடர் இடைவழி ஸ்டேஷன் ஒன்றில் நின்றது. அவளும் அவளைச் சேர்ந்தவர்களும் இறங்கிப் போய்விட்டார்கள்.

என்றாலும், கைலாசத்தின் மனம் ஜங்ஷன் ஸ்டேஷனுக்கும் நாகரிக நகரத்துக்கும் இடைப்பட்ட இருள் செறிந்த சாலையில் மோகினிப் பேயால் 'அடிக்கப்பட்டு' ரத்தம் கக்கிச் செத்துக் கிடந்த அவனைப் படம் பிடித்துக் காட்டி பதைத்தது வெகு நேரம் வரை.

'சீ, என்ன கோளாறு இது' என்று அவன் அலுத்துக் கொண்டான். நிமிர்ந்து உட்கார்ந்து, வெளியே பார்வை வீசினான்.

எங்கும் இருட்டு இப்போது கறுப்பைக் கொட்டி வைத்திருந்தது. வானத்தில் நட்சத்திரங்களே இல்லை. மலைப் பகுதிகள் எப்பவோ போய்விட்டன. அச்சமூட்டும் சூழ்நிலையில் ரயில்வண்டி ஓடிக் கொண்டிருக்கவில்லை என்பது அவனுக்குத் தெரியும். என்றாலும் அவன் மனஅரிப்பு நீங்கிவிடவில்லை.

கைலாசம் 'பயந்தாங்குளி'யாக வளர்ந்தவன் இல்லை. இரவு நேரங்களில் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் சுற்றித் திரிந்திருக்கிறான். ஒரு சமயம் ராத்திரி வேளையில் சுடுகாட்டுப் பக்கம் போய் ஒரு மணி நேரம் தங்கி விட்டு வந்தவன் தான். பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காக. அது நிகழ்ந்தது அவனது இருபதாவது வயதில்.

பதினெட்டாவது வயசில் ஒரு பந்தயத்தில் ஈடுபட்டு வென்றவன்தான் அவன். அவனிருந்த ஊருக்கு மேற்கே ஒரு

மைல் தூரத்தில் 'மூலைக்கரை இசக்கி அம்மன்' கோவில் இருந்தது, மூர்க்கமான தெய்வம் என்று அந்த வட்டாரத்தில் பிரசித்தம். ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு குளத்தங்கரை மூலையில் அது இருந்தது. முன்னே நன்கு ஓங்கி அடர்ந்து பரந்து வளர்ந்த பெரிய ஆலமரங்கள் இரண்டு நின்றன. பந்தல் அமைத்தது போல் கவிந்து நிற்கும் அம்மரங்களின் கீழே பகல் நேரத்தில்கூட நிழல் இருண்டு கிடக்கும். இரவின் இருட்டில் அங்கு கருங்கும் என்றிருக்கும். பயங்கரமான தனிமை. சாதாரண ஜனங்கள் இரவு வேளையில் அந்த இடத்துக்குப் போக மாட்டார்கள். பயம்தான் காரணம். அங்கே போய், ஒரு ஆலமரத்தில் ஆணி அறைந்து வைத்து விட்டு வரவேண்டும்; ஆடி அமாவாசை இரவில் என்று ஒரு பந்தயம். ஐந்து ரூபாய் தரப்படும் என்று அறிவிப்பு. கைலாசம் துணிந்து செயல் புரிந்தான். ஆடி அமாவாசை நேரத்துக் கன்னங் கனிந்த கருக்கிருட்டும் ஓவ்ஓவ் என்று பெருங்கூச்சலிட்டவாறு சுழன்று வீசிய காற்றும், தனிமையும் அவனைக் கலவரப்படுத்தவில்லை, பயங்கரக் கதைகள் பல வற்றின் பிறப்பிடமாக வீற்றிருந்த மூலைக்கரை இசக்கியின் முன்னே நிதானமாக நின்று—ஒரு மரத்தில் மட்டுமல்ல— இரண்டு மரங்களிலும் ஆணி அடித்துவிட்டு, அஹஹ்ஹா என்று கனத்த குரல் எழுப்பி அட்டகாசமாய் சிரித்தான் அவன். பேய் அலறியது என்றும், நள்ளிருளில் இசக்கி கோரக் குரல் எழுப்பினாள் என்றும் பயந்து வெலவெலத்துப் போயிருப்பார்கள், யாராவது அதைச் செவிமடுத்திருந்தால்!

இப்படி அவன் வாழ்க்கையில் எத்தனையோ வீரப்பிர தாபங்கள்! 'ஓடுகிற பாம்பையும் மிதிக்கிற வயசு' என்று இளமை குறித்துச் சொல்லப்படுவது அவனுக்கு மிகுதியும் பொருத்தமாகவே இருந்தது. வேணுமென்றே பாம்பைப் பிடித்து ஓடவிட்டு காலால் ஓங்கி மிதித்துக் களிக்கும் இயல்பு பெற்றிருந்தான் அவன்.

ஆனால், அவை எல்லாம் 'முன்னொரு காலத்தில்' என்று மதிப்பிடப்பட வேண்டிய விஷயங்கள் ஆக அல்லவா போய்விட்டன.

இப்போது அவனுக்கு வயசு ஒன்றும் அதிகம் ஆகிவிட்டவில்லை. இருபத்தாறோ என்னவோதான். உடல் முறுக்காகத்தானிருந்தது. எனினும் அவன் உள்ளத்தில்தான் பெரும் மாறுதல். பயம் எனும் உணர்வு அங்கே ஒரு மூலையில் குடிபுகுந்து விட்டது. இருட்டு அவனைக் கலக்கமுற வைக்கும் பகை ஆயிற்று. இரவு நேரங்களில் அவனைப் பாடாய்ப்படுத்தி அலைக்கழியச் செய்யும் போதுகள் ஆகி விட்டன.

இதற்கு ஒரு ராத்திரியில் நிகழ்ந்த ஒரு சம்பவமே காரணமாகும். தற்செயலான ஒரு விபத்து அது.

கைலாசம் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தான் வீட்டின் மத்தி அறையில். பழங்காலத்து வீடு அது, உள்ளூறப் பழுதுபட்டிருக்க வேண்டும். அதை யாரும் கவனிக்கவில்லை, நடு ராத்திரியில் திடும் என்றொரு ஓசை எழுந்தது. அந்த வீட்டில் அவனும் அவன் தாயும் மட்டுமே. அம்மா உடல் பதறி எழுந்தாள். அடுத்த வீட்டிலிருந்தும் இரண்டொருவர் பதைபதைப்புடன் வந்து கதவைத் தட்டினார்கள். விளக்கேற்றப்பட்டது. எலெக்ட்ரிக் லைட் அல்ல. சாதாரண மண்ணெண்ணெய் விளக்குதான்.

கைலாசம் எழுந்து உட்கார்ந்தான். அவன் உடல் பதறித் துடித்துக் கொண்டிருந்தது. அவன் நெற்றியில் வேர்வை. உடம்பிலும் வேர்வை பெருக்கெடுத்தோடியது. அவன் படுத்துக் கிடந்த இடத்தருகே— அவனது தலைக்கு ஒரு அடி தள்ளி — பெரிய கட்டியான செங்கல்லும் சுண்ணாம்பும் உயரே இருந்து பெயர்ந்து விழுந்து கிடந்தது.

அதிலிருந்து சிதறிய துண்டு துகள்கள் நெடுகத் தெறித்துக் கிடந்தன. அவன்மேலும் ஒரு சிறு துண்டுபட்டிருக்கக் கூடும். ஆழ்துயிலின்போது பயங்கர ஓசையுடன் தலை மாட்டின் மிக அருகே இருட்டில் பெரும் கட்டி விழுந்ததனால் தூக்கம் கெட்ட அதிர்ச்சி; மேலே படீரென ஒரு சிறு கட்டி பட்டுத்தெறித்தது; பிறகு அந்த விபத்தின் பயங்கரத்தை வெளிச்சத்தில் பார்த்தது; பார்த்தவர்களின் பேச்சு எல்லாமாய் சேர்ந்து அவன் மனசை அதிரடித்து விட்டன.

'அம்மா, என் பிள்ளை ஒரு ஆசை பிழைச்சசுது! அந்தக் கட்டி கொஞ்சம் விலகி அவன் தலைக்கு நேரே விழுந்திருந்தால் அவன் கதி என்னாகியிருக்கும்?' என்று துடித்து அவன் தாய் அவனைக் கட்டிப் பிடித்துக் கதறினாள். உடம்பில் எங்காவது அடிபடவில்லையே என்று அன்புடன் தடவிக் கொடுத்தாள். ''என்னமா வேர்த்துக் கொட்டுது!'' என்று சீலை முந்தியால் துடைத்து விட்டாள். மற்றவர்களும் அதையே தான் சொன்னார்கள். அவன் உள்ளத்திலும் அந்த எண்ணம் சிலிர்த்தது. அதனால் அவன் உடல் நடுங்கிக் கொடுத்தது.

அன்று முதல் இருட்டும் இரவும் அவனை வெகுவாக பாதித்தன.

தூங்கிக் கொண்டிருப்பான். திடீரென்று ஊமை அலறலாக அலறிக் கொண்டு விழித்தெழுவான். அவன் உடல் நடுங்கியவாறிருக்கும். அவன் பார்வை வெறும் வெளியில் குத்திட்டு நிற்கும். அம்மா பதறி எழுந்து, அவன் அருகில் வந்து, 'என்ன, என்னடா கண்ணா?' என்று பரிவுடன் விசாரிப்பாள். நெற்றியில் கைவைத்துப் பார்ப்பாள். முதுகைத் தடவுவாள். 'ஒண்ணுமில்லே...ஒண்ணுமில்லையம்மா. நீ படுத்துக்கோ' என்பான். அவனுக்குத் தெளிவாகப்

புரியாது, நாம் ஏன் இப்படி அலறியபடி திடுக்கிட்டு எழுந்தோம் என்று. உள்மனம் ஏதோ பய அரிப்பை ஊர்ந்து புரளும்படி செய்திருக்கும். அச்சத்தின் கரங்கள் கனவு அலைகளாக அவனைப் பற்றி உலுக்கியிருக்கும், ஏதாவது பிரக்ஞையில் நின்றால் அல்லவோ பிறருக்கு எடுத்துரைக்க இயலும்?

வீட்டின் மேல் பகுதி இடிந்து விழுவதாக உள்ளுணர்வு குறுகுறுத்திருக்கும். சுவர் சரிந்து சாய்வதாக ஒரு கனவு வந்திருக்கும். தேக நடுக்கத்துடன் எழுந்து உட்கார்ந்து கவனிக்கிற போது எல்லாம் பைத்தியக்கார நினைப்பு என்று படும்.

அந்த வீட்டை அவர்கள் காலி செய்து விட்டார்கள். மற்றொரு வீடு. பழசுதான். இரவுகளில் அவனுக்கு தூக்கம் விரைவில் வராது. அல்லது நடுத் தூக்கத்தில் விழிப்பு வந்து விடும். அப்போது, விதம் விதமான ஓசைகள் கட்டிடத்தினுள் எழும். உத்திரம் இற்று விழுகிறது; தன்னை நசுக்கிவிடும் என்று அவன் மனம் பதறும். பழங்காலத்துக் கட்டிடங்களில் சுவர்களும் கட்டைகளும் மூச்சுவிடும்; அதனால் இரவில் விசித்திர ஒலிகள் எழுவது உண்டு என்று ஒரு பெரியவர் ஒரு சமயம் விளக்கம் கூறினார். ஆயினும் அவன் மனம் அமைதி அடையவில்லை.

அறையினுள் படுப்பது அச்சம் தருவதாகி விட்டது அவனுக்கு. எனவே, திண்ணையில், முற்றத்தில் திறந்த வெளியில் படுத்துறங்க முயன்றான்.

எங்கு படுத்தாலும் அவனை நிம்மதியாகத் தூங்கும் படி அவன் மனம் விட்டு வைப்பதில்லை. தூக்கம் கண்ணைச் சொருகும். அவ்வேளையில், அது என்ன? அதோ அந்த மூலையில்? மினுமினுவென்று சுருண்டு சுருண்டு ... பாம்பு

தானோ? பாம்பேதான்... அவன் தேகம் நடுங்கும். அது ஊர்ந்து வருகிறது. அவனைக் கடிக்கிறது. அவன் வாயால் நுரை கக்கி, அவஸ்தைப்பட்டுச் சாகிறான்! — இப்படி ஏதேதோ சித்திரங்களைத் தீட்டி அவன் மனமே அவனை வதை செய்யும்.

பூத பிரேத பைசாசங்கள் சம்பந்தமான கதைகளைப் படிப்பதில் முன்பெல்லாம் அவனுக்கு ஆர்வம் அதிகமிருந்தது. வீடு மாற்றிய பிறகு அவனுக்கு ஒரு புத்தகம் கிடைத்தது 'டிரேகுலா' பிணம் எழுந்து நடமாடித் திரிவது. ரத்தக் காட்டேரி விஷயம். விறுவிறுப்பாக, அதீதமான, அபூதமான விஷயங்கள் எல்லாம் கலந்து, திறமையாக எழுதப்பட்டுள்ள கதை.

கைலாசம் அதை ஆர்வத்தோடு படித்தான். சாயங்காலம் வெளியே போகாமல், புத்தகத்தைப் படித்து முடிக்க வேண்டும் என்ற வேகத்தோடு படித்தான். இருட்டிவிட்டது. அன்று அவன் அம்மாவும் இல்லை. உறவினர் வீடு சென்றிருந்தாள். மறுநாள்தான் வருவாள். அதை முடித்துவிட்டுத்தான் ஓட்டலுக்குப் போவது என்றிருந்தவன், முடிவில் கடியாரத்தைப் பார்க்கையில் மணி எட்டரை என்றறிந்தான். வெளியே வந்தான்.

இருட்டு கருப்பு வெல்வெட் படுதாவாய் எங்கும் தொங்கியது. அந்த வட்டாரத்தில் நல்ல ஓட்டல் கிடையாது. சுமார் ஒரு மைல் தூரம் போயாக வேண்டும். கிளம்பினான். ரஸ்தாவில் ஏதோ கோளாறினால் மின்சார விளக்குகள் எரியவில்லை. அவன் நடந்தான். போகப் போக அவனுள் அர்த்தமற்ற, அவசியமுமற்ற, ஒரு குழப்பம் எழுந்தது. இனம் தெரியாத அக்கலவரம் வளர்ந்து கனத்து வலுத்தது. தன்னை எதுவோ ஒன்று தொடர்வது போன்ற பிரமை.

தோள் மீது ஈரம் போல் சில்லிடும் ஒரு கரம் படிவதாக ஒரு உணர்வு. கன்னத்தில் குளிர்ச்சியான சுவாசம் பட்டதுபோல் கழுத்தில் கூரிய இரு நகங்கள்—அல்லது, பழந்தின்னி வெள் வாலின் கூரிய பற்கள்தானோ?—குத்துவது போல் ஒரு சுரீர். சுற்றிலும் இருளைத் தவிர எதுவும் இல்லை. அவன் உடல் நடுக்கம் கண்டது. உள்ளத்தில் பதைபதைப்பு. தனியே அவ்வளவு தூரம் ஓட்டலைத் தேடி நடந்து உணவு உண்டு விட்டுத் திரும்பி வருவது சாத்தியமல்ல—மிகுதியும் அச்சம் புகுத்தக் கூடிய அனுபவமாக அது அமையும்—என்று உள்ளுணர்வு அவனை எச்சரித்தது. வேகமாய் வீடு திரும்பினான். ஓடாத குறைதான். அத்தனை வேகம். பின்னால் தன் காலடியிலேயே எதுவோ தன்னைத் தொடர்வது போல... சர்ர்... சரக்... அதோ, விட்டுவிட்டு... சரட்சர்ர்... அவன் மனம் அரித்துக்கொண்டேயிருந்தது. வேர்வை பொங்கி வழிந்தது. எப்படியோ வீடு வந்து சேர்ந்தான்.

அறைக்குள்ளேயே படுத்தான். மனக்குறுகுறுப்பு. பசி வேறு. தூக்கம் வரவேயில்லை தீக்கங்குகள் போல் ஜொலிக்கும் விழிகள் அவனையே உறுத்துப் பார்க்கின்றன. ரத்தக் காட்டேறி வௌவால் மாதிரி ஜன்னல் வழியே வந்து சிற கடித்துச் சுற்றுகிறது. அதன் குளிர்ந்த காற்று அவன் மூஞ்சியில் படுகிறதே!...கிறக்கம் கண்களை அயரச் செய்யும். அவ்வேளையில் ஒரு பிணம் கோரமாய்ப் பல்லைக் காட்டிக் கொண்டு அவனைத் தொடுகிறது. அவன் உடல் திருகி முறுகிக் கோணலாகிறது. வாயிலிருந்து ரத்தம். அவனும் பிணமாகிவிடுகிறான்... இப்படி தத்ரூபமாய் கண்டு அவன் பதறி எழுகிறான். ஒன்றும் செய்ய ஓடாதவனாய் உட்கார்ந்து விடுகிறான்.

இதுவே அவனுக்கு ஒரு வியாதி ஆகிவிட்டது. மன நோய்.

பகல் நேரங்களில் இயல்பாக நடந்து கொள்வான். இருட்டு வேளையில்தான் அவன் மனம் பித்துற்று அவனை வதை செய்யும்.

—ரஸ்தாவில் நடக்கையில், வேகமாக வரும் கார் அல்லது பஸ் அவன் மேலே ஏறி, அவனை நசுக்கி ஓடும். அவன் மண்டை சிதைந்து, ரத்தம் திட்டு திட்டாகச் சிதறிக் கிடக்க... அம்மா, என்ன கோரக் காட்சி!

—பஸ் வரவு நோக்கி, நடைமேடை மீது அவன் நிற்கிறான். எமன் மாதிரி ஒரு லாரி வருகிறது. கண், மண் தெரியாமல் ஓட்டப்படுகிற அது பாதையிலிருந்து விலகி, ஓரத்து மேடை மீதேறி, இரண்டு மூன்று பேரை 'சட்னி ஆக்குகிறது'. அவனையும் கீழே தள்ளி துவையலாக்கி விடுகிறது. தாறுமாறாக நசுங்கிக் கிடக்கும் அவன்... சே, எவ்வளவு பயங்கரம்!

இப்படி விபரீதமான எண்ண வலை பரப்பி, அதில் தானே சிக்கி, இடறி விழுந்து, திணறித் தவிக்கும் அவன் மனம். அதன் போக்கை அவனால் தடுக்க இயலவில்லை. மாற்றி அமைத்துப் பழைய தெம்பைப் பெறவும் முடியவில்லை.

இப்போது ரயிலில், சௌகரியமான மூலையில் அமர்ந்து சுகமாகப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் கைலாசம், வேக ஓட்டம் வண்டியின் அசைவுகளினால் தாலாட்டப் பெற்று, கண்களை மூடியிருந்தான். தூக்கக் கிறக்கம். வண்டி ஓடுகிற கடகட சத்தம் இசைத்துக் கொண்டேயிருந்தது.

ஒரே சீராக எழுந்த ஒலிகள் திடுமென் பேதப்பட்டு கோர ஓசைகளாய் அலறுகின்றன. மென்மையான வண்டி

அசைவுகள் உலுக்கலாகவும் மோதலாகவும் மாறின. பெஞ்சு களில் அமர்ந்து தூக்கத்தினால் 'சாமி ஆடிக்கொண்டிருந்த ஆட்கள் குலுக்கித் தள்ளப்படுகிறார்கள். ஒருவர் மீது ஒரு வர் மோதி இடித்துக் கொண்டு, ஒருவரை மற்றவர் நசுக்கி, என்ன ஏது என்று புரியாவிடினும் ஏதோ ஆபத்து என உணர்ந்தவர்களாய், தப்பிப் பிழைக்க வேண்டும்—தானே முந்தித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேணும்—எனும் உயிராசை உந்தித் தள்ள, வெறித்தனமாய்ப் போராடிச் சமட்டிக் கொண்டு, அப்படியும் முடியாதவர்களாய் மொத்த மாய் அடித்துப் புரண்டு விழுகிறார்கள். வண்டி விழுகிறது. வண்டித் தொடரின் இரண்டு மூன்று பெட்டிகள் விழுந்து, நொறுங்கி... பயங்கர ஓசைகள். மனித ஓலங்கள். விபத்துக் கால வேதனைக் கூச்சல்கள்... கைலாசமும் பெஞ்சிலிருந்து விழுந்து பிறரால் மிதித்துத் துவைக்கப்பட்டு, மேலே பாரமான பெட்டியோ எதுவோ விழுந்து நசுக்க பரிதாபகரமாகச் சாகி றான். ரத்தம் கக்கியவாறு, கூச்சல் போட முடியாமல் செத்துப் போகிறான்...

கைலாசம் பதறியடித்து விழித்து, தன் இடத்தில் நிமிர்ந்து உட்காருகிறான். வேர்வை அவன் உடல் பூராவும் பெருகி ஆறாக ஓடுகிறது. திருதிரு என்று விழித்தபடி அங்குமிங்கும் பார்க்கிறான். தன்னை மீறிக் கதறி இருப் பானோ? எதிரிலும் அருகிலும் உள்ளவர்கள் அவனை ஒரு மாதிரிப் பார்பானேன்? அவர்கள் கேள்வி கேட்டுத் தொண தொணப்பார்களே! சனியன்!

வண்டி பெரிய ஸ்டேஷனை அணுகிக் கொண்டிருந்தத னால், தண்டவாளம் விட்டுத் தண்டவாளம் மாறியதால், தட தடா கடகடா என்று பேரோசைகள் விதம் விதமாக எழுந்து கொண்டிருந்தன. 'ஜங்ஷன் வருது. எழுந்திரு இங்கே இறங்கணும்' என்று, முடிவை நெருங்கிவிட்ட பயணிகள் பரபரப்புக் காட்டிக்கொண்டிருந்தார்கள்.

கைலாசம் இறங்க வேண்டிய இடமும் அதுதான்.

அவன் மனம் இன்னும் அமைதி அடையவில்லை. அவனது உடல் படபடப்பும் தணியவில்லை. சன்னல் வழியாகப் பளிச்சிட்ட ஸ்டேஷனின் வெளிச்சமயமான சுற்றுப்புறத்தை வெறித்து நோக்கியபடியே உட்கார்ந்திருந்தான் அவன்.

□

'தீபம்' ஏப்ரல் 1971

உணர்வின் துடிப்பு

—இது ப்யூர் ஸைக்காலஜி. ஆனால் ஸைக்கலாஜிக்கல் உண்மைகளை எத்தனை பேர் புரிந்து கொள்ளும் சக்தி பெற்றிருக்கிறார்கள்? இல்லை. அப்படி ஆற்றல் பெற்றிருப்பவர்களில்தான் எத்தனைபேர் விஷயத்தைப் புரிந்து கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்? புரிந்துகொள்ளச் சக்தி இல்லாமலும், உண்மையைப் புரிந்து கொள்வதற்கான மனம் இல்லாமலும் திரிகிற மக்குப்பிளாஸ்திரிகள், மடச் சாம்பிராணிகள், மண்டூகங்கள், மண்ணாந்தைகள் மத்தியிலேதான் ஐயாவாளைப் போன்ற மேதைகளும் வாழ்ந்து தொலைக்க வேண்டியிருக்கு. இதுதான் வாழ்வின் ஐரனி!

சுயம்புலிங்கம் மூஞ்சியைச் சுளித்தான். வாயை எப்படி எப்படிக் கோணலாக்க முடியுமோ அப்படி எல்லாம் நீட்டியும் குறுககியும் சுருக்கியும் கோரணி பண்ணினான். கண்களை உருட்டிக் கொண்டான். தானாகவே சிரித்து வைத்தான்.

— ஐயாவுக்கு இப்போ குஷி மூட்!

ஸைக்காலஜி என்ன சொல்லுது? இயல்பான உணர்ச்சிகள் பொங்கி எழுகிற போது அவற்றுக்கு உரிய போக்கு காட்டாமல், அமுக்கி ஆழ்த்திக் கொன்றுவிடத் தவிப்ப

தனால் தான் மனித இனத்தில் மனக்கோளாறுகளும் நரம்பு வியாதிகளும், சித்தப் பிரமைகளும் வக்கிரங்களும் அதிகம் காணப்படுகின்றன.

அதுக்கு உளஇயல் நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள்?

உணர்ச்சிகளை அடக்கி ஒடுக்கி வைக்கப்படாது. அவை பொங்கி எழுகிற போது அவற்றுக்கு ஒரு போக்கு காட்ட வேண்டியது அவசியம். அப்போதான் மன அமைதி உண்டாகும்.

இதற்காக இன்றைய உளஇயல் நிபுணர்கள் வகுத்துக் காட்டும் வழி என்னவென்றால் —

உமக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருதா? யார் மீதாவது எரிந்து விழணும் போலிருக்கா? ஏசணும், கத்திக் கூப்பாடு போடணுமின்னு தோணுதா? எதையாவது வீசி எறிந்து உடைக்கணும்போல் ஆத்திரம் உண்டாகுதா? உடனே அப்படியே செய்துவிடும். அதற்கென ஒரு தனி அறை வைத்துக்கொள்ளும். அதுக்குள்ளே போய் கத்தும். வசை பாடும். தலையணைமீது ஓங்கி ஓங்கிக் குத்தும். அறையும். விலை மதிப்பு குறைவான — உடைப்பதற்கென்றே வாங்கி வைக்கப்பட்டுள்ள — பொருள்களை வீசி எறிந்து அமர்க்களமாய் சிரியும்... இப்படி எல்லாம் செய்தால், பொங்கி எழுந்த உணர்ச்சிகள் சூடு ஆறி இயல்பாகவே தணியும். உமது உள்ளத்தில் அமைதியும் சந்தோஷமும் படியும்.

'ஆகா! இதல்லவா புத்திசாலித்தனமான ஐடியா!' என்று கூவிக் குதித்தான் சுயம்பு.

அந்த அறையில் அவனமட்டும்தான் இருந்தான்.

—ஏய், எந்த உணர்ச்சியையுமே அடக்கி ஒடுக்கப் படாது. நம்ம சமூகத்திலே, நமது நாட்டிலே, விடியா மூஞ்சிகளும் மூணாம்பேஸ்துகளும், உர்ராங் உட்டாங்களுமே காணப்படும் வயணம் என்ன? உள்ளத்தில் அமைதியும் ஆனந்தமும் ஊற்றெடுக்காததுதான் காரணம். அதைச் செய்யாதே; இதைச் செய்யாதே; எதையுமே நினைக்காதே; ஆசையை அடக்கு; மூக்கைப்பிடி; மூலையிலே குந்து. கண்ணை மூடு. சிந்தனையை ஒடுக்கு! இவ்வாறு உப தேசித்து, ஆக்கினைகள் செய்து, உருப்படாமல் அடித்து விட்டார்கள்; அடித்து வருகிறார்கள்.

சிரிக்கணுமா? சத்தம்போட்டுச் சிரி. அழணும் போலிருக்கா? அழு. பாடுகிற உற்சாகம் ஏற்படுதா? பாடு. உனக்கு சங்கீத ஞானம் இருக்குதா, குரல் இனிமையாக இருக்குதா, பாடல்கள் தெரியுமா என்றெல்லாம் கவலைப் படாதே. தெரிஞ்சது, காதிலே விழுந்தது, அரைகுறை யாக அறிந்தது, எதை வேணும்னாலும் கத்து. பீறிடும் உணர்ச்சிகளுக்கு வடிகால் அமைக்க வேண்டும். முக்கியம்.

சுயம்புலிங்கத்துக்கு சிரிப்பு வந்தது. ‘நம்ம இஷ்டத் துக்கு சிரிச்சால்கூட மனுசப் பயலுக பயந்து போவானுக!’ என்று முணுமுணுத்தான். பழைய அனுபவ நினைவு திடீர் எனத் துள்ளி வெடித்ததுதான் காரணம்.

ஒரு மாலை நேரம். ஊருக்கு வெளியே ஒதுக்கமான குளக்கரை. கரையின் பக்கங்களில் ஓங்கி வளர்ந்த மரங்கள். மறுபக்கம் பசுமை கொஞ்சிக் குலவும் நெல்வயல்கள். கரை மத்தியில் ஒற்றையடிப் பாதை என மனிதர் நடந்து பண் பட்ட சுவடு. எப்பவாவதுதான் ஆட்கள் போவார்கள். சுள்ளி பொறுக்குவோர், விறகு வெட்டுவோர், மாடு மேய்ப் பவர்கள் வகையறா. அவ்வேளையில் யாரும் இல்லை. மாலைக் கதிரவனின் வெயில் இதமாக இருந்தது. ‘காலை

நடை காலுக்கு பலம்' என்றும், 'மாலை நடை மனதுக்கு நலம்' என்றும் அவன் அந்த வழியாக தினம் தினம் நடப்பது வழக்கம். அன்றும் அப்படித்தான் நடந்து கொண்டிருந்தான். சிரிப்புகளைப்பற்றிய நினைப்பு மனசில் அலைமோதியது. வெடிச்சிரிப்பு, துப்பாக்கிச் சிரிப்பு, மவுனச் சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு, கிளுகிளுச் சிரிப்பு, மணிச் சிரிப்பு, கனைப்புச் சிரிப்பு... இவ்விதம் அடுக்கிக்கொண்டே போன மனம் 'பேய்ச் சிரிப்பு' என்றது. அப்படிச் சிரிக்கலாமே என்று உணர்வு உந்தியது. சிரித்தான். உரக்க, எவ்வளவு குரல் உயர்த்திச் சிரிக்க முடியுமோ அவ்வளவு பலமாகச் சிரித்தான். அவனுக்கு ரொம்ப திருப்தி. நடந்தான்.

முன்னே, ஒரு வளைவில், மரம் வெட்டிக் கொண்டிருந்த ஒருவன் கைக் கோடரியை கீழே போட்டுவிட்டு, பயந்தவனாய், தடத்தின் மத்தியில் வந்து நின்று அண்ணாந்து பரக்கப் பரக்கப் பார்த்தபடி காணப்பட்டான். அப்படி ஆள் எவனாவது அங்கே இருக்கக்கூடும் என்ற எண்ணமே சுயம்புக்கு எழுந்ததில்லை. அந்த நினைப்பு எழுந்திருக்குமானால் அவன் அவ்வாறு சிரித்திருக்க மாட்டான்.

சுயம்பு அருகே வந்ததும். அந்த மனிதன், 'ஐயா, செத்த முந்தி இங்கே ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டுதே?' என்று இழுக்கவும், 'ஆமா, நான்தான் சிரித்தேன்' என்றான் இவன்.

'நீங்களா சிரிச்சீங்க? நல்லாச் சிரிச்சீங்க போங்க. பேய் அலறின மாதிரி! நான் பயந்தே போனேன். சின்னப் புள்ளெக ஏதாவது அதைக் கேட்டிருந்தால் வெருவிச் செத்திருக்கும்!' என்றான் மரம் வெட்டி.

மவுனச் சிர்ப்பை முகத்தில் நெளிய விட்டபடி நடந்தான் சுயம்பு. தனது சிரிப்புப்பயிற்சி பெரும்வெற்றி பெற்றுவிட்ட ஆனந்தம் அவன் உள்ளத்தில் குமிழ்த்துக் கும்மாளி போட்டது.

இப்போது சுயம்பு தனிரகச் சிரிப்பு ஒன்றைச் சிதறி வைத்தான்.

— இப்படி எல்லாம் செய்தால் பைத்தியம், கிறுக்கன், லூஸ் என்றுதான் எண்ணுவார்கள்.

ஸர்த்தான்! எண்ணிட்டுப் போறாங்க. அதுனாலே நமக்கென்ன? நமக்காகத்தான் நாமே தவிர, மற்றவங்களுக்காக நாம் அல்ல. வீ ஆர் எபவ் ஆல் தீஸ் திங்ஸ்!

சிலபேர் தங்கள் குண இயல்புகளினால், உணர்வுச் சிறப்புகளினால், அறிவு ஆற்றல்களினால், மற்றவர்களைவிட மேம்பட்டவர்கள். சராசரி மனிதர்களின் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள் வகையரா தங்களை பாதிக்கா—பாதிக்கக் கூடாது—என்பது அவர்களது கருத்து. அத்தகைய 'அதிமனிதர்'களில் அவனும் ஒருவன் என்பது சுயம்புலிங்க நினைப்பு.

ஆகவே, பிறரது விருப்பு வெறுப்புகள், அபிப்ராயங்கள், சம்பிரதாயங்களை எல்லாம் தான் மதிக்க வேண்டியதில்லை என்றே அவன் நம்பினான். அப்படி மதிக்காமல், தன் மனம் போன போக்கில், உணர்ச்சிகள் உந்தும் வழியில், தான் வாழ ஊர், சமூகம், மனித இனம் தன்னை அனுமதிப்பது இல்லையே—ஏகப்பட்ட வேலிகளை பார்வைக்குப் புலனாகா வகையில் அமைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறதே—என்ற குறை அவனுக்கு என்றும் உண்டு.

—பின்னே என்ன? கவர்ச்சியான ஒரு பொருளை பார்க்கிறேன். அது எனக்குத் தேவை என்று ஆசை தூண்டுகிறது. அதை நான் என் இஷ்டத்துக்கு எடுத்துக்கொள்ள முடிகிறதா?... எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்கிறேன் நான். அழகான குழந்தையை பார்க்கிறவர்கள் அதன் கன்னத்தைக் கிள்ளுகிறார்கள்; தட்டுகிறார்கள். ஆசையோடு எடுத்துக் கொஞ்சுகிறார்கள். அதேமாதிரி, அழகான, இனிமையான, பெண் எதிர்ப்படுகிறபோது அருகாமையில் நிற்கிறபோது—பஸ் பயணம், ரயில் யாத்திரைகளில் மிகமிக நெருங்கி வர நேரிடுகிற போது — அவளது பட்டுக் கன்னத்தைத் தடவ, மூக்கைப் பிடித்து ஆட்ட, எழில் நிறை காதுகளை சொல்லமாய் கிள்ள, இப்படிச் சிறு குறும்புகள் பலப்பல செய்ய வேணும் என்று உளம் குறுகுறுக்கிறது. உணர்ச்சி உந்துகிறது. செய்ய முடிகிறதா நம்மாலே? அந்த எண்ணம் எழுந்ததும், அவ்வாறே செய்ய வேண்டும், செய்யும் உரிமை நமக்கு வேணும் என்றுதான் நான் சொல்கிறேன்.......

சுயம்புலிங்கம் தனது எண்ணங்களை, கொள்கையை, தன் நண்பர்கள் ஒன்றிருவரிடம் எடுத்துச் சொன்னபோது, அவர்களும் தலையாட்டினார்கள். இவ்வித நினைப்புகளும் உணர்ச்சி உந்தல்களும் மனிதருக்கு எழுவது இயல்புதான் என்றும், ஆயினும் வாழ்க்கை முறைகளும் சமூக அமைப்பும் ஒழுக்க நெறிகளும் பிறவும் அவை சுதந்திரமாக மலர்ந்து விளங்குவதற்கு வகை செய்வதில்லை, என்றும் ஒப்புக் கொண்டார்கள்.

'சோதனை ரீதியாக நாம் இவற்றை செயலாற்றிப் பார்த்தால் என்ன?' என்று கேட்டான் சுயம்பு.

'நமக்கு எதுக்குடே வீண்வம்பு!' என்றான் ஒருவன்.

'நல்ல ஐடியாதான் பிரதர். ஆனால் நடைமுறைக்கு சரிப்பட்டு வராது' என்றான் இன்னொருவன்.

'என்னைக்காவது ஒருநாள் நானும் எக்ஸ்பெரிமெண்ட் பண்ணலாம்னுதான் இருக்கேன். ஆனால் இப்ப சரிப்படாது' என்று சொல்லிவிட்டான் வேறொருவன்.

'முதுகெலும்பில்லாத பயலுக!' என்று முடிவுகட்டினான் சுயம்பு.

—நாம் ஒருநாளாவது நம் உணர்ச்சி உந்துதல்களின் படி வாழ்ந்து பார்த்துவிட வேண்டியதுதான்.

அதற்கு 'நல்லநாள்' என்று 'குஷியான மூட்' பெற்றிருந்த இன்றைய தினத்தை அவன் மனம் சிபாரிசு செய்தது.

ஹ்விட்...ஹ்விட்டோ ஹ்வீட் என்று அது சீட்டி அடித்துக் குதூகலித்தது.

சுயம்புலிங்கம் உற்சாகமாக வெளியே வந்தான்.

தெருவில் ஒரு நாய் ஓடிவந்தது. அவனை ஏறிட்டுப் பார்த்தது. நின்றது. மோந்து பார்த்துவிட்டு, சுவர்ஓரமாகப் போய் நின்று, ஒரு காலை உயர்த்தியது. சுவரின் அந்தப்பகுதி நனைந்தது. அவனை அலட்சியமாக நோக்குவது போல கண்ணை ஏவியபடி அது நகரலாயிற்று.

—சவத்துப்பய நாய் மேலே கல்லை வீசணும்.

சுயம்பு உடனே குனிந்து, பெரும் கல் ஒன்றை எடுத்து நாய்மீது விட்டெறிந்தான். கல்லெறியப்பட்ட நாய் காள்—காள் என்று கத்தியவாறு, ஒரு காலை நொண்டிக் கொண்டு ஓடலாயிற்று.

அவன் அதற்கு எதிர் திசையில் நடந்தான்.

ஒரு வீட்டின் முன்னால் அடுக்கு அரளி கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்கி நின்றது. செம்பருத்திப் பூக்கள் சிவப்பாய் சிரித்து மிளிர்ந்தன.

—அரளிப் பூக்கள். அடுக்கரளி ரோஜப்பூ மாதிரியே இருக்கு. பறிச்சால் என்ன?

அருகில் சென்று, கைநீட்டி, செடியை வளைத்து இழுத்துப் பறித்தான்.

'ஏய் யாரது அங்கே செடியை முறிக்கிறது?' என்று ஒரு உரிமைக் குரல் வீட்டினுள்ளிருந்து உறுமியது.

—பதில் சொல்லத் தேவை இல்லை.

அவன் பாட்டுக்கு நடந்தான்.

'தெருவோடு போறவனுக்கு சும்மா போக முடியலியோ? குரங்குத்தனம் பண்ணிக்கிட்டேதான் போகணுமோ?' உறுமிய குரல் வெளியே வந்து, அவனுக்குப் பின்னால், வாசலில் இருந்து கத்தியது.

திரும்பிப் பாராமலே நடந்த சுயம்பு பூவைக் கசக்கி வழியில் தூவினான்.

—குரங்காமில்லே குரங்கு !

அங்கே ஒரு கன்றுக்குட்டி சோம்பலாக நின்றது.

'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாதடி பாப்பா!' என்று பாடியவாறு, சுயம்பு அதன் வாலை முறுக்கினான்.

கன்றுக்குட்டி மெதுநடை போட்டு விலகி நகர்ந்தது.

'கன்றுக்குட்டி துள்ளி ஓடும், ரெண்டாம் கிளாசில் நான் படித்த பாடம். கண்ணன் தின்னும் பண்டம் வெண் ணெய். அண்ணன் என்று இங்கு வருவார்?...'

பாடப் புத்தகத்தில் எந்தக் காலத்திலோ படித்ததை இப்போது பள்ளிப் பையனின் நீட்டல் ராகத்தோடு உச்சரித்த படி நடந்தான்.

தெருவோடு போன ஒரு சிறுவன் வேடிக்கையாகப் பார்த்தான். சிரித்தான். கூச்சலிட்டான்—

'காசிக் போனார்
எங்கே போனார்?
கடைக்குப் போனார்.
என்ன வாங்க?
டீ வாங்க
என்ன டீ?
பொண்டாட்டீ!'

என்று 'டீ'யில் விசேஷமான அழுத்தமும் நீட்டலும் சேர்த்து முழக்கினான்.

அவனை முதுகில் தட்டிக் கொடுக்க வேண்டும் என்று சுயம்புவுக்குத் தோன்றியது. 'டே இங்கே வாடா!' என்று கூப்பிட்டான்,

பையனோ 'ஏ பீ ஸி டி — எங்கப்பன் தாடி! ஓ பீ ஸி டி— ஒங்கப்பன் தாடி!' என்று கூவிக்கொண்டு ஓடிவிட்டான்.

—பிசாசுப்பயல் மகன்! எமப்பயல்புள்ளே. உணர்ச்சிகள் உந்துகிறபடி வாழ்கிற பையன்.

சுயம்புவின் ஜாலி அதிகரித்தது. முகத்தில் சிரிப்பு விளையாட நடந்து கொண்டிருந்தான்.

ஒரு இடத்தில் பெண் ஒருத்தி நின்றாள். 'நாட்டுக் கட்டை'. கவர்ச்சி நிறைந்த தோற்றம். அவளுடைய கண்கள் மிக அழகாக இருப்பதாக அவனுக்குப்பட்டது. ரசிக்கப்பட வேண்டிய முகம் உடைய அவளைப் பார்த்து, ரசனையின் சான்றிதழாக ஒரு சிரிப்பு வழங்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. எண்ணம் எழுந்தால் உடனே செயலாற்ற வேண்டியதுதானே! சிரித்தான். நன்றாக அவளைநோக்கி, அவளுக்காக, அவளது வசீகர வனப்புக்காக, ரசிகச் சிரிப்பை உதிர்த்தான்.

'மூஞ்சியைப் பாரு! குரங்கு! பீடை, பாடை, சவம். தரித்திரம். முழிச்சுக்கிட்டு இளிக்கதைப் பாரேன்' என்று முணமுணத்தாள் அவள்.

சுயம்புவின் காதிலும் அது விழத்தான் செய்தது. இன்னொன்றும் விழுந்தது.

'ஏ குட்டி அம்மே! ஏளா ஏ குட்டி!' என்று நீண்ட குரலெடுத்துக் கூப்பிட்டாள் ஒரு முதியவள். அதைத் தொடர்ந்து அவளே வந்துவிட்டாள். 'இங்கேயா நிக்கிறே?' என்று கேட்டாள்.

சுயம்புவின் உள்ளம் உந்தியது. அவன் வாய் பாடியது. என்றோ கேட்ட பழம்பாட்டு.

'குட்டி அம்மெ நாத்தினா
சில்லறையை மாத்தினா!
பொட்டி வண்டி கட்டிக்கிட்டு
பட்டணம் பாக்கப் புறப்பட்டா!'

குட்டி அம்மை என்று அழைக்கப்பட்டவள், அவன் பக்கம் முறைத்தபடி 'தூ' என்று காறித் துப்பினாள். 'இங்கே துடைப்பக்கட்டை எதையும் காணோமே?' என்றாள்.

'சீ தூமையைக் குடிக்கி! விளக்குமாத்தை எடுத்து, சாணியக் கரைச்சு ஊத்தி, சரியானபடி பூசைக்காப்பு கொடுக்கணும். கொழுப்பு மிஞ்சிப் போச்சோடா கழுதை?' என்று கூப்பாடு போட்டாள் பெரியவள்.

அங்கே நின்றால் ஆபத்து என்று உள்ளுணர்வு உணர்த்தவும், பிள்ளையாண்டான் வேகமாக நடையைக் கட்டினான்.

எங்கெங்கோ சுற்றிவிட்டு சுயம்புலிங்கம் ஒரு தெரு முனைக்கு வந்தான். ஆள் நடமாட்டம் சுமாராக இருந்த இடம். எதிரே வந்து கொண்டிருந்த ஒரு பெண்— 'ஸ்டைல் மிஸ்ஸி' என்றது அவன் மனம் — சைக்கிளுக்கும் கட்டை வண்டிக்கும் விலகி ஓரமாக நடந்ததனால், அவனை இடிப்பதுபோல் வந்தாள்.

— 'இடி ராஜா'க்கள் இருப்பது போல, 'இடி ராணி' களும் இருக்கிறார்கள் நாகரிக நகரங்களிலே!

மையுண்ட அகல் விழிகள் அவன் முகத்தில் மொய்த்துச் சுழன்றன. அவள் சிரித்தாளோ இல்லையோ என ஐயுறச் செய்யும் ரேகை ஒன்று அவளது உதடுகளில் ஊர்ந்தது.

பையன் கிறங்கிப் போனான். தன்னுடைய முக காந்தியில் சொக்கிப்போய்த் தான் அந்த சுந்தரி இந்த வேலை பண்ணுகிறாள் என்று நினைத்தான். அவளுடைய கையைப்

பிடித்து, கன்னத்தை லேசாகத் தட்டி, 'ஓ, ப்யூட்டிஃபுல்!' என்று செல்லமாய் குழறினான்.

'காலி ராஸ்கல்!' என்று கத்தினாள் அவள். பளார் என அறை விழுந்தது அவன் கன்னத்தில். அதிர்ச்சியினால் நிலை குலைந்து, தன் கன்னத்தைத் தடவ அவன் கை மீட்டுக் கொண்டபோது, அவள் குனிந்து, ஒரு கால் செருப்பைக் கழற்றிப் பிடித்து நிமிர்ந்தாள். 'ஓகோ, அவ்வளவு திமிரா!' என்று கூச்சலிட்டாள்.

அவள் அழகும் அலங்காரமும் வழியோடு போவோரைக் கவர்ந்தன என்றால், அவளது செயலும் பேச்சும் அந்தப் பக்கம் போவோர், சுற்றுப்புறத்தில் இருந்தோர் அனைவரையும் சுண்டி இழுத்தன.

நகரத் தெருவில் இப்படி ஒரு காட்சி கிட்டுகிறபோது விரைவில் கூட்டம் கூடுவதற்குக் கேட்க வேண்டுமா?

'கொடுங்கம்மா ஒண்ணு!' 'சூடாக் கொடுங்க!' 'இந்த மாதிரிப் பயலுகளுக்கெல்லாம் சரியானபடி பாடம் கத்துக் கொடுக்க வேண்டியதுதான்!'

உற்சாகமாகக் கத்தும்படி அவரவர் உணர்வு தூண்டவும், பலரும் பலவாறு பேச்சு உதிர்த்தனர். ஒருவனது உணர்ச்சி செயலில் புகும்படி உந்தவும், அவன் சுயம்புவின் மூஞ்சியில் ஓங்கி அறைந்தான். அதைத் தொடர்ந்து சாடின பற்பல கரங்கள். சம்பந்தப்பட்டவர் படாதவர், போனவர் வந்தவர் எல்லோரும் சடபடவென அவன் முதுகில், முகத்தில், மார்பில், தலையில், கைக்கு வசமாக எட்டிய இடமெல்லாம் சூடாக அறைந்தனர். 'அய்யா, சாமி, அப்பா, சாமி! செத்தேன்!' என்று ஓலமிட்டான் அப்பாவி சுயம்பு.

இந்தத் திருப்பணிக்குத் துவக்க விழா செய்து வைத்த அம்மணிக்கே 'ஐயோ பாவம்' என்று மனம் கசிந்து விட்டது. கண்களில் நீர் மல்குவது போல் தோன்றியது.

'இவனை இப்படியே விட்டுடப்படாது. போலீசிலே ஒப்படைக்கணும். அப்பதான் இவன் மாதிரி வீணன்களுக் கெல்லாம் எச்சரிக்கையாக இருக்கும்' என்று வழிகாட்ட முன்வந்தார் ஒரு பெரியவர்.

'பாவம் விட்டுடுங்க. என்னமோ செய்து போட்டான். அதுக்குத்தான் சரியான தண்டனை கிடைச்சுப் போச்சே!' என்று அருள் கூர்ந்தாள் நாகரிக அம்மை.

'ஏய், அவங்க சொல்றதுக்காக உன்னை இப்போ சும்மா விடுறோம். இனிமேல் இது மாதிரி வாலாட்டினே, ஆளு அடையாளம் தெரியாதபடி துவையல் பண்ணிப் போடு வோம். ஆமா ஜாக்கிரதை!' என்று சொல்லி, 'இந்தா இதை நினைவு வச்சுக்கோ' என்று ஒரு கும்குத்து கொடுத் தார் ஒருவர்.

அதைத் தொடர்ந்து 'கொசுறு' ஆகச் சில அடிகள் அவனுக்கு வழங்கப்பட்டன.

'இங்கே நில்லாதே போ!' என்று ஒரு கை அவன் கழுத்தைப் பிடித்து பலமாக நெட்டித் தள்ளியது.

முன்னே போய் தள்ளாடி விழுந்திருக்க வேண்டியவன் தான். எப்படியோ சமாளித்துக் கொண்டு நடந்தான் சுயம்பு.

'என் உணர்ச்சி தூண்டுகிறபடி செயல்புரிய எனக்கு உரிமை இருக்குமானால், மற்றவர்களுக்கும் அவரவர் உணர்ச்சித் துடிப்பின்படி செயல்புரியும் சுதந்திரம் இருக்கும்

தானே? அப்போது ஏற்படக் கூடிய விளைவுகள்...' என்று அவன் சிந்தனைத் தறியில் அறிவு வேலை செய்யத் தொடங்கியிருந்ததோ என்னவோ! தலைகுனிந்தவாறே நடந்து கொண்டிருந்தான் சுயம்புலிங்கம்.

□

'சிவாஜி' ஜனவரி 1972

புதிதாய்ப் பிறந்தவர்

கும்பலும் கூச்சலும் அந்தத் தெருவைத் தாண்டி மூலை திரும்பிவிட்டதை தேய்ந்து மெலிந்து வந்த ஒலிகள் உணர்த்தின. என்றாலும் பால்வண்ணம் பிள்ளை கல்லுப்பிள்ளை யார் மாதிரி தன் வீட்டு திண்ணையில் குறுகுறு என்று உட்கார்ந்தார். அவர் மனசே இடிந்து போய்விட்டது போலிருந்தது.

சற்று நேரத்திற்கு முன்பு அந்த வீட்டின் முன்னே நடத்தப்பட்டிருந்த கூத்து அவரை அதிரடித்துவிட்டது. அவ்வூர்க்காரர்களிடமிருந்து அப்படி ஒரு தாக்குதலை அவர் ஒரு நாளும் எதிர்பார்த்ததில்லை.

தன்னைப் பற்றிப் பலரும் கேலி பேசுவதும், கேவலமாகக் கருதுவதும் குறை கூறித் திரிவதும் பால்வண்ணம் பிள்ளைக்கு வெகுகாலமாகவே தெரிந்துதான் இருந்தது. ஆயினும் இப்படி நடக்கக் கூடும் — தனது ஊர்க்காரர்களே இவ்விதம் நடந்துகொள்வார்கள்—என்று அவர் கனவிலும் எண்ணியவரல்லர்.

அந்த ஊரில் மழை பெய்யவில்லை. ரொம்ப நாட்களாகவே பெய்யவில்லை. மழை உரிய காலத்தில் வந்துவிடும் என்று நம்பி, எதிர்பார்த்து ஊரர்கள் விவசாய அலுவல்களை ஒழுங்காகச் செய்து முடித்திருந்தார்கள்.

பயிர்த் தொழிலை நம்பி வாழும் மக்கள் நிறைந்த ஊர்களில் அதுவும் ஒன்று. ஊரைச் சுற்றிலும் வயல்கள் நெடுகிலும் நெல் பயிர் பசுமைக் காடாக வளர்ந்து நின்றது. ஆனால் தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. குளத்திலும் கால்வாய்களிலும் நீர் இல்லை, மழைபெய்வதாக இல்லை. மக்கள் வறண்டு கிடந்த வானத்தைப் பார்த்து பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தார்கள்,

மழை கட்டாயம் வேண்டும். மழை பெய்யாவிடில், பச்சைக் கடலாய் காற்றோட்டத்துக்கு ஏற்ப அலை மோதிக் கொண்டு குளுகுளு இனிமையாய் பரந்து காட்சி தரும் பயிர் பூராவும் கருகிவிடும். இப்போதுகூட வயல்களில் மண் நன்கு காய்ந்து, வெடிப்புகள் விழுந்து தோன்றின. வறட்சி வேரைத் தீய்த்து பயிரைச் சுருக்கிவிடும்.

அந்நிலையை நினைக்கவே ஊர் மக்களின் மனம் பதைபதைத்தது. சென்ற வருடமும் இதே நிலைமைதான் ஏற்பட்டிருந்தது. ''தீ சாவி'' அறுக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. பாடுபட்டு, விதையைக் கொட்டி, பணத்தை முடக்கி, பயிரிட்டுப் பலனை எதிர்பார்த்திருந்தவர்களின் நெஞ்சும் வயிறும் கொதிக்காமல் என்ன செய்யும்?

—இந்த வருஷமும் அதே கதிதானா? அட கடவுளே, உனக்கு ஈவு இரக்கம் கிடையாதா?

பாடுபட்டவர்கள் உள்ளம் குமைந்தார்கள்.

—ஊரிலே பாவிகள் பெருத்துப் போனார்கள். பாவம் பெருகிப் போச்சு அப்படி இருக்கையிலே மழை எப்படிப் பெய்யும்?

சுற்றிலும் அங்கும் இங்குமாக மழை பெய்தது. தேவை இல்லாத கட்டாந் தரைகளிலும், முள் மரங்கள் மண்டிய

இடங்களிலும் பெய்தது. தூரத்து ஊர்களில் பெய்தது. பக்கத்து கிராமங்களிலும் பெய்தது. நீருக்கு ஏங்கி வான்முகம் நோக்கி நிற்கும் பசும் பயிர்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்துள்ள அந்த ஊரில் மழை பெய்வேனா என்று அடம் சாதித்தது!

—அதுதான் சொல்லுகிறேனே! அக்கிரமக்காரர்கள் பெருத்த ஊரு இது. அநியாக்காரப் பாவிகள் கவலையற்று சீவித்துக் கொண்டிருக்கின்ற ஊரு இது. மனிதர்கள் செய்கிற அட்டூழியங்கள் மானத்துக்கே பொறுக்கல்லே? அதனாலேதான் மழை கீழே விழுறதுக்கு அஞ்சி நடுங்குது...

வாய் உள்ளவர்கள் வல்லதும் பேசினார்கள் அந்த ஊரிலே. அவர்கள் குறை கூறிக் குறிப்பிட்டவர்களில் பால் வண்ணம் பிள்ளை பேரும் இருந்தது.

சந்தியிலும், பிள்ளையார் கோயிலிலும் குளத்தங்கரை அரசமரத்தடியிலும் பேசப் பெற்ற பேச்சுகளில் சில அவ்வப்போது ''ஊசு ஆசு'' என்று பால்வண்ணம் பிள்ளை காதுகளிலும் விழுந்து கொண்டுதான் இருந்தது.

அப்போதெல்லாம் அவர் மனம் குலைந்ததில்லை. ''வீணப் பயலுவ. இந்த ஊர்க்காரனுகளுக்கு வேறே பொழைப்பு கிடையாது. யாரையாவது பற்றி வம்பு பேசுவதுதான் இவங்க வேலை'' என்று அவர் அலட்சியப்படுத்தி விட்டார்.

ஆனால் இப்போதோ?

மழை பெய்ய வேண்டும் என்று ஏங்கியவர்கள் ''கொடும் பாவி'' கட்டி இழுக்க முற்பட்டார்கள். கொடும்பாவி உருவம் செய்து, தெருத்தெருவாக இழுத்து வந்து நெடுகிலும் ஒப்பாரி வைத்து ஓலமிட்டு அழுது புலம்பி, முடிவில் ஊருக்கு

வெளியே ஓரிடத்தில் அதற்குக் குடம் உடைத்து, கொள்ளி வைத்து அதைத் தீயிட்டுப் பொசுக்கினால் மழை பெய்யும் என்பது மக்களின் நம்பிக்கை.

அதைச் செய்வதில் உற்சாகமாகப் பலரும் ஈடுபட்டார்கள்.

''கொடும்பாவி'' கட்டி இழுப்பதனால் மழை பெய்யுமோ பெய்யாதோ, தங்களுக்கு வேண்டாதவர்களை—தாங்கள் வெறுக்கிறவர்களை—வசை பாடவும் ஏசி ஒப்பாரி வைக்கவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது மக்களில் சிலரது வழக்கமாக வளர்ந்துள்ளது.

அந்த ஊர்க்காரர்களும் அவ்வாறே செய்தார்கள். அவர்கள் "கொடும்பாவிகள்" எனக் கருதிய அநியாயக்காரர்கள் வீட்டின் முன்னே கொடும்பாவி உருவைக் கிடத்தி, ஏச வேண்டியதை எல்லாம் ஏசிப் பாடியும் ஒப்பாரியாகப் புலம்பியும், மார் அடித்தும் தங்கள் மனப்புகைச்சலைத் தணித்துக் கொண்டார்கள். ஒரு படி அரிசிக்கு மூன்று ரூபாய், மூன்றே கால் ரூபாய் என்று விலை கூறி விற்ற சில பொம்பளைகள் வீடுகளின் முன்னே—கொள்ளை வட்டி கூறிப் பணம் கடன் கொடுத்து சுலபத்தில் பணக்காரர்கள் ஆகிவிட்ட சிலர் வீட்டின் முன்னால்-தன்னை நம்பிய சிலரை வஞ்சித்து அவர்கள் சொத்தைத் தம் சொத்தாக ஆக்கிக்கொண்ட ஒன்றிரண்டு பெரிய தனக்காரர்கள் வீட்டு முன்புறம் எல்லாம் இந்தத் தெருக் கூத்தை ரொம்பவும் உற்சாகத்தோடு ஆடிக் களித்தார்கள் அவர்கள்.

பால்வண்ணம் பிள்ளையும் அத்தகைய ''விசேஷ மரியாதைக்கு''க்கு இலக்கானார்.

அவருடைய கஞ்சத்தனமும், இரக்கமற்ற தன்மையும், பிறருக்கு உதவ மனமில்லாத சுபாவமும், அநியாய வட்

டிக்குக் கடன் கொடுத்து பணம் திரட்டும் போக்கும், உறவுக் கார மைனர்ப் பையன் ஒருவன் ''தலையைத் தடவி'' தனது சொத்துக்களைப் பெருக்கிக் கொண்ட லீலையும் பிறவும் வசைபாடப்பட்டன. பலரும் மாரடித்து, ஒப்பாரி வைத்து சங்கு ஊதி ஆரவாரித்தார்கள். சிலர் காறித் துப்பினர். பழம் பானைகளை அவர் வீட்டுவாசலில் போட்டு உடைத் தார்கள். செங்கல் கட்டிகளை ''வெடலை''யாக வீசி, வாசலைப் பாழ் படுத்தினார்கள்.

''சண்டாளப் பாவி, கொடும்பாவி! நீ இருக்கிற ஊரிலே மழை எப்படிப் பெய்யும்?'' என்று கூவிவிட்டு நகர்ந்தார் கள்.

இத்தனை அமர்க்களமும் பால்வண்ணம் பிள்ளை கண் முன்னாலேயே நடைபெற்று முடிந்தது. அவர் என்ன செய்ய முடியும்? திண்ணையில் ஓய்வாகப் படுத்திருந்தார். திமுதிமுவென்று அநேகர் வாசலுக்கு வருவதைக் கண்டு எழுந்து உட்கார்ந்தார்.

அவர்கள் வந்தார்கள். ஆடித் தீர்த்தார்கள், இவ்வளவு அவமானப்படுத்தியது போதாதென்று ''படி அரிசி போடுங்க! கொடும்பாவி கொளுத்துறோம், பணம் கொடுங்க!'' என்று அவரிடமே கேட்டார்கள்.

அவருக்கு வாயும் வழங்கவில்லை; கையும் ஓடவில்லை. செயலற்று, திக்பிரமை பிடித்தவராய் அமர்ந்திருந்தார்.

''அரிசிக்கும் பணத்துக்கும், போயும் போயும் நல்ல ஆளைப் பார்த்துக் கேட்டீரே! எச்சிற் கையால் காக்கா விரட் டாத கர்ண மகாபிரபு ஆச்சே இவரு. பிச்சைக்காரனைத் தூரத்திலே கண்டாலே, ஏசி விரட்டுகிற புண்ணியவான் இல்லையா; இவரு!'' என்று ஒருவன் அடுக்கினான்.

மற்றவர்கள் எல்லோரும் ''லோ — லோ — லோ'' என்று கேலியாக வாயினால் குலவையிட்டார்கள். சங்கு வைத்திருந்தவன் உற்சாகமாக ஊதி முழங்கினான்.

கும்பல் அங்கிருந்து நகர்ந்து சென்றது. பால்வண்ணம் பிள்ளை அதே இடத்தில் அமர்ந்தவர்தான். ஆடவில்லை. அசையவில்லை.

அது நிகழ்ந்தது பிற்பகல் மூன்று மணி, அவருக்கு கால உணர்வும் இல்லை, காரிய உணர்வும் இல்லை.

பால்வண்ணம் பிள்ளைக்கு பிள்ளை குட்டி கிடையாது. அவர் மனைவி இறந்து பல வருஷங்கள் ஆகியிருந்தன. அவர் தனி நபராகத்தான் வாழ்க்கை நடத்தினார். வயசும் ஐம்பதைத் தாண்டிவிட்டது. எனினும் ''கல்லுப்போல்'' இருந்தார்.

அவர் சிறு வயதில் ரொம்பவும் கஷ்டப்பட்டவர். வறுமை அவரை வாட்டி வதைத்தது. அந்நாட்களில் அவருக்குக் காலணாவைக் காண்பதே பெரும் பாடாக இருந்தது. எத்தனையோ நாட்கள் பட்டினி கிடக்க நேரிட்டதுண்டு. இதனால் எல்லாம் காசாசை பூதமாய் வளர்ந்தது. ஏதேதோ வேலைகள் பார்த்து சிறிதுசிறிதாகப் பணம் சேர்த்து சொந்தமாக ஒரு கடை வைத்து சம்பாதிக்கத் தொடங்கினார்; சம்பாதிக்க வேண்டும். நிறைய நிறையப் பணம் பண்ண வேணும். சொத்து சேர்க்கணும் — இதுவே அவருடைய இதயத் துடிப்பாய், மூச்சுக் காற்றாய், வாழ்க்கை லட்சியமாய் அவரை இயக்கியது. பணத்தை வட்டிக்குவிட்டு வசூலித்து மேலும் கடன்கொடுத்து வாங்குவதன் மூலம் எளிதில் பணம் சேர்த்து விடலாம் என்ற வித்தையைக் அவர் கற்றுக் கொண்டார். ஒரு ஆவேசத்துடன் அதில் ஈடுபட்டார்.

அவருக்குக் கல்யாணம் ஆயிற்று. மனைவி கொஞ்சம் பணம் கொண்டு வந்தாள். அதையும் வட்டிக்குக் கொடுத்தும் பெருக்குவதில் அவர் ஆர்வம் கொண்டார்.

பணம் சேரச் சேர, வீடு தோட்டம் வயல் என்று வாங்கிச் சேர்த்தார். பணத்தாசை வலியதாகி அவரை ஊக்கிக் கொண்டே இருந்தது. செலவு செய்ய அவருக்கு மனம் வராது. வீட்டில்கூட நல்ல சாப்பாடு, நல்ல துணிமணி, பண்டபாத்திரங்கள் என்று செலவிடத் துணிந்ததில்லை அவர். பணம்—பணத்துக்கு மேல் பணம்—சொத்து சேர்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆசை வெறியாக வளர்ந்து அவரைப் படாதபாடு படுத்தியது. அதனால் அவர் மனைவியைக் கொடுமைப்படுத்தினார்.

அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. அதுவும் நல்லதுக்கு என்று அவர் நினைத்தார்.

அண்டை அயலாருக்கு அவர் உதவ விரும்பியதில்லை. உறவினர் வீட்டு விசேஷங்களில் கலந்து கொண்டு "மொய்" என்றும் "அன்பளிப்பு" என்றும் செலவு செய்ய மனம் கொண்டதில்லை. ஊர்ப் பொதுக் காரியங்கள், கோவில் விழாக்கள் முதலியவைகளில் பங்கு பற்றிப் பணம் தர முன் வந்ததில்லை. ஏழை எளியவர், கஷ்டப்படுகிறவர், நெருக்கடி சமயம் உதவுங்கள் என்று வருகிறவர்கள் யாருக்குமே அவர் பண உதவி செய்ததில்லை.

பணம் சேர்க்க வேண்டும் என்ற ஒரே ஆசைதான் அவருக்கு இருந்தது. எப்படி எப்படியோ பணமும் சொத்தும் சேர்த்தார்.

மனைவி செத்தாள். கடையை அவர் லாபத்திற்கு விற்றார். வீட்டோடு இருந்து வட்டிக்கு விட்டும் நிலத்தை

எல்லாம் கட்டுக் குத்தகைக்கு விட்டும் பணம் சேர்த்துக் கொண்டுதான் இருந்தார்.

அதில் அவருக்கு தனி திருப்தி இருப்பதாகத்தான் தோன்றியது.

அந்த அடிப்படையைக் கொடும்பாவி நிகழ்ச்சி தகர்த் தெறிந்தது. அவர் நிலை குலைந்து போனார்.

எதுக்காக வாழ்வது? ஏன் இப்படி பணம் சேர்க்க வேண் டும்? நான் யாருக்காக இவ்வளவு பணத்தையும். சேர்க் கிறேன்... இன்னும் சேர்க்க ஆசைப்படுகிறேன்?

இவ்வாறு எண்ணப்புரி சுழன்று சுழன்று நெளிந்தது அவருள்.

— எல்லோருடைய வெறுப்புக்கும் பாத்திரமாகி... நல்லவன் என்று சொல்வதற்கு ஒருவரும் இல்லை. தன் னிடம் அன்பு காட்டுவதற்கு, யாருமே இல்லை...

இப்படி எண்ணி எண்ணிக் கசந்தது மனம். அங்கு புழுக்கம் ஏற்பட்டது. இக்கழிவிரக்கம் அவர் கண்களில் நீர் பொங்க வைத்தது.

கண்ணீர் வடித்தபடி அவர் உட்கார்ந்திருந்தார். எவ் வளவு நேரம் போயிருக்கும் என்றே அவருக்குத் தெரியாது, என்ன செய்வது எனப் புரியாதவராய்—செய்வதற்கு எதுவுமே இல்லை என்றொரு வெறுமை உணர்வு கொண்டவராய்— அந்த ஏலாத் தன்மையும் தனிமையுமே விரக்திச் சுமையாய், வேதனைப் பளுவாய் அழுத்த, அவர் உட்கார்ந்திருந்தார்.

''என்ன அண்ணாச்சி இதெல்லாம்? ஏன் இப்படி குறு குறுன்னு உட்கார்ந்திட்டீக?'' என்ற குரல் அவரை உலுக்கி யது.

மூடிக் கொண்டிருந்த கண்களைத் திறந்து பார்த்தார் பிள்ளை. பிறவிப் பெருமாள் நின்று கொண்டிருந்தார்.

பால்வண்ணம் பிள்ளை ''வாருமையா'' என்று வரவேற்க வேண்டும்; ''உட்காருமேன்'' என உபசரிக்க வேணும் என்றெல்லாம் அவர் எதிர்பார்க்கவில்லை. தானாகவே பிள்ளையின் அருகில் அமர்ந்தார். நடந்திருந்த விஷயம் அவருக்கும் தெரியும். யாருக்குத் தெரியாது அந்த ஊரில்?

பிறவிப் பெருமாள் ஒரு அபூர்வமான மனிதர். அவருக்கு சொத்து, குடும்பம், பண வரவு என்று எதுவும் கிடையாது. ஆனால் எப்போதும் சந்தோஷமாகத்தான் தென்பட்டார். கலகலப்பாகப் பேசிப் பழகுவார்.

அவருடைய வாழ்க்கையைப் பற்றி விசாரிக்கிறவர்களிடம், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பார். ''சென்ற இடமெல்லாம் சிறப்பு'' என்பார். சந்தோஷங்களை அறுவடை பண்ணலாம்! "அன்பை கொட்டினால் எங்கும் அன்பே மலரும்'' என்ற தன்மையில் ஏதாவது சொல்லி வைப்பார்.

எனவே, ''ஆள் ஒரு மாதிரி'' "வேதாந்தப் பைத்தியம்" ''லூஸ்'' என்று அவரவர் இயல்புப்படி அவரை எடைபோடுவது மற்றவர் வழக்கம். அவரால் யாருக்கும் துன்பம் இல்லை. பிறருக்குத் தன்னால் இயன்ற உதவிகளை செய்யத் தயங்காதவர் அவர்.

''வே, பொன்னைக் கொடுக்க வேண்டாம்: பொருளை அள்ளிக் கொடுக்க வேண்டாம். மனுஷன் அன்பைத்தந்தால் போதும். அன்பு காட்டுவதிலே கஞ்சத்தனம் பண்ணுவதனாலேதான் மனிதர்களிடையே பகையும், பொறாமையும் போட்டியும் தலைதூக்கி வளருது. அன்பு அன்பையே விளை

விக்கும். அன்பு மலரும் உள்ளங்கள் எல்லோரும் இன்புற்று இருக்கவே விரும்பும். இருண்ட மனங்கள்தான் சுயநலத்தை பெரிதுபண்ணும்'' என்ற ரீதியில் பேசிக் கொண்டிருப்பார்.

பால்வண்ணம் பிள்ளைக்கு இப்போது அனுதாபமும் அன்பும் தேவை என்று உணர்ந்த பிறவிப்பெருமாள் தனது இயல்புப்படி பேசினார். பிள்ளையின் வேதனையைத் தன் பேச்சால் தணித்தார். அவருடைய மனசின் நிலைமை அறிந்து பக்குவமாய்ப் பேசினார்.

இருள் மண்டிய குகையாய்க் கிடந்த பால்வண்ணம் பிள்ளையின் உள்ளத்தில் பிறவிப் பெருமாளின் பேச்சு, ஒளி உதயம் புகுத்தியது. அவர் உணர்வுகளைத் தொட்டு புதிய சிலிர்ப்புகளை உண்டாக்கியது. ஊராரின் வெறுப்பைக்கூட அன்பான செயல்கள் மூலம் வென்றுவிட முடியும் என்ற தன்னம்பிக்கை அவருள் சுரக்கும்படி செய்தது.

ஊர் மக்களுக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவர் மனசுக்குப்பட்டது. கோயில் திருவிழா அன்று எல்லோருக்கும் சாப்பாடு வழங்கலாம் என நினைத்தார். தன் எண்ணத்தை சொன்னார்.

''தம்பியா பிள்ளே. நீரும் உடனிருந்து ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்கணும்'' என்று கேட்டுக் கொண்டார் பெரிய பிள்ளை.

''நீங்களே ஊர் பூராவுக்கும் கடவுள் தரிசனம் பண்ணி வைப்பது எனத் துணிகிறபோது, நான் என்னாலான உதவி செய்யாமல் இருப்பேனா!'' என்று சிரித்தார் பிறவிப் பெருமாள்.

பால்வண்ணம் பிள்ளை திகைப்புற்றார். 'என்ன ஐயா கேலி பண்ணுகிறீர்! நானாவது கடவுளைக் காட்டுகிறதாவது!'' என்றார்

"ஏழைகள், பசியோடு இருப்பவர்கள் முன்னே ஆண்டவன் சாதம் வடிவத்தில்தான் காட்சி அளிக்கிறான் என்று ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார். அதைச் சொன்னேன்" என்று மற்றவர் தெளிவுபடுத்தினார்.

பெரிய பிள்ளையும் ரசித்துச் சிரித்தார்.

மழை பெய்ய வேண்டும் என்று நேர்ந்து அம்மன் கோயிலில் திருமாலைப் பூசைக்கு ஏற்பாடாகியிருந்தது. ஊரில் வரி வசூலித்து, சிலர் முன்னின்று நடத்தினார்கள்.

அன்று ஊரார் அனைவருக்கும் பால்வண்ணம் பிள்ளை வயிறாறச் சோறு போடப் போகிறார் என்ற பேச்சு பிறந்து, வேகமாகப் பரவியது.

அதைக் கேட்டவர்கள் நம்பத் தயங்கினார்கள். உண்மை தான் என்று அறிந்ததும் ஆச்சரியப்பட்டார்கள்.

பூசை நாள் அன்று, மத்தியான வேளையில் வசதியான இடத்தில் இலை போட்டு சாதம் பரிமாறப்பட்டது. சிறியவர், பெரியவர் என்ற வித்தியாசமின்றி, தெரிந்தவர், தெரியாத வர் என்று பேதம் பாராமல், பசி என்று சாப்பிட வந்த அனை வருக்கும் அருமையான விருந்து படைக்கப்பட்டது. பால் வண்ணம் பிள்ளையே முன்னின்று, குறை எதுவும் நேராத வாறு கவனித்தார். "போதும், போதும்" என்று நிறை வுடன் கொடுத்தாலும் போதும் என்கிற திருப்தி மறுக்கிற வரை எல்லாம் திரும்பத் திரும்பப் பரிமாறப்பட்டன.

அனைவரும் வயிறு நிறைந்த திருப்தியோடு, முகமலர்ச்சி யோடு, பிள்ளை அவர்களை வணங்கிக் கும்பிட்டு விட்டுப் போனார்கள்.

"பார்த்தீர்களா? மனுஷனுக்கு எதைக் கொடுத்தாலும் போதும் என்கிற திருப்தியே ஏற்படாது. சாப்பாடு ஒண்ணிலே

தான், போதும் — போதும் இன்னமே வேண்டாம் என்று சொல்கிற மனநிலை ஏற்படுது. பசி தீர்கிற அந்த வேளைக் காவது ஏற்படுது பாருங்க. அதுதான் முக்கியம்'' என்று பிறவிப் பெருமாள் சொன்னார்.

''நீங்க சொல்றது உண்மை தம்பி'' என்றார் பெரியவர்.

ஊர் மக்கள் வெறுப்பைக் கொட்டியதனால் இடிந்து குமைந்து போயிருந்த வேளையில்—அன்பு வறுமை அவரை தீய்த்துப் பொசுக்கிய தருணத்தில்—பிறவிப் பெருமாள் அவர் உள்ளத்தில் தெளித்த அன்பும் அனுதாபமும் பால்வண்ணம் பிள்ளையை ஒரு புது மனிதராக ஆக்கிவிட்டது என்றே தோன்றியது. அவருடைய பழைய சிறுமைகள் எல்லாம், அதிசயிக் கத்தக்க விதத்தில், அன்று அவர் உளம் குமைந்து பெருக்கிய கண்ணீரால் கரைத்து ஒழிக்கப்பட்டு விட்டன போலும்.

அவர் அந்த ஊரில் ''குரு பூஜை'' என்று நிகழும் ஒரு விசேஷத்தின் போதும் ஊர் முழுவதற்கும் சாப்பாட்டு விருந்து படைத்தார். பிறகும், கோயில்களில்—சிவன் கோயில், பிள்ளை யார் கோயில், அம்மன் கோயில் என்று எந்தக் கோயிலிலும்— என்ன திருநாள் வந்தாலும் ஊர் மக்களுக்கு வகைக் கறியும் சோறும் ஆக்கிப் போட ஏற்பாடு செய்தார். இதற்கெல்லாம் பிறவிப் பெருமாளும் அவருக்குப் பக்க பலமாக இருந்தார்.

''அண்ணாச்சி, சேர்த்து வைப்பதிலே ஒரு இன்பம் கிடைக்குது. அதில் சந்தோஷம் கிடையாது. அதே மாதிரி, செலவு செய்வதிலும் ஒரு இன்பம் கிட்டு கிறது. இதிலிருந்தெல்லாம் மாறுபட்ட ஒரு இன்பமும் இருக்கு. மற்றவர்களுக்கு அன்போடு வழங்குகிறபோது நமக்கு உண்டாகிற இன்பம் இது. அதைப் பெறுகிறவர்களுக் கும் இன்பம் ஏற்படுது. அந்த இன்பம் அவர்களிடம் உண் டாக்குகிற சந்தோஷத்தைக் காண்கிறபோது நமக்கு ஏற்படக் கூடிய மகிழ்ச்சிகரமான இன்பம் இருக்கிறதே. ஆகா, ஆகா, அது தனிச் சிறப்பு உடையது அண்ணாச்சி!''

இப்படி பிறவிப் பெருமாள் பேசினார்.

ஈந்து உவக்கும் இன்பத்தை அனுபவத்தின் மூலம் கண்டு கொண்ட பால்வண்ணம் பிள்ளை ஆனந்தமாகத் தலையாட்டினார்.

பசி என்று வந்தவர்களுக்கு வயிறாறச் சோறு போட்டு அனுப்பும் அடையா நெடுங்கதவு உடைய அன்பகம் ஆக மறு மலர்ச்சி பெற்று விட்டது அவர் வீடு.

□

'சுதேசமித்திரன்' தீபாவளி மலர் 1973

அந்தரங்கமான ஒரு போட்டி

மூக்க பிள்ளைக்கு இன்னும் வயசு நூறு ஆகவில்லை. ஐந்து வருடங்கள் தாக்குப் பிடித்து விட்டார் என்றால், அந்த லட்சியத்தை அவர் எட்டிவிடுவார்.

மூக்க பிள்ளை நூறைத் தாண்டிவிடுவார் என்றுதான் ஆனந்தக்குறிச்சிக்காரர்கள் கருதினார்கள். அந்த ஊரிலேயே அவர்தான் மூத்தவர். பாலுப் பிள்ளை என்கிற பால் வண்ண நாத பிள்ளை அவருக்கு அடுத்தபடி தான். இவருக்கு தொண்ணூற்று நாலு முடிந்து விட்டது. மூக்க பிள்ளைக்கு தொண்ணூற்று அஞ்சு நிறைந்திருந்தது.

பார்க்கப்போனால், ஆனந்தக்குறிச்சி வாசிகள் அல்பாயுள் பேர்வழிகள் அல்ல. மண்ணில் அவர்களுக்குப் பிடிப்பு அதிகம். அவர்களுக்கே அலுத்துப்போய், 'சரி, போகலாமே!' என்று பட்டால் தான் சாவார்கள் போல் தோன்றியது. ஆண்களும் பெண்களும் நீண்ட வாழ்வு பெற்றவர்கள்.

அந்த ஊரில் சின்னஞ் சிறுசுகளைப் பார்க்க முடிவது அபூர்வமான காட்சி. அறுபதுக்கு மேற்பட்டவர்களை, எழுபதுகளையும் எண்பதுகளையும், நிறையவே காண முடியும், தெருவில் ஓடியாடித் திரியும் குழந்தைகள் — ஹூங். பேசப்படும்? அதுகளுக்கு அந்த ஊரில் வேலையே கிடையாது.

ஒவ்வொரு வீட்டைச் சேர்ந்த இளைய தலைமுறையி னரும் சென்னை, டில்லி, பம்பாய், கல்கத்தா என்று வேலை மீது போயிருந்தார்கள். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் அரேபியாவில் இருப்பதாகச் சொல்லிக் கொண் டார்கள். 'பெரிய வீடு' என்று பெயர்பெற்ற ஒரு இடத்தின் மகனும் மருமகளும் கல்யாணம் ஆன வருடமே அமெரிக்கா வுக்குப் பறந்துவிட்டார்கள். ஏதோ மேல் படிப்பு, ஆராய்ச்சி, என்றுதான். பையன் எம். ஈ. படித்திருந்தான். அவள் பி. எஸ்ஸி. அவனுக்கு அவளே 'பி. ஏ.' (P. A).

ஆனந்தக்குறிச்சியின் இளைய தலைமுறையினர் எல் லோருமே நிறையப் படித்தவர்கள். எங்கெங்கோ போய் நிறைய சம்பாத்தியம் பண்ணினார்கள். அந்த ஊர் தபாலா பீசில் தினசரி மணியார்டர்கள் வந்த வண்ணமாக இருக்கும். இருநூறு, முந்நூறு, ஐந்நூறு ரூபாய் என்று. ஊரோடு இருக்கிற பெரியவர்களுக்குத்தான்.

இப்போதையப் பெரியவர்களில் பலர்கூட வெளியூர்கள் எங்கெல்லாமோ போய் பணம் திரட்டியவர்கள்தான். ரங்கூன் போய்வந்து 'ரங்கூன் பிள்ளை' என்றாகிவிட்ட வரும், இலங்கையில் சம்பாதித்துவிட்டுத் திரும்பி 'கொழும்புப் பிள்ளை' என்று பெயர் பெற்றுவிட்டவரும், 'கல்கத்தாப் பிள்ளை' ஆனவரும் அங்கே இருந்தார்கள்.

இப்போது வெளியிடங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் போயிருக்கிறவர்கள் கூட அவர்களது அறுபதாவது வயசு வாக்கில் இந்த ஊருக்குத்தான் திரும்பி வருவார்கள். அது நிச்சயம். அந்தக் மண்ணின் பிடிப்பு அப்படி. எங்கே போனாலும், உலகத்தைச் சுற்றி வந்தாலும், ஆனந்தக்குறிச்சி வாசிகளுக்கு அந்த ஊரைப் போன்ற அருமையான இடம் வேறு எதுவும் இல்லை என்றுதான் தோன்றும். எங்கிருந்து எவ்வளவு சம்பாத்தியம் பண்ணினாலும் சரி, கல்யாணம் பண்ணிக் கொள்ளவும்,

கடைசி காலத்தில் அமைதியாக இருந்து சாகவும் அந்த ஊர்க்காரர்கள் அவர்களது சொந்த ஊருக்குத்தான் வந்து சேருவார்கள். அவ்வூரின் தலைமுறை தத்துவம் அப்படிப் பட்டது.

அதை மீறுவது நல்லதுக்கில்லை என்று அவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள்.

ஒருமுறை அப்படித்தான் ஆனந்தக்குறிஞ்சிப்பெண் அறம் வளர்த்தாளுக்கு டவுனில் மாப்பிள்ளை பார்த்து, டவுனிலேயே கல்யாணத்தை நடத்தி வைத்தார்கள். அது என்ன ஆச்சு? ஒரு வருஷம் முடிவதற்குள்ளே அவள் அறுத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். புருஷன்காரன் ஏதோ காய்ச்சல் வந்து அவசரமாக அவுட் ஆயிட்டான். அறம் வளர்த்தாள் இன்னும் இருக்கிறாள். கல்லுமாதிரி அவளுக்கும் உள்ளூரிலேயே மாப்பிள்ளை பார்த்து, அங்கேயே கல்யாணத்தை முடித்திருக்க வேண்டும் என்று பெரியவங்க அப்புறமாகப் பேசிக் கொண்டார்கள். என்ன பிரயோசனம்? காலம் கடந்த ஞானோதயம்!

அதேமாதிரித்தான் நாறும்பூநாதன் என்கிற ஒருவன் வெளியூர் சுந்தரி ஒருத்திமீது மோகம் கொண்டான். அவளையே கல்யாணம் செய்து கொண்டு ஆனந்தக்குறிச்சிக்கு அழைத்து வந்தான். அவள் அடுத்த வருஷம் பிள்ளை பெறுகிற முயற்சியிலேயே உயிரை விட்டு விட்டாள். பிறகு அந்தப் பயல் புத்தி வந்து உள்ளூர் அம்மாளுவைக் கட்டிக்கொண்டான். ஜாம் ஜாமென்று வாழ்கிறார்கள். அவனுக்கு என்ன இப்ப வயசு அறுபதுக்கும் மேலேயே இருக்கும். அவளுக்கும் அம்பத்து நாலு, அம்பத்தஞ்சு இருக்கும். அந்த மண் ராசி அப்படி.

ஆனந்தக்குறிச்சிக்காரர்கள் இதுபோல் எத்தனையோ உதாரணங்கள் கூறுவார்கள் அதில் அவர்களுக்கு ஒரு பெருமை.

மூக்க பிள்ளை அடிக்கடி சொல்லுவார்: 'முன் காலத்திலே மனுசங்கங்களுக்குச் சாவு கிடையாது. எவ்வளவு வருசமானாலும் சாகாமல்தான் இருந்தாங்க. ஆனால், வயசு அதிகம் ஆக ஆக, உடல் வளர்ச்சி குறுகிச் சிறுத்துக் கிட்டே போவாங்க, அசையாமல் உட்கார்ந்திருப்பாங்க. சிறு குதிரு மாதிரி ஒரு தாழி செய்து, அதுக்குள்ளே அவங்களை வச்சு, அப்படியே ஒரு மாடக்குழியிலே வச்சிருவாங்க. தினசரி அதுக்கு விளக்கு ஏற்றி வைப்பாங்க. அப்பப்போ திங்கிறதுக்கென்று உணவுப் பண்டங்களைத் தாழிக்குள்ளே போடுவாங்க. அவங்கதான் எங்க முன்னோரு. ஆனால் காலப் போக்கிலே 'மதமதக்கத் தாழி' வழக்கம் மறைஞ்சு போச்சு. நம்ம மனுஷங்களும் சாகக் கத்துக்கிட்டாங்க...'

ஆனந்தக் குறிச்சிக்கு சில மைல்களுக்கு அப்பால்—ஆற்றின் மறுகரையை ஒட்டி உள்ள ஆதிச்சநல்லூர் பரம்புகளில், அரசு அகழ்வாராய்ச்சித் துறையினர் தோண்டிப் பார்த்து, 'முது மக்கள் தாழி' என்கிற பழங்கால சவ அடக்க மண் பாண்டங்களையும், எலும்புகளையும், வேறு சில பொருள்களையும் கண்டெடுத்தபோது, மூக்க பிள்ளையும் மற்றவர்களும் கொக்கரித்தார்கள். 'நாங்க சும்மாவா சொன்னோம் பின்னே!' என்று கர்வப்பட்டுக் கொண்டார்கள்.

ஆனந்தக்குறிச்சி வாசிகள் மட்டும் நீண்ட காலம் வாழ முடிவது எதனால் என்று அவ்வப்போது யாராவது ஆராய்ச்சி நடத்தத்தான் செய்தார்கள். அவரவருக்குத் தோன்றிய காரணங்களைச் சொல்லவும் சொன்னார்கள். ஊர் அமைப்பு, அங்கு வீசுகிற காற்று, மக்களின் சுகவாசம், கவலையற்ற—நிம்மதியான—பரபரப்பில்லாத வாழ்க்கை முறை என்றார்கள்.

'இயற்கையின் அமைப்பு அப்படி. இந்த மண்ணின் மகிமை இது. எங்களுக்கு இம்மண்ணின் மீதுள்ள பிடிப்பு வலியது' என்று மூக்க பிள்ளை சொன்னார். அவர்தான் அந்த ஊரிலேயே பெரியவர். அவர் பேச்சை யார் மறுப்பார்கள்?

ஆனந்தக்குறிச்சி—ஆனந்தன் குறிச்சி என்பதுதான் சரியான பெயர். அவ்வூரில் முன்னொரு காலத்தில் நூற்று ஐம்பது வருடங்கள் வசித்த ஆனந்தன் என்பவனின் நினைவை கௌரவிக்கவே இப்படி பெயர் ஏற்பட்டது. அதற்கு முன்பு அது வெறும் 'குறிச்சி' ஆகத்தான் இருந்தது. இது அவ்வூர் 'தலபுராணம்' கூறுவது—சுக வாசத்துக்கும் சோம்பல் வாழ்க்கைக்கும் ஏற்ற அருமையான இடம். அழகான ஊரும் கூட.

இதர இடங்களில் எல்லாம் மக்கள் காலை ஆறு, ஆறே கால் மணிக்கே சூரியனைத் தரிசிக்க முடியும் என்றால், ஆனந்தக்குறிச்சி வாசிகள் எட்டரை அல்லது ஒன்பது மணிக்குத்தான் சூரிய தரிசனம் பெற முடியும். அதுவரை அங்கு அதிகாலை நேரம் போல்தான் இருக்கும். நிழலும் குளிரும் மங்கிய வெளிச்சமுமாக. காரணம், கிழக்கே சுமாரான மலை ஒன்று வளர்ந்து நின்றது. அது சூரியனை மறைத்துக் கொண்டு, வெகு நேரம் வரை அவ்வூருக்கு வெயில் வராதபடி தடுத்தது.

மலையை ஒட்டிய ஊர். மரங்களும் செடி கொடிகளும் மிகுதியாக இருந்தன. பச்சிலைகளும் மூலிகைகளும் நிறைந்த பகுதி. அதில் தவழ்ந்து வரும் சுத்தமான காற்றை எந்நேரமும் சுவாசித்துக் கொண்டிருந்தார்கள் அவ்வூர் மக்கள்.

மேற்குப் பக்கத்தில் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஜீவநதி—அதன் தண்ணீர் ஆரோக்கியம் தரும் சக்தி பெற்றது என்பது பிரசித்தம். ஆனந்தக்குறிச்சிக்காரர்கள் காலையிலும்

மாலையிலும் ஆற்றில் குளித்தார்கள். ஆற்று நீரையே சதா உபயோகித்துக் கொண்டிருந்தார்கள்.

மண் வளம் காரணமாக எல்லாவித பயிர்களும் செழித்து வளர்ந்து, நல்ல பலன் அளித்தன. மாடுகள், ஆடுகள் நன்கு வளர்ந்தன. ஆகவே, உணவு தானியங்கள், காய்கறி வகைகள், பால் மோர் தயிர் நெய் வெண்ணெய் ஆகியவற்றுக்குக் கவலையே கிடையாது அவர்களுக்கு. பணம் தாராளமாக வெளியிலிருந்து வந்து கொண்டிருந்ததால், இப்பொருள்களை விற்றுக் காசாக்க வேண்டிய அவசியம் அவ்வூர்க்காரர்களுக்கு ஏற்படவில்லை. ஆகவே, அவர்கள் திருப்தியாக உண்டு வளர்ந்தவர்கள். கவலை இல்லாமல் வாழ்ந்தவர்கள்.

இத்தகைய சூழ்நிலையில், இப்படியொரு வாழ்க்கை வசதியில், காலம் கழித்து வந்த மூக்க பிள்ளை நூறு வயசு என்ன, அதற்கும் அதிகமாகவே—உயிரோடிருக்க முடியும் என்று ஆனந்தக்குறிச்சிக்காரர்கள் நம்பினார்கள். அவரும் நம்பினார்.

ஊரிலே வயசால் மூத்தவர், முதல்வர், என்று எல்லோரும் அவருக்கு மரியாதை காட்டி வந்தார்கள். நியாயமாக தனக்கு உரிய பெருமைதான் அது என்று அவரும் அதை ஏற்று வந்தார்.

இது ஒரே ஒருவருக்கு மட்டும் மனக்கடுப்பு உண்டாக்கி வந்தது. அவர்தான் பாலுப் பிள்ளை என்கிற பால்வண்ணநாத பிள்ளை, ஊரில் 'இரண்டாவது பெரியவர்' அவர்தான். மூக்க பிள்ளை இல்லாமல் போனால் இவரே முதல்வர்; மூத்தவர்; முன்னோன். சமூகத்தின், ஊரின், சகலவிதமான மரியாதைகளும் கௌரவிப்புகளும் இவருக்கே சேரும். 'இப்போ அந்த சவத்துப் பய வழி மறிக்கும் நந்தியாய் குறுக்கே நிற்கானே. அவன் எப்போ மண்டையைப் போடுவான்?' என்று இவர் எண்ணி, ஏங்கி, எதிர்பார்த்த வண்ணம் இருந்தார்.

பாலுப் பிள்ளையும் ஒருவகையில் அவ்வூரில் பிரபலமானவர்தான். அவருக்கு சோசியம், பண்டுவம், மாந்திரீகம் எல்லாம் தெரியும். கை ரேகை பார்த்துப் பலன் கூறுவார். இதனால் எல்லாம் அவருக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டிருந்தது. எதிர் மறையான கீர்த்தி கூட வந்து சேர்ந்திருந்தது.

'அவர் சொன்னால் அப்படியே நடக்கும். இத்தனை நாளைக்கு மேலே உயிரோடிருக்க மாட்டான்னு கையைப் பார்த்துச் சொல்லுவார். அந்த ஆசாமி அப்படியே குளோசாகி விடுவான். இன்ன நாள் இத்தனை மணிக்கு இவன் செத்துப் போவான் என்பார். குறிப்பிட்டபடியே நடக்கும். ரொம்பச் சீக்காக் கிடக்கிறவங்க வீட்டுக்கு இவர் இரண்டு தடவை போய் வந்தாலே போதும். மூணாவது தடவை போக வேண்டிய அவசியமே ஏற்படாது. அதுக்குள்ளே அந்த நபர் ஐயா இடம் போய்ச் சேர்ந்திடும்' என்று பலரும் பேசிக் கொண்டார்கள். உரிய விவரங்களோடு வரலாறு உரைப்பார்கள். ஆகவே அவருக்குச் 'சாகுருவி' என்றொரு பெயரும் இருந்தது.

மூக்க பிள்ளைக்கு ஏதோ 'உடம்புக்கு வந்தது.' ஆள் வெளியே நடமாடவில்லை. வீட்டோடு தான் இருந்தார்.

இப்படிச் சில நாட்கள் எவர் வெளியே தலை காட்டாமல், வீட்டுக்குள்ளேயே ஒடுங்கி விட்டாலும் போதும். ஐயாவுக்கு சீட்டு தயாராயிட்டது போலிருக்கு. சீக்கிரம் கிழிபட்டு விடும்னு தோணுது' என்று ஊர்க்காரர்கள் பேச ஆரம்பித்து விடுவார்கள். உடனே பாலுப் பிள்ளை, பெயர் பெற்ற வெற்றிலைச் செல்லத்துடன் அந்த வீட்டுக்குப் போவார். அதில் செந்தூரம், பஸ்பம், மாத்திரைகள் என்று 'சகலரோக நிவாரணி'களும் இருக்கும். சமயத்துக்குத் தக்கபடி, ஆளுக்குத் தக்கபடி, அவற்றில் எதையாவது எடுத்துக் கொடுப்பார். 'இத்தனை மணி நேரம் கழியணும்' அல்லது, 'இன்னக்கி ராத்திரி தாண்டினாத் தான் சொல்ல முடியும்' என்று கூறிவிட்டு வருவார். அப்புறம்

அந்த வீட்டுக்கு அவர் போக வேண்டிய அவசியமே ஏற்படாது.

மூக்க பிள்ளை பற்றியும் சிலர் அப்படிப் பேசலானார்கள். 'அவர் வலுத்த கட்டை. நூறு வயசைப் பார்க்காமல் போகமாட்டார்' என்றும் சிலர் சொன்னார்கள்.

'அண்ணாச்சி' வெளியே நடமாட்டமில்லை என்று தெரிந்ததும் பாலுப்பிள்ளை சந்தோஷப்பட்டார். ரொம்ப சர்வீஸ் கண்ட கறுப்புக் கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டார். அதேபோல் உழைத்த பச்சைப் போர்வையை மேலே போர்த்திக் கொண்டார். இந்த தோரணைகள் இல்லாமல் அவர் எவர் வீட்டுக்கும் போகமாட்டார். மருந்துகள் இருந்த செல்லத்தையும், சிவப்பு சில்க் கைக் குட்டையையும் —இதை கையில் போட்டுத்தான் நோயாளியின் நாடியைப் பிடித்துக் கணக்கிடுவார் — எடுத்துக் கொண்டு மிடுக்காகக் கிளம்பினார்.

மூக்க பிள்ளை வீட்டில் அறம் வளர்த்தாள் தான் அவரை வரவேற்றாள். மூக்க பிள்ளையின் மகன் வெளியூர் போய்விட்டான். மகள் கலிமாணமாகி மாப்பிள்ளை வீட்டோடு போய்விட்டாள். பெரிய, வசதிகள் நிறைந்த, வீட்டையும் சுகமான வாழ்க்கையையும் விட்டுவிட்டு, மகளோடு போய் 'இன்னொருவர் வீட்டில் காத்துக் கிடக்க' விரும்பாத மூக்க பிள்ளை தன் வீட்டைக் கவனித்துக் கொள்ளவும், தனக்கு சகலவிதமான பணிவிடைகள் செய்யவும், பெண் துணை தேவை எனக் கருதியும், டவுனுக்கு 'வாழ்வரசி' ஆகச் சென்று குறுகிய காலத்திலேயே 'அறுதலி' ஆகத் திரும்பி வந்து தனித்திருந்த அறம் வளர்த்தாளைச் சேர்த்துக் கொண்டார். அவளுக்கும் ஆம்பிளைத் துணையும் வாழ்க்கையில் உறுதியான பாதுகாப்பும் தேவையாக இருந்தன. ஆனந்தக்குறிச்சி வாசி

களுக்கு இதெல்லாம் புதிய விவகாரமில்லை. அவர்கள் எதையும் 'வழுவல; காலவகையினானே!' என்று ஏற்று அங்கீகரிக்கும் மனப்பக்குவம் பெற்றவர்களாக இருந்தார்கள்.

பாலுப்பிள்ளை, 'என்ன அறமளத்தா, அண்ணாச்சி எப்படி இருக்காக?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார். பெரியவர் இருந்த இடத்துக்கு போனார்.

மூக்க பிள்ளை சோர்ந்து கட்டிலில் படுத்திருந்தார். பாலுப் பிள்ளை அதையும் இதையும் பேசி, அவர் கையைப் பிடித்துப் பார்த்து ஏதோ பொடியைக் கொடுத்து, தேனில் குழைத்துச் சாப்பிடும்படி சொன்னார்.

'இது எதுக்குங்கேன்? சுக்கு வெந்நிதான் சரியான மருந்து. அதைத்தான் அறமளத்தா அப்பப்போ ஏதோ கஷாயம் வச்சுத் தாறா. அது போதும், சுக்குக்கு மிஞ்சிய மருந்து ஏது? சுப்ரமணிய சாமிக்கு மிஞ்சிய கடவுள் ஏது?' என்று கேட்டார் மூக்கப்பிள்ளை.

'அது சரிதான், அது சரிதான்' என்று பாலுப் பிள்ளை தலையை ஆட்டினார். அவர் வேறு ஏதேனும் சொல்லியிருப்பார். அதற்குள் அறம் இரண்டு பெரிய தம்ளர்களைக் கொண்டு வந்து ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்துவிட்டாள். கொத்துமல்லி விதைகளை (தனியா) வறுத்துப் பொடி பண்ணி, அந்தப்பொடியைத் தண்ணீரில் கருப்புக் கட்டியோடு கொதிக்கவைத்து பிறகு வடிகட்டி நிறையப் பாலும் சேர்த்து 'காப்பி' என்ற பெயரில் தயாரான பானம் அது.

மணமும் சுவையும் நிறைந்த அதை ருசித்துச் சாப்பிட்டுவிட்டு, 'சரி, அப்புறமா வாரேன். உடம்பை கவனிச்சுக்கிடுங்க அண்ணாச்சி' என்று கூறி, விடைபெற்று வெளியேறினார் பாலுப் பிள்ளை.

அது ஒரு செவ்வாய்க்கிழமை.

அதன் பிறகும் மூக்க பிள்ளை வெளியே தலைகாட்டவில்லை.

அடுத்த செவ்வாயன்றும் பாலுப்பிள்ளை போய் அவரைப் பார்த்துவிட்டு வந்தார். போன தடவையைவிட இப்போது அண்ணாச்சி மெலிந்து போயிருந்ததாகத்தான் அவருக்குத் தோன்றியது. அவர் கொடுத்திருந்த பொடியையும் பெரியவர் சாப்பிடவில்லை.

'இப்படிக் கிடந்தால் உடம்பு எண்ணத்துக்காகும்?' என்று கண்டித்து, வேறு சில மாத்திரைகளும் சூரணங்களும் கொடுத்துவிட்டு அவர் திருப்தியோடு வீடு வந்து சேர்ந்தார். 'அண்ணாச்சி அவ்வளவுதான். அவர் நம்புகிற சுக்கும் சுப்பிரமணியசாமியும் எத்தனை நாளைக்குக் கை கொடுக்கும்கிறதையும் பார்த்துப்போடுவோமே!' என்று முனகிக் கொண்டார்.

பாலுப் பிள்ளையின் அனுபவ ஞானமும் அனுமானமும் மூக்க பிள்ளை விஷயத்தில் மண்ணைக் கவ்வின. ஆனந்தக் குறிச்சி வாசிகளுக்கே இது ஆச்சர்யமாகத்தான் இருந்தது. பாலுப்பிள்ளை இரண்டு தடவைகள் போய்வந்த பிறகும் உயிரோடு இருக்கிறார் என்றால், அவருக்கு வலுத்த உயிர்தான் என்று பலரும் பேசிக் கொண்டார்கள். பாலுப் பிள்ளைக்கே இது மனசை உறுத்தத்தான் செய்தது.

'அண்ணாச்சி இன்னும் அஞ்சு வருஷம் இருந்து, நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடி. நாமெல்லாம் அதைப் பார்க்க வேண்டாமா என்ன? அவாள் அவசரப் படமாட்டாக' என்று பெரிய பிள்ளையைப் பற்றி விசாரித்தவர்களிடம் எல்லாம் அவர் சொல்லிக் கொண்டிருந்த

போதிலும், அவருடைய உள்ளம் ஆசைப்பட்டதே வேறு தான்.

அன்று மூன்றாவது செவ்வாய், அந்தி வேளை. பாலுப்பிள்ளை வழக்கமான தோரணையோடு, மூக்க பிள்ளையைப் பார்க்கப் போனார்.

அப்போதும் பெரியவர், கட்டிலில் பல தலையணை களை வசதியாக வைத்து சுகமாகச் சாய்ந்திருந்தார் இவரைக் கண்டதும் அவர் கண்களில் ஒரு பொறி ஒளிர்ந்து மங்கியது. "வந்துவிட்டான் சாகுருவிப் பய! முழிக்கிறதைப் பாரு ஆந்தை மாதிரி!" என்று அவர் மனம் சிரித்துக் கொண்டது.

பாலுப்பிள்ளை ஒரு நாற்காலியில் வசதியாக உட் கார்ந்து, அண்ணாச்சியைக் கூர்ந்து நோக்கினார். மௌன மாக இருந்தார். திடீரென்று, 'நாமதான் போறதுக்குப் பயப்படுறமே தவிர, அப்படி அஞ்சும்படியா அங்கே ஒண்ணு மில்லே. ஆனந்தக்குறிச்சி வாழ்க்கையை விட அற்புத மாகத்தான் இருக்கும் அங்கே...' என்று பேசலானார்.

அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்று பெரிய பிள்ளைக் குப் புரியாமல் இல்லை. ஆயினும், எதுவும் அறியாதவர் போல, 'எங்கே? எந்த இடத்தைச் சொல்லுதீக' என்று கேட் டார் அண்ணாச்சி.

'மேலேதான். சொர்க்கத்திலேதான்!'

'அப்படியா?'

'அண்ணாச்சி இந்த வீட்டையும் மனையையும் ஊரை யும் எப்படிடா விட்டுப்போட்டுப் போறதுன்னு தயங்கிக் கிட்டே கிடக்கிறாப்போல தெரியுது. அப்படி பயப்படத்

தேவையேயில்லை. உங்களுக்காகப் பெரிய பங்களா, சொத்து சுகம் எல்லாம் அங்கே காத்துக்கிட்டிருக்கு. தினம் பாயசமும் வடையுமா விருந்துச் சாப்பாடுதான். அண்ணாச்சிக்குச் சர்க்கரைப் பொங்கல் பிடிக்குமே? அது அங்கே ரொம்ப அற்புதமாகக் கிடைக்கும். நெய் கமகமன்னு வடிய பிரமாதமான ருசியோடும் மணத்தோடும் — என்ன சுவை! என்ன சுகம்!...

அவர் நாக்கிலேயே தண்ணீர் சுரந்து வழியலாயிற்றோ என்னவோ, எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டார் பாலுப் பிள்ளை.

அந்தச் சமயம் வாசனை எங்கும் பரவ சூடான வடைகளை எடுத்துவந்து இருவர் முன்பும் வைத்தாள் அறம் வளர்த்தாள். உள்ளே போய் வழக்கமான 'காப்பி'யைக் கொண்டு வந்தாள். போனாள்.

'இதைவிட ருசிகரமான, ஆளையே தூக்கிட்டுப் போகும்படி வாசம் அடிக்கும் வடைகள் உங்களுக்குப் பரிமாறப்படும் அண்ணாச்சி! கவலையே வேண்டாம்' என்றார் பாலுப் பிள்ளை. பிறகு, குரலைக் கொஞ்சம் தணித்துக் கொண்டு பேசினார்.

'இன்னொரு விசயமில்லா. அறமளத்தா உங்களுக்கு எல்லா சேவையும்தான் பண்ணுதா. இல்லேங்கலே. ஆனா, அங்கே உங்களுக்காகக் காத்திருக்கிற சுந்தரிகளை நெனைக்கிறபோது—என்ன இருந்தாலும் இவ வயசானவ தானே! — அதுக...ஆஹ்!...அண்ணாச்சீ, கிருஷ்ணபுரம் கோயில்லே ரதி சிலை இருக்குதே அதைவிட அழகா, ஒவ்வொரு மார்பும் பிரமாதமா, சொகுசு சுந்தரிகள், சிங்காரவல்லிகள், உங்க

காலைப் புடிக்கவும், கையைப் புடிக்கவும், உடம்பப் புடிச்சு விடவும், இஷ்டம்போல விளையாடவும்... ஆற்றங்கரையிலே வாற போற இளசுகளை ஏக்கத்தோடு பாத்துக்கிட்டிருப் பேளே, அந்த ஏக்கம் தீர்ந்துபோம். ஒவ்வொருத்தியும் எப்படி இருப்பாள்ங்கிறீக! லட்டு மாதிரி, மாம்பழம் மாதிரி, —அவளுக மேலேயே லட்டுகளும் மாம்பழங்களும் ஜம்னு இருக்கும். எல்லாம் உங்களுக்கேதான்...?'

'ஆங், அப்படியா?' என்று பெருமூச்செறிந்தார் பெரிய பிள்ளை.

'பின்னே இந்த மண்ணிலே கிடந்து காய்ந்து மெலியறதுலே ஏதாவது புண்ணியம் உண்டா?' என்று அழுத்தினார் பாலுப் பிள்ளை.

'அது சரி, இது மாதிரிக் கட்டிலு அங்கே உண்டுமா? ரொம்ப அருமையான கட்டில். எனக்காகச் சொல்லி, மரங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்தது: இதிலே படுத்தாலே சுகமாகத் தூக்கம் வரும்...'

பெரியவரின் பேச்சைக் கேட்டதும் சப்பென்றாகிவிட்டது பாலுப் பிள்ளைக்கு. இருந்தாலும், தெம்போடு பேசினார்: 'இதென்ன கட்டிலு! இதுக்கு அப்பன், பாட்டனெல்லாம் அங்கே கிடைக்கும். சப்ரமஞ்சக் கட்டில்னு கேள்விப்பட்டது இல்லே? அது அங்கே உங்களுக்காக இருக்கு. அதுலே இளசு இளசான அழகு சுந்தரிகளோடு எப்பவும் உல்லாசமா இருக்கலாம். உங்களுக்கு...'

மூக்க பிள்ளை நிமிர்ந்து உட்கார்ந்தார். 'வேண்டாம் தம்பியாபுள்ளே. இந்தக் கட்டிலே எனக்குப் போதும். இதுலே சும்மா சாய்ந்திருப்பதே சொர்க்கத்திலே இருக்கிற மாதிரி சுகமாகத்தானிருக்கு!' என்றார்.

பாலுப் பிள்ளை அடிபட்ட புலி மாதிரி ஆங்காரத்தோடு அவரை நோக்கினார். 'உமக்காவது சொர்க்கமாவது! நரகத் தீ தான் உமக்குக் கிடைக்கும் நீர் செய்திருக்கிற பாபங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் அங்கே தான் நீர் போகப் போறீர். அந்தத் தீயிலே எரிந்து கருகப் போறீரு. உம்ம கட்டிலும் உம்மகூட சேர்ந்து எரியும். அப்படித்தான் நடக்கப் போகுது...'

படபடப்போடு எழுந்து நின்று, ஆத்திரமாகக் கத்தினார்: 'மினுமினுன்னு இருக்கிற தோதகத்திமரக் கட்டிலும், உண்டு வளர்ந்திருக்கிற தொண்ணூத்தஞ்சு வயசுக் கட்டையும் தீயிலே நின்று எரியும். நல்லா எரியும்...'

ஆத்திரம் தணியாமல் நடக்க முற்பட்டார் பாலுப் பிள்ளை. அவரையே குறும்புப் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்த மூக்க பிள்ளை ஒரு சிறு வேலை செய்தார்.

அவர் கட்டில் பக்கத்தில் ஒரு தடி இருந்தது. நீளமான வழவழப்பான, கைத்தடி. அவர் எழுந்து வெளியே போனால், கைக்குத் தாங்கலாக இருக்கட்டும் என்று அது எப்பவும் அருகிலேயே இருந்தது.

பெரிய பிள்ளை அதை எடுத்து, பாலுப் பிள்ளையின் கால்களினூடே லாவகமாக நீட்டினார். பாலுப்பிள்ளை எதையும் கவனிக்கவில்லை. அந்தி கறுத்து, இரவு கனத்துக் கொண்டிருந்ததால் அறைக்குள் வெளிச்சம் மங்கிவிட்டது. அறம் வளர்த்தாள் இன்னும் விளக்கேற்றி வைக்கவில்லை.

வேகமாக அடி எடுத்து வைத்த பாலுப்பிள்ளை, தடிக் கம்பினால் தடுக்கப்பட்டு, தவறி விழுந்தார். அவர் தலை கதவில் மோதியது. நாசி வாசல்படியில் பலமாக இடித்தது... அவர் விழுந்தவர் விழுந்தவர்தான்!

தடிக்கம்பை மறுபடியும் வழக்கமான இடத்தில் வைத்த பிள்ளை, 'போ, உன் சொர்க்கத்துக்கு நீயே போய்ச் சேரு!' என்று முணுமுணுத்தார். உரக்க, 'அடடா, தம்பியாபுள்ளே. என்ன இது! பார்த்து நடக்க வேணாம்?' என்று கூறி, 'அறம்! அறமளத்தா! சீக்கிரம் விளக்கைக் கொண்டுவா. இப்படி வந்து பாரு!' என்று பதட்டமாக உத்திரவிட்டார்.

அங்கு வந்த வெளிச்சம் பாலுப்பிள்ளையின் சோக முடிவை எடுத்துக் காட்டியது.

'சே, மனுசன் இப்படியா விழுந்து வைப்பான்! மாலைக் கண்ணுபோலிருக்கு. கதவிலே மோதி, தடுமாறிக் கீழே விழுந்திருக்கான்... கண்ணு தெரியலேண்ணா வீட்டோடு கிடக்க வேணாம்?... சரி, தெருவிலே யாராவது போறாங்களா பாரு. இவனை அப்புறப்படுத்தணுமே. வீண் வேலை வச்சிட்டானே நமக்கு!' என்று முணுமுணுத்தார் மூக்க பிள்ளை.

பாலுப் பிள்ளையின் உடல் அகற்றப்பட்ட பிறகு, மூக்க பிள்ளை குதூகலத்தோடு சுற்று முற்றும் பார்த்தார். லேசாகச் சிரித்துக் கொண்டார். 'அறமளத்தா! ராத்திரிக்கு பால் பாயாசம் வை. பாயசம் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. இன்னிக்கு சாப்பிடணுமின்னு தோணுது!' என்றார்.

□

அன்பு வறுமை

''அத்தையிடம் எப்ப சொல்லப் போறீங்க?'' என்று கேட்டாள் மீனம்மா.

பத்திரிகை பார்ப்பதில் ஆழ்ந்திருந்த சிதம்பரம், 'உம்ம்... சொல்ல வேண்டியது தான்' என்று இழுத்தான்.

''அதுதான் எப்போன்னு கேட்கிறேன்'' என்று அவள் தன் குரலுக்குக் கொஞ்சம் அழுத்தம் கொடுத்தாள்.

கணவனின் 'பிடிச்சு வச்ச களிமண் பிள்ளையார்' இயல்பும், ஞுஞ்ஞுமிஞ்ஞுப் பேச்சும் அவளுக்கு எரிச்சல் தருவது வழக்கம். இப்பவும் அப்படித்தான்.

''சொல்ல வேண்டியதை சீக்கிரமே சொல்லி விடுவது தான் நல்லது. ஈழு-ஈழுன்னு இழுத்துக் கிட்டிருந்து அத்தைக்கு இன்னும் இடம் கொடுத்திராதீங்க. நாம அவளுக்கு செஞ்சிருக்கது போதும். 'அத்தை, கால நிலைமை சரியில்லே; எங்க பாடே ஒவ்வொரு மாசமும் இழுபறின்னு கிடக்கு; உன்னை வச்சு எங்களாலே இனியும் காப்பாத்த முடியாது; நீ என்ன செய்வியோ, எங்கே போவியோ, எங்களுக்கு தெரியாது'ன்னு கட்அன்ட்ரைட்டா சொல்லிப் போட வேண்டியது தானே?'' என்று பொரிந்து கொட்டினாள் மீனம்மா.

''சொல்லிடலாம் மீனு. ஆனா அத்தையைப் பார்க்கை யிலே பரிதாபமா இருக்கு. இந்தத் தள்ளாத வயசிலே அத்தை எங்கே போவா, என்ன பண்ணுவான்னு கவலையும் மனக் குழப்பமுமா இருக்கு...''

'அதுக்காக?' என்று சீறினாள் மீனம்மா. ''அவ அவ தலை எழுத்து. யாராரு எதெதை அனுபவிக்கணுமோ அதை அனுபவிக்காமல் தீருமா? இதுவரை அவளை நாம வச்சுக் காப்பாத்தினதே பெரிசு... நீங்க கண்டிப்பாச் சொல்லிப் போடுங்க.''

தீர்மானமாய்க் கூறி விட்டு மீனம்மா தன் வேலையைக் கவனிக்க உள்ளே போனாள்.

'உம், பாவம் அத்தை...' என்று நெடு மூச்சுயிர்த்தான் சிதம்பரம்.

முதன் முதலில் எந்த, 'மருமகள்காரி' மீனாட்சி அம் மாளை அன்போடும் ஆசையுடனும் அத்தை - அத்தை என்று அழைத்து மகிழ்ந்தாளோ தெரியாது; அந்த உறவு முறை அழைப்பே ஊராருக்கெல்லாம் பொதுவானதாக வழங்கி வர லாயிற்று. தலைமுறை தலைமுறையாக. மீனாட்சி அம்மாள் எல்லோருக்கும்—பெரியவர், சிறியவர், ஆண்கள் பெண்கள் அனைவருக்குமே—அத்தை ஆகி விட்டாள். அதுவே அவளுக்கு பெயர் மாதிரி நிலை பெற்று ஒலித்தது.

பிறர் பார்வையில் எப்பவும் முதிர்ந்து கனிந்த உருவத் தினளாய்த் தோன்றிய அத்தை 'இளையளாய் மூத்திலள் கொல்லோ' என்ற கவிதை வரிக்கு—இளமைப் பருவம் வந்து பின் முதியவள் ஆகாமல் எல்லா காலத்திலும் முதுமையான வளாகவே இருந்தாள் போலும் என்ற ஐயப்பாட்டுக்கு—கண் கண்ட உதாரணமாக நடமாடிக் கொண்டிருந்தாள்.

சமூக அந்தஸ்து நோக்கில் ஒரு அநாதை என்று மதிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்த அத்தை ஒவ்வொரு கால கட்டத்தில் தன் மீது அனுதாபமும் ஓரளவு அன்பும் காட்டக் கூடிய வெவ்வேறு மருமகன், மருமகள் தயவை நம்பித்தான் சீவித்து வந்தாள். தாய் வழி உறவு, தந்தை வழி உறவு என்று தூரத்து முறை செப்பிக் கொண்டு அவள் ஊர் ஊராக, வீடு வீடாகச் சென்று சில சில நாட்கள் தங்குவாள். வாரக் கணக்கில் முகம் சுழிக்காத நல்லவர்கள் வீட்டில் மாதக் கணக்கில் அத்தையின் முகாம் நீடிக்கும்.

சும்மா சொல்லக் கூடாது. அத்தை யார் வீட்டில் தங்கி யிருந்தாலும் சரி, அந்த வீட்டில் தின்கிற 'சோற்றுக்கு வஞ்சனை இல்லாமல்' உழைப்பாள். பிரியமாய்ப் பேசிப் பழகுகிற மருமகள்மாரும், தயங்காமல் கூசாமல் அத்தையை சம்பளமில்லாத வேலைக்காரியாகப் பாவித்து சகலவிதமான அலுவல்களையும் நாள் முழுவதும் செய்து கொண்டிருக்கும் படி கவனித்துக் கொள்வார்கள். எந்த ஊருக்கு எவர் வீட்டுக்குப் போனாலும் இந்த நியதி மாறாமல் செயல்பட்டு வந்தது.

ஓரிரு வீடுகளில் ஒரு வருஷத்துக்கு அதிகமாகத் தங்கி உழைக்கும் வாய்ப்பு அவளுக்கு அபூர்வமாகக் கிடைத்ததும் உண்டு. அவை எல்லாம் மீனாட்சி அம்மாளின் அதிர்ஷ்டக் கணக்கில் சேரும்.

ஒரு வீட்டில் தனக்கு 'கவனிப்பு குறைகிறது' என்று அவளது உள்ளுணர்வு உணர்த்தத் தொடங்கிய உடனேயே அத்தை 'கேம்ப் கிளம்பி' விடுவாள். அந்த ஊரிலே திருவிழா: இங்கே அம்மன் கோயில் கொடை. இன்னார் மகளுக்குக் கல்யாணம்; கல்யாண வீட்டு வேலைகள் செய்வதற்குக் கூப்பிட்டிருக்காங்க. நம்ம இவளுக்குப் பேறு காலமாம்; துணைக்கு ஆள் இல்லாமல் கஷ்டப்படுறா பாவம்;

அத்தையை எங்கே பார்த்தாலும் உடனே புறப்பட்டு வரச் சொல்லுன்னு நம்ம மங்காயி மககிட்டே சொல்லி அனுப்பி யிருக்கா. பிரமுவுக்கு டைபாயிட்டி காச்சலாம், நான் போயி கூடமாட இருந்து உதவி செய்யணும்' என்று பொருத்த மான ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டுப் போவாள்.

'அத்தையை எங்கே காணோம். ஸர்க்கோடு போயாச் சாக்கும்? அவ காலமும் இப்படி ஒரு தினுசாக் கழிஞ்சிட்டுதே அதைச் சொல்லு!... குறைநாளையும் அத்தை இப்படியே ஓட்டி அடைச்சிருவா... அவளுக்கென்ன– கொடுத்துவச்ச மாராசி!' என்று 'மருமகள்'களில் சில பேர் கருத்துப் பரி மாறிக் கொள்வதும் சகஜம்தான்.

இதில் ஒன்றிரண்டு, அத்தைக் காதை எட்டுவதும் இயல்பு. அதை அவள் பெரிதுபடுத்தமாட்டாள். பெரிது படுத்தி, முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு திரியக் கூடிய நிலையிலா அத்தை இருந்தாள்? 'தன் மூஞ்சியைத் தானே கொண்டை முடிச்சுப் போட்டுக்கிட்டு உம்முனு இருந்தால்' அப்புறம் அவளுடைய வாழ்க்கை வண்டி ஓடு வதுதான் எப்படி? ஆகவே, எதையுமே அவள் கண்டு கொள் வதில்லை.

அத்தையின் இனிய சுபாவங்களில் முக்கியமானது. அவள் எல்லோரிடமும் அன்பு செலுத்தி வந்ததுதான். சின் னக்குழந்தைகளிடம் பிரிவும் மிகக் கொண்டவள் அவள். பெண்களிடம் பாசமும் பரிவும் காட்டினாள். ஆண்களிடம் தாய்போல் அன்பு செலுத்தினாள். இதில் அவளுக்குத் தனி மகிழ்ச்சியும், இன்பமும் இருந்ததாகவே தோன்றியது. எனவே தான் 'ஊராருக்கு உழைப்பதே யோகம்' என்றொரு வாழ்க்கை முறையை அத்தை மேற்கொண்டிருந்தாள் போலும்.

எந்த வீட்டுக்கு அவள் போனாலும், ஒருசில நாட்கள் அல்லது மாதங்கள் தங்கினாலும், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நபர் போலவே அத்தை இயங்கினாள், வீட்டுக்காரி சொன்னாலும் சொல்லாவிட்டாலும் வீடு கூட்டுவது, காய்கறி நறுக்குவது, பாத்திரங்கள் கழுவுவது போன்ற சிறுசிறு அலுவல்களிலிருந்து பெரிய பெரிய வேலைகள் வரை வீட்டு வேலைகள் அனைத்தையும் தானாக செய்து முடித்தாள். குழந்தைகளைக் கொஞ்சினாள். அவ்வப்போது மிட்டாய் முறுக்கு என்று ஏதாவது வாங்கிக் கொடுத்தாள். வீட்டம்மாளுக்கு எப்பவாவது இரண்டு மூன்று அல்லது ஐந்து ரூபாய் என்று கைமாத்துகொடுத்து உதவினாள். ஊர்வம்புகள் பேசி மருமகள்களுக்கு மன மகிழ்வும் அளித்து வந்தாள்.

'வீட்டு அம்மாளுக' பணம் கொடுத்து வேலைக்காரி அமர்த்தினால்கூட, அவள் இத்தனை அலுவல்களையும் முணுமுணுக்காமல் செய்து முடிக்கமாட்டாள். ஆகவே, எந்த வீட்டிலும் அத்தைக்குப் போடுகிற சாப்பாடு 'தெண்டச் செலவு' என்ற கணக்கில் அடங்காது. ஆனாலும் அம்மா-மகள் (பெற்றோர்-பிள்ளைகள்) உறவுகூட பணம்- சொத்து-சுய நலம் - சுயலாபம் எனும் இணைப்புகளில் பிணைப் புண்டு ஊஞ்சலாடுகிற இன்றைய சமூக அமைப்பில், மீனாட்சி அம்மாள் போன்ற வெறும் நபர்களின் அன்பும் உழைப்பும் உரிய மதிப்பையும் போற்றுதலையும் பெறாமல் போவது வியப்புக்குரிய விஷயம் இல்லைதான்.

அவளுடைய புனிதமான அன்பு மற்றவர்களிடம் தூய அன்பை எதிரொலியாக எழுப்பத் தவறிவிடுகிற காலங்களில் அத்தை அவதியுற நேரிட்டது.

அத்தைக்கு வயது ஆக ஆக மற்றவர்கள் அவளிடம் காட்டிய கவனிப்பின் மாற்றுக் குறையலாயிற்று. அதிலும்

ஒரு சமயம் அவள் காய்ச்சலில் படுத்து எழுந்த பிறகு பொதுவாகவே மருமகள்கள் அவளை ஒதுக்க விரும்பி னார்கள்.

அத்தை மேல்வலி, தலைவலி என்று அடிக்கடி சுருண்டு படுக்க அவாவியதும், மருமகள்மாரின் கவலையும் பயமும் வளரத் தொடங்கின. இவளுக்கு பண்டுவம் செய்யவும் பாடு பார்க்கவும் யாருக்கு முடியும்? வீண்செலவும் வெட்டி வேலையும் என்று அவர்கள் கருதலாயினர். நம்ம வீட்டை விட்டு சீக்கிரம் போய்த் தொலைஞ்சால் சரிதான் என்றும், மறுபடி நம்ம வீட்டுப் பக்கம் தலைகாட்டாமல் இருந்தால் ரொம்ப நல்லது என்றும் அவர்கள் எண்ணினார்கள்.

முன்பு அத்தை வெளியூருக்குப் போகிறேன் என்று சொன்னதும், 'இந்தா அத்தை' செலவுக்கு வச்சுக்கோ' என்று இரண்டும் மூன்றும் ரூபாயாக அளித்து மகிழ்ந்த வீட்டுக்காரர்கள், வர வர மாறிப் போனார்கள். அத்தை யாக வாய் திறந்து கேட்கட்டுமே என்று இருந்தார்கள். அப்படி அவள் கேட்டாலும், 'இந்த மாசம் எங்களுக்கே பணமுடை, அத்தை. கையிலே ரூபாயே இல்லை' என்று சொல்லி எட்டணா, கொடுத்து அனுப்பினார்கள். கை மாற்றாக ஒன்று இரண்டு வாங்கியவர்கள், அதைச் சௌ கரியமாக மறந்து விடுவதில் அக்கறை காட்டினார்கள். இப்படி பலப் பல.

இந்த ரக மருமகள்களில் ஒருத்தியாகத்தான் இருந்தாள் மீனம்மா. இயல்பாகவே நோஞ்சான் ஆக விளங்கிய அவ ளுக்கு அத்தையின் வருகையும், வீட்டோடு தங்கி மாதக் கணக்கில் பரிவுடன் சகல வேலைகளையும் செய்து, அவளை உட்கார்த்தி வைத்து உபசரித்துப் பணிவிடைகள் புரிந்ததும் நல் அதிர்ஷ்டங்களாகத் தோன்றின.

அத்தையை கவனித்துக் கொள்வதில் மீனம்மா முன்பெல்லாம் குறை எதுவும் வைத்துக் கொண்டதில்லை. அவளுடைய தேவையை அறிந்து அத்தைக்கு, புதுப்புடவை எடுத்துக் கொடுப்பது—அல்லது, தான் உடுத்திச் சிறிதளவே பழசாகியிருக்கக்கூடிய நல்ல சீலையை வழங்குவது என்பதை ஒரு வழக்கமாக அனுஷ்டித்த மருமகள்களில் மீனம்மாவும் ஒருத்தி. இவ்விதம் எவ்வளவோ தாராளத்தனம் காட்டியவள் தான் அவள்.

என்றாலும், கால ஓட்டத்தில் ஒவ்வொருவரும் விதம் விதமான நோக்குகளில் அத்தையின் வாழ்க்கை நிலையை எடைபோட்டனர். பலரகமான கருத்துக்களும் பிறந்து பரவின.

—அத்தைக்கு வயசு ஆகிக் கொண்டே போகுது. பொட்டுனு மண்டையைப் போட்டு வச்சா, பரவாயில்லே. படுக்கையிலே விழுந்து கிடந்து மெதுவாச் செத்தால், யாரு பணம் செலவழிக்கிறது? சீக்குக்காரியை கவனிப்பது யாரு?

—'வாயுக்குத்து'ன்னு சொல்லி பொசுக்குனு உயிரு போயிட்டாலும் கூட, அப்புறம் எத்தனையோ செலவுகள் இருக்குமே? யாரு வீட்டிலே இருக்கிறாளோ, அவங்க தானே கட்டையைச் சுடுகாட்டுக்குப் எடுத்துப் போயி ஆக வேண்டியதை எல்லாம் செய்து முடிச்சாகணும்? அப்புறம் எழவு செலவு வேறே!

—ஆமா, கிழடு இருந்தாலும் தொல்லை தான்; செத்தாலும் உபத்திரவம் தான்...

எனவேதான், 'எனக்கு வேண்டாம் பூசனிக்காய்-உனக்கு வேண்டாம் பூசனிக்காய்' என்று ஆகாத காயை தட்டிக் கழிப்பதில் ஆர்வம் காட்டுகிற விளையாட்டைப்

போல, அத்தையையும் அகற்றி அப்பால் தள்ளி விடுவதில் எல்லோரும் ஆர்வம் உடையவர்களானார்கள்.

அத்தை வந்து ஒரு வருஷத்துக்கும் மேலாகிவிட்டது. அவள் அடுத்த இடத்துக்கு நகரும் யோசனை இருப்பதா கவே தெரியவில்லை. அவளை முகமலர்ச்சியோடு ஏற்று தங்க அனுமதிக்கிறவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்ததால், கொஞ்சம் பிரியமாக இருக்கிறவர்கள் வீட்டில் அதிக காலம் ''டேராப் போடவே' ஆசைப் பட்டாள் அத்தை.

'முன்னே மாதிரி ஊர் ஊராத் திரியமுடியல்லே சவம். ஒரு இடத்திலே நிலையா இருந்து, கடைசி அழைப்பு வந் ததும் ஒரே பயணமாப் போய்ச் சேரவேண்டியது தான். அது எப்ப வருதோ!' என்று அத்தை கூறுவதும் வழக்கமாகிவிட் டது.

மீனம்மா அவளிடம் அவ்வப்போது கேட்டு வைத் தாள்: "தென்காசிக்குப் போகலையா அத்தை? முன்னே விக்கிரமசிங்கபுரத்துக்கு அடிக்கடி போவையே, இப்ப போகவே காணோம்? ஆழ்வா திருநேலியிலே கல்யாணம் நடக்குதே, அங்கே போகலையா? ... மாறாந்தைக்குப் போகப் போறியா?..."

அது போன்ற சந்தர்ப்பங்களில் தான் அத்தை தனது 'ஆசை'யை வெளியிட்டாள். அது மருமகள் மீனம்மா ளுக்கு ஒத்துக் கொள்ளவில்லை.

'அத்தை நம்ம வீட்டிலே செத்துக் கிடந்தா நம்மை அல்லவா பொறுத்து விடும் செலவு? நாம என்ன மூட்டை கட்டியா வச்சிருக்கோம்? அத்தை கிட்டே சொல்லிப்போட வேண்டியது தான் — வேறே எங்காவது போய்ச்சேரு,

காலும் கையும் தெம்பாக இருக்கையிலேயே!'' என்ற ரீதியில் அவள் தன் கணவன் சிதம்பரத்திடம் புழுபுழுக்கத் தொடங்கினாள்.

சிதம்பரத்துக்கு அவளைவிட இளகிய உள்ளம். அத்தைக்காக இரக்கப்பட்டான்.

'அவள் எங்கே போவாள், பாவம் இன்னும் கொஞ்ச நாளைக்கு இங்கேயே இருக்கட்டுமே. அத்தை அவளாலே முடிஞ்ச அளவு வேலைகளைச் செஞ்சிக்கிட்டுத்தானே இருக்கிறா?' என்று சொல்லிப் பார்த்தான்.

மீனம்மா பச்சைத் தண்ணீர் பட்ட சுண்ணாம்புக் கல்லாகக் கொதித்துப் பொங்கி சூடாக வார்த்தைகளைக் கொட்டலானாள்.

—இப்போ அவளாலே வேலை செய்ய முடியலே. எதையும் ஒழுங்காச் செய்றதில்லை. வேளா வேளைக்கு வாய்க்கு ருசியா சாப்பிடணும்னு பறக்கிறா, நெய் இல்லாம அவளுக்கு சோறு இறங்கமாட்டென்குது. தினசரி நாலஞ்சு தடவை காப்பி வேண்டியிருக்கு. அவளா போட்டுப் போட்டுக் குடிச்சிக்கிடுறா. ஒவ்வொரு தடவையும் எவ்வளவு சீனி போடுறா, தெரியுமா...

இன்னும் எத்தனையோ குற்றச்சாட்டுகள்!

வீட்டில் அமைதியும் சந்தோஷமும் நீடித்திருப்பதற்காக சிதம்பரம் மனைவியின் எண்ணப்படி செயல்புரியத்தான் வேண்டும். அதை நிறைவேற்றுவதில் அவன் தயக்கம் காட்டிக் கொண்டிருந்தான்.

அதனால்தான் 'இறுதி எச்சரிக்கை' மாதிரி மீனம்மா அவனிடம் பேசி விட்டுப் போனாள்.

சிதம்பரம் பத்திரிகையை மடித்து நாற்காலி மீது போட்டு விட்டு, உற்சாகம் இல்லாமலே எழுந்தான். மெதுவாக உள்ளே போனான்.

அத்தை எங்கும் தென்படவில்லை.

அடுப்படிப் பக்கம் எட்டிப் பார்த்து, 'அத்தையை எங்கே காணோம்?' என்று கேட்டான்.

'இங்கேதான் இருந்தா... தோட்டத்து பக்கம் போனா... பூக்களை பறிச்சிக்கிட்டு வருவா' என்றாள்.

அவன் திரும்பலாமா என்று தயங்கி நின்றபோது, அவள் 'வந்ததோ வந்தாச்சு. காப்பியைக் குடிச்சுட்டே போங்க, இதோ ஆச்சு' என்று சொன்னாள்.

அவன் கீழே உட்கார்ந்தான்.

அவள் காப்பியை டம்ளரில் கொண்டு வந்து அவன் முன்னே வைத்து விட்டு, தனது விருப்பத்தை மீண்டும் வலியுறுத்தினாள்.

'இப்போ அத்தை வந்ததும் சொல்லிப் போடுங்க. சித்தப்பா மக கல்யாணத்துக்காக நாங்க ஊருக்கு போறோம்; திரும்பி வர பத்து நாளு ஆகும். உன்னை எங்களோடு கூட்டிக்கிட்டுப் போக முடியாது. நீ இங்கே தனியா இருக்கவும் வசதிப்படாது. அதனாலே நீ பாவூருக்கோ, விக்கிரமசிங்கபுரத்துக்கோ போறதுதான் நல்லது. நாளைக்கே புறப்பட்டு விடுன்னு சொல்லுங்களேன். இதிலே என்ன பயம்? அத்தைதான் நம்ம கூட ரொம்ப காலம் இருந்தாச்சே...'

மீனம்மா உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தபோதே, அவள் பேச்சை அமுக்கி விடும் ஒலியாக தாம்பாளம் கல்லின்

மீது விழுந்து ஓசை எழும்பியது. படிகள் மேல் உருண்டு விழுந்ததால், அது தொடர்ந்து ஒலித்தது.

என்ன என்று பார்ப்பதற்காக மீனம்மா பின்வாசல் பக்கம் போனாள். சிதம்பரமும் போனான்,

தாம்பாளம் கீழே விழுந்து மண்ணில் பதிந்து கிடந்தது. அத்தை தலைமீது கை வைத்தபடி மண்ணில் உட்கார்ந்திருந்தாள். அன்போடு அவள் பறித்து வந்த மல்லிகை மொக்குகளும் கனகாம்பர மலர்களும் அவளைச் சுற்றிலும் சிதறிக் கிடந்தன.

மலர்களைப் பறித்து வந்து, சரமாகக் கட்டி, அவள் குத்து விளக்கிற்கும் சாமி படங்களுக்கும் சூட்டுவாள். ஆசையாக மீனம்மா தலையிலும் கொஞ்சம் அணிவிப்பாள்.

இப்போது அவளுடைய சகல ஆசைகளையும் மதிப்பற்றுப் போன அன்பையும் போல மலர்களும் மொக்குகளும் படிக்கட்டுகற்கள் மீதும் மண்ணிலும் சிதறிக் கிடந்தன.

அத்தையின் கண்களிலிருந்து நீர் முத்து முத்தாக வடிந்து கொண்டிருந்தது.

மீனம்மாளின் பேச்சை அத்தை கேட்டுக் கொண்டாள் என்பதை அவளது சோக நிலை புரியவைத்தது.

சிதம்பரம் மவுனமாக மீனம்மாளை பார்த்தான். அவளோ கீழே விழுந்து கிடந்த தாம்பாளத்தையும் பூக்களையும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

□

'தினமணி கதிர்' தீபாவளி மலர்—1981

இயற்கையின் சிரிப்பு

அழகும் சுத்தமும் நிறைந்த அந்த அறையின் தரையில் ஒரு இடத்தில் நீர்ச் சதசதப்பும் புழுக்கைகளும் அசிங்கக் கறைகளால் பார்வையை உறுத்தின.

காலையில் கண் விழித்ததும் மாதவன் பார்வையில் அது தான் முதலில் பட்டது.

— *சீ*, என்ன அசிங்கம்! வவ்வால் வந்திருக்கு.

அந்த இடத்துக்கு நேரே உயரே கட்டை வெளியை அவன் கவனித்தான். இப்போது அங்கே எதுவும் இல்லை.

—ராத்திரி வந்திருக்கு. காலை வெளிச்சம் வந்ததும் பறந்தோடிப் போயிருக்கும். நல்லா விடியறதுக்கு முன்னாடியே போயிருக்கும்.

துடைப்பத்தை எடுத்து அந்த இடத்தைப் பெருக்கினான். புழுக்கைகளைத்தான் அள்ளி வெளியே எறிய முடிந்தது. மூத்திரக் கறை திட்டுதிட்டாக அந்த இடத்தை அசிங்கப் படுத்திக் கொண்டுதான் இருந்தது.

மாதவனுக்கு சுத்தம் மிக முக்கியமான விஷயம். சூழ் நிலையை சுத்தமாக, அழகாக வைத்துக் கொள்வதில் அவன் அதிக அக்கறை காட்டுவான். மேஜை நாற்காலிகளை,

புத்தகங்களை, பொருட்களை எல்லாம் தினந்தோறும் பலதடவைகள் துணியால் தட்டித் தட்டி தூசி போகும்படி பண்ணுவதில் கருத்தாக இருப்பான். சுவரில் தொங்கிய படங்களை சில நாட்களுக்கு ஒருமுறை துடைத்துப் பளிச்சிட வைப்பான். சிறு நூலாம்படை (ஒட்டடை) கண்ணில் பட்டால் போதும்; உடனே ஒரு கம்பை எடுத்து வந்து அதை அகற்றி விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பான். தரையில் நூலோ, காகிதத்துண்டோ, வேறு எதுவுமோ கிடந்துவிட்டாலோ அவன் மனசு சங்கடப்படும். குனிந்து அதை எடுத்து அப்புறப்படுத்தினால்தான் அமைதி அடையும்.

தரையில் வவ்வால் ஏற்படுத்திய அசிங்கக் கறை அவன் மனசைக் கஷ்டப்படுத்தாமல் இருக்குமா? நேரம் ஆக ஆக, ஈரம் உலர்ந்து விட்ட போதிலும், அந்த இடத்தில் வெள்ளைத் திட்டுகள், 'உப்பு கலிந்தது மாதிரி', பரவிக்கிடந்தன.

மாதவனின் கண்கள் எதேச்சையாக அந்த இடத்தில் அவ்வப்போது மேய்ந்தன. மனம் குறுகுறுத்தது.

— சீ, அசிங்கமா இருக்குதே... சனியன் புடிச்ச வவ்வால் இந்த அறைக்கு ஏன்வரணும் வேறே போக்கிடம் அதுக்கு இல்லாமலா பேச்சு?

அறைக்குள் வந்து, இரவு நேரத்தை போக்கிய வவ்வாலை அவன் பார்க்கவில்லை தான். ஆனாலும் அது வவ்வால் செய்த வேலையே என்பதை அவனுக்கு அனுபவ அறிவு உறுதியாக உணர்த்தியது. சில காலங்களில் அந்த அறைக்கு எலி வருவது உண்டு. எங்கிருந்தோ நெல்லை எடுத்து வந்து, புத்தக வரிசைகளுக்கு ஊடேயுள்ள இடுக்குகளில் புகுந்து கொரித்து விட்டு, உமியைப் போட்டு வைக்கும், புளுக்கைகளும் மூத்திரமும் சிந்தி, ரொம்ப நேரத்துக்கு ஒரு வித நெடி நிலவும்படி பண்ணிவிட்டுப் போயிருக்கும்.

— ஆனால் இது எலியின் வேலை இல்லை. எலிப்புழுக் கைகள் இன்னும் பெரிதாய், பருமனாய் இருக்கும். எலி ஒதுக்கிடாமல், சந்து பொந்து இண்டு இடுக்கு என்று பம்மி யிருந்தது, இரை தின்று, கழித்து விட்டுப் போகும். இப்படி நட்டுநடுவிலே வெட்ட வெளியிலே தங்காது. இது வவ் வாலேதான்.

மறுநாளும் மூன்றாம் நாளும் மாதவன் இதையே எண் ணிக் கொண்டான்.

— வவ்வால் ஏன் இந்த அறைக்கு வருகிறது? முன்பு திண்ணையில் ஒரு மூலையில் ஒண்டியிருப்பது வழக்கம். விடிந்து பார்த்தால் வவ்வால் இராது. கீழே அசிங்கமாய் ஈரமும் புழுக்கைகளும் படர்ந்து கிடக்கும்.

அதை விரட்டி அடிப்பதற்காக, உயரே விட்டத்தில் இலந்தை முள்ளை இலைகளோடு கட்டி வைத்தார்கள். வவ்வால் தொல்லை இல்லாது போயிற்று.

பிறகு, தொட்டிக்கட்டில் ஒரு இடத்தில் இரண்டு வவ் வால்கள் அடைந்தன. அந்தி நேரத்திலிருந்தே பறக்கும், கொசுக்கள் பூச்சிகளைப் பிடிப்பதற்காக. இரவு ஏழு ஏழரைக் குள் விளக்குகளை அணைத்து விடுவார்கள். வவ்வால்கள் வந்து தொங்கும். யாராவது எழுந்து விளக்கைப் போட்டால், விர்ரென்று பறந்து ஓடும். விளக்கேற்றாமலே இருட்டில் அந்தப்பக்கம் போனால், வவ்வால்கள் விஷ்ஷ் — விஷ்ஷ் என்று காற்றைக் கிழித்து ஓசைப்படுத்தியபடி சுற்றியும் சுழன்றும் ஏறியும் தாழ்ந்தும் பறந்து திரிவதை சிலசமயம் அறியமுடியும்.

— தொட்டிக்கட்டுப் பக்கம் திறந்த வானவெளி இருக் கிறது, திண்ணையை அடுத்தும் திறந்த வெளிதான்.

அங்கெல்லாம் வவ்வால்கள் சஞ்சரிப்பது சரிதான். இந்த அறைக்குள் எதுக்காக வரவேண்டும்?

மாதவன் மனம் கேட்டுக் கொண்டது. அவனுக்கு பதிலும் புரிந்ததுதான்.

கொசுக்கள் நிறைய, ஒவ்வொன்றும் தண்டிதண்டியாய், எவ்வளவு பெரிசு! ஒவ்வொரு அறையிலும் கொசுக்கள் வாசம் செய்தன. அவற்றைப் பிடித்துத் தின்பதற்காக வவ்வால் வீட்டினுள், இருட்டில், அறைதோறும் சஞ்சரித்தது. இந்த அறைக்கும் வந்தது. இது ஒதுக்கமாய், அமைதியாய், ஆள் அரவமற்று இருந்தது. அது தங்குவதற்கு வசதியாகப் பட்டிருக்கும்.

வவ்வாலுக்கு வசதி; அவனுக்குத் தொல்லை.

— ஒவ்வொரு சீசனில் ஒவ்வொன்று தொல்லை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. நெல் இருக்கிற காலத்தில் எலி... குருவிகள் கூடுகட்டி குஞ்சு பொரிக்கிற சீசனில் குருவிகள், வைக்கோலும் புல்லும் துரும்புகளும் கொண்டுவந்து அசிங்கப்படுத்தும். மழை பெய்தால், கறையான்கள் உபத்திரவம். எப்பவும் கொசுத் தொல்லை. அதோடு வவ்வால் வேறு.

மாதவன் அலுத்துக் கொண்டான், கொசுக்கடி தூக்கத்தைக் கெடுத்த ஒரு இரவில், அவனுக்கு மேலாக விர்ர் — பிர்ர் என்று சிறகோசை எழ வவ்வால் அறை நெடுகப் பறந்து திரிவதை அவன் உணர்ந்தான்.

இன்னிக்கு அதுக்கு நல்ல வேட்டைதான் என்று நினைப்பு அவன் மனசில் நெளிந்தது.

மறுநாள் காலையில், அறையில் அந்த இடம் ரொம்பவும் அசுத்தப்பட்டிருந்தது. வழக்கத்தைவிட அதிகமான புழுக்கைகள், திட்டுதிட்டாய் ஈர நசநசப்பு.

மாதவனுக்கு அருவருப்பும் எரிச்சலும். அசிங்கம் புடிச்ச வவ்வாலை ஒழிச்சாகணுமே என்று அவன் மனம் கறுவியது.

அது தற்செயலான வாய்ப்புதான்.

அன்று இரவும் கொசுத் தொல்லை அதிகம். வெளியே நிலா ஒளி வெள்ளமாய் கொட்டிக் கிடந்தது. அதனால் கொசுக்கள் வீட்டின் இருட்டினுள் புகுந்து இரைந்து கொண்டிருந்தன. உறங்குவோரைக் கடித்து இன்புற்றன.

மாதவனின் தூக்கம் கெட்டது. ஜன்னல் கதவுகள், அறைக்கதவு அனைத்தையும் சாத்தினால், கொசுக்கள் படையெடுப்பது குறையும் என்று நினைத்தான். எழுந்து, அடுத்த அறையோடு இணைக்கும் பெரிய கதவை சாத்தினான். ஜன்னல் கதவையும் அடைத்தான்.

மனித நடமாட்டத்தை வவ்வால் உணர்ந்து கொண்டதாய் தோன்றியது. அமைதியாய் விட்டத்தில் கட்டையைப் பற்றிக் கொண்டு தொங்கிய அது பதட்டமடைந்தது அதன் பறப்பில் புலனாயிற்று. அது வந்து போவதற்கு உதவும் விசாலவழி அடைபட்டுப் போனதை அது உணர்ந்து கொண்டது. மேலேறியும் தாழ்ந்து தணிந்தும் வேகமாகப் பறந்த அது, தன் முகத்தில் வந்து மோதிவிடுமோ என்ற குழப்பம் மாதவனுக்கு ஏற்பட்டது.

அவன் விளக்கைப் போட்டான். ஒளி பாய்ந்து வெளிச்சப்படுத்தியது அறையை.

அதனால் வவ்வால் மேலும் கலவரம் அடைந்தது. வெளிச்சம் அதன் பார்வையை பாதித்தது. அது குருடு

போல் திண்டாடியது. சுவரில் மோதி விழுந்தது. உடனே ஜிவ்வென எழுந்து எதிர்திசைக்குப் பாய்ந்தது. பெரிய பெட்டி பரப்பிய சிறுநிழலில் அது ஒண்டியது.

அப்போதுதான் அந்த எண்ணம் அவனுள் வெடித்தது; இதை சாகடித்தால் என்ன?... அடித்துக் கொன்று போட லாமே!

ஒரு மூலையில் சுவரோடு சுவராய் வசமாக ஒரு தலைக் கம்பு இருந்தது. ஒட்டடை அடிக்க அவன் அதை உபயோ கிப்பது உண்டு. இப்போது அது வசதியாக இருந்தது.

தடியை எடுத்துக்கொண்டு அவன் வவ்வாலை நோக்கி நகர்ந்தான்.

அணுகுகிற ஆபத்தை உள்ளுணர்வால் உணர்ந்தது போல, வவ்வால் விர்ரென்று மேலெழுந்தது. பறந்தது.

பறக்கும்போது இறக்கைகள் பெரிதாய் அதுவே அளவில் பெரிய ஜந்துவாய் காட்சி அளித்தது.

குறுகிய எல்லையில், நூறு வாட்ஸ் பல்பு மிக வெளிச்சம் கொண்ட பேரொளியாய் எரிந்தது. அவ் ஒளி வவ்வாலை வெகுவாகப் பாதித்தது. அது திசை தெரியாது திண்டாடித் தவித்து அலை பாய்ந்தது.

அக்குழப்பத்தால், 'புசை முட்டிப்போன' வெறியால், தன்னை நெருங்கும் போதெல்லாம் அது தன்னைக் கடித்து விடுமோ என்றொரு உள்பயம் மாதவனை நடுக்கியது. அத னால், அதை அடிக்க வேண்டும் என்ற அவன் நினைப்பு வேகம் பெற்றது.

ஓங்கி வீசினான் தடியை.

அடி வவ்வால் மீதுபட்டது. அது விழுந்தது. க்ரீச்—க்ரீக் என விகாரமான ஒரு ஒலி எழுப்பியவாறு அது மீண்டும் மேலே எவ்விப் பறந்தது. விழுந்தது.

மேஜையின் கால் அருகே, நிழலில் கிடந்த அதை அவன் மறுபடியும் அடித்தான்.

அது எழுந்து, பறந்து, வெளியே செல்லக்கூடிய வழியை நாடித் தள்ளாடிக் கதவில் மோதி விழுந்தது.

அசிங்கக் குவியலாய், அருவருப்பு தருவதாய் அவனுக்கு தென்பட்ட வவ்வால் மாதவனிடம் இரக்கம் எழுப்பவில்லை. அவன் தடியால் ஓங்கிக் குத்தினான். செத்தது அது.

மறுபக்கத்துக் கதவைத் திறந்து, வவ்வாலை தடியால் தள்ளித் தள்ளி வெளியே ஏற்றினான். அங்கே மண் தரை. திறந்த வெளி. — கிடக்கட்டும் சவம். காலையில் எடுத்து, தெருவிலே, பாழுங்கிணற்றுள் போட்டு விடலாம்.

அவன் மனசில் ஒரு திருப்தியும் நிம்மதியும். ‘முடுக்கு’ பக்கம் கதவை அடைத்துத் தாளிட்டான். அறைப் பக்கக் கதவைத் திறந்தான். வவ்வாலின் புழுக்கைகளும் மூத்திரமும் அசிங்கப்படுத்தியிருந்த இடத்தைத் துடைப்பத்தால் பெருக்கினான்.

—இனி இப்படி அசிங்கமும் கறையும் ஏற்படாது.

விளக்கை அணைத்து விட்டு சந்தோஷமாகப் படுத்தான். தூக்கம் அவனைத் தழுவியது. எவ்வளவு நேரம் சென்றிருக்குமோ! மாதவன் திடீர் விழிப்புற்றான்.

கொசுக்கடி மட்டுமே காரணமல்ல. காற்றைக் கிழித்து சிறகடித்துப் பறக்கும் வவ்வால் எழுப்பும் விர்ர்-விஷ்ஷ் ஓசை தெளிவாக அவனுக்குக் கேட்டது.

தூக்கக் குழப்பத்தில், அந்த வவ்வால் தான் வந்திருக்குமோ என்றொரு அபத்த நினைப்பு... அது எப்படி வரும்? அதுதான் செத்து விட்டதே! முடுக்குக் கதவு வேறே அடைத்துக் கிடக்கு! அது சாகாமல் கிடந்து காற்று பட்டதும் உணர்வு பெற்று, வானில் பறந்து போய், வழக்கமான வழி மூலம்...

சீ பைத்தியம்! அவன் மனமே அவனை எள்ளி நகைத்தது. அது செத்துக்கிடக்கு. இனிப் பறக்காது...

பறக்கும் சத்தம் கேட்கவில்லை இப்ப.

—அப்படீன்னா அதனுடைய ஆவியாக இருக்குமோ?... மாதவன் தூங்கிப் போனான்.

காலையில் கண் விழித்ததும், வெளிச்சத்தில் அவன் பார்வையில் பட்டது—

அதே இடத்தில் அசிங்கமாய் ஈர நசநசப்பும் புழுக்கைகளும்.

அவன் மனம் சங்கடப்பட்டது.

—இன்னொரு வவ்வால் வந்திருக்கு!

இப்போது அவன் உள்ளம் முதல் வவ்வாலுக்காக இரக்கப்பட்டது.

முடுக்குக் கதவை திறந்தான்.

அது சுவர் அருகில் குறுகி முடங்கி விறைத்துக் கிடந்தது. மூக்குப்பொடி நிறமாய்; சிலசில இடங்களில் கறுப்பு படிந்து; குறள் உருவமாய், இறக்கைகளைக் குறுக்கிக் கொண்டு; அசிங்கமான மூஞ்சியோடு அது கிடந்தது;

எத்தனை ஜீவத்துடிப்புடன் இயங்கியது இது! பறக்கும் போது எவ்வளவு பெரிசாய், என்ன வேகம் நிறைந்ததாய், சில கோணங்களில் அழகாகக்கூட இருந்தது! அதை அசிங்க மான ஜடம் ஆக்கிப் போட்டேனே! அவன் மனம் வருத்தப் பட்டது.

இதை கொன்று விட்டதால் என்ன பிரயோசனம்? அறை அசிங்கப்படுவது நிற்கும் எனத் தெரியலியே. இன்னொரு வவ்வால் உடனடியாக வந்திட்டுதே! அதை கொன்றால் வேறொண்ணு வரும். அப்படி சங்கிலித் தொடராக நடந்து கொண்டேயிருக்கும்.

மாதவன் பெருமூச்செறிந்தான். குனிந்து செத்த வவ் வாலை இரண்டு விரல்களால் பற்றி எடுத்து, வெளியே கொண்டு போய் பாழுங் கிணற்றுள் விட்டெறிந்தான்.

அறைக்கு வந்ததும், அழகான அறையின் சுத்தமான தரையில் அந்த இடத்தில் கறையாகப் படிந்திருந்த அசிங்கத் திட்டுகளாக ஈரமும், சிதறிக் கிடந்த புழுக்கைகளும் தன்னைப் பரிகசித்துச் சிரிப்பதாகவே மாதவனுக்குப் பட்டது.

☐

'சௌராஷ்டிரமணி'—பொங்கல் மலர் 1984

மதிப்புமிகுந்த மலர்

*மா*லை உலா வந்த சுந்தரம் அந்த இடத்தில் அப்படி ஒரு காட்சியை எதிர்பார்க்கவில்லை. அதனால் அவர் ஆச்சரியம் அடைந்தார்.

நகரத்தை விட்டு விலகி இருந்தது அந்த இடம். வெறிச்செனக் கிடந்த மேட்டு நிலம், சுத்தமான காற்றை நாடுவோர் மாலை நேரங்களில் அங்கே வருவார்கள். கார்களில், சைக்கிளில், பலரகமான வேக வாகனங்களில் நடந்தும் கூட. உயர் குடியினர் ஆரோக்கியம் தேடி அந்த வட்டாரத்தில் வசிக்க வருவது உண்டு. அவர்களுக்கு வசதியாக பங்களாக்கள் அங்கும் இங்குமாய் தனித்தனியே கட்டப்பட்டிருந்தன.

அவர்களில் சிலர் பொழுது போக்குவதற்கு என்று 'ரிக்ரியேஷன் கிளப்' ஒன்று அமைத்திருந்தார்கள். அதற்குத் தனிக் கட்டிடம் இருந்தது.

அழகான, சிறு கட்டிடம். அந்தக் கட்டிடத்தில் மாலை நேரத்திலும் இரவிலும் உயிரோட்டம் இருக்கும். சீட்டாட்டம், கேரம், பேட்மிட்டன் என்று விளையாட்டுகளில் ஈடுபட்டிருப்பார்கள் பலர். சிலர் ஈசிச்சேரில் வெறுமனே சாய்ந்து ஓய்ந்திருப்பார்கள்

பொதுவாக மாலை உலா வருகிறவர்களைத் தவிர வேறு யாரையும் வெளியே காணமுடியாது. அந்த மேட்டு நிலத்தில் பரந்து கிடக்கும் பெருவெளி அது. எங்கும் காய்ந்து உலர்ந்த புல்லும், கொழிஞ்சி தும்பை போன்ற செடிகளுமே தென்படும். அங்கங்கே ஆவாரம் செடிகளும் பொன் குவி யல்களாய் பூத்துச் சிரித்துக் குலுங்குவதும் பார்வையில் படும். ஒன்றிரண்டு மரங்களும் உண்டு.

சுந்தரம் அடிக்கடி அங்கே உலா வருகிறவர். அவரை அறிமுகம் செய்து கொள்ள விரும்பியவர்கள், அல்லது அவ ராக நெருங்கித் தெரிந்து கொள்வதற்கானவர்கள் அன்று வரை அங்கே எவரும் குறுக்கிட்டதில்லை.

இப்போது அங்கே, அந்தப் பெரிய, ஆலமரத்தடியில் ஒரு சிறு பெண் தனியாக விளையாடிக் கொண்டிருந்தாள். அது அவருக்கு ஒரு அதிசயமாகவே பட்டது.

அச் சிறுமிக்கு ஏழு அல்லது எட்டு வயதிருக்கும் நாக ரீக ஜவுளிக்கடையில் அலங்காரமாக புது டிசைன் ஆடை அணிவிக்கப்பட்டு காட்சிப் பொருளாக நிறுத்தப்பட்டிருக்கும் அழகு பொம்மை மாதிரி இருந்தாள் அவள். உணர்ச்சித் துடிப்பும் உயிரியக்கமும் பெற்ற பொம்மை இது. தானா கவே சிரித்துக் கொண்டு, வேறு யாருடனோ பேசுவது போலவும் உத்திரவிடுவது போலவும் பாவனைகள் செய்து கொண்டு, அவள் தனக்காக ஒரு தனி உலகம் அமைத்து அதில் உற்சாகமாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

ஆனந்தமாகத் திரியும் வண்ணத்துப் பூச்சி. கவலை யின்றி ஆடிப் பாடிச் சிறகடிக்கும் சிறுபறவை. அழகான பூங்கொத்து. நல்ல குழந்தை— சுந்தரம் அச் சிறுமியை இப்படி வியந்து நின்றார்.

சும்மா வேடிக்கை பார்த்தார்.

சிறுமி அவரைப் பார்த்தாள். அவளது ஒளி நிறைந்த கண்கள் மேலும் சுடரிட்டன. அவள் சிநேகமாகச் சிரித்தாள். இளம் வெயில் போல் அழகாக இருந்தது அவள் சிரிப்பு.

இது வித்தியாசமான குழந்தை என்று அவர் மனம் சொன்னது. புதியவர்களைப் பார்த்து கூச்சப்படுகிற குழந்தைகள், வெட்கப்படுகிற குழந்தைகள், அநாவசியமாக பயப்படுகிற குழந்தைகள், அழுகிற குழந்தைகள்— இப்படி குழந்தைகள் பலவிதம். பயமோ கூச்சமோ கொள்ளாது சிநேகமாகச் சிரிக்கிற குழந்தைகள் அபூர்வமாகத் தான் தென்படுகின்றன. இவளும் ஒரு அபூர்வப் பிறவி என்று சுந்தரம் எண்ணினார்.

சுற்று முற்றும் பார்த்தார். பெரியவர்கள் யாரையும் காணவில்லை. காரில் அல்லது வேறு ரக வாகனங்களில் மேட்டு நில வட்டாரத்துக்கு 'காற்று வாங்க' வருகிற பெரியவர்கள் எப்பவாவது தங்களோடு குழந்தைகளையும் கூட்டி வருவது உண்டு. அவர்கள் பிள்ளைகளை தாராளமாக வெளியே விளையாட அனுமதிக்க மாட்டார்கள். இப்படி தன்னந் தனியாக ரொம்ப நேரம் விளையாட விடுவதுமில்லை.

இவள் யாருடன் வந்திருப்பாள் என்று சுந்தரம் சந்தேகப்பட்டார். அச் சிறுமியிடம் கேட்டார்—

'உன்கூட யார் வந்திருக்கா?'

'யாரும் வரலே. நானாத்தான் வந்திருக்கேன்' என்று தயங்காமல் கூறினாள் அவள்.

'உனக்கு பயமாக இல்லே?'

'பயம் என்ன பயம்!' என்று கூறிய சிறு பெண் அவரை ஆச்சர்யமாகப் பார்த்தாள்.

'நீ தனியாக வந்திருக்கியே, அப்பா அம்மா உன்னை தேட மாட்டார்களா? கோபிக்க மாட்டார்களா?' என்று சுந்தரம் விசாரித்தார்.

'அப்பா என்ன பண்ணுவாரோ, எனக்குத் தெரியாது. நான் என் அப்பாவைப் பார்த்தே ரொம்ப வருஷமாச்சு. அம்மா என்னை கோபிக்க மாட்டா. அம்மா தேடுறதுக்கு முந்தி நான் வீட்டுக்குப் போயிடுவேன்' என்று அவள் அமைதியாகச் சொன்னாள்.

இது அதிசயமான குழந்தை தான் என்ற எண்ணம் மேலும் வலுப்பட்டது அவருக்கு. 'உன் வீடு எங்கே இருக்கு?' என்று கேட்டார்.

'அதோ... அங்கே...' என்று குரலை நீட்டி இழுத்து, கையையும் ஒரு திசையில் நீட்டினாள் அவள்.

அவள் காட்டிய பக்கம்தான் பெரிய மனிதர்களின் பொழுது போக்கு கிளப் இருந்தது. அது அவளுடைய வீடாக இருக்க முடியாது. அதற்குச் சிறிது தள்ளி ஒரு சிறு வீடு. ஓடு வேய்ந்த சின்ன வீடு, சில அறைகளே கொண்ட கட்டிடம். இச் சிறுவீடு எனது இருப்பிடமாக இருக்கலாம் என்று சுந்தரத்தின் மனம் அதைப் பார்க்கிற போதெல்லாம் ஆசைப்படுவது வழக்கம். அது சதா பூட்டியே கிடக்கும். அதிலா இந்தச் சிறுமியும் அம்மாவும் குடியிருக்கிறார்கள்? எத்தனை காலமாக?

'நீ அந்த வீட்டுக்கு வந்து எத்தனை நாளாச்சி?' என்று அவர் கேட்டார்.

'நாலு நாள் தானாச்சு. இன்னமே இங்கேயேதான் இருப்போம், என்று அவள் சொன்னாள்.

உடனேயே திடுமென நினைத்துக்கொண்டவள் போல, 'நேரமாச்சு நான் போகணும்' என்று அறிவித்தாள். குதித்துக் குதித்து ஓடிப்போனாள். வீட்டை நோக்கி அவள் போவதையே பார்த்து நின்றார் அவர். சிறுமி அந்தச் சிறிய வீட்டினுள்தான் போனாள். இந்தப் பிள்ளையோட அம்மாவுக்கு ஏதாவது சீக்காக இருக்கும். ஆரோக்யம் தேடி இங்கே வசிக்க வந்திருப்பாள் என்று அவர் எண்ணிக் கொண்டார்.

அதன் பிறகு சுந்தரம் அந்தப் பக்கம் உலா வந்த போதெல்லாம் அச்சிறுமியைத் தவறாது சந்திக்க முடிந்தது. அவள் பெயர் உஷா என்றும் தெரிந்தது.

உஷா அழகான பெயர். உதயம் போல் ஒளியோடு, கலகலப்பாக, ஜீவத்துடிப்போடுதான் இந்த குழந்தையும் இருக்கிறது. விடியற்காலத்தின் பொன்னொளி இதன் கண்களில் மின்னுகிறது. இதன் சிரிப்பில் பளீரிடுகிறது. ஒளியின் வைரரேகை மாதிரித்தான் இதன் உருவமும் இருக்கிறது. இப்படிக் கவிதைப் பேசிக் களித்தது அவர் மனம்.

ஒவ்வொரு சத்திப்பின்போதும் உஷா அவருடைய ஆச்சர்யத்தை அதிகப்படுத்தி வந்தாள். எப்பவும் அவள் தனியாகத் தான் காணப்பட்டாள். சதா சிரித்த முகமாகவே காட்சி தந்தாள். அவளுடைய சின்ன வாய் எப்போதும் வார்த்தைகளை கலகலப்பாக அள்ளித் தெறிக்கும் ஊற்றாக விளங்கியது.

உஷாவுக்கு பூக்களின் மீது அதிக ஆசை. சுற்றித் திரிந்து ஆவாரஞ் செடிகளின் பொன்னிறப்பூக்களை அதிகம்

அதிகமாக சேகரிப்பது அவளுக்கு சந்தோஷம் தரும் காரியமாக இருந்தது. சில பங்களாக்களின் வெளிப்புறச் சுவர்களுக்கு மேலாக வளர்ந்து தொங்கும் செடிகளில் குலுங்கிப் பளிச்சிடும் பிங்க் நிற போகன்வில்லாப் பூக்களும் அவளுக்குப் பிடித்தமானவைதான். செம்பரத்தம் பூக்கள் அவளது ஆனந்தத்தை அதிகப்படுத்தின. அவற்றை நிறைய நிறையப் பறித்து வைத்து அவள் விளையாடினாள்.

'உங்களுக்கு எந்தப் பூ மாமா பிடிச்சிருக்கு?' என்று உஷா ஒருநாள் சுந்தரத்தைக் கேட்டாள்.

'எல்லாப் பூக்களும் எனக்குப் பிடிச்சிருக்கு' என்றார் வர்.

'ஊம்ம், எது ரொம்பப் புடிச்சிருக்கு?'

'ரொம்ப ரொம்ப எனக்குப் பிடிச்ச பூ எது தெரியுமா?' என்று அவர் அவள் ஆவலைத் தூண்டும் விதத்தில் கேட்டு நிறுத்தினார்.

'எது மாமா, எந்தப் பூ?' என்று அவள் அவசரப்படுத்தினாள்.

'எல்லாப் பூக்களையும் விட அழகாக இருக்கிற உஷா தான் எனக்குப் பிடித்த பூ. உஷா ஒரு பெரிய பூச்செண்டு. இனிய பூந்தோட்டம்னே சொல்லலாம்' என்று சுந்தரம் கூறினார். சிரித்தார்.

'போங்க மாமா! கேலி பண்றீங்க!' என்று செல்லச் சிணுங்கல் சிணுங்கினாள் உஷா.

'நிஜம்மா நீ ரொம்பப் பெரிய பூ தான். உன் முகம் ஜோரான ரோஜாப்பூ. உன் கைகள் கூட சிறுசிறு ரோஜாக்கள் தான். கண்கள் கருநீலப் பூ. பாதங்கள் தாமரைப் பூ.

உன் மூக்கு கூட அழகான ஒரு பூதான். அதுக்குப் பேரு தான் எனக்குத் தெரியலே' என்று சொல்லி, அவர் தன் விரல்கள் இரண்டினால் அவளது குமிழ் மூக்கைப் பிடித்து ஆட்டினார்.

'போங்க மாமா, நீங்க நல்ல மாமா இல்லே' என்றாள். பிறகு ஏதோ சிந்திப்பவள் போல் அமைதியில் மூழ்கி நின் றாள்.

'உஷாவுக்கு என்ன திடீர் யோசனை?' என்று சுந்தரம் கேட்டார்.

'பூக்கள் ஜோராக இருக்கு. அழகு அழகாச் சிரிக்கும் குட்டிக்குட்டி தேவதைகள் போல் தோணுது. அழகாப்பூத்து சந்தோஷம் தருகிற பூக்கள் ஏன் எப்பவும் இப்படியே இருக்கக் கூடாது? ஏன் வாடிப் போகணும்?' என்று 'சீரியஸ்' ஆகவே கேட்டாள் அவள்.

'ஊம்ங், அப்புறம்?' என்று கிண்டல் தொனியில் அவர் தலையை ஆட்டியபடி வினவினார்.

'அழகானது எல்லாம் சீக்கிரம் அழிஞ்சு போகுது. அல் லது தேய்ஞ்சு மறைஞ்சு போகுது. பூக்கள் அதுக்கு உதார ணம் இல்லையா?'

'ஆ, டீயர் பிலாசபர் இன் பாவாடை! அதாவது பாவா டையில் காட்சி தருகிற அருமை தத்துவதரிசியே! நீ உன் வயசுக்கு மீறி உன் மூளைக்கு வேலை கொடுக்கிறாய். நீ சின்னப்பிள்ளையாய், சிட்டுக் குருவியாய், வண்ணத்துப் பூச்சியாய், கவலை இல்லாமல், உல்லாசமாகவே விளை யாடிக் கொண்டிரு' என்று உபதேசியார் மாதிரிப் பேசினார் சுந்தரம்.

வவ்வவ்வே! என்று வாயைக் கோணலாக்கி பழிப்புக் காட்டினாள் சிறுமி, பூக்களைச் சிதறி வீசி விட்டு ஓடிப் போனாள்.

‘குரங்கு! செங்குரங்கு! என்று உரத்துக் கூவினார் சுந்தரம். அழகிய பூக்களை அப்படி அந்தப் பெண் நாசப் படுத்தியது அவருக்கு எரிச்சல் தந்தது.

உஷா திரும்பிப் பார்க்காமலே போய் விட்டாள்.

நாளைக்கு அவளுக்கு அழகான பூக்கள் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்; அவள் முகமே பெரிய ரோஜாப் பூவாய் சிரிப்பதைக் காணவேண்டும் என்று அவர் எண்ணிக் கொண்டார்.

‘ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும்’ என்பது வாழ்க்கையில் சகஜமாக நடப்பதுதான். சுந்தரத்தின் விஷயத்திலும் அப்படித்தான் ஆச்சு.

மறுநாள் மேட்டு நிலம் பக்கம் அவர் உலாப் போக முடியவில்லை. அவரைக் கண்டு சில முக்கியமான விஷயங்கள் பேசுவதற்கென்று சிலர் வந்து விட்டார்கள். அதுக்கு அடுத்த நாளும்... அப்புறமும்... தொடர்ந்து பத்து நாட்கள் அவர் அங்கே போகமுடியாமலே போச்சு. வெளியூர் போக நேரிட்டது.

சுந்தரம் திரும்பி வந்ததும் மாலை உலா கிளம்பினார். வழக்கமான இடத்துக்குத்தான். உஷா விளையாடிக் கொண்டிருப்பாள்; தன்னைப் பார்த்ததும் மூஞ்சியை உம்மென்று வைத்துக் கொண்டு கோபமாக இருப்பாள்; ஏன் இத்தனை நாள் வரலே என்று கேட்பாள்... இப்படி மனம் எண்ணக் காற்றாடியை மேலே மேலே பறக்க விட, அவர் வேகமாக நடந்தார்.

பெரிய ஆலமரத்தின் கீழே, ஒளிப்பெருக்கின் வைர ஊசிபோல் திகழக் கூடிய சிறுமி இல்லை. அவளது விளையாட்டுப் பொருள்களும் காணப்படவில்லை. அந்தப் பூங் கொத்து வண்ண வண்ணப் பூக்களை சேகரிப்பதற்காக அலைந்து திரிகிறதோ என்ற சந்தேகத்தில் அவர் கண்கள் அங்குமிங்கும் தாவித் திரிந்தன.

எங்குமே அந்த உயிர்க் கவிதை இல்லை.

இந்த நேரத்தில் உஷா வீட்டுக்குள் அடைந்து கிடக்க மாட்டாளே? விசேஷ காரணம் ஏதாவது இருக்க வேண்டும். அவர் மனசில் ஓர் பதைப்பு.

சுந்தரம் அந்தச் சிறிய வீட்டை, பெரிய மனிதர்களின் பொழுது போக்கு மன்றம் உயிரோட்டத்துடன் இயங்கிக் கொண்டிருந்த எடுப்பான கட்டிடத்துக்கு அருகில் இருந்த அழகிய வீட்டை, நோக்கி நடந்தார்.

'கிளப்' ஜீவனோடு தான் தென்பட்டது. பக்கத்துச் சிறிய வீட்டில் ஒளி குன்றிப்போனதாக அவருக்குத் தோன்றியது.

அன்னியமான வீடு. அந்த அம்மா அறிமுகமானவளும் இல்லை. சிறு பெண் உஷாவை அவள் விளையாடும் மரத்தடியில் சந்தித்துப் பேசியதுதான். அவளுடன் அவள் வீட்டை எட்டிப் பார்க்க அவர் வந்ததுகூட இல்லையே!

சுந்தரம் வெளி 'கேட்' மீது கை பதித்தவாறு தயங்கி நின்றார். உஷா என்று அவர் உள்ளம் கூவியது. குரல் கொடுக்கவில்லை அவர்.

உஷாவின் அம்மா வெளியே வந்தாள். எதேச்சையாக வந்தவள், தயங்கி நிற்கும் அவரைப் பார்த்ததும் அவசரமாக வந்தாள். 'வாங்க, உள்ளே வாங்க' என்று அழைத்தாள்.

உஷா உங்களுக்குத் தொல்லை கொடுத்திருப்பாளே-சரியான தொணப்தெணப்பு இல்லையா?

அம்மா அவளாகவே கருத்து தெரிவித்தாள்.

'அப்படி எல்லாம் இல்லை. உஷா அதிசயமான பெண் உற்சாகமான சிறுமி. துள்ளித் திரியும் கவிதை. அவள் செயல்கள், பேச்சு எல்லாம் எனக்கு சந்தோஷமே தரும். அவளை எங்கே காணோம்?'

சடக்கெனத் தலையைத் தாழ்த்திக் கொண்டு விருட்டென அந்த அம்மாள் ஏன் வீட்டுக்குள் போக வேண்டும்? அவருக்குக் குழப்பம் ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் அவள் திரும்பி வந்தாள். முகத்தைத் துடைத்துக் கொண்டு, அவள் கண்கள் கலங்கியிருந்தன.

'உஷாவின் கடைசி காலத்தில் அவள் சந்தோஷத்தை அதிகப்படுத்தியவர் நீங்கள். உங்களைப்பற்றி அவள் வாய் ஓயாது பேசுவாள். நீங்கள் தேடி வந்தால், இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னாள்' என்று ஒரு கவரை அவள் அவரிடம் தந்தாள்.

'அவர் திகைத்தார். உஷா ... உஷா எங்கே?' என்று குழறினார்.

'அந்தப் பூ வாடிவிட்ட்து!' அவள் விம்மினாள்.

மின்னாமல், உறுமாது, பேரிடி ஒன்று விழுந்தது போலி ருந்தது சுந்தரத்துக்கு. 'என்னது? என்ன?' என்று கதறி னார்.

'உஷாவுக்கு இருதயக் கோளாறு. ஏதோ பலவீனம். சிகிச்சைக்காகத்தான் இங்கே வந்து தங்கினோம். அவள் ரொம்ப காலம் வாழ முடியாது என்பது தெரிந்த முடிவு தான். அதனால் இருக்கிற வரை அவள் சந்தோஷமாக இருக்கட்டுமே என்று விட்டிருந்தேன். நீங்களும் உங்களா லான உதவி செய்தீங்க. அவ சந்தோஷப்பட்டாள். மூன்று நாட்களுக்கு முன் உஷா போய்விட்டாள்.'

அழுகையை அடக்க இயலாதவளாக அவள் உள்ளே போனாள்.

சுந்தரம் தன் கையிலிருந்த கவரைப் பிரித்துப் பார்த் தாள். அதில் ஒரு படம் இருந்தது. வெள்ளைத்தாளில், வானவில் வர்ணங்களில் பள்ளிச்சிட்ட ஒரு பூவின் படம். உஷா வரைந்தது. அதன் மேலே மதிப்பு மிக்க மலர் என்று அவள் எழுதியிருந்தாள். கீழே அன்பு நட்பு என்றும் எழுதி யிருந்தாள்.

ஆனால் அவ்வார்த்தைகளை அனபூ — நட்பூ என்று உஷா எழுதியிருந்தாள். வேண்டுமென்றே - தெரிந்தே- செய்யப்பட்ட இலக்கணப் பிழைதான் என்று எண்ணிக் கொண்டார் சுந்தரம்.

அவர் கண்களிலிருந்து கண்ணீர்ப்பூக்கள் உதிரலாயின.

□

'அரும்பு' — ஆகஸ்ட் 1986

பெரிய பிள்ளை

*சி*ன்னையாப் பிள்ளையை சிவபுரம் காரர்கள் பெரிய பிள்ளை என்றே குறிப்பிட்டு வந்தார்கள்.

சின்னையாப்பிள்ளை அந்த ஊரில் ஆக்கினைகள் செய்து வைக்கும் பெரிய தனக்கரரர் ஒன்றுமில்லை. பெரிய வீட்டைச் சேர்ந்த மூத்தவரோ, வயசினால் பெருமை பெற்றவரோ இல்லை அவர். ஆள் தண்டியும் சதையுமாய் பெரியவராக இருக்கவுமில்லை.

ஒல்லிதான். ஐந்தரை அடி உயரம் இருக்கலாம். தலைமுடியை எப்பவும் 'சம்மர் கிராப்' மாதிரி ஒட்டவெட்டி, ஒட்டிய கன்னங்களும் துருத்திய மோவாயுமாக பார்ப்பதற்கு சாதாரணமாகத் தான் இருப்பார். சதா சளசள என்று பேசிக் கொண்டிருப்பார்.

எந்த விஷயமானாலும் தனது எண்ணத்தை உரத்த குரலில் ஓங்கி அடிப்பார். ஊர் பிரச்னையானாலும் சரி; தனி நபர்களின் குடும்ப விவகாரமானாலும் சரி; தனிப் பட்ட விஷயமாயினும் சரியே—எதைக் குறித்தும் யோசனைகள் சொல்லாமல் இருக்கமாட்டார் அவர். ஐடியாக்களை உலுப்பித் தள்ளுவார். திட்டங்கள், தீர்மானங்களை எல்லாம் வகுத்து, விளக்கங்களை விளாசி விடுவார்.

இந்த சுபாவம் தான் அவருக்கு பெரிய பிள்ளை பட்டத்தைப் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும் என்று

உள்ளூர் விஷயம் அறிந்த வட்டாரத்து அண்ணாச்சி ஒருவர் ஊகித்துச் சொன்னார். அதுவே சரியான காரணமாகவும் இருக்கலாம்.

எதைப் பற்றியும் தாராள அபிப்பிராயங்களை முந்திரிக் கொட்டைத் தனமாகக் கொட்டி வந்ததனாலும், மற்றவர் கருத்துக்களை தூக்கி எறிந்து பேசியதாலும், எந்தச் சிக்கலுக்கும் தீர்வுக்கான வழிவகுத்துக் காட்ட முன் வந்த தாலும், மற்றவர்கள் முதலில் கிண்டலாக, 'பெரியவாள் என்ன சொல்லுதாக?' 'பெரியவாள் அபிப்பிராயம் என்ன வாம்?' என்ற தன்மையில் பேசினார்கள். 'பெரிசு என்ன சொல்லுது?' 'பெரியவர் ஏதாவது ஐடியா வச்சிருப்பாரோ!' என்று எடக்காகக் கூறியிருப்பார்கள். 'பெரியவாள் ஒரு வழி சொல்லட்டும்' என்று கோரினார்கள்.

இதனால் எல்லாம் பெரியவர், அண்ணாச்சியாபிள்ளை, பெரியபிள்ளை என்று குறிக்கப்பட்டு, சின்னையாபிள்ளை நிரந்தரமாக அந்த ஊரின் 'பெரியபிள்ளை' ஆகிப் போனார். பெரியவர்களும் சின்னவர்களும், ஆண்களும் பெண்களும், சகல தரத்தினரும் அவரை 'பெரியபிள்ளை' என்றே கூறினார்கள்.

ஊரில் வயது முதிர்ந்தவர்கள், 'சின்னய்யாவா? அவனை லேசுப்பட்ட ஆளுன்னு எண்ணிப் போடாதே. பெரிய பெரிய வேலைகள் எல்லாம் செஞ்சுபோட்டு, இப்ப இப்படி இருக்கானாக்கும். பெரிய ஆசாமிதான் அவன். ஆயிரத்தை அரையே மாகாணி ஆக்கிவிட்டு, இப்போ பண் டாரம் கணக்கா இருக்கான்' என்று சொல்வார்கள்.

சின்னையாப் பிள்ளைக்கு ஒரு காலத்தில், தாத்தாவும் அப்பாவும் விட்டுச் சென்ற சொத்து நிறையவே இருந்தது. வீடு வாசல், வயல், தோப்பு துரவு, வில்வண்டி, விலை

உயர்ந்த காளைகள், பசுமாடுகள், ஏவிய வேலைகளைச் செய்வதற்கு எடுபிடி ஆட்கள் எதுக்கும் குறைவிருந்ததில்லை.

கால வேகத்தில் அவை அனைத்தும் எப்படிப் போயின என்று தெரியாத விதத்திலே பறந்தோடிப் போயின.

அவரும் அவர் மனைவியும் தாராளமாக செலவு பண்ணினார்கள். 'இறைத்த கிணறுதான் ஊறும்', 'இருந்தப்பன் தின்றால் அந்தப்பன் கொடுப்பான்', 'செலவு பண்ணப் பண்ண செந்தூரான் தருவான்' என்று சொல்லிச் சொல்லி வாரி வழங்கினார்கள்.

சின்னையாப்பிள்ளை தினசரி சிவபுரத்திலிருந்து பக்கத்து டவுனுக்குப் போய் ஓட்டல்களில் உல்லாசமாகச் சாப்பிட்டும், சினிமா டிராமா என்று செலவு செய்தும் ஜாலியாக வாழ்ந்தார். அவர் தனியாகவா போவார்? கூட இரண்டு மூன்று பேர்களையும் ஜமா சேர்த்துக் கொண்டு போவார். எல்லோருக்கும் தாராள சப்ளை தான்.

அவர் மனைவி செல்லம்மாளோ, ஊர்ப் பெண்கள் சொன்னது போல, 'நெய்யிலே மிதந்த அப்பம். வடம் வருத்தம் தெரியாதவள்'. தினந்தோறும் அடை என்றும், வடை என்றும், மைசூர் பாகு, திரட்டுப்பால் அது இது என்றும் செய்வதில் அவளுக்குத் தனி 'இன்ட்ரஸ்ட்' எதையும் நெய்யிலே செய்வதில் விசேஷ உற்சாகம். 'நான் பெற்ற இன்பம் பெறுக நம்ம தெருக்காரர்கள்!' என்ற நல்லெண்ணம் உடையவள் அவள். அதனாலே அக்கம் பக்கத்தில் வசித்த அக்காமார்கள், தங்கச்சிக்காரர்கள், அத்தை அரசிகள், மதனிகள், என்று அனைவருக்கும் வாரி வழங்கி மகிழ்ச்சி அடைந்தாள்.

வாங்கித் தின்றவர்கள் அவள் முன்னே புகழ்ந்தார்கள். 'செல்லம்மா கைக்கே தனி ருசி தான். அவ எது செஞ்சாலும் அமிர்தமா இருக்கும்' என்று ஐஸ் வைத்தார்கள். அவள் இல்லாத போது, 'இந்தப் போக்குப் போனா எத்தனை காலத்துக்கு தாக்கு பிடிக்க முடியும்? செக்களவு பொன்னு இருந்தாலும் செதுக்கிச் செதுக்கித் தின்னா எவ்வளவு காலம் நீடிக்கும்னு சொல் வடை சொன்னவங்க சும்மாவா சொன்னாங்க!' என்ற ரீதியில் பேசினார்கள்.

'அய்யாப்பிள்ளையும் அம்மாளும் இப்படி கணக்குப் பாராமல் காலி பண்ணினால், ஒரு நாளைக்கு தலையிலே கை வச்சுக்கிட்டு உட்கார வேண்டியதுதான்' என்றார்கள். அவர்கள் அப்படி ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள்.

சின்னையாப்பிள்ளை துணிந்து புதுமைகள் பண்ணத் தயங்கமாட்டார். யாரும் செய்யத் துணியாத விதத்தில், அவர் திடீரென்று தனது வயல்களில் புகையிலை பயிரிட்டார். 'அவ்வளவும் தங்கம்! பணமாக் காய்ச்சுத் தள்ளப் போகுது பாரு!' என்று அளந்து கொண்டிருந்தார். ஏகப்பட்ட பணம் செலவு பண்ணினார்.

அவருடைய 'போதாத காலம்' புகையிலைப் பயிரில் நோய் விழுந்து, இலை உரிய முறையில் வளராமல், சுருட்டை சுருட்டையாகிக் கெட்டுப்போச்சு, இம்முயற்சியில் பல ஆயிரம் ரூபாய் கடன் சேர்ந்தது.

பணம் புரட்டி விடலாம் என்று நம்பிக்கையோடு, எல்லா வயல்களிலும் வாழை பயிரிட்டார் அவர். 'வாழ வைக்கும் பயிர் வாழை, இரண்டு வருடத்தில் பத்தாயிரக் கணக்கில் பணம் திரட்டிவிட முடியும். இந்தக் கடன் எல்லாம் தூசு!' என்று வாய்ப்பறை அறைந்தார் அவர்.

வாழை வைத்து லாபம் கண்டவர்கள் அந்த ஊரில் இருந்தார்கள். ஆனால் சின்னையாவுக்கு வாழை கை கொடுக்கவில்லை. புயல், மழை என்று கெடுத்தது ஒரு வருடம். மறு வருடம் மழை, தண்ணீர் இல்லாமல் காரியம் கெட்டது. இதிலும் அவருக்குப் பெரும் நஷ்டம்.

இப்படியே மஞ்சள் என்றும், இஞ்சி என்றும், வெங்காயம் என்றும் மாற்றி மாற்றி சோதனை பண்ணினார். எதுவும் கை கொடுக்கவில்லை. ஆகவே, வயல்கள், வண்டி மாடு, உழவு மாடுகள் எல்லாவற்றையும் விற்று, கடனை அடைத்தார்.

அவருடைய வளர்ச்சியை கிண்டல் பண்ண விரும்பிய உள்ளூர் நையாண்டிப் புலவர் இப்படி ஒரு பாட்டுப் பாடினார்—

'வாழவே வைக்கும்' என்று
வாழையை வைத்தாய்—போற்றி!
வாழை போய் மஞ்சளே கண்டாய் போற்றி!

மஞ்சள் போக்கி விட்டு,
இஞ்சியை வைத்தாய் போற்றி!
இஞ்சியும் உள்ளி போல் நின்றதாலே,

உள்ளியை வைத்தாய் நீயும்.
உள்ளியும் உள்ளடங்கிப் போனதாலே
நீயும் உள்ளேயே போனாய் போற்றி!

சின்னையாப்பிள்ளை நல்ல ரசிகர். இந்தப் பாடலை ரசித்து, 'சபாஷ்டா பாண்டியா!' என்று பாடியவரின் முதுகில் தட்டிக் கொடுத்தார் அவர்.

சின்னையாப்பிள்ளை சிவபுரத்தின் இளவட்டங்களுக்கு வழிகாட்டும் பெரியவராகவே வளர்ந்து வந்திருந்தார்.

ஒரு சமயம் அவர் வட்டாரத்துப் பையன்களை எல்லாம் சேர்த்து 'சடுகுடு சங்கம்' அமைத்தார். தினசரி ஆற்று மண லில் போய் மணிக்கணக்கில் ஆடிக் களித்தார்கள். பிறகு ஒரு சிலரை யோகாசனப் பயிற்சியில் ஈடுபடுத்தினார். ஆசனங்கள் பயில்வதற்கும் ஆற்று மணல்பரப்பு நல்ல தளமாக உதவியது.

ஊருக்குள்ளேயே, கோயிலுக்கு முன்புறமும், பிரகாரத்தி லும் பந்தாட்டத்தில் ஈடுபட்டார்கள் இளைஞர்கள். பெரியவ ரின் தூண்டுதலினால்தான்.

ஒரு காலத்தில், நாடகங்கள் போடுவது என்று பெரிய பிள்ளையும் ஊர் பிள்ளையாண்டான்களும் தீர்மானித்து அமர்க்களப்படுத்தி ஏதோ ஒன்றிரண்டு நாடகங்களும் நடித் தார்கள். நாடக ஒத்திகைக்கெல்லாம் அவர் வீடு இடம் கொடுத்தது.

அவர் வீட்டில் எப்பவும் பல பேர் கூடியிருப்பார்கள் சரி யான சோம்பல் மடம் அது. படுத்துத் தூங்குகிறார்களும், படித்துப் பொழுது போக்குகிறவர்களும் போக மற்றப் பேர் சீட்டாடி அந்த இடத்தைக் கலகலப்பாக வைத்திருப்பது வழக்கம்.

பிள்ளை மனைவி தடை எதுவும் சொல்வதில்லை. பிறகு அவள் செத்துப் போனாள். பெரியபிள்ளை வைத்தது சட்டம் என்றாகி விட்டது.

திடீர் திடீர் என்று அவர் கோஷ்டி சேர்த்துக் கொண்டு குற்றாலம், கன்னியாகுமரி, திருச்செந்தூர் என ஊர் சுற்றக் கிளம்பி விடுவார். திருவனந்தபுரத்துக்குக்கூட ஒரு சமயம் போய் வந்தார்கள்.

அப்புறம் பிள்ளைக்கு ஒரு ஐடியா உதயமாயிற்று. சுற்று வட்டாரத்தில் உள்ள மலைகள் மீதெல்லாம் ஏறி பார்த்து விட

வேண்டும் என்று ஆசைப்பட்டார். கூட வருவதற்கு ஐந்தாறு வாலிபர்கள் சேர்ந்தார்கள்.

அருகில் இருந்த வெள்ளிமலை, நத்தம் மலை என்று ஆரம்பித்து, சில மைல்கள் நடந்து போய் பல்லிக்கோட்டை மலை, வல்லநாட்டு மலை என்றெல்லாம் ஏறி பார்த்தார்கள். அவர்களுடைய உற்சாகம் அதிகரித்தது. தூரத்துப் பெரிய மலைகள் மீது ஏறிப் பார்ப்பது என்று திட்டம் தீட்டினார்கள் அவ்வப்போது 'வேன்' அமர்த்திக் கொண்டு பயணம். திருக் குறுங்குடி மலை, களக்காட்டு மலை, மேற்கு தொடர்ச்சி மலை மீது சில இடங்கள் என்று ஏறி மகிழ்ந்தார்கள். இரவு நேரங் களை மலை மேலேயே தங்கிப் போக்குவதற்கு அவ்விடங் களில் வசதிகள் இருந்தன. அதை எல்லாம் கவனித்து, தகுந்த முன்னேற்பாடுகள் செய்வதில் சின்னையா வல்லவராக இருந் தார். அதனாலும் அவரை 'பெரிய ஆளுதான்' என்று மற்ற வர்கள் வியந்து பாராட்டினார்கள்.

கால ஓட்டத்தில், பெரியபிள்ளையின் போக்குகளில் மாறு தல்கள் தாமாகவே தோன்றின. சில மாதங்களுக்கு ஒருமுறை அவர் சிவபுரத்திலிருந்து காணாமல் போய் விடுவார். பல வாரங்கள் அல்லது சில மாதங்கள் போன பிறகு திடீரென்று வந்து நிற்பார்.

'காஞ்சிபுரம் போனேன்... சென்னையில் கொஞ்ச நாள் தங்கியிருந்தேன்... பெங்களூர் போனேன்... மைசூர் போய் இருந்தேன்' என்று குதூகலம் பொங்கும் குரலில் சொல்லு வார். தனது அனுபவங்களை சுவாரஸ்யமாக விவரிப்பார்.

சுவையாகச் சொல்வதற்கு ரசமான விஷயங்கள் அவரிடம் நிறையவே இருந்தன. அதனால் அவரைச் சுற்றி எப்பவும் சில பேர் காணப்படுவது வழக்கம்.

வரவர அவர் விசித்திரமான எண்ணங்களை வெளியிடுவதாக மற்றவர்கள் கருதலானார்கள்.

—பாபநாசம் மலைமீது ஏறி, மேலே மேலே போய், தாமிரவர்ணி நதி பிறக்கிற இடத்தைக் காணவேண்டும். அங்கேயிருந்து புறப்பட்டு ஆற்றின் ஓரமாகவே நடந்துவந்து, அது போய் கடலில் கலக்கிற சங்கம் இடம் வரை போய் தரிசிக்க வேண்டும்.

—பொதிகை மலை மீது, எங்கோ ஒரு இடத்தில் அகத்தியர் இருந்து தவம் செய்ததாக சொல்கிறார்கள். இப்ப கூட அவர் இருப்பதாகப் பேசப்படுகிறது. அந்த இடத்தில் புதர் புதராகச் செடி கொடிகள் மண்டிக் கிடப்பதாகவும், கடந்து என்கிற விஷவண்டுகள் மொய்ப்பதாகவும் சொன்னார்கள். அது எவ்வளவு தூரம் நிசம் என்பதைக் கண்டறிய வேண்டும். யாராவது என் கூட வரத் தயாரா என்று கேட்பதை வழக்கமாக்கினார் அவர்.

எவரும் தயாராக இல்லை.

மீண்டும் ஒருநாள் பெரியபிள்ளை என்கிற சின்னயாப் பிள்ளை சிவபுரத்தில் இருந்து மறைந்து போனார். மாதக் கணக்கில் அவர் தலைகாட்டடவேயில்லை.

'பெரிசு பொதிகை மலையில் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கும்!' என்று சிலர் நக்கலாகப் பேசினார்கள்.

'அகஸ்தியர் இடத்துக்கே போய் கடந்து கொட்டி செத்து போயிருப்பார் பெரியவர்' என்று சில பேர் அபிப்பிராயப்பட்டார்கள்.

'தாமிரவர்ணியின் மூலத்தைக் காணப் போய் அவரே எங்காவது சறுக்கி விழுந்து ஐயோன்னு போயிருப்பார்' என்றும் சிலர் சொன்னார்கள்.

எல்லோரும் ஏமாந்து போனார்கள் ஒருநாள். யாருமே எதிர்பார்க்காத—எதிர்பார்க்க முடியாத—ஒரு காரியத்தைச் செய்திருந்தார் பெரியபிள்ளை.

திடீரென்று ஒருநாள் அவர் ஊருக்கு வந்து சேர்ந்தார். தனியாக அல்ல. 'கேரள நன்னாட்டிளம் பெண்' ஒருத்தியும் அவருடன் ஜோடி சேர்ந்து வந்திருந்தாள்.

'பெரியபிள்ளை அழகான கிளியைப் புடிச்சிட்டு வந்திருக்காரே!' என்று ஊர்க்காரர்கள் அதிசயித்தார்கள்.

'அறுபத்தஞ்சு—அறுபத்தாரு வயசு ஆகுதே இவனுக்கு. இந்த வயசிலே இவனுக்கு இப்படியா புத்தி போகணும்!' என்று ஊர்ப் பெரியவர்கள் அங்கலாய்த்தார்கள்.

அந்த அழகியை பார்த்து, பெரியபிள்ளையின் அதிர்ஷ்டத்தை எண்ணி, பெருமூச்சு விடாதவர்கள் அந்த ஊரில் யாருமே இல்லை என்று சொல்லலாம்.

'சின்னையாப்பிள்ளை பெரிய ஆளுதான்!' என்றே பலரும் குறிப்பிட்டார்கள்,

□

'சௌராஷ்டிரமணி' தீபாவளி மலர்—1988

கொலைகாரன்

கொலை அவன் கண்ணில் மிதந்தது. கொலை அவனுடைய கைவிரல்களில் துடித்தது. கொலை அவனது ஒவ்வொரு அங்கத்திலும் பதுங்கித் துறுதுறுத்தது.

கொலை அவன் எண்ணத்தில் இருந்தது. கொலை அவனது உள்ளத்தில் உறைந்திருந்தது. கொலை அவனுடைய தேக ரத்தத்திலே கிளுகிளுத்துக் கொண்டிருந்தது. அவன் காலடிகளில் அது பம்பி நகர்ந்தது.

அப்பொழுது இரவு மணி பத்து. உலகம் இருளில் குளித்துக் கிடந்தது. கொலை எனும் நினைப்பிலே ஊறியிருந்தான் அவன்.

நசுநசுவென்று அழுகுணித்தூறல் சிணுங்கிக் கொண்டிருந்தது. ரஸ்தாப் பரப்பு எங்கும் தண்ணீர் தெளித்து விட்டது போலிருந்தது. அது வேர்வையில் குளித்தது போலுமிருந்தது.

சிறிது தொலைவுக்கு ஒன்றாக நின்ற எலெக்ட்ரிக் கம்பங்களில் ஒளிப்பூ பூத்துத் தொங்கியது. நசுநசுத் தூற்றல் அற்புதப் பூச்சிகள்போல் மினுமினுத்தது. விளக்குகளின் கண்ணீர்த் திவலைகள் போலுமிருந்தது.

வானத்திலே நட்சத்திரங்கள் இல்லை. கொலைப்பசி கொண்ட ஓநாய்க் கூட்டங்கள் போல மேகங்கள் திரிந்து கொண்டிருந்தன.

பூமியில், அந்தகாரத்தினுள் சுவர்கள் தரும் அடக்கமான இருளினுள்ளே, விதவிதப் பசிகளைத் திருப்திப்படுத்துவதிலும் திருப்திப்படுத்த முடியாத ஏக்கத்திலும் மனித உருவங்கள் புரளும் வேளை.

அந்நேரத்தில் அவன் தனியனாய், கொலையின் உலவும் உயிர்ப்பிம்பமாய், கொலையின் நினைவே ஆகி, ஒரு மனித ஓநாய் போல நடந்தான்.

அவன் கண்களிலே கொலை இருந்தது. அவன் கருத்திலே கொலை நெளிந்தது. மூடிமூடித் திறக்கும் அவனது கைகளிலே கொலை நர்த்தனமிட்டுக் கொண்டிருந்தது.

அவன் யாரையாவது கொலை செய்திருக்க வேண்டும். அல்லது இனி எவரையாவது அவன் கொலை செய்யலாம். கொலை அவனைச் சுற்றிக் கவிந்திருந்தது. அதே நினைப்போடு நடந்து கொண்டிருந்தான் அவன்.

தூற்றல் அவனுக்குப் பெரிதல்ல. மனித இனத்தின் வசைத் தூற்றல் தான் அவனை வதைத்தது. சுட்டது. உணர்வுக் கொதிப்பு உண்டாக்கியது.

ஒளியை வட்டங்களாக வரைந்து காட்டும் மின்சார விளக்கின் கீழே அவன் நடக்கும் போது, அவன் மூஞ்சி பளிச்சிட்டது. குரூரத்தின் சித்திரம் அது.

மூக்கு சப்பையாக இருந்தது. மேல் உதடு முயல் உதடு போலிருந்தது. பற்கள் வெளியே நீண்டிருந்தன.

கன்னங்களில் குழிகுழியாக அம்மைத் தழும்புகள் படிந்திருந்தன.

ஆகவே, மனிதர்கள் பரிகசித்தார்கள். அவற்றின் தழும்புகள் சூட்டுக் காயங்கள் போல படித்துவிட்டன அவன் இதயத்திலே.

அவன் குள்ளமாக இருந்தான். அவன் மனமும் குள்ளமாகவே இருந்து விட்டது.

நச்சுக் காற்றுடன் நகர்ந்து செல்லும் பாம்பு போல் ஊர்ந்து கொண்டிருந்தான் அவன். அவனுடைய நடை விசித்திரமாக இருந்தது. காரணம், ஒரு பாதம் கோணிக் குறுகி இருந்ததுதான்.

எனவே, அவன் உள்ளமும் கோணிக்குறுகி இருந்தது அங்கு கொலை குடியிருந்தது.

அவன் முதுகு கொஞ்சம் கூனி இருந்தது. ஆகவே அவன் உள்ளமும் கூனல் காட்டியது. அங்கு நேர்மைக்கு இடமே இல்லை.

ஆள் நடமாட்டமற்ற ரஸ்தாக்களைக் கடந்து நடந்தான் அவன். மூலைகளையும் முடுக்குகளையும் தாண்டி நடந்தான்.

அவன் நடையிலே நல்லதனம் இல்லை. அவன் உடையிலே நல்ல தன்மை இல்லை. அவன் தோற்றத்தில் நல்ல பண்பு இல்லை. அவன் எண்ணத்திலும் நல்லது கலந்திருக்கவில்லை.

அவன் பார்வையிலே பட்டது—

ஒரு வீட்டுக் கதவு திறக்கப்பட்டது. ஒரு மனிதன் உள்ளே போனான். கதவு அடைக்கப்பெற்றது. நன்றாகச்

சாத்தப்படவில்லை. உள்ளே இருந்து விளக்கொளி இடை வெளி வழியாகத் தெருவை எட்டிப்பார்த்தது.

அவன் கஞக்குச் சிரிப்பை எறிந்தான். கால்களை வேகமாக எட்டிப் போட்டான்......

தன்பின்னால், தன் மீது கண் பதித்தபடி யாரோ நிற்பதாக உணர்வுகள் எடுத்துச் சொல்லவே, டாக்டர் மாதவன் திரும்பிப் பார்த்தார்.

'கதவை தாளிடாமல் விட்டது தப்பு' என்றது அவர் மனம்.

அவர் பார்வை அறிமுகம் செய்து வைத்த தோற்றம் அவரைச் சற்றே திடுக்கிடச் செய்தது. பிசாசோ என்ற மயக்க நினைப்பு ஒருகணம். மனித உருவம்தான் என்று தெளிந்தது அறிவு. விநோதமான உடலமைப்பு, விசித்திர மான முகத்தோற்றம் என்றது மனம். எனினும் அவர் முகம் சலனமற்ற தன்மையையே காட்டியது.

டாக்டர் மாதவன் மனத்துணிவு பெற்றவர். எந்த நெருக்கடியையும் திறமையாகச் சமாளிக்கும் சாதுர்யம் உடையவர். எதிரே இருப்பவர்களைப் பார்வையால் எடைபோடும் திறமை உள்ளவர்.

அவனைப் பார்த்ததுமே அவன் நல்ல எண்ணத்தோடு வரவில்லை என்பது அவருக்குப் புரிந்தது. அவன் கண்களிலே அவர் குரோதத்தையும் கொலைத்துடிப்பையும் மாத்திரமே கண்டாரில்லை. அக்கண்களின் கரிய ஆழத்திலே, அவனுடைய உள்ளச் சுழிப்பின் சிற்றலைகள் படிந்து பிரதி பலிப்பதையும் கண்டார். அவனைப் புரிந்து கொண்டவர் போல் தலையசைத்தார்.

அவன் நின்றான். வெறிநாய் பாய்வதற்கு முன் பார்த்து நிற்பது போல.

'வாருங்கள் ஐயா வாருங்கள். அகால நேரம்தான். ஆனாலும் டாக்டருக்குக் காலம், அகாலம் என்ற கணக்கு ஏது! இப்படி வந்து உட்காருங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று பேசினார் டாக்டர். வைத்திய உதவி பெற வந்த நபரை வரவேற்பது போல் அவனை அவர் வரவேற்றார்.

அவன் எதிர்பாராதது அது. திகைப்புற்றான் அதனால். தன் பின்னால் யாராவது நிற்கிறார்களோ, டாக்டர் அவரைத்தான் வரவேற்கிறாரோ என்று ஐயுறுபவன் போல் திரும்பி நோக்கினான். அங்கு யாருமில்லை. அவன் டாக்டரை உற்றுக் கவனித்தான்.

டாக்டர் அவனைப் பற்றிக் கவலை கொண்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை. பயமோ, சந்தேகமோ, வெறுப்போ— எவ்வித உணர்வுமே இருந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. தன் பாட்டுக்குத் தனது அலுவல்களில் ஈடுபட்டவர் போல் நடித்தார். எனினும் அவர் கண்காணிப்பு அவன் மீதே நிலைத்திருந்தது.

அவன் அசையாது நின்றான். எரிந்து விழுந்திருந்தால், 'போடா வெளியே!' என்று சீறி ஏச்சையும் கலந்து வீசியிருந்தால், அவன் குழம்பியிருக்கமாட்டான். அவர் மீது பாய்ந்திருப்பான். ஆனால் அவர் தந்த வரவேற்பு— அவர் கையாண்ட முறைகள்— அவனுக்குப் புதியன.

மோகன முறுவல் பூத்தார் டாக்டர். 'என்ன நண்பரே, ஏன் தயங்குகிறீர்கள்? இடம் தவறி நுழைந்து விட்டீர்களா? நீங்கள் என்னைத் தேடித்தான் வந்தீர்களோ என்று எண்ணி விட்டேன். நான் டாக்டர்... டாக்டர் மாதவன்...'

கோட்டைக் கழற்றி ஸ்டாண்டிலே மாட்டினார். நிதான மாக நாற்காலியில் அமர்ந்து, கால்மேல் கால் போட்டுக் கொண்டு, மேஜை மீதிருந்த சிகரெட் டின்னிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்தார். 'சிகரெட் எடுத்துக் கொள்ளுமேன், மிஸ்டர்!' என்று டின்னை அவன் பக்கம் நகர்த்தினார். தன் சிகரெட்டை பற்ற வைத்து, அலட்சியமாகப் புகைக்க லானார்.

அவன் அசையவில்லை. வாய் திறக்கவில்லை. சலன மற்ற அவன் கண்கள் அவரையே பார்த்தன. அவரைப் பாராதது போலும் தோன்றின. உயர்ந்த அந்தஸ்தில் உள்ள அந்த டாக்டர் — தன்னைக் கேலி பண்ணுகிறாரா; ஏமாற்றி ஆபத்திலே மாட்டி வைப்பதற்காக இவ்வளவு இனிமையாகப் பேசுகிறாரா; அல்லது தனது உண்மைத் தன்மையை உண ராத குறையினாலேதான் உபசரிக்கிறாரா? அவனால் தீர் மானிக்க முடியவில்லை.

டாக்டரின் போக்கை அவனால் புரிந்து கொள்ள இயல வில்லை. 'என் குணமும் நோக்கமும் அவருக்குப் புரியாமல் இருக்கலாம். என்னுடைய தோற்றம்? அது கூடவா அவர் கண்ணில் படவில்லை? அவர் முகத்திலே வெறுப்பு தோன்ற வில்லையே?' அவனது மனச் சிலந்தி இப்படி எண்ண இழை ஓடவிட்டது.

அவன் பெற்றிராத புதிய அனுபவம் அது. அவனைக் கண்டு, அவனது குரூரத்தைப் பார்த்து, கேலிச் சிரிப்பு சிந்து வதே மக்களின் இயல்பாக இருந்தது. சிறுவர்களும் பெரிய வர்களும் பரிகசித்து மகிழ்ந்தார்கள். சிறுபிள்ளைகளுக்கு 'பூச்சாண்டி காட்டி' பயமுறுத்தவும் அவன் உருவம்தான் துணைபுரிந்தது. அருவருப்பு தரும் பறைநாயைக் கண்டு ஒதுங்குவது போல, அவனைப் பார்த்ததும் விலகிச் சென் றார்கள் பலர். குஷ்டரோகி மீது வீசுகிற பார்வையைத்

தான் அவன் பேரிலும் விட்டெறிந்தார்கள் மனிதர்கள். எவர் வீட்டிலாவது போய் குடிக்கத் தண்ணீர் கேட்டால் கூட, எரிந்து விழுந்து விரட்டினார்களே தவிர இன்முகம் காட்டி வரவேற்றதில்லை. இதனால் எல்லாம் அவன் உள்ளம் குமைந்து புழுங்கியது. ஜனங்களை வெறுக்கலானான்.

குரூரமானவர்களும் கொடுநோய்க்காரர்களும் பணபலத்தினால் மிகுந்த செல்வாக்குடன் இருந்து, பலரோடும் சகஜமாகப் பழகி வாழ்வதை அவன் உணராமல் இல்லை. பகட்டான ஆடை அணிகளாலும் வாசனைப் பூச்சுகளாலும் அழகு படுத்திக்கொண்டு, அவர்கள் மேனாமினிக்கிகளோடும் சரசாங்கிகளோடும் சிரித்துப் பேசிக் களிப்பதை அவன் அறியாமல் இல்லை. அவன் அவர்களது நிலையில் இல்லாத காரணத்தால் அவன் ஏழையாய் திரிந்ததனால், பெண்கள் கூட அவனை வெறுத்தார்கள். காசுக்கு உடலை விற்கத் தயங்காத தொழிற்காரிகளும், இன்பத்துக்காக எவனோடும் போகத் தயாராகி விடுகிற காமவல்லிகளும் கூட அவனைக் கண்டு முகம் சுளித்தார்கள். வெறுத்துப் பேசி விரட்டினார்கள். ஆகையினால் ஜனத்துவேஷியாய் வளர்ந்துவிட்டான் அவன்.

அன்புக்காக, அனுதாபத்துக்காக, அவன் உள்ளம் ஏங்கிய தினங்கள்தான் எத்தனை? தனது தன்மையை எண்ணி எண்ணிக் குமைந்து புழுங்கிக் குமுறிக் கொதித்து, பித்தனாய் பேயனாய் வெறியனாய் மாறிவிடவில்லையா அவன்?

பழி வாங்கும் பண்பினன் ஆயினான். 'கொலை பண்ணு! கண்டவனை எல்லாம் கொல்லு! உன்னை வெறுக்கும் மனித இனத்தில் வந்தவர்களைக் கொல்லு! மூட்டைப் பூச்சிகளை நசுக்குவது போல, சிலந்தியைக் கொல்லுவது போல, தேள்களையும் கரப்பான் பூச்சிகளையும் அடித்துக் கொல்வது போல— கொல்லு!... கொல்லு!... கொல்லு!'

அவன் உள்ளத்தில் சைத்தான் குடிபுகுந்து விட்டான். அவனே வெறி நிறைந்த ஒரு 'ஹைடு' ஆக ஓங்கி விட்டான்... ...

வெறுப்பின் விளைவாக, கொடுமையின் நினைப்போடு, வந்து நின்ற அந்நியனின் கண்களிலே அவன் உள்ளத்தை உணர்ந்தார் டாக்டர் மாதவன். அவனைப் போன்ற மனிதர்கள் எத்தனையோ பேரை ஆராய்ந்து அறிந்தவர்தானே அவர்!

அன்புப் பசியுடன் தவித்த அவனுக்கு அன்பான உபசரணை தரத்துணிந்தார். சக மனிதனின் அனுதாபத்துக்கு ஏங்கிய அவனை ஒரு மனிதனாக ஏற்று மதிக்க முன்வந்தார் அவர்....

அவன் திகைப்புற்றுச் செயலற்று நின்றான். 'ஏன் இப்படி மலைத்துப் போய் நிற்கிறீர்கள்? இங்கு உட்காருங்கள், ஐயா... அடடா மறந்தே போனேன். நீங்கள் சாப்பிடவில்லை என்று தெரிகிறது. உட்கார்ந்து சாப்பிடுங்கள். சோறு இருக்காது என்றே நினைக்கிறேன். கொஞ்சம் இட்லி இருக்கிறது. பழங்களும் தருகிறேன். சாப்பிட்டு விட்டு, நீங்கள் விரும்பினால் இங்கேயே படுத்துக் கொள்ளலாம். வெளியே எங்காவது போக விரும்பினாலும் போகலாம்...'

மாதவன் அன்பு கலந்த குரலில் பேசினார், அது அவனை, திக்குமுக்காடச் செய்தது. அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. சிலை போல் நின்றான். டாக்டர் எழுந்து அவன் அருகில் வந்தார். அவன் இரண்டு எட்டுகள் பின்னால் நகர்ந்தான். அவர் அவன் தோள் மீது நட்பு முறையில் கை பதித்து, குழந்தையின் முகத்தை நோக்கிச் சிரிப்பது போல் சிரித்தபடியே பேசினார்: 'ஏன் பயப்படுகிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்? தயவு செய்து ஏதாவது

சொல்லுங்களேன். தேடி வந்து இப்படி மௌனம் சாதித்து நின்றால்?...' அந்த மனிதன் கண்களில் நீர் துளிர்த்தது. அவன் ஏதோ பேச விரும்பியவன் போல் வாயைச் சற்றே திறந்தான். உதடுகள் துடித்தன. சட்டென்று, அவன் தன் கையிலே மறைத்து வைத்திருந்த கத்தியைக் கீழே வீசி விட்டு, திரும்பி வாசல் வழியே ஓடினான். திரும்பிப் பாராமலே ஓடினான். வெளி இருளில் கரைந்து விட்டான். பெருமூச்செறிந்தார் மாதவன்.

'அவன் பைத்தியமாக இருக்கலாம். ஹைப்போக் காண்ட்ரியாக்—பாராநியாக்—ஏதோ ஒரு மேனியாக்! எப்படி இருந்தாலும், அவன் ஒரு மனிதன் தானே? மனிதக் கடலிலே நிலை இழந்து தவிக்கும் ஒரு சிற்றலை! இப்படி அவர் மனம் முணங்கியது. அவர் கைகளோ அவசரமாக கதவை நன்றாகச் சாத்தித் தாளிட்டன.

□

எதிர்பாராத அனுபவம்

சுயம்புலிங்கத்துக்கு அந்த அனுபவம் முற்றிலும் புதுமையானதாக, விசித்திரமானதாக— ஏமாற்றமும் வேதனையும் தருவதாகக் கூட அமைந்து விட்டது.

டவுனுக்கு வந்தவன், இரவை ஒரு லாட்ஜில் தங்கிக் கழிப்பதை விட, பக்கத்துச் சிற்றூரில் வசித்த தெரிந்தவர் ஒருவரை சந்தித்து அவர் வீட்டிலேயே பொழுதைப் போக்குவது நல்ல அனுபவமாகக் கூடும் என்று எண்ணினான். திடீரென்று அவர் முன்னே போய் நின்றால் ஏற்படக் கூடிய ஆச்சரியம் சந்தோஷம் முதலியவற்றை நினைக்கையில் அவனுக்கு ஒரு கிளுகிளுப்பு ஏற்பட்டது.

அவனைப் பார்த்தால் அவர் நிச்சயம் பெரும் மகிழ்ச்சி கொள்வார். வாருமய்யா, வாரும் என்று ஆவிச் சேர்த்துக் கட்டித் தன் அன்பைக் காட்டி, மரியாதையோடு வரவேற்பார். தொடர்ந்து வருகிற உபசரிப்புகளுக்குக் குறைவே இராது. ராத்திரி தூங்கவா முடியும்? படித்தவை, எழுதியவை, புதிய புத்தகங்கள்,பழைய பத்திரிகைகள், தெரிந்தவர்கள் என்று பலப்பல விஷயங்களைப் பற்றியும் பேச்சு வளரும். அண்டை அயல் வீடுகளில் அரவம் அடங்கி, தெரு இயக்கம் ஒடுங்கி, ஊரே உறக்கத்தில் ஆழ்ந்து விடுகிற இரவின் ஆழத்திலே அவர்கள் இருவருடைய குரல்கள் மட்டும் ஓயாது ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

இப்படி நினைத்த போதே சுயம்புவின் மனசு குளுகுளுத்தது. பஸ்சுக்காகக் காத்து நின்ற அலுப்பு கூடப் பெரிசாகத் தோன்றவில்லை.

—டவுணிலிருந்து அஞ்சு மைல் தள்ளியிருக்கிறது. அந்த ஊர். ‘டவுண் பஸ்’ அடிக்கடி போகும். அமைதியான ஊர். வசதியான வீடு...

நண்பர் வகுளபூஷணம் தன் ஊரைப்பற்றி ஒருமுறை சொல்லியிருந்தது, சுயம்புவின் நினைவில் மின்னலிட்டது.

‘வகுளம் கொடுத்து வைத்தவர்! சுகவாசி. பிக்கல் பிடுங்கல்கள் கிடையாது. அதனால் அவர் மனம் போல் அமைதியாக ஆனந்தமாக நாளோட்ட முடிகிறது’ என்று சுயம்பு எண்ணிக் கொண்டான்.

நம்ம ஊருக்கு ஒரு தடவை வாருமேன்! இரண்டு மூன்று நாட்கள் தங்கும்படியாக வந்து சேரும். ஊருக்குப் பக்கத்திலே ஆறு ஓடுகிறது. அழகான சூழ்நிலை, வந்து, பார்த்து, ரசித்து, மகிழ்ச்சி அனுபவம் பெறலாமே!

வகுளபூஷணம் ஒரு கடிதத்தில் இப்படி எழுதியிருந்தார். பிறகும் அவ்வப்போது அழைப்பு விடுத்து எழுதினார். நேரில் சந்தித்த போதும் சொன்னார். சுயம்புலிங்கத்துக்கு இது வரை நேரமும் எப்பொழுதும் வாய்ப்பாகவில்லை. இப்போது தான் சமயம் கிட்டியது.

அந்த நகரத்துக்கு ஒரு முக்கிய வேலையாக வர நேர்ந்த போது, அப்படியே சிவபுரம் சென்று வகுளபூஷணத்தைப் பார்த்து, இரவில் அங்கே தங்கியிருந்து பேசிப் பொழுதைப் பொன்னாக்கலாமே என்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. அதிகாலையில் வகுளபூஷணத்துடன் எழுந்து ஆற்றுக்குப் போய் ஜில்லென்று நீராடி, சூழ்நிலை இனிமையை ரசிக்கலாம்.

வெகுநேரம் காத்து நின்ற பிறகு பஸ் வந்தது. அந்த நேரத்திலும் கும்பல் சாடியது. சுயம்பு தாக்குப் பிடித்து ஏறி பஸ்சில் வசதியான ஒரு இடம் பிடித்துக் கொண்டான். அவனது மனம் அதன் இயல்புப்படி என்னென்னவோ எண்ணி, எங்கெங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

இருட்டுக் காலம். ஓடும் பஸ்சின் முகப்பு விளக்குகளின் ஒளி வெளிச்சமிட்டுக் காட்டிய ரோட்டுப்பகுதி தவிர்த்த ஏனைய இடவெல்லாம் இருள் போர்வை போர்த்து சுகநித்தி ரையில் மூழ்கியிருந்தது. வழியில் அங்கங்கே பஸ் நின்றது. பலபேர் இறங்கி இருளோடு இருளாயினர்.

ஏதேதோ ஊர்கள். பகல் வேளையில் பயணம் செய்தால் என்ன ஊர், எப்படிப்பட்ட இடம் என்று தெரியும்... எல்லாம் ஊர்களே, எங்கும் மனிதர்கள்... யாதும் ஊரே, யாவரும் கேளிர் ...

ஒரு திருப்பத்தில் பஸ் நின்றதும், உள்ளே இருந்தவர் களில் முக்கால்வாசிப் பேர் கீழே இறங்கிவிட்டார்கள். இரண்டு மூன்று பேர் ஏறினர்.

பஸ்சின் உள்விளக்கு வெளிச்சத்தில் வெறுமை பளீரெனப் புலனாயிற்று.

'இடைவழி ஊர்க் கும்பல் தான் அதிகம்னு தெரியுது. வகுளபூஷணம் ஊருக்கு அதிகமான ஆட்கள் போகவில்லை' என்று சுயம்புவின் மனம் குறிப்பு எழுதியது.

சுயம்பு ஊரின் எல்லையில் இறங்கிக் கொண்டான். கிழக்கு நோக்கி நெளிந்து வளைந்து கிடந்த ராஸ்தாவில் பஸ் ஓடித் திரும்பி மறைந்தது.

சுயம்புலிங்கத்துக்கு இப்போதுதான் பிரச்னை தலை தூக்கியது. வகுளத்தின் வீட்டை எப்படிக் கண்டுபிடிப்பது? தெருப் பெயர் கூடத் தெரியாதே!

'வகுளபூஷணம், அன்பகம், சிவபுரம், மாவட்டம்' இது தான் சுயம்பு அறிந்திருந்த முகவரி. அவன் அனுப்பிய தபால்கள் தவறாது போய்ச் சேர்ந்தன. பதில்களும் வந்து கொண்டிருந்தன.

ஊருக்குள் வந்து இறங்கியதும்தான் நண்பரை கண்டு பிடிக்க இது போதுமான விலாசம் இல்லை என்ற உணர்வு சுயம்புவுக்கு ஏற்பட்டது. அவருக்குக் கடிதம் எழுதி விவர மாக அடையாளங்கள் தெரிந்து கொண்டு வந்திருக்க வேண் டும் என்ற எண்ணம் இப்போது சுயம்புவின் உள்ளத்தில் ஊர்ந் தது.

மணி 9-40 ஆகியிருந்தது, வீதிகள் வெறிச்சிட்டுக் கிடந் தன. கடைகள் எதுவும் திறந்திருக்கவில்லை. ஊர் சுமாரானது தான். ரொம்பப் பெரிது ஒண்ணுமில்லை.

கால்போன போக்கில் நடந்தான் அவன்.

'இந்த ஊரில் எல்லோருமே எட்டரை, ஒன்பது மணிக்குள் தூங்கப் போய் விடுவார்கள் போலிருக்கு. ஒரு வீட்டில் கூட வெளிச்சம் தெரியலியே!'

அவன் நடந்தான்.

ஒரு வீட்டுத் திண்ணையில் இரண்டு பேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுயம்பு அவர்கள் அருகே போனான்.

'யாரு? என்னா?' என்று ஒருவன் அதட்டினான். அதட்ட லில் கூட சந்தேகமும் ஒருவித பயமும் கலந்து ஒலித்ததாகத் தோன்றியது.

'வகுள பூஷணம் வீடு எங்கே இருக்கு?' என்று சுயம்பு கேட்கவும், வகுளபூஷணமா?—'எந்தத் தெரு?' என்று இழுத்தது திண்ணைக் குரல்.

'தெருப்பேரு தெரியாது. அன்பகம்னு விலாசம். வகுள பூஷணம், அன்பகம்னுதான் தபால்களை அனுப்புறது...'

'அப்ப தபாலாபீசிலே போய் கேளுங்க... அந்தா ரெண்டாவது லைட் போஸ்டு கிட்டே ஒரு தெரு போகுதே. அதிலே கடைசியிலே இருக்குது 'தபாலாபீசு' என்று வழி காட்டினார் திண்ணை நபர்களில் ஒருவர்.

'இப்போ தபாலாபீஸ் திறந்தா இருக்கும்?'

'அடைச்சுத்தான் கிடக்கும். ஆனா உள்ளே ஆள் இருக்கும். அது தந்தி ஆபீசும் கூட. அதனாலே எப்பவும் அங்கே யாராவது ஒருவர் இருப்பாரு' என்று அருள் புரிந்தார் மற்றவர்.

சுயம்பு போனான்.

தபாலாபீஸ் கதவை தட்டினான். 'ஸார், ஸார்!' என்று கத்தினான்.

'யாரது?' என்று குரல் வெடித்தது. உள்ளே மின்விளக்கின் ஒளி படர்ந்தது. கதவு திறக்கப்பட்டது. வெளியே பாய்ந்து சிரித்த ஒளியோடு ஒருவர் எட்டிப் பார்த்தார். 'என்ன?, என்ன வேணும்?' அதிகாரக் குரல்.

'வகுளபூஷணம், அன்பகம். அவரைப் பார்க்க வந்தேன் அவர் வீடு எங்கே இருக்குன்னு தெரியலே. இங்கே விசாரித்தால் தெரியும்னு ஒருவர் என்னை இங்கே அனுப்பினார்.'

மற்றவர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். 'எங்கே இருந்து வாறீங்க?' என்று கேட்டார்.

'டவுணிலேயிருந்து'

'டவுன் தான் உங்க ஊரா?'

'இல்லை' என்று கூறி சுயம்பு தனது ஊரின் பெயரை சொன்னான்

'உங்க பேரு என்ன?'

ஒரு அந்நியர் தன்னை குறுக்கு விசாரணை செய்வது சுயம்புவுக்குப் பிடிக்கவில்லை. மேலும் தன் பெயர் ஒரு மாதிரி யாக இருப்பதாக மற்றவர்கள் எண்ணுவார்கள் என்ற சந் தேகம் அவனுக்கு எப்பவும் உண்டு. அதனால் அவன் தன் பெயரை சொல்ல விரும்பவில்லை. 'ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்வாதே' என்ற பழமொழி அவன் உள்மனசில் சதா வேலை செய்து கொண்டிருந்தது.

'நான் வகுளபூஷணத்தின் நண்பன். அவர் வீடு எந்தப் பக்கம்னு சொன்னால்...' என்று இழுத்தான்.

'நீங்க வர்றதா அவருக்கு லெட்டர் போட்டிருந்தீங்களா?'

'இல்லே. திடீர்னு டவுணுக்கு வந்தேன். அப்படியே இங்கே வந்து அவரையும் பார்த்து விட்டு போகலாமேன்னு...'

'அது சரி. வகுளபூஷணம் ஊரிலே இல்லே.'

திக்கென்றது சுயம்புவுக்கு. 'ஊரிலே இல்லையா?' என்று பதறினான்.

'அவர் வெளியூர் போயி ஒரு மாசத்துக்கு மேலே ஆச்சு. திரும்பி வர நாளாகும்.'

சுயம்பு குழப்பமடைந்தான். 'வகுளபூஷணம் ஊரிலே இல்லையா? வெளியூர் போயிட்டாரா?' என்று முணுமுணுத்தான்.

'ஆமா, அவர் அடிக்கடி எங்காவது வெளியூர் போயிடுவார். எப்ப போவார், எப்ப வருவார்னு சொல்ல முடியாது...'

'ஊம்ங்' என்று பெருமூச்சு உயிர்த்தான் சுயம்பு. என்ன சொல்வது, என்ன செய்வது என்று அவனுக்குப் புரியவில்லை.

விளக்கு வெளிச்சத்தையே வெறித்துப் பார்த்தபடி நின்ற சுயம்புவை கவனித்து நின்ற அலுவலரும் ஒன்றும் பேசவில்லை.

'வகுளபூஷணம் ஊரிலே இருப்பார்னு நினைத்தேன். அவர் இல்லையா?' என்று பல நிமிடங்களுக்குப் பிறகு சொல் உதிர்த்தவனை மற்றவர் கூர்ந்து நோக்கி நின்றாரே தவிர, அவராக ஒன்றும் சொல்லவில்லை,

'அவர் வீடு எங்கே இருக்கு? அதைக் காட்டினால் உதவியாயிருக்கும்' என்றான் சுயம்பு.

'இப்ப அந்த வீட்டிலே யாருமே இல்லை. சும்மா பூட்டித்தான் கிடக்கும்.'

'வீடு எங்கே இருக்குதுன்னு பார்த்துக் கொண்டால், இன்னொரு முறை வந்தால் வசதியாக இருக்குமே. அதுதான்!'

மற்றவர் உள்ளே திரும்பி, 'முருகா!' என்றார்.

ஒரு ஆள் வந்தான். வேலைக்காரன்.

'இவர் கூட போயி, வகுளபூஷணம் வீட்டைக் காட்டு' என்றார் அலுவலர். 'அங்கே நீங்க தங்க முடியாது. வீட்டிலே யாரும் கிடையாது... இந்த ஊரிலே வேறே யாரையாவது தெரியுமா?'

'தெரியாதே!'

'அப்ப நீங்க டவுனுக்குத் திரும்பறதுதான் நல்லது. கடைசி பஸ் பத்தரை மணிக்கு இருக்கு. இப்போ பத்தே காலாச்சு. நேரே பஸ் ஸ்டாப்புக்குப் போனா லாஸ்ட் பஸ்ஸை பிடிச்சிடலாம்.

'முதல்லே அவர் வீட்டைப் பார்த்துக் கொள்கிறேன்' எனக் கூறி சுயம்பு நகர்ந்தான்.

'உங்க பேரு என்னன்னு நீங்க சொல்லவே இல்லையே?' என்று குறிப்பிட்டார் மற்றவர்.

'அது உங்களுக்கு என்னத்துக்கு!' என்று சொல்லி நடந்தான் சுயம்பு.

அவர் 'முருகா!' என்று சுயம்புவோடு நடந்த ஆளை அழைத்தார்.

'அவன் அவர் அருகே வந்ததும் அவர் சொன்னார்: தணிவான குரலில்தான் பேசினார். இந்த ஆளைப் பார்க்கையிலே சந்தேகமா இருக்குது. குடிச்சிருப்பான்னு தோணுது. கொஞ்சம் எச்சரிக்கையாயிரு, அந்த வீட்டிலே என்ன செய்யப் போறானோ.'

'அன்பகம்', ஊரைப் போலவே இருட்டில் அமைதியாகத் தூங்கி நின்றது.

சுயம்பு பக்கத்தில் போய் பார்த்தான். கதவில் தொங்கிய பெரிய பூட்டை இழுத்துப் பார்த்தான். இப்படி ஆகும் என்று அவன் கற்பனை கூடப் பண்ணவில்லை. ஆகிவிட்டது! இனி என்ன செய்ய?

'இந்த ஊரிலே ஓட்டல் எதுவும் கிடையாதோ?' என்று அவன் முருகனிடம் கேட்டான்.

'கிளப்புக் கடையா'...ஊகும். இரண்டு டீக்கடை உண்டு, பஸ்டாப்பிலே ஒண்ணு, வடக்குத் தெருவிலே ஒண்ணு... ரெண்டுமே ஏழு, ஏழரைக்கெல்லாம் குளோஸ் ஆகிவிடும்' என்று முருகன் விவரித்தான்.

'கோயில்... பூசை பண்ணுகிற ஐயர் வீடு? சாப்பிட ஏதாவது கிடைத்தால், சாப்பிட்டு விட்டு, கோயிலில் படுத்துக் கொள்ளலாம்...'

'அதெல்லாம் வசதிப்படாது ஐயா, முன்னெக் கூட்டியே சொல்லியிருந்தால், ஐயரு ஏதாவது ரெடி பண்ணித் தருவாரு. திடீர்னு போனா எதுவும் கிடைக்காது. நீங்க கடைசி பஸ்ஸை புடிச்சு டவுனுக்குப் போறதுதான் நல்லது' என்று முருகன் சொன்னான்.

சுயம்புலிங்கம் தயங்கித் தயங்கி நின்றான். சிறிது நகர்ந்தான். குழம்பினான். 'அவருக்கு லெட்டர் எழுதி, அவர் ஊரிலே இருப்பாரா என்று தெரிந்து கொண்டு வந்திருக்கணும். நான் முட்டாள்தனம் பண்ணிவிட்டேன்' என்று சுய விமர்சனம் செய்தது அவன் மனம்.

வீடு இருந்த ஒதுக்குப் புறத்தை விட்டு நடந்து தெருவுக்கு வந்தார்கள் இரண்டு பேரும்.

தெருவில் ஒரு ஒளிவட்டம் நகர்ந்து வந்தது. டார்ச் லைட் வெளிச்சம். 'முருகா!' என்ற குரல் வந்தவரைக் காட்டிக் கொடுத்தது.

'ஸார்?' என்றான் முருகன்.

'போனவங்களைக் காணோமே; இருட்டு நேரத்திலே, ஆள் இல்லாத வீட்டிலே என்ன செய்றாங்கன்னு பார்க்க வந்தேன்' என்றார் அலுவலர்.

முன்னே விரைந்து சென்ற முருகன், 'அவரு கோயிலைப் பற்றி விசாரித்தாரு. ஐயரு வீட்டைக் கேட்டாரு' என்றான்.

'சிலை திருடுகிற நோக்கம் இருக்குமோ? ராத்திரி வேளையிலே, இவ்வளவு நேரத்துக்கு வந்து...' மற்றவர் மெதுவாகத்தான் பேசினார். இருப்பினும், சொற்கள் சுயம்புவின் காதுகளைத் தொடாமலில்லை.

'வாறேன், சார். பஸ் கிடைக்கும்னு நினைக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, சுயம்பு வேகமாக நடந்தான்.

'அவன் பஸ்சுக்குத்தான் போறானான்னு கவனி முருகா!' என்று கூறிவிட்டு, திரும்பி நடந்தார் மற்றவர்.

சுயம்புலிங்கம் பஸ் வரும் ரஸ்தாவை நோக்கி விரைந்தான். எங்கிருந்தோ ஒரு நாய் குரைத்தது. அதை ஏற்று, மேலும் இரண்டு மூன்று நாய்கள் குரைத்தன.

அவன் வேகமாக நடக்க அஞ்சினான். நாய்கள் பாய்ந்து வந்து தாக்கக்கூடும் என்ற பயம் அவன் இதயத்தில் உதைத்தது.

சிறிது தூரம் இருக்கையில், பஸ் சீறிப் பாய்ந்து வேக மாக முன்னேறிச் சென்றது, அவனுக்குத் தென்பட்டது. அதன் உறுமல் கனத்துத் தேய்ந்து காற்றில் கலந்தது.

'ஓடிப் பிடிக்கக் கூடிய தூரம் இல்லை? என்றது மனம். ஓடினால் நாய்கள் கடிக்க வந்தாலும் வரும் என்றும் அது பயந்தது.

வேறு வழியில்லை, நடக்க வேண்டியதுதான். இரண்டு மைலுக்கப்பால், திருப்பத்தில், ரொம்பப் பேர்கள் இறங்கி னார்களே, ஒரு தொழில் நகரம் ஏகப்பட்ட வெளிச்சமும் பர பரப்பும் கடைகளும் உயிரியக்கமுமாக இருந்ததே ஓர் இடம்— அங்கே போனால், இராப் பொழுதைக் கழிக்க ஏதாவது வழி பிறக்கும் என்ற எண்ணத்தைத் தாலாட்டிய மனசோடும் பசி கிள்ளும் வயிறோடும், சோர்வு நடை நடந்தான் சுயம்பு லிங்கம்.

'யாதும் ஊரே' என்ற சொற்கள் அவனுள் இப்போது மீண்டும் ஒலித்தது. அதைத் தடுத்து பெரிய கேள்விக் குறி ஒன்றை வளைத்தது மனக் குறளி.

□

'இளந்தமிழன்' — செப்டம்பர்–அக்டோபர் 1989

உதவாக்கரை

அந்த ஊரில் யாரைக் கேட்டாலும் சொல்வார்கள், 'பாண்டிப் பயல்தானே? வெறும் உதவாக்கரை, ஒண்ணுக்கும் உதவாதவன்!' என்று.

பாண்டிப்பயல் என்று பலராலும் சொல்லப்படுகிற பாண்டியனுக்கு வயது இருபத்தாறு—இருபத்தேழு இருக்கும். உடல் வளர்த்தியிலும் குறைவு இல்லை. ஆள் வாட்டசாட்டமாக, வயதுக்குத் தக்கபடி வளர்ந்து தடித்துதான் இருந்தான்.

இருப்பினும் அனைவரும் அவனைப் பாண்டிப்பயல் என்று மதிப்புக் குறைவாகத்தான் குறிப்பிட்டு வந்தார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் அப்படி ஓர் இளக்காரம் அவன் மீது.

அவன் வேலை வெட்டி எதுவும் இல்லாமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தது ஒரு காரணம். அவன் அதிகமாகப் படித்ததும் இல்லை. உள்ளூர் பள்ளிக்கூடத்தில் ஆறாவது வகுப்பு வரை படித்திருந்தான். அதுக்கு மேலே படிப்பு ஏறவில்லை என்று சொல்லி, பள்ளிக்குப் போவதை விட்டு விட்டான்,

சதா பையன்களோடேயே காணப்பட்டான் அவன். சகல வயதுப் பையன்களுக்கும் அவனைப் பிடித்திருந்தது. 'பாண்டி அண்ணே! பாண்டி அண்ணே!' என்று அழைத்துக் கொண்டு அவன் பின்னாலேயே திரிந்தார்கள் ஊர்ப் பிள்ளைகள்.

அதற்குக் காரணம், அவர்களுக்கு ஒரு தலைவன் போல் விளங்கினான் பாண்டி. ஒவ்வொரு சீசனில் ஒவ் வொரு விளையாட்டு மவுசு பெற்றிருப்பது எங்கும் ஒரு மரபு ஆகத் திகழ்கிறது. ஒரு சமயம் 'கிட்டிப்புள்' விளை யாட்டு சிறுவர்களால் எங்கும் ஆடப்படும். சில மாதங்கள் வானில் காற்றாடி பறக்க விடுவதில் சின்னவர்களும், அவர்களோடு சேர்ந்து பெரியவர்களும், உற்சாகம் காட்டு கிறார்கள். வேறொரு சமயம், தரையில் கட்டங்கள் கீறி, வட்டு வீசி, 'பாண்டி ஆடுவதில்' ஆர்வம் உடையவர்கள் ஆகிறார்கள் பையன்கள்.

இப்படி எந்த எந்த சீசனில் எந்த விளையாட்டு முனைப் பாக ஆடப்படுகிறதோ, அதுக்கு ஏற்பாடு செய்து, பையன் களை சேர்த்துக் கொண்டு பாண்டியனும் ஆடிக்களிப்பான்.

'எருமை மாடு மாதிரி இருந்து கொண்டு இந்தத் தடியனும் சின்னப் பயல்களோடு சின்னப் பயலா குதி யாட்டம் போடுறதைப் பாரேன்!' என்று நொள்ளாப்பு கூறாத பொம்பிளைகள் அந்த ஊரில் கிடையாது.

தான் உருப்படாததோடு ஊர்ப்பிள்ளைகளையும் உருப் பட விடாமல் கெடுக்கிறான் என்று பெரியவர்கள் முணு முணுப்பது வழக்கம்.

'எல்லாம் அவன் அம்மா கொடுக்கிற செல்லம். உழைச்சு சம்பாதிச்சிட்டு வந்தால்தான் உனக்குச் சாப்பாடு

என்று சொல்லி விரட்டி அடிச்சால், அவனுக்குப் புத்தி வரும். அம்மாக்காரிதான் ஏ ராசா, நீ சரியாச் சாப்பிட மாட்டேன் கிறயே! இன்னும் கொஞ்சம் சாப்பிடு என்று மூணு வேளை யும் மூக்க முட்டச் சாப்பிடும்படி ஊட்டுகிறாளே! போதும் போதாததுக்கு சாயங்காலக் காப்பி, வடை, உளுத்தங்களி, அடை என்று செய்து கொடுக்கிறா. பின்னே ஏன் அவன் வேலைக்குப் போகப் போறான்!' இப்படி எவளாவது ஒரு பெரியம்மா நீட்டி முழக்குவாள்.

'ஏதாவது ஒரு சவுளிக்கடையிலே, அல்லது பலசரக்கு மளிகைக் கடையிலே வேலைக்குச் சேர்ந்தால் என்ன? அச்சா பீசிலேகூட வேலைக்குச் சேர்ந்து தொழில் பழகி முன்னேற லாம்' என்று சில பெரியவர்கள் பாண்டியனிடம் அவ்வப் போது சொன்னது உண்டு.

'அதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது' என்று அவன் உறுதியாகத் தெரிவித்துவிட்டான்.

இதனால் எல்லாம், 'உதவாக்கரை... வளையாவெட்டி... உருப்படாத பயல்' என்ற பட்டங்கள் அவனுக்குக் கிடைத் துக் கொண்டிருந்தன.

குளத்தில் நீர் பெருகி, அலையடித்துக் கொண்டிருக்கிற மாதங்களில் பாண்டிக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் பெரும் உற்சாகம்தான். கரை ஓரத்து கற்கள் மீது ஏறி நின்று, தொப்தொப்பென்று தண்ணீரில் குதிப்பார்கள். நீச்ச லடித்து மகிழ்வார்கள். தண்ணீருக்குள் மூழ்கி ஒருவரை ஒரு வர் துரத்திப் பிடித்து விளையாடுவார்கள்.

அவர்களுடைய பொழுதுபோக்கு மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும். 'இதென்னடா சனியன்கள் மாதிரி. குளத்திலே அமைதியாய் குளிக்க விடமாட்டேன்கிறாங்களே!' என்று பலரும் அலுத்துக் கொள்வார்கள்.

பிறருடைய ஏசல்கள் பற்றி பாண்டியோ அவனுடைய சகாக்களோ கவலைப்படுவதில்லை. சில சமயம் நீருக்குள் ளாக வந்து, குளித்து நிற்பவர்களின் கால்களில் கிள்ளிவிட்டு அப்பால் செல்வார்கள். பிறகு மேலே வந்து, ‘எழவு மீனுக என்னமாக் கடிக்குதுங்க!’ என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

‘நீ பொட்டுப் பொடுக்குனு போக! உன்னை பாம்பு கடிக்க!’ என்று பொம்பிளைகள் ஏசுவார்கள்.

‘எவ்வளவு திட்டினாலும் உறைக்க மாட்டேன்குதே மூதேவிகளுக்கு!’ என்று ஒருத்தி ஒரு தடவை சொன்னாள்.

‘திட்டுங்க திட்டுங்க, நல்லாத் திட்டுங்க! ஆயிரம் திட்டுக வாங்கினால் ஒரு ஆனைப் பலம்’ என்று கூறிச் சிரித்தான் பாண்டியன்.

ஆற்றில் வெள்ளம் பெருகிப் போகிற சமயம் பாண்டியனை கை கொண்டு பிடிக்க முடியாது. குதிப்பும் கும்மாளியும்தான் அவனுக்கு.

வெள்ளப் பெருக்கில் ஆர்வத்தோடு நீந்திக் களிப்பான். அக்கரைக்கும் இக்கரைக்கும் போய்வருவான். மண்டபத்தின் மீது ஏறி நின்று, பாட்டுப் பாடியபடி, ஓடும் தண்ணீரில் குதிப்பான்.

குதித்தவன் நீரோடு போய் விட்டானோ என்ற அச்சம் கரை மேல் நிற்பவர்களுக்கு உண்டாகும். பல நிமிடங்கள் பாண்டி மேலெழுந்து வரமாட்டான்.

‘ஐயோ, அநியாயமா ஆத்தோடு போயிட்டானே வீணப்பய!’ என்று யாராவது பதட்டத்துடன் கூறுவார்கள்.

பாண்டி சற்று தள்ளி தண்ணீருக்குள்ளிருந்து மொட்டுப் போலே தலையை வெளியே நீட்டுவான். முடியை சிலிர்த்துக் கொண்டு நீந்தி வருவான்.

அவனது சாகசத்தையோ சாமார்த்தியத்தையோ பாராட்டு வதற்கு ஒருவருக்கும் மனம் வராது.

'தெண்டச் சோத்துத் தடிராமன்! என்ன வரத்து வாறான்! ஒரு நா இல்லாட்டா ஒரு நா பயல் ஆத்தோடு போகத் தான் போறான்' என்று சாபம் கொடுப்பார் ஒரு பெரியவர்.

பக்கத்திலே நிற்கிற இன்னொரு பெரிய மனிதர், 'நீரோடும் நெருப்போடும் விளையாடக் கூடாது என்பாக. இந்தக் கழுதைக்கு அது தெரியமாட்டேன்குதே. வெள்ளம் பெருகிப் போகையிலே, இது என்ன விளையாட்டு?' என்று கடிந்து கொள்வார்.

எவர் பேச்சையும் பாண்டி தன் காதில் போட்டுக் கொள்வது கிடையாது அவனே அவனுக்கு ராஜா; அவனது போக்குகளே அவனுக்கு உகப்பானவை

பட்டம் பறக்க விடுகிற சீசன் வந்தது

பாண்டியன் விதம்விதமான 'காற்றாடிகள்' செய்து பையன்களுக்கு உதவினான். வர்ணத் தாள்களில், வெவ் வேறு வடிவங்களில் உருவான பட்டங்கள். அவை அழகாக இருந்தன அவை உயரே வானத்தில் எவ்வியும் தாழ்ந்தும் உயர்ந்து உயர்ந்து அசைந்தும், மிதந்தும் காட்சி அளித்த போது வசீகரமாகத் தோன்றின.

பாண்டியனது திறமையைப் பாராட்ட வேண்டும் என்று யாருக்கும் தோன்றவில்லை வெட்டி வேலைகள் செய்வதிலே பாண்டிக்கு ஈடு இணை கிடையாது என்று தான் பலரும் பேசினார்கள்.

'அக்கம் பக்கத்து ஊர்களில் தேசீயக் கொடியை உயர மான இடங்களில் கட்டிப் பறக்க விட்டிருக்கிறார்கள். நாமும் நம் ஊரில் அப்படிச் செய்ய வேண்டும்' என்று அண்ணாச்சி ஒருவர் ஒரு நாள் சொன்னார்.

எங்கே கட்டலாம் என்ற யோசனை தலைகாட்டியது.

கோயில் கோபுரத்தின் மீது கட்டலாம் என்றனர் சிலர்.

அந்த ஊர் கோபுரம் சாதாரணமானது; உயரம் இல் லாதது. பெயருக்கு ஒரு கோபுரம் என்று காட்சி அளித்துக் கொண்டிருந்தது அது.

'அதன் மீது கொடியைக் கட்டுவதும் நம்ம வீட்டுமாடி மீது கம்புநாட்டிக் கொடியை பறக்கவிடுவதும் ஒண்ணுதான். உயரம் பற்றாது' என்றார் அண்ணாச்சி.

கோயிலுக்கு எதிரே சிறிது தூரத்தில் ஒரு வெட்டவெளி. அதில் பெரிய அரசமரம் ஒன்று நின்றது. ஓங்கி வளர்ந்து நின்ற அந்த மரம் தனது எண்ணற்ற குச்சிக் கைகளிலும் ஆயிரமாயிரம் இலைகளை ஏந்தி வானவீதியைப் பெருக்க முயல்வதுபோல் சதா சலசலத்துக் கொண்டிருந்தது.

'இந்த மரத்தின் உச்சாணிக் கிளையிலே, ஓங்கி வளர்ந்த மூங்கில் ஒன்றை இறுக்கிக் கட்டணும். அந்த மூங்கில் உச்சி யிலே நம்ம கொடி பறக்கணும். உதயசூரியனின் பொற் கதிரிலே அது பளபளக்கும். அந்தி நேர வெயிலில் கொடி தகதகக்கும். பகல் பூராவும் பளீரென அது ரொம்ப தூரத்துக் குத் தெரியும்' என்று அண்ணாச்சி அளந்தார்.

'உயரமான இந்த மரத்தின் உச்சிக்கு ஏறி, கிளையிலே பலமாக யார் கொடிக் கம்பைக் கட்ட முடியும்?' என்று மற்ற வர்கள் மலைத்தார்கள்.

'அண்ணாச்சி பேச்சு சொல்லவும் கேட்கவும் நல்லாத்தான் இருக்கு. ஆனால் செயலுக்கு சரிப்பட்டு வராது' என்று ஓங்கி அடித்தார் ஊர்ப் பெரியவர்.

அத்தோடு விஷயம் முடிந்தது என்று பலரும் அவரவர் வேலையைப் பார்க்கப் போனார்கள். இரவில் தூங்கப் போனார்கள்.

மறுநாள் காலையில் அவர்களுக்கு அதிசயம் காத்திருந் தது.

வாய்க்காலுக்கும் வயல் பக்கமும் போனவர்கள்தான் முத லில் அதைப் பார்த்தார்கள். தண்ணீர் எடுக்கவும் குளிக்க வும் வந்த பெண்கள் பார்த்தார்கள். அனைவரும் ஆச்சரியப் பட்டு ஆகா என்றார்கள்.

விண்ணைத் தொட முயல்வது போல் உயர்ந்து நின்ற அரச மரத்தின் உயர் கிளை மீது, ஓங்கி நிமிர்ந்து நின்ற ஒரு மூங்கில் கழியில் தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

யார் இரவோடு இரவாக அதைக்கட்டி இருக்க முடியும்? ஒருவராய், இருவராய், பலராகி, கும்பலாய் கூடிவிட்ட ஊரே அதிசயித்தது அதைக்கண்டு. மெதுவாக வந்தார் அண் ணாச்சி. 'அண்ணாச்சி, உங்க சொல்லை செயலாக்கிப் போட்டீங்களே! எப்படி அண்ணாச்சி முடிந்தது உங்க ளாலே?'

பலரின் சந்தேகமும் ஒருவரின் கேள்வியில் ஒலி செய் தது.

அண்ணாச்சி பெருமையாய் கூட்டத்தைப் பார்த்தார். 'எல்லாம் நம்ம பாண்டியின் வேலைதான்' என்றார்.

'ராத்திரி வீட்டுக்கு வந்தான். அண்ணாச்சி, மூங்கிலும் கொடியும் தயாரா இருக்குதான்னான். இருக்குன்னேன். கிளம்புங்க என்றான். கூட இரண்டு மூன்று பையன்களும் வந்தாங்க, நல்ல நிலா. பட்டப் பகல்போலே வெளிச்சம். அரச மரத்து இலைகளிலே கூட ஒரு மினு மினுப்பு. டே பாண்டி, உன்னாலே முடியுமான்னு கேட்டேன். அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்னு சொல்லி மரத்து மேலே ஏறினான். சில பையன்கள் மூங்கிலைப் பற்றிக் கொண்டு கீழ்க் கிளைகளிலே நின்னாங்க. பாண்டி மேலே போயி, மூங்கிலையும் கொடியோடு சேர்த்துப் புடிச்சிக்கிட்டு, பயம் இல்லாமே ஏறினான். அனுமாரு கெட்டுது போங்க. உச்சிக்குப் போயி, மூங்கிலை நன்றாக இறுக்கிக் கட்டிப் போட்டு, மளமளன்னு இறங்கி வந்துவிட்டான். பலே பாண்டியான்னு தட்டிக் கொடுத்தேன்' என்றும் அவர் விவரித்தார்.

ஊர் வியந்தது. ஆனாலும், அதன் வழக்கப்படி சொட்டை கூறியது. 'கரிமுடிஞ்சு போவான் பாண்டிப் பயல். ஏன்தான் இந்தப் போக்கு போறானோ தெரியலே!' என்றார்கள்.

'சவத்துப் பயல் கால் தவறியோ, கிளை முறிஞ்சோ கீழே விழுந்திருந்தால் என்னத்துக்கு ஆவான்? அவன் அம்மாவுக்குப் பிள்ளைன்னு பேர் சொல்ல இருப்பானா? பிசாசுப் பயல்' என்றார்கள்.

இன்னும் என்னென்னவோ சொன்னார்கள். அவனது துணிச்சலைப் பாராட்டி நாலு நல்ல வார்த்தை சொல்வோமே என்ற மனம் அந்தக் கூட்டத்தில் ஒருவருக்குக்கூட இருக்கவில்லை.

அதைப்பற்றி பாண்டி கவலைப்படவில்லை. ஆனால் அண்ணாச்சியின் மனசை உறுத்தியது அது. அண்ணாச்சி

பரந்த உள்ளமும் விசால நோக்கும் கொண்டவர். புத்தகங்கள் படிப்பவர். உலகம் தெரிந்தவர். சிந்திக்கக் கற்றவர்.

—மனிதரில் உதவாக்கரை என்று எவனுமே கிடையாது. ஒவ்வொருவனிடமும் ஒவ்வொரு திறமை, தனித்தனி இயல்புகள் மறைந்து கிடக்கின்றன. அவற்றைக் கண்டு உணர்ந்து அவன் அவன் இயல்புகள்—தகுதிகள்—திறமைகளுக்கு ஏற்ப காரியங்கள் செய்ய வாய்ப்பும் வசதியும் உண்டாக்கிக் கொடுத்தால், எவனும் நன்கு பிரகாசிக்க முடியும்.

அண்ணாச்சி இவ்வாறு எண்ணுவது உண்டு. பாண்டியனின் இயல்புகளையும் போக்குகளையும் அவர் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். இப்போது அவனையும் அவனது சகாக்களையும் சேர்த்து ஊருக்கு நல்லது செய்யலாமே என்று அண்ணாச்சி நினைத்தார். பாண்டியனிடமே பேசினார். அவன் உற்சாகமாக அவரை ஆதரித்தான்.

இப்படியாக 'கட்டபொம்மன் நற்பணி மன்றம்' பிறந்தது அந்த ஊரில். அண்ணாச்சியின் வீடு மன்றத்தினர் கூடும் இடம் ஆயிற்று.

பத்திரிகைகள், புத்தகங்கள் குவிந்தன அங்கே. பொழுது போக்குக்கான விளையாட்டு சாதனங்களும் சேர்ந்தன. சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, தெருக்களைச் சுத்தப்படுத்துவது, கோயில் பிரகாரங்களை அழகு செய்வது என்று வேலைத் திட்டங்கள் தடபுடல்பட்டன.

அண்ணாச்சி தலைவர் ஆனார். பாண்டியன் தளபதி. உற்சாகம் நிறைந்த பையன்கள் தொண்டர்கள்.

தூங்கிக் கிடந்த ஊர் விழிப்பு பெற முயன்றது.

உரிய காலத்தில் மழை சீசன் வந்தது. வானமே கிழிந்து, எங்கோ பதுக்கி வைக்கப்பட்டிருந்த தண்ணீர் முழு

வதும் கொட்டோ கொட்டித் தீர்வது போல, மழை இரவு பகல் எந்நேரமும் பெய்தது.

'எந்த வருஷமும் இல்லாத மழை இந்த வருஷம்' என்று பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஆற்றிலே வெள்ளம் என்ற தகவல் வந்தது. வெள்ளம் அதிகரித்துக் கொண்டே போகிறது... முக்கால் மண்டபத்துக்கு சுற்றி ஓடுது. மண்டபத்தை முழுகடித்து விடும் தண்ணீர் என்று செய்திகள் பரவிக் கொண்டிருந்தன.

அத்துடன் கலந்திருந்த ஒரு தகவல் மக்களை அதிர்ச்சி அடைய வைத்தது.

மண்டபத்தின் தட்டட்டியில் ('மொட்டைமாடி'யில்) மூன்று ஆட்கள் இருக்கிறார்கள். யாரோ பரதேசிகள். ராத்திரி மண்டபத்துக்குள்ளே படுத்துக் கிடந்தார்கள் போல. வெள்ளம் வரவும் உயரே தட்டட்டிக்குப் போயிருக்கிறார்கள். அபாய நேரத்தில் அப்படி உயரே ஏறிப் போவதற்கு என்றே வசதியான இரும்பு ஏணி ஒன்று அங்கு உறுதியாகப் பொருத்தி வைக்கப்பட்டுள்ளது. பரதேசிகள் மேலே போய் விட்டார்கள். வெள்ளம் வற்றி விடும் என்று அவர்கள் எதிர் பார்த்திருப்பார்கள். ஆனால் வெள்ளம் அதிகரித்து மண்டபத்தையே மூழ்கடித்து விடும் நிலையில் எவ்வியது... அப்புறம் பரதேசிகள் அரோகரா!

எனவே, ஊர் கும்பலாகச் சாடியது ஆற்றங்கரையில். வேடிக்கை பார்க்கத்தான்.

மண்டபத்தின் உயரே, பொங்கிப் புரண்டு பாய்ந்தோடும் வெள்ளத்தின் நடுவில், மழையில் நனைந்து, குளிராலும் பயத்தாலும் நடுங்கி நின்ற பரதேசிகள் பரிதாபத்துக்குரிய உருவங்களாகத் தென்பட்டார்கள்.

'சே, இவர்களை சாகவிடப்படாது. எப்படியாவது காப்பாத்தியாகணுமே' என்றார் அண்ணாச்சி.

'எப்படி அண்ணாச்சி காப்பாத்துவீங்க?' என்று கிண்டல் தொனியில் கேட்டார் ஒருவர்.

அண்ணாச்சி யோசித்தார். அவர் மூலை வேலை செய்தது. 'கொஞ்சம் சிரமமான காரியம் தான். துணிந்தால், காப்பாத்தி விடலாம்' என்றார்.

உறுதியான வடக்கயிறு தேவை. அதன் ஒரு நுனியை ஒரு பனை மரத்தில் இறுக்கிக் கட்ட வேண்டியது. மறு முனையை மண்டத்துக்கு எடுத்துப் போய், அங்கே ஒரு கல்லில் பலமாகக் கட்ட வேண்டும். கயிறில் சகடையும், அதில் தொட்டில் மாதிரி ஒரு அமைப்பும் சேர்க்கணும். மண்டபத்து மேலே இருந்து ஒவ்வொரு ஆளாக தொட்டிலில் ஏறி வரணும். அதுக்கு வசதியாக் கரையிலேயிலேயிருந்து நாம சகடைத் தொட்டிலை இழுக்கணும் என்று அண்ணாச்சி விளக்கினார்.

'அதுசரி அண்ணாச்சி. இந்த பேய் பயல் வெள்ளத்திலே யாரு இங்கிருந்து வடக்கயிறை மண்டபத்துக்குக் கொண்டு சேர்க்கிறது? நடக்கக்கூடிய காரியமா?' என்றார் திருவாளர் சந்தேகம்.

'அதுதானே! அண்ணாச்சி அய்டியா அபாரமானது. ஆனால் எப்படிச் செயல்படுத்துவது?' என்று திருவாய் மலர்ந்தன சில ஒத்து ஊதிகள்.

'அதைத்தான் நானும் யோசிக்கிறேன்' என்றார் அண்ணாச்சி.

'யோசனை எதுக்கு அண்ணாச்சி? ஊர்க்கோயிலில் இருந்து வடம், வேறே கயிறுகள், சகடை, தொட்டில் ஊஞ்

சல் எல்லாம் கொண்டு வரச் செய்யுங்க. கயிறு மண்டபம் போய்ச் சேருவதற்கு நான் ஆச்சு!' என்று திடமான குரலில் சொன்னான் முன்னே வந்து நின்ற பாண்டியன்.

அண்ணாச்சியின் கண்கள் ஒளிர்ந்தன. பெருமிதத்தோடு பாண்டியைப் பார்த்தார். 'உன்னால முடியுமா தம்பி?' என்றார்.

'நான் ரெடி. சாமான்கள் வரட்டும்' என்றான் பாண்டி.

சைக்கிள்கள் பறந்தன. சாமான்கள் வந்தன. சுறுசுறுப்பும் வேகமும் செயல் நர்த்தனம் புரிந்தன அங்கே.

உறுதியாய் நின்ற பனைமரம் ஒன்றில் இறுக்கிக் கட்டப்பட்டது வடக்கயிறின் ஒரு முனை. மறு முனையை பாண்டி தன் இடுப்பில் நன்றாகக் கட்டிக் கொண்டான்.

கரைக்கும் மண்டபத்துக்கும் ஒரு பர்லாங் தூரத்துக்கும் அதிகம் இருந்தது.

ஆறு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடியது.

பாண்டி கரை மீது மேற்கு நோக்கி சிறிது தூரம் நடந்தான். வசமான இடத்தில் தண்ணீரில் இறங்கி நீரின் போக்கோடு நீந்தினான். லாவகமாக நீந்தி முன்னேறினான்.

ஒரு படையெடுப்பு மாதிரி வலிமையோடு முன்னேறிக் கொண்டிருந்தது வெள்ளம். நீரோட்டத்தின் அசைவு தெரியாதவாறு இருந்தது. செடிகள், மரங்கள் குடிசைக் கூரைகள் போன்றவை ஓடுகிற வேகத்தைக் கொண்டே ஆறு பயங்கர வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்ததை உணர முடிந்தது.

மண்டபம் கிழித்த நீர்ப்பரப்பு வெள்ளத்தின் ஓட்ட வேகத்தை, அதன் மூர்க்கத்தை, நன்கு புலப்படுத்தியது.

'பாண்டி போய் சேர்வானா? மண்டபத்தின் மீது ஏறி விடுவானா?' என்ற சந்தேகம் எல்லாருக்குமே இருந்தது.

பாண்டி திறமையாக, சாதுர்யமாக நீந்தி, மண்டபத்தை அடைந்து, மேலேறி நிமிர்ந்து நின்றான். கை கூப்பி வணங்கினான்

'பலே பாண்டியா!' என்று கூவினார் கரை மீது நின்ற அண்ணாச்சி. கரவொலி வெடித்தது அங்கே.

பரதேசிகள் பயபக்தியுடன் பாண்டியைக் கும்பிட்டார்கள்.

அவன் மளமளவெனச் செயல்புரிந்தான். சகடையில் உருளும் தொட்டில் ஊஞ்சல் வந்தது. ஒருவனை அதில் உட்கார வைத்து அனுப்பினான். மெதுமெதுவாக அது கரைக்கு இழுக்கப்பட்டது.

இப்படி மேலும் இருமுறைகள் அது இயங்கி, மற்ற இரண்டு பேரையும் கரை சேர்த்தது.

'ஊஞ்சலை அங்கேயே நிறுத்திவிட்டு, வடக்கயிறை கரைக்கு இழுத்துக் கொள்ளும்படி சொல்லுங்க!' என்று பாண்டி, மூன்றாவது பரதேசியிடம் சேதி தெரிவித்தான்.

'சாமி, நீங்க எப்படி கரை சேருவீங்க?' என்று கேட்டான் பரதேசி. பயம் அவனுள் வேலை செய்தது.

'வந்தது போல் போவேன்!' என்று கூறிச் சிரித்தான் பாண்டி.

மூன்றாவது ஆளும் கரை ஏறி, வடக்கயிறும் கரை சேர்ந்த பின், பாண்டியன் வெள்ளத்தில் குதித்தான். இப்போது வெள்ளத்தின் ஓட்டத்துக்கு ஏற்ப, கிழக்கு நோக்கி லாவகமாக நீந்தினான்.

கரை மீது அனைவரும் கிழக்கு நோக்கி ஓடினார்கள்.

சற்று தூரம் தள்ளி, ஊரின் சுடுகாட்டுக்கு அருகில், கரை ஏறினான் பாண்டியன்.

அண்ணாச்சி ஓடிவந்து அவனைக் கட்டித் தழுவினார். 'தம்பி, யாரும் செய்யத் துணியாத காரியத்தை நீ சாதித்தாய். உனக்குத் தன்னம்பிக்கையும் துணிச்சலும் நிறைய இருக்கு. நீ வாழ்க!' என்று பாராட்டினார். 'மனிதரில் உதவாக்கரை என்று யாருமே கிடையாது. அவனவன் திறமை பிரகாசிக்க சரியான சந்தர்ப்பமும் மற்றவர்களுடைய ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும்' என்று கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார்.

'பாண்டிக்கு ஜே!' என்று கத்தினான் ஒரு பையன்.

'ஜே ஜே!' என முழங்கியது கூட்டம்.

□

'சோவியத் நாடு' — ஏப்ரல் 1991

பேரிழப்பு

இந்த வருடம் எப்படியும் ஊருக்குப் போய்விட வேண்டியதுதான்!

இப்படி பூவுலிங்கத்தின் மனம் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு அது தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டது இதுதான் முதல் தடவையோ, மூன்றாவது தடவையோ அல்ல. முந்நூறாவது தடவையாகவே இருக்கலாம்.

பூவுலிங்கம் பட்டணத்துக்கு வந்து முப்பது வருடங்களுக்கும் மேலாகியிருந்தது. அப்படி வந்த நாளிலிருந்து 'ஊருக்கு ஒருதரமாவது போயிட்டு வரணும்' என்கிற ஆசையும் அவரது உள்ளத்தில் இடம் பெற்று வளர்ந்து வந்தது. காலப் போக்கில் அதுவே ஒரு தவிப்பாகவும், தணித்தாகப்படவேண்டிய தாகமாகவும் பேருருப் பெற்றிருந்தது.

'திருநாளை போவார்' என்று சிறப்பு பெயர் பெற்றிருந்த நந்தனாருக்காவது, 'நாளைக்குப் போகலாம்...தில்லைக்கு நாளை போய்விடலாம்' என ஒரு வாயிதா கூறப்பட்டு வந்தது. அவரும் அதில் நிச்சய நம்பிக்கை வைத்திருந்தார்.

பூவுலிங்கத்துக்கு அந்த விதமான நம்பிக்கைக்கும் இடம் இருந்ததில்லை. அவரும் முப்பது வருடங்களாக செயல்

படுத்தப்படாத—செயல்படுவதற்கு நிச்சயம் வாய்ப்புக் கிட்டும் என்ற நம்பிக்கைகூட தர முடியாத—அந்த எண்ணத்தை நாள் தோறும் வளர்த்து வந்தார்.

'இந்த வருடம் எப்படியாவது நம்ம ஊருக்குப் போய் விட்டு வரவேண்டியதுதான். முப்பது முப்பத்தஞ்சு வருடங் களுக்கு முந்திப் பார்த்தது. கோயிலும், பிள்ளையார் கோயில் நந்தவனமும், தெப்பக்குளமும், அரச மரமும், ஆறும் அப்ப டியே கண்ணுக்குள் நிற்கின்றன. அவற்றை எல்லாம் திரும் பவும் பார்க்க வேண்டும். அப்போது சின்னப்பயல்களாகத் திரிந்தவர்கள் இன்று எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேணும்!'

இவ்விதம் அவர் எண்ணாத நாள் கிடையாது.

பூவுலிங்கம் வெறும் பூவு ஆக, 'எலேய் பூவு—அடய் பூவுப் பயலே' என்று அதட்டுவோர் குரலுக்கு அஞ்சி ஒடுங்கிய பணி வுடன் அருகே வரும் சின்னப்பயலாகத் திரித்து கொண்டிருந்த காலத்திலேயே, ஒரு பெரிய மனிதர் பெரிய மனசு பண்ணி அவனைப் பட்டணத்துக்கு அழைத்து வந்துவிட்டார். அவர் வீட்டில் எடுபிடி வேலைகள் செய்து கொண்டு, போட்டதைத் தின்று, பிள்ளைகளை எடுத்து வைத்து, சகல பணி விடை களும் செய்து, இரவு—பகலாக விட்டு நாய் மாதிரி காத்துக் கிடப்பதற்காகத்தான் ஊரில் பெரிய வீட்டுப் பெரிய ஐயா அவனைத் தம்முடன் அழைத்து வந்தார்.

பூவுப்பயலின் அப்பன்காரனும் ஆத்தாக்காரியும், 'எச மான், இந்தப் பயல் இங்கே இருந்தால் வீணாக் கெட்டு சீரழிஞ்சு போவான். இவனை உங்களோடு கூட்டிக்கிட்டுப் போயி ஆளாக்கி விடுங்க' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண் டதனால்தான், சிறுகுளம் முதலாளி மகன் கைலாசம்பிள்ளை அவனைப் பட்டணத்துக்கு அழைத்து வந்தார். அப்போது அவனுக்கு வயது பத்து.

சிறுகுளம் என்பது வெறும் பட்டிக்காடு. பள்ளிக்கூடம் என்ற பேருக்கு திண்ணையில் ஒரு அண்ணாவி சில பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த சில பேரில் ஒருவனாக விளங்கும் பேறு பூவுப் பயலுக்குக் கிடைத்ததில்லை.

அவன் தந்தை பலவேசம் பெரிய வீட்டில் வண்டிக்காரனாக வேலை செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். 'பயல் படிச்சு எந்த உத்தியோகம் பார்க்கப் போறான்! அவனுக்கு எதுக்குப் படிப்பு?' என்று ஒரேயடியாக முடிவு செய்ததுதான் 'தந்தை மகனுக்கு ஆற்றிய உதவி' ஆகும்.

பையன் ஊர் சுற்றுவது, வயல்காடுகளில் திரிவது, மரங்களில் ஏறுவது, கிட்டிப்புள் விளையாடுவது போன்ற அலுவல்களை உற்சாகமாகச் செய்து வந்தான். அங்கேயே இருந்தால் அவன் உருப்படாமல் போவான் என்று அப்பன் கருதினான்.

'பட்டணத்துக்கு வந்து மட்டும் நான் என்ன உருப்பட்டு விட்டேன்? உருப்படக்கூடியவன் எங்கே இருந்தாலும் உருப்படத்தான் செய்வான். உருப்படாமல் போற கழுதை எந்தச் சீமைக்குப் போனாலும் உருப்படாததுதான்!' என்று பிற்காலத்தில் பூவுலிங்கம் அநேக தடவைகள் எண்ணியது உண்டு. இந்த அறிவு, அவனுக்கு ஆதி நாட்களில் இவ்வாறு வேலை செய்தது இல்லை.

அந்தக் காலத்தில் அவன் அந்த 'தரித்திரம் பிடித்த பட்டிக்காட்டை' விட்டு வெளியேற வசதி கிட்டியதைப் பெரிய அதிர்ஷ்டம் என்றே கருதினான்.

'வறண்ட பய' ஊரைவிட்டு நாகரிகத்தின் சிகரமான பட்டணத்துக்கே போக வாய்ப்பு கிட்டியது. கிடைத்தற்கரிய

பாக்கியம் என்றுதான் அவனை அறிந்த பலரும் எண்ணி னார்கள்.

'சுரத் இல்லாத' சூழலிலிருந்து பரபரப்பு மிகுந்த பெரு நகருக்குச் செல்வது அந்தப் பையனுக்கு மிகுந்த உற் சாகத்தையே தந்தது.

பட்டணத்துக்கு வந்து சேர்ந்ததும், சில தினங்கள் வரை அவனுக்கு ஆனந்தம் குறையாமல்தானிருந்தது. புதிய சூழ்நிலை, புதிய புதிய முகங்கள், புதுப் புது அலுவல்கள் எல்லாம் மகிழ்ச்சி அளித்தன.

ஆனால், நாளாக ஆக அந்த வாழ்க்கை முறையும் பூவு லிங்கத்துக்கு அலுப்பு தருவதாகவே தோன்றியது. 'இப்படி வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்து ஓயாது வேலை செய்து கொண்டிருப்பதற்கு, பட்டணத்தில் இருப்பானேன்? பட்டிக்காட்டிலாவது இஷ்டம் போல் சுற்றித் திரிய முடிந்தது. நம்ம ஊரு பக்கத்திலே டவுனில் பலசரக்குக் கடைகளில் சில பையன்கள் வேலை செய்வார்கள். காலை ஏழு மணி முதல் இரவு பத்து பத்தரை வரை கடையிலேயே அடைபட்டுக் கிடக்கிற அவர்கள் டவுன் பூராவையும் சுற்றிப் பார்த்தது கிடையாது. பேரு மட்டும் பெரிசா 'டவுனிலே வேலை' என்று! அதுமாதிரிதான் நானும் பட்டணத்திலே பெரிய ஐயா வீட்டிலே வேலை பார்க்கிறேன் என்று பேர்தான் பெரிசு. வெளியே போய் பட்டணத்தைப் பார்க்கக் கூட நேரமும் இல்லை, வசதியுமில்லை. இங்கே இப்படி வந்து ஜெயில் வாழ்க்கை அனுபவிப்பதை விட, நம்ம பக்கத்து டவுனில் ஏதாவது ஒரு கடையிலேயே வேலைக்கு சேர்ந் திருக்கலாம்' என்று அவன் மனக்கசப்புடன் எண்ண லானான்.

பிறகு நாளடைவில் அவன் சுற்றித்திரிந்து வேடிக்கை பார்ப்பதற்கு நேரம் தேடிக் கொண்டான். உண்பதற்கு

வசதியும், தங்குவதற்கும், படுத்து உறங்கவும் இடமும் இருந்தால் வேலை எதுவும் செய்யாமல் சும்மா சுற்றி அலைந்து வேடிக்கை பார்த்துப் பொழுது போக்குவதற்கு மிக ஏற்ற இடம் இந்தப் பட்டணம் என்று அவனுக்குத் தோன்றியது.

பட்டணம் வந்து விட்ட பையனை அவன் தாயோ தகப்பனோ, ஊருக்குக் கூப்பிடவே இல்லை. ஒரு பிள்ளைக்கு சோறு போட்டு, துணிமணிகள் எடுத்துக் கொடுத்து வளர்க்க வேண்டிய பொறுப்பு இல்லாமல் தொலைந்ததே என்றுதான் அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

ஆரம்ப காலத்தில் 'ஊருக்குப் போகணும்' எனும் நினைப்பு தீபாவளி சமயத்திலும், பொங்கல் திருநாளின் போதும்தான் பூவுலிங்கத்துக்குத் தீவிரமாக வேலை செய்தது. 'இப்ப ஊரிலே இருக்கணும் எவ்வளவு ஜோராக இருக்கும் தெரியுமா?' என்று அவன் தன் நெஞ்சோடு புலம்பிக் கொள்வது வழக்கம்.

கைலாசப்பிள்ளையோ, அவரது குடும்பத்தினரோ அடிக்கடி சொந்த ஊருக்குப் போய்வரும் இயல்பு பெற்றிருக்கவில்லை. அபூர்வமாக எப்பவாவது பிள்ளை ஊர்ப்பக்கம் போவது உண்டு. அவர் மாத்திரம் அப்படி போகிறபோது, 'நீ இங்கேயே இரு. உன்னை ஊரிலே யாரு தேடுறாங்க!' என்று பூவுலிங்கத்தை தட்டிக் கழித்து விடுவார். அவர் இல்லாது குடும்பத்தினர் அனைவரும் புறப்படும் சமயத்தில், 'ஏண்டா நீயும் இவங்களோடு ஊருக்குப் போய்விட்டால் நான் என்னடா செய்வேன்? நீ ஊருக்குப் போயி என்ன பண்ணப் போறே? சும்மா இங்கேயே இரு' என்று உத்தரவு போடுவார்.

எப்படியோ தடங்கல் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன அவனுக்கு.

பூவுலிங்கத்தின் தந்தை பலவேசம், மகன் பட்டணம் போன மறுவருடமே மண்டையைப் போட்டு விட்டான். அவன் காரியம் எல்லாம் நடந்து முடிந்த பிறகுதான் பட்டணத்தில் இருந்தவர்களுக்கு விஷயம் தெரிந்தது. பூவுப் பயலுக்கு அண்ணன்களும் தம்பிகளும் நிறைய இருந்ததால், அப்பனின் இறுதி யாத்திரைக்கு வழி அனுப்பிவைக்க இந்த புத்திர பாக்கியம் வந்தே ஆக வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

இரண்டொரு வருடங்களில் தாயும் சிவபதம் அடைந்தாள். இந்த மகனின் துணை அப்போதும் தேவைப்படவில்லை.

'நான் ஊரைவிட்டு வந்து அஞ்சாறு வருசம் ஆகுது. அங்கே போகணும்னு எனக்கு ஆசையா இருக்கு, ஒரு தடவை போயிட்டு வாறேனே' என்று அவன் பிள்ளைவாளிடம் கெஞ்சினான்.

'நீ என்னடா சுத்தப் பைத்தியக்காரனா இருக்கிறே! இது ஊரு இல்லாமல் காடா? அந்தப் பாடாவதிப்பய ஊரிலே உனக்கு என்ன வச்சிருக்கு? இங்கே கிடைக்கிறதை சாப்பிட்டுக் கொண்டு பேசாமல் கிடப்பியா? ஊருஊருன்னு தொணதொணக்கிறியே! என்று கைலாசம் பிள்ளை உபதேசித்தார்.

அவன் வருகையை அவனுடைய அண்ணன்மாரும் விரும்பவில்லை. 'பூவு, எசமான் கண்காணிப்பில் இருக்கிற படியே இருக்கட்டும். இங்கே இப்ப ரொம்பவும் சிரமதசை. அவன் நல்லபடியா வாழ கடவுள் வழிகாட்டி விட்டதுக்கு நாங்கள் சந்தோஷப்படுகிறோம்' என்று பெரிய அண்ணன் அறிவித்துவிட்டார்.

ஆகவே, பூவுலிங்கம் தனது எண்ணத்தை தன் உள்ளத்திலேயே வைத்து, தானாகவே புழுங்கிக் குமைய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அவன் கையில் பணம் சேர வழி ஏது? பிள்ளை வீட்டிலேயே அவன் வளர்ப்புப் பையன் மாதிரி வாழ்ந்தான். சம்பளம் என்று எதுவும் அவனுக்குத் தரப்படவில்லை. எனினும், அவன் குறை கூறுவதற்கு வழி இல்லாமல் அவனது தேவைகள் எல்லாம் சரிவர பூர்த்தி செய்யப்பட்டு வந்தன.

இந்த விதமாகப் பத்து வருடங்கள் ஓடிவிட்டன. திடீரென்று ஒரு நாள் கைலாசம் பிள்ளை செத்துப்போனார். அவர் மனைவியும் மகளும் பட்டணத்திலேயே தங்கிவிட முடிவு செய்தார்கள்.

‘பூவு, நீ வேணுமின்னா ஊருக்குப் போ. செலவுக்கு வேண்டிய பணம் தாரேன்’ என்று பெரிய அம்மாள் சொன்னாள்.

ஒரேயடியாக ஊருக்குப் போய் என்ன செய்வது என்பது பெரும் பிரசினையாக அவனை மிரட்டியது. அதனால் அவன் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவில்லை.

பூவுலிங்கம் வாழ்க்கையிலும் மேடு பள்ளங்கள், திருப்பங்கள், தேக்கநிலைகள் எல்லாம் ஏற்பட்டன.

அவன் வேறொருவர் வீட்டில் வேலையில் சேர்ந்தது, அந்த இடம் பிடிக்காமல் வெளியேறியது, சிற்சில கடைகளில் வேலைக்கு அமர்ந்து காலம் கழித்தது, எல்லாம் அவனுடைய வாழ்க்கைப் பாதையில் குறுக்கிட்ட மேடு பள்ளங்கள் தான். ‘திருப்பம்’ என்று அவனது இருபத்தைந்தாவது வயசில் நிகழ்ந்த திருமணத்தைச் சொல்லலாம்.

சிறு அளவில் வியாபாரம் செய்து வந்த ஒரு பெரியவர் தனது மகளை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார். அது முதல் பூவுலிங்கம் தனி அந்தஸ்தையும், பெரிய மனிதத் தன்மையையும் அடைய முடிந்தது. குடும்பத் தலைவர், கடை முதலாளி என்ற தகுதிகள் தாமாகவே வந்து சேர்ந்தன.

குடும்பமும், பொறுப்புகளும் பெருகப் பெருக, பூவுவின் தனிப்பட்ட ஆசை— சொந்த ஊரை ஒரு தடவையாவது பார்த்து விட்டு வரவேண்டும் என்ற நினைப்பு — அடிவானம் மாதிரி எட்ட எட்டப் போய்க் கொண்டே இருந்தது.

மனைவி வீடு 'தெற்கத்திச் சீமையில்' எங்காவது இருந்திருந்தாலாவது அடிக்கடி அங்கே போக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். அதற்கும் இடம் இல்லாது போச்சு!

மனித மனம் விசித்திரமானதுதான். கிடைக்கவில்லை— சமீபத்தில் கிடைக்கவும் கிடைக்காது — என்ற நிலையில் உள்ள விஷயங்களை வைத்துக் கொண்டே அது சதா தறி அடிக்கிறது. எண்ணப் பின்னல்களையும், கனவு நெசவுகளையும் செய்து அமைதியைக் கெடுக்கிறது.

பெரிய மனிதனாகி விட்ட பூவுலிங்கத்துக்கு, தனது சிறுபிராயச் சூழ்நிலை — அந்தக் காலத்தில் வறண்டதாய், அலுப்புத் தருவதாய் தோன்றிக் கொண்டிருந்ததுதான் — கனவின் இனிமைகளும், கற்பனைப் பசுமைகளும், நினைவின் மினுமினுப்பும் கலந்த அற்புத உலகமாக நிழலிட்டது. சிறு பிள்ளைகளோடு விளையாடிக் களித்த இடங்கள் பலவும் திடீர் நினைவுகளாய் குமிழ் தெறிக்கும் அடிக்கடி.

தென்னந்தோப்புகள், பெரிய வீட்டின் வாசலில் இரு புறமும் ஓங்கி வளர்ந்து நின்ற மரமல்லிகை விருட்சங்கள்,

மதகுப் பாலம். அங்கே கொட்டுகிற சிறு அருவி — இப்படி எத்தனையோ சின்னச் சின்ன இனிமைகள் நெஞ்சில் தைக்கும் நினைவுகளாய் தலைதூக்கின.

தன் கண்முன்னே எவ்வளவோ மாறுதல்களும் அழிவுகளும் வளர்ச்சிகளும் புதுமைகளும் நிகழ்ந்து கொண்டிருந்ததை அவர் கவனித்து வந்தார்.

காலம் நிகழ்த்திய மற்றங்கள் பலப் பல. பட்டணத்தின் வெளித்தோற்றம் பெரும் மாறுதல்களைப் பெற்றுக் கொண்டிருப்பதை அவர் கவனிக்காமல் இருக்க முடியுமா?

அவற்றை எல்லாம் காணக் காண, அவர் மனம் சிறுகுளம் ஊரைப் பற்றியே எண்ணியது. அந்த ஊரும், வேகமாக இல்லாது போயினும் சிறிது சிறிதாகவேனும் மாறுதல்களை ஏற்று வளராமலா இருக்கும்? காலத்தின் கைவண்ணம் அச்சிற்றூருக்கும் அதிகமான அழகு சேர்திருக்கும் என்று பூவுலிங்கம் எண்ணினார்.

அவர் வருடந்தோறும் எவ்வளவோ செலவுகள் செய்தார். குடும்பம் என்றால் செலவுகளும் வளர்ந்து பெருகத் தானே செய்யும்? அதிலும் அவர் மனைவி ஓயாத சீக்காளியாக வந்து வாய்த்தாள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் செலவினங்களைப் பெருக வைக்கக்கூடிய சாதனங்களாகவே அமைந்தன.

தூர தொலைவில் உள்ள ஊர்களில் வசிப்பவர்கள் பலர் திருப்பதிக்குப் போக வேண்டும், காசி யாத்திரை போக வேண்டும் என்று தீர்மானித்துவிட்டு, பிறகு 'நேர்த்திக் கடனை' தீர்ப்பதற்குப் போகமுடியாமல் ஆண்டுதோறும் எண்ணியும் பேசியும் காலத்தை ஏலத்தில் விட்டு ஏங்கியிருப்பது போல, பூவுலிங்கமும் 'சொந்த ஊருக்குப் போய்

சும்மா ஒருமுறை பார்த்து விட்டு வரலாம்' என்ற ஏக்கத்தை வளர்த்துக் காலம் கழித்தார்.

இப்படியே விட்டு வைத்தால், முப்பது வருடங்களுக்கும் மேலாகவே காலம் ஓடி மறைந்துவிட்டது போலவே எஞ்சியிருக்கிற பொழுதும் பறந்து போகும்; தனது அந்தரங்க ஆசையை நிறைவேற்றிக் கொள்ளாமலே தான் செத்துப் போக நேரலாம் என்ற அச்சமும் அவருக்கு உண்டாயிற்று. சிறுகுளம் என்ற ஊர் மனமோகன சொர்க்கபுரியாய் மங்கி நின்று அவரை 'வா வா' என்று அழைத்தது. அதுவே பித்ாய், பேயாய் பிடித்து ஆட்டியது.

இனியும் தள்ளிப்போட்டு வந்தால் மனநிம்மதி குலைந்து பைத்தியமே பிடித்துவிடும் என்று அவருக்குப்பட்டது. அதை தவிர்ப்பதற்காக, ஏதேதோ சாமர்த்தியங்கள் பண்ணி, பொருளாதாரத்தில் ஒரு வழி ஏற்படுத்தி, ஒரு நாள் பூவுலிங்கம் பயணத்தை மேற்கொண்டார்.

பயணம் முழுவதிலும் அவருக்கு இருந்த பரபரப்பும் உணர்வுக் கிளர்ச்சியும் அளவிட முடியாதவை. நாகரிக நகரத்தின் மகத்தான காட்சிகளும், நகரவாசிகளின் கவலையில்லாத் தோற்றமும், பகட்டும், பணப்புழக்கமும் அவருக்கு அவருடைய சிற்றூரையும், அங்குள்ள மக்களையும் கிட்டத் தட்ட அதே ரகங்களும் தரங்களும் கொண்ட நிலைகளில் சித்திரம் தீட்டத் தூண்டுகோல்களாய் விளங்கின.

நீண்ட தூரம் பயணம் செய்து, அவரது ஊருக்கு அருகில் உள்ள முக்கிய ஜங்ஷனில் ரயிலை விட்டு இறங்கிய பூவுலிங்கம், பட்டணத்தின் ஒரு குட்டிப் பகுதியைப் பார்ப்பது போலவே உணர்ந்தார். கும்பலும் நெருக்கடியும், அர்த்தமற்ற பரபரப்பும், பஸ்களும், போக்குவரத்து நெரிசலும் இந்தவிதமான பிரமையை அவருக்குத் தந்தன.

எப்படியோ பஸ் பிடித்து, மீண்டும் ஒரு சிறு பயணம் செய்து, சிறுகுளம் என்ற அவரது லட்சிய ஊரை எட்டிப் பிடித்தார் பூவுலிங்கம்.

பயணத்தின்போது வழியில் தென்பட்ட சிறுசிறு ஊர்களில் தென்பட்ட வறட்சியும், வறுமையின் சின்னங்களும், மனித உருவங்களின் சோகத் தோற்றங்களும் அவர் பார்வையை உறுத்தின. இருப்பினும், தனது நினைப்பிலும் கனவிலும் கண்டு மகிழ்ந்த சிறுகுளம் இனிமைகள் நிறைந்த குளுகுளு ஊராகவே இருக்கும் என்றுதான் அவர் மனம் நினைத்தது.

பஸ்ஸை விட்டு இறங்கியதுமே, அவரது மனச் சித்திரத்தில் பெரும் வெடிப்பு ஏற்பட்டது. அவர் தெருத் தெருவாக நடக்கத் தொடங்கியதும், அவருடைய உள்ளத்தில் நித்திய சௌந்தர்யத்தோடு நிலைபெற்றிருந்த இளம் பருவச் சூழ்நிலை பற்றிய ரம்மியமான சித்திரம் தகர்ந்தது; உருக்குலைந்து விழுந்து, சிதறிச் சின்னாபின்னமாகி மக்கியது.

பூவுலிங்கத்தின் உள்ளத்தில் சிரஞ்சீவித் தன்மையோடு, இனிய எழிலோடு, பசுமையாய், வளமாய் கொலுவிருந்த சிறுகுளத்துக்கும், கண்முன்னே காட்சி தந்த ஊருக்கும் எவ்வளவு வித்தியாசம்!

தெருக்கள் குறுகலாய், புழுதிமயமாய், அழுக்கும் அசிங்கமுமாகக் கண்களை உறுத்தின. ஒவ்வொரு தெருவிலும் சில வீடுகள் இடிந்து விழுந்து கட்டை மண்ணாய் காட்சி தந்தன. வீடு என்ற பெயரில் நின்ற குடிசைகள் கூட அநேகம் இதோ, விழுந்து விடுவோம் என்பது போல உயிரைப் பிடித்தபடி நிற்பதாய் தோன்றின. பல வீடுகளில், ஆட்கள் பிழைப்புக்கு வழிதேடி நகரங்களுக்குப் போய் விட்டதால்,

பூட்டுகள் தொங்கின. எங்கும் கரையான் தன் வேலையைத் தீவிரமாய்ச் செய்து கொண்டிருந்தது.

ஊர் ஓரத்தில் முன்பு பூவரசு மரங்களும் நந்தவனமுமாக அழகுடன் விளங்கிய தனித்தெரு இப்போது அடர்த்தியான குட்டை முட்செடி இன 'நீர்க்கருவை' புதர்புதராக மண்டிக் கிடக்கும் பாழ்பட்ட பகுதியாகத் தென்பட்டது. ஊரின் எல்லையில் திடுமென ஓசை எழச் சிறு அருவிகள் விழும் மதகுகளோடு இருந்த பாலம், இப்போது கனத்த சுவர் அமைப்புகளோடும் இறுக மூடிய பலகைகளோடும் புதுமைத் தோற்றம் பெற்றிருந்தது. மொத்தத்தில் ஊரே பலரகமான பொருள்ளும் தாறுமாறாகக் குவிந்து கிடக்கும் குப்பைமேடு மாதிரி தன்பட்டது,

அங்கு வசித்த ஆட்களில் அவருக்குத் தெரிந்த —அவரை இனம் கண்டு கொள்ளக் கூடிய— நபர் யாருமே இல்லை. பலரும் வாழ்க்கைப் பிடிப்பு இல்லாத உருவங்கள் போல எலும்பும் தோலுமாய் நடமாடிக் கொண்டிருந்தார்கள். உணர்ச்சித் துடிப்பு, உயிரோட்டம், உவகைத் துள்ளல், திருப்தி முதலியன பெற்ற மனிதர்களாகக் காணப்படவில்லை அவர்கள். வாழ்க்கை இயந்திரம் கசக்கிப் பிழிந்துவிட்ட சக்கைகளாய், சாரமற்ற முறையில் நாட்களை ஓட்டுகிற நிழல்களாய் திரிந்தார்கள். வாழ்க்கையே பெரும் தண்டனை ஆகிவிட, மரணம் எனும் விடுதலையை அடைவதற்காகக் காத்திருப்பவர்களைப் போல மண்ணைப் பார்த்தபடி தலை குனிந்து நடக்கும் உருவங்களையே அவர் கண்டார்.

இரவு வந்ததும், மின்விளக்குகள் பளிச்சென எரிந்தன. வெறுமையை, வறுமையை, பசுமையற்ற சூழலை வெளிச்சமிட்டுக் காட்டவே அவை உதவின. ஏழரை மணிக்கே ஊர் அடங்கிவிட்டது. எட்டரை மணிக்குள் வீடுகளில் விளக்குகள்

அணைக்கப்பட்டு, ஊரே சுடுகாட்டு அமைதி பெற்ற இடமாக மாறி நின்றது.

பூவுலிங்கம் பட்டணத்தை, அதன் பரபரப்பை, வெளிச்ச மினுக்குதல்களை, பகட்டை, படாடோபத்தை எல்லாம் எண்ணினார். இந்த நேரத்தில் நாகரிகப் பெருநகரம் எப்படி கோலாகலமாக ஜீவத்துடிப்புடன் இருக்கும் என்று நினைத்துப் பெருமூச்செறிந்தார்.

பட்டணத்தின் போலிப் பகட்டுமய வாழ்க்கை அவருக்குப் பிடித்திருக்கவில்லை. அதேபோல, கிராமத்தின் இருண்ட சமாதி நிலை வாழ்வும் அவருக்கு உகந்ததாக இருக்கவில்லை.

நாகரிகப் பெருநகரங்களில் ஆத்மா இல்லாத— அல்லது சிதைந்து போன — வாழ்க்கைதான் கூத்தடிக்கிறது என்பது பூவுலிங்கத்தின் எண்ணம்,

அவருடைய உள்ளத்தில் மோகனமாய் கொலுவிருந்த சிறுகுளம் கிராமம் மனிதனுக்கு மாண்பு தரும் ஆத்மாவை கௌரவிப்பதாக — கிராம வாழ்வு ஆத்ம ஒளி பெற்றதாக — விளங்கும் என அவர் எண்ணியிருந்தார்.

அங்கும் வெறுமையைக் கண்டதும் அவர் நெஞ்சில் வேதனை ஏற்பட்டது. அவருடைய ஏமாற்றம் கொடியதாய், ஈடு செய்ய முடியாததாக அவரை வருத்தியது. ஏதோ பேரிழப்பை ஏற்க நேரிட்டது போல் அவர் சோகமுற்றார்.

'இந்த ஊர் இப்படி ஆகியிருக்கும் என்று தெரிய வழி இருந்திருக்குமானால் நான் இங்கு வந்திருக்கவே மாட்டேன். இவ்வூருக்கு வந்ததனால், இதன் உண்மை நிலையை அறிய நேர்ந்த துக்கம் வேறு; என் மனசில் பதிந்திருந்த பசுமைச்

சித்திரம் சிதைந்து விட்ட நஷ்டம் வேறு!' என்று அவர் எண்ணினார்.

சிறுகுளத்தின் நிகழ்கால நிலையை நேரில் பார்க்காமல் இருந்தாலாவது, மனம் பழைய அடிப்படையை வைத்து இனிய வேலைப்பாடுகள் செய்து கொண்டிருக்குமே! இப்போது தனது கனவை, கற்பனையை, தானே கொன்று விட்ட வருத்தம் அவருக்கு உண்டாயிற்று.

உடனடியாகத் திரும்பும் பயணத்தை தொடங்கிவிட்டார் பூவுலிங்கம். இப்போது அவர் உள்ளத்தில் தவிப்பும் ஆசைப் படபடப்பும் இல்லை. தனக்கு மிக நெருங்கிய ஒருவரை — அல்லது ஒன்றை — பறிகொடுத்து விட்டு, ஆற்ற முடியா துயருடன் திரும்புகிற ஒரு மனிதனின் வேதனைச் சுமைதான் அவர் உள்ளத்தில் படிந்திருந்தது.

□

'இந்தியா டுடே' — மே-ஜுன் 1991

சந்தோஷங்கள் சந்தோஷங்கள்

சுவரில் தொங்கிய காலண்டரைப் பார்த்தான் சின்னக் கண்ணன். ஆகா என்று கைகொட்டிக் களித்தான்.

ஈசிச்சேரில் ஓய்வாகச் சாய்ந்திருந்த அப்பா கேட்டார், "இப்ப என்ன சந்தோஷம்?' என்று.

''நாளைக்குத் தேதி இருபது'' என்றான் கண்ணன்.

"சரி. அதுக்கென்ன?"

''நாளைக்கு ஒரு விசேஷம். ஞாபகம் இல்லையா?''

"என்ன விசேஷம்?''

''பம்பர் பரிசுச் சீட்டு குலுக்கல். முதல் பரிசு இரண்டு லட்சம்.''

"ஆமா மறந்தே போனேன்'' என்று நிமிர்ந்து உட்கார்ந்தார் தந்தை.

"நாளைக்கு நமக்கு பரிசு கிடைக்கும். ஆமாதானே?'' என்று ஆவலோடு கேட்டான் கண்ணன். அவனுக்கு வயது பத்து இருக்கும்.

"ஆமாம். பெரிய பரிசு கிடைக்கும்'' என்று அப்பா நம்பிக்கையோடு சொன்னார்.

“பணம் வந்ததும் நாம எல்லாரும் திருப்பதிக்குப் போவோம். இல்லையா?”

“ஆமா, ரொம்ப காலமாகவே இது பாக்கி கிடக்கு. இந்தத் தடவை கண்டிப்பா போயிட வேண்டியதுதான்.”

“அப்புறம் நமக்கு சொந்தமா ஒரு வீடு வாங்கிருவோம்”

“ஆமா...”

“பெரிய வீடு. வசதியா, நிறைய ரூம்களோடு. மாடியும் இருக்கும். என்ன அப்பா?”

“ஆமா, பங்களா மாதிரி வீடு. சுற்றி வர விசாலமான இடம். முன்னே அருமையா...”

“பூச்செடிகள் நிறைய இருக்கும். ரோஜா செடிகள் நிற்கும். இல்லையா அப்பா?”

“உம்... ரோஜா செடிகள் இல்லாமலா? முதல்லேயே இல்லாவிட்டாலும், நாம வாங்கி நட்டு வைப்போம்.”

“சிவப்பு ரோஜா... ரெட் ரோஸ்... அதுதான் எனக்குப் பிடிக்கும். பிங்க் கலர் ரோஸ் செடிகளும் இருக்கட்டும். ஆனா, சிவப்பு ரோஜாதான் நிறைய வேணும். மஞ்சள் ரோஜாவும் நட்டு வைக்கலாம்.”

“செய்து போடுவோம்”

“சுற்றிவர மரங்கள். என்னென்ன மரங்கள் அப்பா”

“மா, பலா, தென்னை, கமுகு, கொய்யா, எலுமிச்சை இப்படி எல்லா மரங்களும் தான்.”

''ஜோரா இருக்கும். ஜில்லுனு, குளுகுளுன்னு. அந் தந்த சீசனுக்குத் தக்கபடி பழங்கள் கிடைச்சுக்கிட்டே இருக் கும். அதிகாலையில் குயில் 'கூ...கூ'ன்னு கூவும். குருவி கள் பறவைகள் எல்லாம் வெளிச்சம் வந்த உடனே காச்கீச்னு கத்தும். அந்த சத்தத்தை கேட்டு நான் எழுந்திருப்பேன்— டி.வி. வாங்கணும் கலர் டி.வி தானே?''

''பின்னே...''

''அலமாரி, நாற்காலி, ஃபிரிஜ், டைனிங் டேபிள்... எல் லாம் வாங்கணும் அப்பா. நம்ம வீட்டிலே எதுவும் இல் லையே!''

''பணம் கிடைச்சதும் வாங்கிப் போடுவோம்''

''வீட்டிலே உள்ளே நெடுக குழாய் பதிச்சு, ஒவ்வொரு ரூமிலும் வாஷ் பேசின் வச்சு, எங்கே திருகினாலும் தண்ணீர் கிடைக்கும்படி வசதி பண்ணணும்.''

''ஓ...''

''எனக்கு ஒரு சைக்கிள் வாங்கணும்.''

''கட்டாயம் வாங்கிரலாம்.''

''ஜம்னு சைக்கிள்லே போவேன். ராஜாப் பயல், என் கிளாசிலே படிச்சானே அவன்... சைக்கிள்லே வாரான். நான் பின்னாலே ஏறிக்கிடுறேன்னு சொன்னா கூடாது — ஏத்த மாட்டேன்கிறான். எனக்கு சொந்த சைக்கிள் கிடைச்சதும் எவனையும் கேரியரிலே ஏற விட மாட்டேன் ஆமா'' என்று உறுதியாகச் சொன்னான் கண்ணன்.

பிறகு ஆசையோடு கேட்டான்: ''எனக்கு வாட்ச் வாங் கித் தருவீங்களா அப்பா?''

"சரி"

"எங்க கிளாசிலே மூணு பேர் வாட்ச் கட்டிக்கிட்டு வராங்க. எனக்குத்தான் வாட்ச் இல்லே."

"நீயும் கட்டலாம். பணம் கிடைச்சதும் வாங்கிப் போடு வோம்"

"அருமையான வால் கிளாக் வாங்கணும். எவ்வளவு அழகு அழகான கடியார மெல்லாம் வந்திருக்கு! அப்புறம், பெரிய கண்ணாடி வாங்கி மாட்டணும். ஒவ்வொரு ரூமுக்கும் ஸீலிங் ஃபேன் கட்டாயம் தேவை. கோடை காலத்திலே காற்றே இலலாமல் ரொம்பவும் சிரமமாக இருக்கு"

"செய்துவிட வேண்டியதுதான். ஒவ்வொருத்தருக்கும் நல்ல ட்ரஸ்கள் வாங்கணும்."

"கட்டில் கூட வாங்கணும் அப்பா, நாகரிகமா, அழகா, இரும்புக் கட்டில் இருக்குதே—பிளாஸ்டிக் நாடா பின்னினது அது வாங்கணும். ஆளுக்கு ஒண்ணு. கீழே படுத்துத் தூங்கு றதை விட, கட்டில்லே படுப்பதுதான் சுகமா இருக்கும்."

ஆமாமா என்று தலையாட்டினார் அப்பா.

"லீவு வந்ததும். ஊட்டி கொடைக்கானல் குற்றாலம் எல்லாம் போய் வரணும். என் பிரண்ட்ஸ் எங்கெங்கேயோ போய் வராங்க. நாம தான் எங்கேயும் போறதில்லை" என்று குறைபட்டுக் கொண்டான் கண்ணன்.

"பணம் நிறைய இருந்தால் நாமும் போய் வரலாம்."

"அதுதான் நாளைய குலுக்கலில் கிடைக்கப் போகுதே!" என்று உற்சாகமாகச் சொன்னான் சிறுவன்.

அனைத்தையும் மௌனமாகக் கேட்டபடி அடுப்படி வேலைகளில் ஈடுபட்டிருந்த அம்மா சிரித்துக் கொண்டாள். பையனின் சந்தோஷத்தில் மண்ணை அள்ளிப் போடும்படியாக ஏதாவது சொல்வானேன் என்ற நினைப்பு அவளுக்கு.

மறுநாள் பத்திரிகை வந்ததும், முதல் காரியமாக சின்னக் கண்ணன் அதிர்ஷ்டப் பரிசு முடிவுகளைத் தான் பார்த்தான். தங்கள் சீட்டையும் பத்திரிகையையும் உன்னிப்பாக நோக்கினான்.

''என்ன கண்ணா, நம்பர் இருக்கா?'' என்று அப்பா கேட்டார்.

''இல்லே அப்பா. பத்து ரூபாய் பரிசு கூடக் கிடைக்கலே. கடைசி எண் எட்டு இருந்தால் நமக்கு பத்து ரூபா கிடைச்சிருக்கும். நம்ம சீட்டிலே கடைசி எண் ஆறு என்று இருக்கு.''

''போகுது போ. ஒவ்வொரு தடவையும் இது மாதிரி தான் ஆகுது. அதிர்ஷ்டம் கிட்டத்திலே வர்ற மாதிரி இருக்கு. ஆனா எட்டிப் போயிருது'' என்றார் அப்பா.

கண்ணன் தன் வேலைகளை கவனிக்கப் போனான். உரிய நேரத்தில் ஸ்கூலுக்குப் புறப்பட்டான்.

''கண்ணா!'' என அழைத்தார் அப்பா.

''முப்பதாம் தேதி குலுக்கல் ஒரு லாட்டரி இருக்குது அல்லவா?''

''என்னப்பா?''

''நீ வரும் போது அதிலே ஒரு சீட்டு வாங்கிட்டு வா. இந்தா ரூபா.''

அவன் ரூபாயை வாங்கிக் கொண்டான். சாமி படத்தின் முன்னே நின்று கண்களை மூடி, கை கூப்பி வணங்கினான். மனசுக்குள் வேண்டிக் கொண்டிருக்கலாம்.

"போயிட்டு வாரேன் அப்பா... அம்மா, போயிட்டு வாரேன்"— கூவியபடி வெளியேறினான் கண்ணன்.

"ஆமா. நமக்குத்தான் பரிசு விழுவதே இல்லையே. எதுக்கு திரும்பத் திரும்ப லாட்டரி சீட்டு வாங்குறீங்க?" என்று அம்மா கேட்டாள்.

"என்னைக்காவது ஒரு நாள் விழாமலா போகப் போகுது? நிச்சயமா விழும். பெரிய பரிசு. அது வந்ததும் நாம வசதியா ஒரு வீடு வாங்காமலா இருக்கப் போறோம்?" என்றார் அவர், நம்பிக்கையோடு.

அவள் சிரித்தாள். "நீங்களும் கண்ணன் மாதிரி சின்னப் பிள்ளை தான். ஒவ்வொரு தடவையும் சீட்டு வாங்குறது, குலுக்கலுக்கு முந்தின நாள், அதை வாங்குவோம் இதை வாங்குவோம். அங்கே போவோம், இங்கே போவோம்னு ஆசையா பேசி மகிழ்வதும் உங்க இரண்டு பேருக்கும் வேலையாப் போச்சு. இப்படி எத்தனை காலமா நடக்குது! உங்களுக்கு இன்னும் அலுத்து போகலையா?" என்று கேட்டாள்.

"வறண்ட வாழ்க்கையில பசுமையான கணங்கள் அவை. சந்தோஷத்தை வளர்க்கும் இனிய நினைப்புகள். அப்படி ஆசையோடு நினைப்புகளை வளர்ப்பதிலே ஒரு தனி சந்தோஷம் உண்டாகுது. அதை நீ ஏன் கெடுக்க விரும்புகிறே?" என்றார் அப்பா.

□

'சுபமங்களா'—ஏப்ரல் 1991

பெண்

கதவு தட்டப்பட்டதும் அவள் வந்தாள் திறப்பதற்காக. நகர்ந்து வருகிற ஒளிக்கோடு மாதிரி.

கம்பிகள் இடைவெளியிட்டிருந்த அளிக் கதவு அவளை அவன் கவனிப்புக்குப் புலப்படுத்தியது. வெள்ளை ஆடை பளீரென்று அவன் பார்வையில் பட்டது.

அவள் கதவருகில் வந்தாள். அழுக்கற்ற வெண்மையான வெள்ளைச் சீலையில், ஒரு புனிதத்தின் வடிவமாகப் பிச்சிப்பூ போல் வெளீர் எனத் துலங்கிய மெல்லிசான ரவிக்கை அவளது வெண்மையை அதிகப்படுத்திக் காட்டியது. வாட்டமுற்ற வெண்தாமரை போல் தென்பட்டது அவள் முகம்.

கதவருகில் நின்றாள். சோகத்தின் பிம்பமாக, உட்புறத் தாள் நீக்கி, கதவைத் திறந்து, 'ஐயா, வா' என்று கூறி ஒதுங்கி நின்றாள் எளிமையின் உயிர்ப்பாக.

இனிய, எளிய, தனக்கெனத் தனிவடிவமும், வசீகரமும் பெற்ற வெண்மையான புனித நந்தியாவட்டை மலரின் நினைப்பு அவன் மனதில் படர்ந்தது.

'வா, உள்ளே வா'—அவள் குரல் எப்போதும் போல் மென்மையாக ஒலித்தது. அதில் சோகம் இழையோடியிருப்பதாக அவன் கருதினான்.

உயர்ந்து, விசாலித்து பல அறைகளைக் கொண்டிருந்த அந்தப் பெரிய வீடு இருண்டிருந்தது. சன்னல் கதவுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. ஒளிவீச்சு உள்ளே புக இயலாது வெளியிலேயே முடங்கிக் கிடந்தது. அந்த வீடு அவளது வாழ்க்கையின் ஒரு 'ஸிம்பாலிசம்' (குறியீடு) போல அவனுக்குப்பட்டது.

உள்ளே போனான். 'உட்காரு' என்று அவள் உப சாரமாகக் கூறவும், ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். சூழ்நிலையின் வெறுமை அவன் பிரக்ஞையில் உறுத்தியது.

விசாலமான அறையின் பெரிய சுவர்கள் வெறுமையாய் வெளீரிட்டு நின்றன. அழகு செய்யும் படங்களோ, விகாரப் படுத்தும் காலண்டர்களோ, விதம் விதமான மனிதர்களின் போட்டோக்களோ இல்லாத வெறும் சுவர்களின் ஓரமாக பெரிய பெரிய நாற்காலிகள் கிடந்தன. வெறுமையை அதிக மாய் எடுத்துக் காட்டும் கருவிகள் போல.

அங்கே உயிர்ப்பின் சலனங்கள் இல்லை. உணர்ச்சிகளின் கலீரிடல்கள் இல்லை. குழந்தை இயக்கங்களின் சிதறல்கள் இல்லை. இயற்கை ஜீவன்களின்—குதித்துக் கு மாளியிட்டுக் கூச்சல் போட்டுத் திரியும் குருவிகளின்—உற்சாகச் சிரிப்புகள் கூட இல்லை. சுத்தம், ஒழுங்கு, அமைதி கொலு இருந்தன நெடுகிலும்.

போன முறை அவன் வந்திருந்த போது— ஒன்றிரண்டு வருடங்கள் ஓடி விட்டன இடைவேளையாக—அவள் கணவன் இருந்தார். சீக்காளியாய்க் கிடந்தார், அந்த அறையின் ஒரு அங்கம் போல. ஒரு நோயாளியைச் சார்ந்து இருக்கக் கூடிய அனைத்தும் அங்கே இருந்தன. அவர் சதா ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார். அவரைப் பார்ப்பதற்

கென்று யாராவது வந்து போனார்கள். அவர்கள் பேச்சும், சிரிப்பும், கோப வெடிப்புகளும் அந்த வீட்டுக்கு ஜீவன் தந்து கொண்டிருந்தன. இப்போது அவர் இல்லை. வீட்டின் ஜீவன் ஓய்ந்து விட்டது. அவள் ஒடுங்கிப் போனாள். தன்னுள் தானே குறுகிக் கொண்டிருக்கும் சிற்றொளி மாதிரி.

ஒரு சுவரின் ஓரமாக ஒண்டி அமர்ந்திருந்தாள் அவள். பெரிய கூண்டினுள் ஒரு மூலையில் சேர்ந்து உட்கார்ந்தி ருக்கும் சிறுபறவையின் தோற்றம் அவள் மனசுள் சலன மிட்டது. அவள் சதா காலமும் இப்படி ஒதுங்கி, ஓய்ந்து, செய்வதற்கு எதுவும் இல்லாதவளாய் பேசுவதற்கு எதுவும் அற்றவளாய் பொழுது போக்கிற்கும் கவன ஈர்ப்புக்கும் சுவாரஸ்யமான விஷயம் ஒன்று கூட இல்லாது, தனி மையைச் சுமந்து கொண்டு உட்கார்ந்திருப்பாள். அன்றாட அலுவல்களையும், அவசியத் தேவைகளையும் பூர்த்தி செய்த பிறகு உட்கார்ந்து அலுத்துப் போனால், படுத்துக் கிடப்பாள். அவளது வாழ்க்கையின் பெரும் பாகம் ஒரு தினுசாகக் கழிந்து விட்டதென்றால் எஞ்சியுள்ள பாகம் வேறு விதமாக ஊர்ந்து நகரக் கனத்துக் கவிந்து கிடக்கிறது.

ராத்திரி நேரங்களில் ஒருவிதமான பயம் கூட இவ ளுக்கு துணை இருக்கும் — இந்த இருண்ட சூழலில்; தன்னந் தனித்த பெரிய வீட்டில் என்று அவன் எண்ணிக் கொண் டான்.

அவள் முகத்தைப் பார்த்தான்.

ஈரப் பசையை இழந்து விட்ட முட்டகோசு மாதிரித் தோன்றியது அது. கண்கள் ஆழத்தில் கரை காண முடியாச் சோகம் மினு மினுப்பதாகப் பட்டது.

அவன் மனப் பதிவு, மறதிப் புழுதியில் மங்கிப் போய் விடாத ஒரு இளமைத் தோற்றத்தை இப்போது அவனுள்

வெளிச்சப் படுத்தியது. சிரிக்கும் செந்தாமரை. ஒளி குறு குறுக்கும் கரிய விழிகள், குழந்தைத்தனமான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அறியும் அவாவும் உணர்வு மெருகேற்றிய குமரிப் பெண் முகம்.

—'மாம்பழ மங்கை' கதையைக் கேட்பதில் அவளுக்கு மிகுந்த ஆர்வம். ராஜா. குழந்தை பெறாத ராணிகள். ராஜாவின் தபசு. ஒரு முனிவரின் கிருபை. ஒரு மாம்பழம். இதை முழுவதும் தின்று விட வேண்டும்; கொட்டையைக் கூட; அப்ப குழந்தை கிடைக்கும் என்ற அருள். இளைய ராணி மாம்பழத்தின் சுவைப் பகுதிகளைத் தின்றுவிட்டு, கொட்டையைக் கிணற்றில் போட, அதிகாலையில் கிணற்றுக் குள்ளிருந்து அதிசயமான ஒரு மணம் வர, அந்தப் பக்கமாக வந்த மூத்த ராணி உள்ளே எட்டிப் பார்க்கிறாள்.

அற்புதமான ஒரு தாமரைப் பூ. இதழ்கள் விரித்து, அழகாகப் பெரிசாக, சிரிப்பது போல் மலர்ந்திருக்கிறது. அதன் நடுவில் ஒரு குழந்தை. கின்னஞ்சிறுசாய்; சிங்கார மாய்ச் சிரித்தபடி தாமரைப் பூ மேலே வருகிறது. ராணி பிள்ளையை ஆசையோடு எடுத்துக் கொள்கிறாள். அதுதான் மாம்பழ மங்கை... இப்படி வளரும் கதை.

அதை அவள் சொல்கிறபோது, கிணற்றினுள் ஒளிரும் தாமரையை வர்ணிக்கையில் அவள் முகமே ஒரு தாமரைப் பூவாகிவிடும். ஒளி சுடரும் அவள் விழிகளில் சந்தோஷமும், அதிசய பாவமும், மின்னி மிளிரும், சிறு உதடுகள் பிரிந்து நிற்க, அப்புறம்? அப்புறம்? என்று கதை கேட்கும் ஆர்வ முகம்...

அது அவனுள் நீங்காத நினைவு முகம். ஜீவனுள்ள தாமரைப்பூ.

இப்போது அது அழுத்தம் பெற்று நினைவில் சிலிர்க்க... அவன் வாடிய பூ முகத்தை எதிரே பார்த்தான். காலமும் வாழ்க்கையும் பாதித்திருந்ததால் பழுத்துக் கனிந்து விளங்கிய முதுமை முகம். இதுவும் தனி ஒரு அழகு பெற்றிருக்கத்தான் செய்தது.

அவள், இறந்து போனவரைப் பற்றி, அவரது கடைசி அனுபவங்கள் பற்றி, அவருக்குப் பார்த்த பாடுகள் பண்டுவங் கள், வந்து பார்த்த டாக்டர்கள், வாங்கிய மருந்துகள் பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள். அவனிடம் ஏதாவது பேச வேண்டும் என்பதற்காகவும் — வந்திருப்பவன் 'துக்கம் விசாரிக்கத்தான்' வந்திருப்பான். அவனிடம் சம்பிர தாய ரீதியில் அனைத்தையும் சொல்ல வேண்டும் என்ற கடமை உணர்வினாலும், அவள் பேசினாள்.

அவன் காதுகள் அவ்வொலி அலைகளைக் கிரகித்துக் கொண்டிருந்த வேளையிலேயே அவன் மனம் அவள் சம்பந்த மான இறந்த கால நிகழ்வுகளை நினைவொளிக் காட்டி உள் வெளியில் உயிர்ப்பித்தவாறு இருந்தது.

அவள் அவனுக்கு அறிமுகமான சமயம் அவளுக்குப் பதின்மூன்று அல்லது பதினான்கு வயது இருக்கும். பருவ மலர்ச்சியின் விளிம்பிலே நின்றாள். அவனுடைய அம்மா வைத் தேடி வீட்டுக்கு வந்திருந்தாள். வர்ணம் வெளிறிய பாவாடையும், பழந்துணித் தாவணியும் அணிந்து உயர மாய், ஒல்லியாய், ஒளிக்கதிர் போல் காட்சி தந்தாள். அவ ளின் அந்தத் தோற்றத்தை அவன் மறக்க முடிந்ததில்லை. அப்போது அவனுக்கு வயது எட்டு. சுற்றி வளைத்த ஒரு உறவில் பெரியம்மாவின் மகளாக இருந்த அவள்—அவளின் அக்கா ஆனாள். அக்கா இல்லாத அவனுக்கு அவனிடம் ஒரு பற்றுதலும், தம்பி இல்லாத அவளுக்கு அவனிடம் ஒரு பிரியமும் பாசமும் வளர்ந்து வந்தன.

ஓடிய காலம் அவள் வாழ்க்கை ஏட்டில் புதிய புதிய அத்தியாயங்களை எழுதியது. விசேஷங்களும் நிகழ்ச்சி

களும் மலர்ந்தன. 'வசதியான இடம், என்று கருதப்பெற்ற பெரிய வீட்டில் அவளுக்குக் கல்யாணம் நிகழ்ந்தது. ஏழ்மை நிலையிலிருந்து போதுமான வசதி வளம் என்ற களத்தில் அவள் அடி எடுத்து வைத்தாள். சந்தோஷங்கள் பூத்துக் குலுங்கின. பெண் குழந்தை பிறந்தது. மேலும் பெண்கள். பையன்... நல்லவனாகத் தோன்றிய கணவன் அவளுக்குச் சோதனையாக மாறினான். சூதாட்டப் பிரியன் ஆனான். புதுமையாக நாட்டிலே புகுந்து வளர்ந்த சினிமாக்கலையில் மோகம் கொண்டான். படம் பிடிக்கப் போவதாகத் திரிந்தான். பணத்தையும் உடல் ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொண்டான். பிசினஸ் பண்ணுவதாகச் சொல்லி, நகரவாசியாகி மேலும் பணத்தை விரயமாக்கினான். உடல் நலமும் சீரழிந்தது. வீட்டோடு வந்து முடங்கினான். பெண்களுக்குக் கல்யாணம் நடந்தது. அவரவர் வாழ்க்கையும் தனித் தனி 'அரிச்சந்திர புராணம்' ஆயிற்று. மகன் சோம்பேறியாய், வீணனாய். பொய்யனாய், குடியனாய் வளர்ந்து அவளுக்குத் தொல்லையானான். சகல பொறுப்புகளும் சுமைதாங்கியுமாக வசித்த அவள் தனது அறுபத்தைந்தாவது வயசில் கணவனை இழந்தாள். வாழ்வில் நிம்மதியற்று, நிஜமான சந்தோஷத்தை உணராது, கஷ்டப்பட்டு நாளோட்டுகிற நிலைமை இப்போது.

இதை எல்லாம் எண்ணிய அவன் காதுகளில் அவள் தனது குறைகளைக் கூறிக் கொண்டிருப்பது கேட்டது. தன் பெண்களின் துயரங்களைச் சொன்னாள். மகனின் இயல்புகளைக் குறை கூறி வருத்தப்பட்டாள். தனது இயலாமைக்காக நொந்து கொண்டாள்.

''இவ்வளவு பெரிய வீட்டிலே ராத்திரி நேரங்களில் தனியாக இருக்க எனக்கு என்னவோ பயமாயிருக்கு. சரியான தூக்கம் கிடையாது. ஏகப்பட்ட கவலைகள். இப்படி

எல்லாம் சங்கடப்படுவதைவிட செத்துப் போவதே நல்ல துன்னு அடிக்கடி தோணுது, என்ன சாவு என்றும் தோணுது. மனசு கெடந்து புண்ணா உலையுது'' என்றாள் அவள்.

தரையைப் பார்த்தபடி உட்கார்ந்து விட்டாள்.

அவளுக்குத் தன்னால் எவ்வித ஆறுதலுங் கூற இயலாது என்று அறிந்தவனாய், எந்தவித அனுதாபமும் அறிவிக்க சக்தி அற்றவனாய் உட்கார்ந்திருந்தான்

—வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது? பெண்களின் நிலைமை ஏன் இவ்வாறு இருக்கிறது? சமுதாயத்தில் பெண்ணுக்குத் தனித்த வாழ்க்கை இல்லை. ஆணைச் சார்ந்து தான் அவள் வாழ வேண்டியிருக்கிறது. இனிய கனவுகளோடும், சந்தோஷ எதிர்பார்த்தல்களுடனும் வாழ்வின் மலர்ச்சியில் துணைவன் ஒருவனோடு முன்னேற அடி எடுத்து வைக்கிற பெண்கள் அநேகரது ஆசைகள் கருகி விடுகின்றன. அவர்களது விருப்பங்களும், சந்தோஷங்களும் ஆண்களது போக்கினால் தீய்க்கப்பெறுகின்றன. பலர் ஏமாற்றங்களோடு, துன்பங்கள், வேதனைகள், அடி உதைகள், அவமானங்கள் குற்றச்சாட்டுகள், மற்றும் பல தண்டனைகளையும் அனுபவித்து அல்லல் உறுகிறார்களே, இதெல்லாம் ஏன்?

"என்ன தம்பி, குருகுருன்னு உட்கார்ந்திட்டே? உன்னைப்பத்தி நான் கேட்கவே இல்லையே! எப்படியிருக்கிறே?'' என்று அவள் விசாரித்தாள்.

அவன் பதிலளித்தான்.

''நீ ஏன் இப்படி இருக்கிறே, உன் வாழ்க்கையை நீயே கெடுத்துக்கிட்டு? எல்லாரையும் போல, நீயும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு வீடும் வாசலுமா இருக்கலாமில்லையா? அதை விட்டுப் போட்டு, ஊர் ஊரா திரிஞ்சுக்கிட்டு—இதிலே நீ என்ன சுகத்தைக்கண்டே?'' என்றாள் அவள்.

'கல்யாணம் செய்துகொண்டு வீடும் வாசலுமாக இருந்து நீ என்ன சுகத்தையும் சந்தோஷத்தையும் கண்டு விட்டாய்' என்று அவளிடம் கேட்கவிரும்பினான். ஆனால், கேட்கவில்லை. உன் மகள்களின் வாழ்க்கை என்ன சுகமாக அமைந்தது? நமக்கெல்லாம் தெரிந்த எத்தனையோ பெண் கள், ஆண்கள் வாழ்க்கையில் என்ன சுகத்தைக் கண்டிருக் கிறார்கள்? இப்படி எல்லாம் பேச அவன் ஆசைப்பட்டான். ஆனால் பேசவில்லை.

''மனிதர்களுடைய வாழ்க்கையில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா - அர்த்தத்தைக் காண முடியுமா — தங்கள் வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவர்கள் உண்டா என்று தேடிக் கொண்டு திரிகிறேன்'' என்றான்.

''நல்லா அலைஞ்சே போ!'' என்றாள் அவள். ''கல் யாணத்தைப் பண்ணிக்கிட்டு, ஒரு பெண்ணோடு குடும்பம் நடத்தி, குழந்தைகளோடு வீடும் வாசலுமா இருப்பது தான் வாழ்க்கை. அதிலே கஷ்டங்களும், தொல்லைகளும் வருவது சகஜம். அதை எல்லாம் சகித்துக் கொண்டு இருக்கிறதுதான் வாழ்க்கையின் அர்த்தம். நீ என்ன புதுசாக் கண்டு பிடிக்கப் போறே இதிலே!'' என்று சொன்னாள்.

''கொஞ்சம் இரு. காப்பி போட்டுக்கிட்டு வாரேன்'' என்று எழுந்து உள்ளே போனாள்.

''அக்கா, நீ பெண்மையின் சரியான பிரதிநிதிதான்'' என்றி அவன் எண்ணிக் கொண்டான். அவன் பார்வை அந்தப் பெரிய வீட்டின் வெறுமையில் நீந்தியது.

□

'தினமணி கதிர்' — 14-11-1980

ஊரும் ஒருத்தியும்

திருமணமாகி வந்த நாள் முதலே ரஞ்சிதத்துக்குக் கணவன் ஊரைப் பிடிக்க வில்லை.

'இது என்ன ஊரு இது! பட்டிக்காட்டுப் பய ஊரு... இதுவும் ஒரு ஊரா?' என்று பழிப்பது அவளுக்கு வழக்கமாக அமைந்துவிட்டது.

ரஞ்சிதம் டவுனில் பிறந்து வளர்ந்தவள். எட்டாம் வகுப்பு வரை அங்கே பள்ளியில் படித்தவள். நாகரிகம் பயின்றவள் என்ற நினைப்பு.

அவள் கல்யாணமாகி வந்த ஊர் சின்ன கிராமம். கடை வீதி கிடையாது. ஒரே ஒரு கடைதான் இருந்தது. இஷ்டப் பட்ட போது வாய்க்கு ருசியாக ஏதாவது வாங்கித் தின்ன ஆசைப்பட்டால், அதற்கு உதவும்படியாக ஒரு மிட்டாய் கடை உண்டா? ருசிருசியா வடை, காப்பி என்று சாப்பிட ஒரு ஓட் டல் இருக்குதா? சினிமா தியேட்டர் இல்லை. இதுவும் ஒரு ஊரா?

ரஞ்சிதம் எப்பவும், எல்லோரிடமும் இப்படி குறை கூறிக் கொண்டிருப்பாள்.

அவளுக்கு கணவன் வீட்டாரையும் பிடிக்கவில்லை. என்ன சனங்க நாகரிகம் தெரியாதவங்க! இவ்விதம் மனசில் சொல்லிக் கொள்வாள்.

கணவன் குப்புசாமியைக் கூட அவளுக்குப் பிடிக்கவில்லை தான். பேரைப் பாருங்க! குப்புசாமியாம். அழகான பேரு எத்தனை இருக்கு. அதிலே ஒண்ணு இதுக்குக் கிடைக்காமல் போச்சுதே. ஆளும் அழகு வழியுது! ஒவ்வொருத்தர் என்னென்னமா இருக்காங்க! சினிமாவிலே வருகிற கதாநாயகனுக மாதிரி. அவ்வளவுக்கு இல்லாவிட்டாலும் கொஞ்சமாவது லெட்சணமா இருக்கப்படாது? என் தலை எழுத்து. எனக்கென்று இப்படி வந்து வாச்சிருக்குதே என அவள் அலுத்துக் கொள்வாள்.

குப்புசாமி நன்றாக உழைக்கக் கூடியவன். பக்கத்துச் சிறு நகரிலிருந்த மில் ஒன்றில் வேலை பார்த்தான். காலையில் ஆறு மணிக்கே சைக்கிளில் போக வேண்டும். சாயங்காலம் திரும்பி வருவான். வந்ததும் தோட்ட வேலை அது இது என்று எதையாவது இழுத்துப் போட்டுக் கொண்டு பொழுது போக்குவான்.

அதெல்லாம் ரஞ்சிதத்துக்குப் பிடிக்கவில்லை. 'இது என்ன வேலை! டவுனில் ஒரு ஜவுளிக்கடையில் ஏதாவது வேலை பார்த்துக் கொண்டு, அங்கேயே வாடகைக்கு வீடு எடுத்துக் குடியேறி விடலாம். நல்லா டீசன்ட்டா வேட்டி, சட்டை அணிந்து கொண்டு நாகரிகமா இருக்கலாம். பொழுது போக்காக சினிமாக்கள் பார்க்கலாம், என்று அவள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். புருசனிடமும் சொன்னாள். பிறத்தியாரிடமும் புலம்பினாள்.

அவள் பேச்சை அவன் சட்டை செய்யத் தயாராக இல்லை. இது பெரும் மனக்குறையாக இருந்தது அவளுக்கு.

ரஞ்சிதத்துக்கு தான் ரொம்ப அழகானவள் என்ற பெருமை. அவள் பிரமாத அழகி இல்லை. ஆனாலும் இருக்கிற அழகு அம்சங்களை அலங்காரமாக, எடுப்பாகக்

காட்டி, வசீகரமாக விளங்கக் கூடிய திறமையில் அவள் தேர்ந்திருந்தாள். தான் ரொம்பவும் புத்திசாலி என்ற கர்வமும் அவளுக்கு இருந்தது.

'எங்க வீட்டுக்கு எதிர்வீட்டிலே ஒரு ஸார்வாள் இருந்ததாக. ரஞ்சிதம், நீ இருக்கிற அழகுக்கு சினிமாவிலே உனக்கு சான்சு கிடைக்கும், நீ சீக்கிரமே ஸ்டாரு ஆகிவிட முடியும்னு அடிக்கடி சொல்லுவாக. நீ மட்டும் எட்டாவதோடு படிப்பை நிறுத்தாமல், மேல் கொண்டு படிச்சிருந்தால், உனக்கு இருக்கிற அறிவுக்கு, உனக்கு நல்லவேலை எத்தனையோ கிடைக்கும். டீச்சராக வரலாம். அல்லது வேறு ஆபீஸ்களிலே வேலை தேடிக் கொள்ளலாம் என்பாக. ஊம்ம் என் விதி, நான் இந்தப் பாடாவதிப் பட்டிக்காட்டு ஊரிலே வந்து, இப்படிப்பட்ட ஒரு வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடக்க நேர்ந்திருக்கு!'

இதுவும் ரஞ்சிதத்தின் புலப்பம் தான். தனிமொழியாகத் தன்னுள் பலநூறு தடவை புலம்பியிருப்பாள் இதை. அவ்வப்போது உரத்த சிந்தனையாகவும் இது வெளிப்பட்டு விடும்.

குப்புசாமி சிடுசிடுப்பான். 'உனக்கு இங்கே என்ன குறைச்சல்? இந்த ஊருக்கு என்ன குறை? அமைதி நிறைந்த அழகான ஊரு. வசதியான வீடு. டவுனிலே நெருக்கடியும் கும்பலும் பரபரப்பும் தான் மிகுதி' என்பான்.

அவன் மனப்போக்கு அவளுக்குப் பிடித்ததாக இருக்கவில்லை. பேன்ட் மற்றும் ஸ்டைலான ஷர்ட் அணிந்து, விலை உயர்ந்த ஷூ மாட்டிக் கொண்டு, பவுடரும் ஸெண்டும் பூசி, ஜம்மென்று இருக்க வேண்டும் தன் கணவன் என்று அவள் ஆசைப்பட்டாள். அவை அவனுக்கு உவப்பான விஷயங்களாக இல்லையே.

ரஞ்சிதம் அவ்வாறு அலைகிற ஸ்டைல் ஆசாமிகளை விழி அகலப் பார்த்தாள். டவுனிலிருந்து அப்படி யாராவது

வந்தால், அவர்களோடு பேச்சுக் கொடுத்து, சினிமாக்கள் பற்றி தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினாள்.

'ரஞ்சிதம், நீ இருக்கிற அழகுக்கு நீ இருக்க வேண்டிய இடம் சினிமா உலகம்தான். உனக்கு சுலபமா சான்சு கிடைக்கும், நான் அதுக்கு ஏற்பாடு செய்கிறேன்னு ஒருத்தரு சொன்னாரு. ஆள் ஜோரா இருப்பாரு. எங்க வீட்டுக்கு மூன்றாவது வீட்டிலே இருந்த வக்கீலுக்கு உறவு. பட்டணத்திலேயிருந்து வந்து பத்து நாள் தங்கியிருந்தாரு. பட்டணத்தைப் பத்தியும், சினிமா படம் பிடிக்கிறவங்க, அதிலே நடிக்கிறவங்க பத்தியும் நிறைய நிறையச் சொன்னாரு. சிரிச்சு சிரிச்சுப் பேசுவாரு. ரொம்ப நல்லவரு. அடுத்த முறை வாரபோது, என்னையும் பட்டணத்துக்கு அழைச்சிட்டுப் போயி சினிமாவிலே நடிக்கதுக்கு சான்சு வாங்கித் தாறேன்னு கூடச் சென்னாரு, தெரியுமா!'

ரஞ்சிதம் ஒருத்தியிடம் ரகசியமாகவும் பெருமையாகவும் இதை சொன்னாள். அவள் பொறாமைப்படுவாள் என்று இவள் நினைத்தாள்.

ஆனால் அந்த அவளோ, இவளை ஒரு தினுசாகப் பார்த்தாள். 'இது ஒரு மாதிரித்தான் போலிருக்கு. கல்யாணம் ஆகிறதுக்கு முன்னாடியே கண்டபடி அலைஞ்ச கழுதை! என முடிவுகட்டிப் போட்டாள். 'நாம குப்பையா அண்ணனுக்கு போயும் போயும் இப்படி ஒரு சின்னச் சவமா பெண்டாட்டியா வந்து வாய்க்கணும்?' என்று உளம் புழுங்கினாள். ரஞ்சிதம் நடத்தை மோசம் என்று தனக்குத் தெரிந்தவர்களிடம் எல்லாம் ரகசியமாகச் சொல்லி வைத்தாள்.

எந்த ஊரையும் ஊர்காரர்களையும் ரஞ்சிதம் மட்டமாகக் கருதினாளோ, அவர்கள் அவளை மட்டமாக எடைபோட்டு, முத்திரை குத்தி, உன் பவிஷு இவ்வளவு தான் என்று ஒதுக்கி

விட்டார்கள். ஆனாலும், அவளைப்பற்றி மனம் போன போக்கில் பேசி மகிழத் தயங்கவில்லை.

அதெல்லாம் ரஞ்சிதத்துக்குத் தெரியாது. இதுவும் ஒரு ஊரா? இங்குள்ள சனங்களும் ஒருசனமா? தரித்திரங்கள். நாகரிகம் தெரியாத முண்டங்கள் என அவள் கரித்துக் கொண்டிருந்தாள்.

அவள் போக்கு புருசன்காரனுக்கு வெறுப்பு தர ஆரம்பித் தது.

'நான் நினைச்சிருந்தால் நல்ல சினிமா ஸ்டாரு ஆகி யிருப்பேன், தெரியுமா? என்னை சினிமாவிலே சேர்த்து விடறதாக் கூட ஒருவர் முன்வந்தாரு. அதுக்குள்ளாரே எனக்கு இப்படி ஒரு கல்யாணத்தை பண்ணி வச்சிட்டாங்க' என்று அவனிடமே அவள் ஒரு சமயம் கூறினாள்.

'யாருடீ அவன்?' என்று உறுமினான் குப்புசாமி.

அவள் சொன்னாள். அவள் பேரில் அவனுக்கு சந்தேகம் தான் ஏற்பட்டது. அவளை உறுத்துப் பார்த்தான்.

'எனக்கு நடிக்கத் தெரியாதுன்னு நினைக்கிறேளோ? எனக்கா தெரியாது? நான் ஸ்கூல்லே படிச்சப்போ, ஆண்டு விழா நாடகங்களிலே நடிச்சிருக்கேன், தெரியுமா?' என்று உற்சாகமாகவும் பெருமையோடும் பேசினாள் அவள்.

அவள் எதிர்பாராதது நடந்தது. அவள் கன்னத்தில் பளாரென ஒரு அறை விழுந்தது.

'எனக்கும் எங்க குடும்பத்துக்கும் கேவலம் உண்டு பண்ணனும்னே நீ வந்திருக்கே! சினிமாவாம், நடிப்பாம்! எவனோ சேர்த்து விடுறேன்னு சொன்னானாம். சாக்கிரதையா இருந்துக்கோ. தப்புத் தவறா நடந்தே உன்னை கொலை பண்ணிப் போடுவேன். எலியைக் கொல்லுற மாதிரி உன்னை ஒழிச்சுக் கட்டிருவேன்' என்று கறுவினான் கணவன்.

அவன் பார்த்த பார்வையும், அவன் நின்ற நிலையும், அப்போது அவனுடைய கைகள்—கை விரல்கள் — முன் நீண்டு துடித்த துடிப்பும், அவன் அப்படிச் செய்யக் கூடியவன் தான் என்ற நினைப்பை, அச்சத்தை, அவளுள் விதைத்தன. அவன் மீது அவளுக்கு உள்ளூற பயம் ஏற்பட்டது. அவனிடம் ஏற்பட்டிருந்த வெறுப்பு வளர்ந்தது.

ரஞ்சிதத்துக்கு அந்த ஊரும், வீடும், சுற்றமும் சூழலும் பிடிக்காத விஷயங்களாக மட்டுமில்லாது, தன்னை ஒடுக்கி அடக்கித் தனது சந்தோஷங்களை சிதைத்து, தன்னுடைய வாழ்வையே பாழடிறக்கிற பாழ்நிலமாய்,படுகுழியாய், பயங்கர நரகமாய் தோற்றம் கொண்டன.

தூரத்து டவுனும், நாகரிகமும், உல்லாசப்பிரியர்களும், அவற்றுக்கும் அப்பால் தொலைதூர நாகரிகப் பெருநகரமும், சினிமா உலகமும் குளுகுளு பசுமைகளாய் புன்னகைத்தன. கண்சிமிட்டின. அவளுக்கு ஆசை காட்டின.

அவள் இயல்பான சந்தோஷங்களை அனுபவிக்க முடியாமல், கனவு இன்பங்களுக்காக ஏங்கி, நாட்களை ஓட்டலானாள்.

பிறந்த வீட்டில் ஏதோ விசேஷம் என்று அவள் அம்மா வந்து ரஞ்சிதத்தைக் கூட்டிப்போனாள். பின்னர் வருவதாகக் குப்புசாமி சொல்லி அனுப்பினான்.

உழைப்பில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்த அவன் சொன்னபடி போக முடியவேயில்லை.

அப்புறம் போக வேண்டியது அவசியம் இல்லை என்றாகி விட்டது.

ரஞ்சிதம் நாகரிக மன்மதன் ஒருவனுடன், அவன் பேச்சையும் சிரிப்பையும் ஆசை வார்த்தைகளையும் நம்பி, வீட்டை

விட்டுப் போய் விட்டாள். இந்தச் செய்தி குப்புசாமிக்கும் அவன் ஊருக்கும் தெரிந்தது. பரபரப்பான பேச்சுக்கும் ஏச்சுக் கும் தூண்டுதல் ஆயிற்று, சிறிது காலத்துக்கு.

ரஞ்சிதம் சினிமாவில் சேரத்தான் போயிருப்பாள்; அப்படி ஆசை காட்டித்தான் நாகரிக மைனர் அவளை கூட்டிக் கொண்டு போயிருப்பான் என்று குப்புசாமியும், அந்த ஊர்க் காரர்களும் நம்பினார்கள்,

அது தான் நிஜமும் கூட.

நிஜமான சந்தோஷங்களை அனுபவிக்க மனம் இல் லாது, பகட்டி மினுக்கிய நிழல் இனிமைகளையே நாடி அலைந்த ரஞ்சிதம் என்ன ஆனாள்—அல்லது ஆவாள்— என்று அந்த ஊர் கவலைப்படவில்லை.

தன்னை விரும்பி நேசிக்க மனமில்லாது வெறுத்த அவளை தன்னவளாக அந்த ஊர் ஏற்றுக் கொண்டதில்லை தான்.

□

சௌராஷ்டிரமணி — 23-10-1984

சொல்ல முடியாத அனுபவம்

சுயம்புலிங்கத்துக்கு தீராத மனக்குறை. யார் யாருக்கோ என்னென்ன அனுபவங்கள் எல்லாமோ எதிர்ப்படுகின்றன; தனக்கு ரசமான, ஜோரான, சுகமான அனுபவம் ஒன்று கூட கிட்டமாட்டேன் என்கிறதே என்றுதான்.

நினைக்க நினைக்க கிளுகிளுப்பூட்டும் இனிய நிகழ்ச்சிகள். சொல்லச் சொல்ல வாயூறும் — கேட்பவர்கள் காதுகளில் தேன் பாய்ச்சும் — மற்றவர் நெஞ்சில் ஆசைக் கள்ளைச் சுரக்க வைக்கும் — ஒரு சிலரது உள்ளத்திலாவது பொறாமைக் கனலை வீசிவிடும் அற்புதமான அனுபவங்கள்.

ஐயோ, பேசிப் பேசிப் பூரித்துப் போகிறார்களே பல பேர்! இரண்டு பேர் சந்தித்தாலே, 'கேட்டீரா சங்கதியை! நேற்று...' என்று ஆரம்பித்து சுவாரஸ்யமாக வர்ணிக்கிறார் ஒருவர். 'போன மாசம் அப்படித்தான், பாருங்க...' என்று தொடங்கி அளக்கிறார் மற்றவர்.

திண்ணைகளிலும், விசேஷ வீடுகளில் கூடுகிறபோதும், சும்மா நாலைந்து பேர் கூடிப் பேசிப் பொழுது போக்குகிற சமயங்களில் எல்லாம் — எப்போதும் எங்கும் எல்லோருக்குமே, சுவையாக எடுத்துச் சொல்வதற்கு ஜிலுஜிலுப்பான அனுபவங்கள் இருந்தன. பலப் பலருக்கும் வாழ்க்கையில் அவை நிறையவே சித்தித்ததாகத் தோன்றின.

ஆனால் அவனுக்கு அப்படிப் பெருமையாக, மகிழ்ச்சியோடு எடுத்துச் சொல்வதற்கு ஒரு மண்ணும் இல்லை.

—என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது! வெறும் காஞ்ச பய வாழ்க்கை! வயது ஆனதுக்கு மட்டும் குறைச்ச லில்லை. குட்டிச்சுவருக்கு ஆகிறது போல, ஐம்பதைத் தாண்டிவிட்டது! பசுமையான அனுபவம், இனிமையானது, மற்றவர்கள் மத்தியிலே— ஜவுளிக்கடைக்காரன் பகட்டாக, பளபளப்பாக, வசீகரமாக எடுத்துப் பரப்புகிற ஜோர் ஜோரான துணிகளைப் போல் அனைவரையும் கவரும்படி எடுத்துச் சொல்லக்கூடிய அனுபவங்கள் ஒன்றிரண்டுகூட நம்ம வாழ்வில் இல்லையே!

சுயம்புவின் நெஞ்சு ஏக்கப் பெருமூச்சை நீள உயிர்க்கும். தானாகவே அவன் மனசில் குத்தாலம் பிள்ளை அண்ணாச்சி யின் நினைவு நிழலிடும்.

குத்தாலம் பிள்ளை சுவாரஸ்யமான மனிதர். அவர் இருக்கிற இடத்தில் கலகலப்பும் இருக்கும். சிரிப்பு அடிக்கடி கலீரிடும். மத்தாப்பூப் பொறிகள் மாதிரி அவரிடமிருந்து ரசமான தகவல்கள் பொங்கிப் பூத்துச் சிதறிக் கொண்டே இருக்கும். பேச்சிலே மன்னன். பாவி மனிதனுக்கு அனுப வங்கள் எங்கிருந்து எப்படித்தான் வந்து சேருமோ!

சுயம்புலிங்கத்துக்கு அது பெரிய ஆச்சரியம். குத்தாலம் பிள்ளை பேசுவதைக் கேட்கிறபோதெல்லாம், 'இதிலே நூத்திலே ஒரு பங்கு நமக்கு ஏற்பட்டாலும் போதுமே! மீதி நாளெல்லாம் அசை போடுவது போல் ஆனந்தமாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கலாமே!' என்று அவன் மனம் ஏங்கும்.

அநேகமாக ஆண்கள் அனைவரும் பொம்பிளைகள் பற் றித்தான் பேசினார்கள். தங்களுக்கு அந்த லைனில் கிடைத்த வெற்றிகள் பற்றி; எதிர் பாராது வந்து சேர்ந்த ரொமான்ஸ்கள் பற்றி; ரயில் பயணத்தில் கிடைத்த திடீர் காதல்; புதிய இடத்தில் அகப்பட்ட தொடர்புகள்; தேடிப் போன அனுபவங்கள்; ரிக்ஷாக்காரர்கள் துணையோடு

நேர்ந்த உறவுகள்; பக்கத்து வீட்டில் பழுத்துக் கனிந்து தங்கள் கையில் வந்து விழுந்த உணர்ச்சிக் க(ன்)னிகள் பற்றி எல்லாம் அலுப்பில்லாமல் சொன்னார்கள்.

சிலர் பேய்களுடன் நேரிட்ட பேட்டி; பாம்பு அல்லது துஷ்ட மிருகத்தை எதிர்த்துக் கொன்றது; அபூர்வமாகக் கிடைத்த வாட்ச் அல்லது நகை அல்லது பர்ஸ்—இப்படி சந்தர்ப்பச் சூழ்நிலைகளோடு விவரித்தார்கள். அதிர்ஷ்டசாலிகள்!

—நம்ம வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? பிஞ்சு போன முறத்தாலே அதை வெளும்பச் சாத்த! அறுந்த பழைய செருப்பாலே அதன் மூஞ்சியிலே போட! இப்படி எல்லாம் எடுத்துச் சொல்வதுக்கு ஒரு அனுபவத்துக்குக் கூட வழி செய்யலியே அது!

சுயம்புவின் உள்ளம் காளவாயாய்க் கொதிக்கும். புழுங்கும். புகையும்.

ஒரு அனுபவம் நேரக்கூடாது? ஒரே ஒரு அனுபவம்! புதுமையானதாய்! சகஜமாக எதிர்ப்பட முடியாததாய்! நிகழ்ந்தால் என்ன?

இதுவே அவனது நித்திய, நிரந்தர ஏக்கமாக அமைந்து அவனை அலைக்கழித்தது.

சுயம்புலிங்கத்துக்கு உதவி புரிய காலம் மனம் கொண்டது போலும்!

அவனது ஊரிலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பால் உள்ள 'ரெண்டுங்கெட்டான்' ஊருக்கு சுயம்பு போக வேண்டியதாயிற்று. அங்கே வசித்த உறவினர் அவனை வந்து போகும்படி அழைத்திருந்தார்.

அவன் போனபோது அவர் வீட்டில் இல்லை. எப்போது வருவார் என்று தெரியவுமில்லை.

அவன் சென்றது பிற்பகல் மூன்று மணிக்கு. சரி, ஐந்து மணி சுமாருக்கு வந்து பார்க்கலாமே என்று எண்ணி அவன்

தெருக்களில் நடந்தான். ஓட்டலுக்குப் போனான். பிறகு ரயில்வே ஸ்டேஷனில் போய் உட்கார்ந்திருக்கலாம்; வசதிப் பட்டால் படுத்தும் கிடக்கலாம் என்று நினைத்தான். போனான்.

சுமாரான ஸ்டேஷன். அந்நேரத்துக்கு வண்டி எதுவு மில்லை, பெஞ்சுக்கள் காலியாகக் கிடந்தன. ஒரு சுவர் ஓரத்தில், கல்தரை மீது நீட்டி நிமிர்ந்து சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தான் ஒருவன். அருமையான காற்று, அமைதி யான சூழ்நிலை.

சுயம்பு சுற்றிலும் நடந்து பார்த்தான். ஸ்டேஷன் அலுவல் அறை பூட்டிக்கிடந்தது. தொழிலாளிகளும் இல்லை. வண்டி வருவதற்கு அதிக நேரம் இருக்கும் எனத் தோன்றியது.

சுயம்பு ஒரு பெஞ்சில் அமர்ந்தான். கருங்கல் தளத்தை, செம்மண் தரையை நீல வானை, வேப்ப மரங்களின் பசு மையை, சுவர்களின் வெண்மையை — இவ்விதமான வர்ண விஸ்தாரங்களை ரசித்தபடி இருந்தான்.

இவன் கண்களுக்கு விருந்தாக வேறு விதக் கலர் வந்து சேர்ந்தது.

பளீர் வர்ண மில் ஸாரி கட்டிய ஒரு பெண். வயது என்ன இருக்கும்? முப்பதும் இருக்கலாம், நாற்பதும் இருக்க லாம்; இதற்கு இடைப்பட்ட எதுவாகவும் இருக்கலாம். இவ்வாறு கணக்கிட்டது அவன் மனம்.

அவளைப் பார்ப்பதும் பார்க்காதது போல் நடிப்பதுமாக இருந்த அவனை நைஸாக எடை போட்டபடி நடந்து வந்த அவள் எதிர் வரிசை பெஞ்சு ஒன்றில் உட்கார்ந்தாள். அங்கு மிங்கும் பார்த்தாள்.

''என்னங்க, வண்டி வர நேரமாயிடுச்சா?'' என்று கேட் டாள்.

அங்கே வேறு எவரும் இல்லையாயினும், அவள் தன்னைப் பார்த்துத்தான் கேள்வியை விட்டெறிந்தாள் என்று புரிந்துகொள்ள அவனுக்கு நேரமாயிற்று.

அதற்குள் அவளே ''ஐயா, தெற்கே போற வண்டி எப்ப வரும்? நேரம் ஆயிடுச்சா?'' என்று விசாரித்தாள்.

சுயம்பு அவளை நேரடியாகப் பார்த்தான். ''எனக்குத் தெரியாதே. ரயில் எப்ப வரும்ணும் தெரியாது'' என்றான்.

அவள் சிரித்ததுபோல் பட்டது அவனுக்கு. தன் பார்வையை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

அவள் அவனை ஒரு தினுசாக நோக்கினாள். சிறிது நேரம் அங்கேயே இருந்தாள். பின் எழுந்து ஸ்டேஷன் உள்ளே போனாள்.

சுயம்பு அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வை சுற்றி நகர்ந்து, அவள் காலி செய்து போன இடத்தில் படிந்தது. வியப்புற்றது.

அந்த பெஞ்சில் ஒரு பை—சின்ன பிளாஸ்டிக் பை; நீல நிறத்தில் கிடந்தது.

அவள் வருவாள், எடுத்துக் கொள்வாள் என்று பேசியது மனம்.

நேரம் மிக மெதுவாக ஊர்வது போல் தோன்றியது அவன் பொறுமையை சோதிப்பதாகவும் இருந்தது அது.

கணிசமான நேரம் காத்திருந்து விட்டதாகப்பட்டதும் அவன் எழுந்தான். ஸ்டேஷன் உள்பக்கம் பார்த்தான். அவளைக் காணவில்லை. எங்கோ போய்விட்டாள். அவள் ரயிலுக்காக வந்தவளில்லை என்றே மனம் கூறியது. அந்த பெஞ்சு அருகே போய் அந்தப் பையை எடுத்தான்.

மீண்டும் அங்குமிங்கும் பார்த்தான். திறந்தான்.

பைக்குள் சில வெற்றிலைகளும் பாக்கும்தான் இருந்தன. ஒரு சிறு பொட்டணம். எடுத்து நோக்கினான். புகையிலை.

இவ்வளவுதானா என்றது மனம்.

ஏமாற்றத்துடன் அதைக் கீழே போட்டான்.

அதற்காகவே பதுங்கி நின்றவள் போல் வேகமாக முன் வந்தாள் அவள். ''என் பையை ஏன் எடுத்தே?'' என்று கேட்டபடி பாய்ந்தாள்.

குனிந்து பையை எடுத்தாள். உள்ளே பார்த்தபடி, ''ஏ, இதிலே இருந்த நோட்டு எங்கே? அம்பது ரூபா நோட்டு. நைசா அமுக்கிக்கிட்டியா?'' என்றாள்.

சுயம்பு பதறிப்போனான். எதிர்பாராத அதிர்ச்சி. ''அதிலே ரூபா நோட்டு எதுவும் இல்லே. வெத்திலை பாக்குதானே இருந்தது?'' என்று சொன்னான்.

''களவாணி ராஸ்கல்! மரியாதையா ரூபாயைக் கொடுத்திரு. இல்லையோ, கூச்சல் போட்டு கும்பல் கூட்டுவேன்'' என்று அவள் மிரட்டினாள்.

''அதிலே ரூபாயே கிடையாது. நான் அதிலிருந்து எதையும் எடுக்கவுமில்லை'' என்றான் அவன். அவன் உள்ளத்தில் ஒரு பீதி கவிழ்ந்தது. என்ன அநியாயமாக இருக்கிறதே என்று ஒரு நினைப்பு!

''ஏ! மரியாதையா ரூபாயைக் கொடு. இல்லே, நீ சீரழிஞ்சு போவே!'' என எச்சரித்தாள் அவள்.

''நான் எடுத்திருந்தால் தானே தர முடியும்?''

''இங்கே என்ன தகரால்?'' கரகரத்த குரலில் கேள்வி எழுப்பியபடி ஒரு காக்கிச் சட்டைக்காரன் அங்கே வந்தான். அங்கே கூலி வேலை செய்கிறவனாக இருக்கும்.

''இந்த ஆளை சரியா விசாரி. பகலு வேளையிலேயே ஐயாவுக்கு என்னமோ மாதிரி இருக்குதாம். என் கையைப் புடிக்கிறாரு'' என்றாள் அவள்.

சுயம்புவுக்குப் பகீரென்றது. அடிப்பாவி! பழிகாரி! என்ன துணிச்சல்! என்றது மனம். ''பொய்! சுத்தப் பொய்'' என்று கத்தினான்.

"தெரியும்டா! நீ பெரிய யோக்கியன்! உன்னை மாதிரி ஆசாமிகதான் என்னென்னவோ பண்றானுக!'' என்று சுயம்புவை நெருங்கினான் முரடன்.

''என் பேக்லேயிருந்த ரூபா நோட்டைக் காணோம். அதை இங்கே வச்சிட்டு உள்ளாற டைம் பார்க்கப் போனேன். இவன் பையைத் திறந்து நோட்டை எடுத்திருக்கான். பக்கத்திலே வந்து கேக்கிறப்போ என் கையைப் புடிக்கிறான்!' என்று பழி சுமத்தினாள் அவள்.

''அப்படியாடா நாயே?'' என்று சுயம்புவின் சட்டையை இறுகப் பிடித்தான் முரடன்.

சுயம்பு அரண்டு போனான்; பாவம்.

''இல்லே, அப்படி எதுவும் நடக்கலே'' என்றான். அவனுக்கு தொண்டை அடைத்தது. பேச்சு சரியாக எழ வில்லை.

''பொறுக்கி! பொம்பளை பொறுக்கி!'' என உறுமி அவனை உலுக்கினான் முரடன்.

'அவன் முழிச்ச முழியே அதைக் காட்டுச்சே!'' என்றாள் அவள்.

முரடன் அவன் சட்டைப்பைக்குள் கைவிட்டான். ஒரு கவர் கிடைத்தது. எடுத்துப் பார்த்தான். இருபது ரூபாய் இருந்தது. ஒரு பத்து ரூபாய் தாளும், இரண்டு ஐந்து ரூபாய் தாள்களும்.

''இது என் பணம்'' என்றான் சுயம்பு.

''சரிதாம் போடா!'' என்று அவனைப் பிடித்துத் தள்ளி னான் முரடன். ''ஊளையிடாம இடத்தை காலி பண்ணு. வாயைத் திறந்தயோ, உனக்குத்தான் டேஞ்சர். இவளைக் கற்பழிக்க முயன்றேன்னு போலீஸ்லேபு டிச்சுக் கொடுப் பேன்'' என்றான்.

சுயம்புவின் பயம் அதிகரித்தது. அவன் கீழே விழாமல் சமாளித்து நின்றதே பெரிது. அழுகை வேறு வந்தது. சே, எவ்வளவு அவமானம். இதுபோதும்; மேலும் அவமானம் சம்பாதிக்க வேண்டாம் என்று எண்ணியபடி நடந்தான்.

அவளும் தடியனும் கூட்டாளிகள்னு தோணுது என்றது அவன் மனம்.

—எப்படி இருந்தால் நமக்கென்ன! நம்ம பணம் போச்சு. மானமும் போச்சு.

'அனுபவம் புதுமை!' என்ற நினைப்பு வெடித்தது அவ னுள். 'எதிர்பாராதது! இதுவரை நடக்காதது!'

—கேவலம், கேவலம்! வாயைத் திறந்து இதை யாரிடம் சொல்ல முடியும்? பெருமையாகப் பேசப்படுவதற்கு உரிய அனுபவமா இது?

சுயம்புலிங்கம் பெருமூச்செறிந்தான்.

'கையில் காசில்லை. நடந்து நடந்தே ஊர் போய்ச் சேர வேண்டிதுதான். ரெண்டரை அல்லது மூணு மணி நேரம் ஆகும்' என்றது அறிவு.

□

குங்குமம் — 5-9-82

வல்லிக் கண்ணனைப் பற்றி...

கடந்த நவம்பர் 12-இல் தம் எழுபத்தொன்றைக் கடந்த வல்லிக் கண்ணன், எத்தனை எத்தனையோ வாழ்க்கைச் சந்திப்புகளை - இலக்கியத் தேடல்களை - சமூகச் சித்தரிப்புகளைத் தனித்தன்மை வாய்ந்த எழுத்துத் தியானத்தால் கடந்து வந்திருப்பவர்.

அமரவேதனை தந்த கவிதைகள் ஒரு புறம்; பாவேந்தரின் சீர்திருத்தக் கருத்துக்கள் மறுபுறம் என்று ஓர் ஆற்றல் மிக்க வாழ்க்கையை நடத்தலானவர், பல புனைபெயர்களின் பின் நடத்திய ஆய்வுகள் ஏராளம். 'புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' சாகித்ய அகாதமிப் பரிசு பெற்ற தரமானதோர் ஆய்வு.

எத்தனையோ கதைகளில் எத்தனையோ அலசல்கள்...!

'அலைமோதும் கடல் ஓரத்தில்' என்ற இவர் புதினம், ஓர் அமைதியான நிலைநாட்டுதல். தன் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தன், நம் எழுத்துலகில் - இவர்.

- அ. பசுபதி,

முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர்,
பாரதிதாசன் மகளிர் கலைக்கல்லூரி,
புதுவை.